1999

பயப்படாதே,
இதுமுதல் நீ மனுஷரைப்
பிடிக்கிறவனாயிருப்பாய்.
லூக்கா 5:10

எல்லா ஜாதிகளும் வந்து
உமக்கு முன்பாகத்
தொழுதுகொள்வார்கள்.
வெளி. 15:4

பத்திரிக்கையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தி(லும்) அறிவிலும் ஒரு மனப்பட்டு கிறிஸ்துவுக்கேற்ப பூரண வளர்ச்சியடையும் படிக்கு, தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்பட்ட சபையானது வஞ்சக போதனைகளுக்குத் தப்பி ஒரே சீராய் பூரண வளர்ச்சியடையும்படியாகவும் இப்பத்திரிகை வெளியிடப்படுகிறது. (எபே. 4:11-16)

புதிய எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தரிசனமாகி "தெயோப்பிலுவே, இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் 7 (அப் 1:1-3)" எனக்கு காண்பித்து, கையளித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள் :

1. உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் மத் 28:18; மாற்கு 16:15
2. விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களை பிதா, குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தில் ஞானஸ்நானப்படுத்துங்கள் - மத். 28:19 (இயேசு மாதிரி (Through Action) செய்து காண்பித்தார்.
3. திருச்சபையைக் கட்டி (மத் 16:18) நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் - மத். 28:20
4. அவர்களுடைய பாவங்களை மன்னியுங்கள் - யோவான் 20:23
5. அவர்களை மேய்த்து ஆண்டு கொள்ளுங்கள் - யோவான் 21:15-17.
6. இவைகளை நடப்பிக்க காத்திருந்து - பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொண்டு (அப்-1:5-8
7. நான் வருகிற வரையிலும் என்னை நினைவுகூரும்படி திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார் -1 கொரி. 11:25 26

நான் ஆண்டவரே, சிலர் அஸ்திபார உபதேசங்கள் இரண்டு (2) என்கின்றனர் வேறு சில(ர்) ஏழு (7) என்கின்றனரே அதெப்படி? என்றேன்

இயேசுவானவர் பிரதியுத்தரமாக : இல்லை, அஸ்திபார உபதேசங்கள் ஏழு ஆகு- (நீதி. 9:1-6). இது ஆதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளு(ம்) அதிகாரங்களுமாகும். இவைகளை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப். 1:1, 10:40-4

இதழின் உள்ளே ....

ஆசிரியர் உரை

தேவனுடைய ஜனங்களுக்கு உபத்திரவம் எதிர்பார்த்தபடி இந்தியாவில் வந்துள்ளது. இந்தியர்களில் ஒரு சிலர் மாத்திரமல்ல அநேகர் நன்றி கெட்டவர்களும், கோழைகளுமாவர். வழியில் ஒரு ஏழையை பலசாலி ஒருவன் அடித்து உபத்திரவப்படுத்துவதைக் கண்டாலும் காணாதவர் போல செல்பவர்களாகும். ஏன் அடிக்கிறாய் நிறுத்து என்று கேட்க மாட்டார்கள். இந்திய கிறிஸ்தவர்களோ இன்னும் ஒருபடி மேல், நமக்கு ஏன் இந்த வம்பு என்று ஒதுங்கிப் போய்விடுவார்கள். உன்னை நேசிக்கிறதுபோல பிறனையும் நேசி அன்பு கூர் என்ற பிரமாணத்தை அறிந்தவர்கள்தான். ஆனால், அடிபடுகிறவன் அடுத்தவன் ஆதலால் ஒதுங்கிப் போய்விடுகிறார்கள். அடிபடுகிறவன் தன் சகோதரன், சிநேகிதன் என்றால் நமக்கு ஏன் இந்த வம்பு என்று விலகிப்போய் விடுவார்களா? இல்லை. தலையிடுவார்கள், சண்டை போடுவார்கள். அல்லது விலக்கியாவது விடுவார்கள். "உன்னை நேசிக்கிறது போல பிறனையும் நேசி" என்கிற வசனத்தின்படி பார்த்தால் நம் உறவினன், இவன், அவன், மற்றவன் என்ற எண்ணம் கூடாதே. உதவி தேவைப்படுகிறவர்கள் எல்லோரும் நம் உறவினரே. ஆனபடியினால் நீதிக்காக வாய் திறவுங்கள், ஏழை எளியவர்களுக்காக, ஊமைகளுக்காக, ஆதரவற்றவர்களுக்காக வாய்திறக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் எல்லாரும் கிளர்ந்தெழ வேண்டும் கிறிஸ்தவர்களெல்லாரும் இரட்சிக்கப் பட்டு, பரிசுத்த ஆவி பெற்று, தேவ வல்லமையைப் பெற்றுக்கொண்டு சாட்சியாய் நிற்க வேண்டும். அப்பொழுது தேவ வல்லமை வெளிப்படும். சேர்ந்து ஜெபிக்க வேண்டும் நம்முடைய மார்க்கத்தை நிலைநாட்ட வேண்டும். அதற்காக தைரியமாய் வாய்திறக்க வேண்டும். இந்தியர்களில் பலர் நன்றி கெட்டவர்கள் என்று ஏன் சொல்லுகிறேன் என்றால் இன்று கிறிஸ்துவத்தை, கிறிஸ்தவர்களைப் பகைக்கிற]வர்களில் அநேகர் கிறிஸ்தவ பள்ளியில் படித்திருப்பார்கள் கிறிஸ்தவ மருத்துவ மனையில் பிறந்திருப்பார்கள். கிறிஸ்தவர்கள் மூலம் நன்மை பெற்றிருப்பார்கள். ஆனாலும் கிறிஸ்துவை, கிறிஸ்தவர்களைப் பகைக்கிறார்கள். கிறிஸ்துவத்தை பகைக்கிறவர்கள் எல்லோரும் வெட்கப படுவார்கள், வேதனை அடைவார்கள் அவர்கள் கிரியைகளுக்கு ஏற்ற பலனை அடைவார்கள். தேவன் நம்மை விடார். கிறிஸ்தவர்களுக்கு சமாதானமும், இரட்சிப்பும், ஜெயமும், விடுதலையும் எங்கேயிருந்தாலும் வரும். கிறிஸ்தவம் தெய்வீக மார்க்கம், இது ஜெயிக்கும் மற்றவை எல்லாம் தாழ்ந்துபோம். நாம் ஜெயிப்போம் ஜெயிப்போம்.

கிறிஸ்துவுக்குள்,

CHIEF APOSTLE N. LAZAR.

திரியேகத்துவம்

(தொடர்ச்சி)

"உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்"

கடவுள் வெளிப்பாட்டின் மூலம் எபிரேய மக்கள் கண்டுகொண்ட ஒரு முக்கிய சத்தியம் உண்டு. எபிரேய மொழியில் அது "ஷேமா" (Shema) எனப்படும் (உபா 6:4) "இஸ்ரவேலே கேள் நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்"

"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக"

யூத சமுதாயம் உலகத்திற்குக் கொடுத்த பெரிய கொடை "ஒரே கடவுள் உண்டு" என்ற ஒப்பற்ற போதனையாகும். ஆவி வணக்கம், மரித்தோர் வணக்கம், பலதேவ வணக்கம் முதலியவை நிறைந்த உலகில் யூத சமுதாயம் வெளிப்படுத்தலில் கண்டுகொண்ட பெரிய சத்தியம் ஒரே கடவுள் உண்டு என்பதே. அவ்வப்போது எபிரேய மக்கள் தம் குற்றங்களினால் இக்கோட்பாட்டினை விட்டு வழுவிய காலத்திலும் தீர்க்கதரிசிகள், மதபோதகர்கள் அக்குற்றத்தை எச்சரித்து ஒரே கடவுள் என்ற நம்பிக்கையை அறைகூவி ஊட்டி வளர்த்து வந்தனர்.

இஸ்ரவேலர்களின் வாழ்க்கையில் ஏற்றத் தாழ்வுகளில் செழிப்பின் தெய்வம், மலைகளின் தெய்வம், பள்ளத்தாக்கின் தெய்வம், எகிப்தின் தெய்வங்கள் என்று பல வகைகளில் அவர்கள் இடறி விழுந்தது உண்டு. மோசே போன்ற மாபெரும் தலைவன் கையிலுள்ள கற்பலகைகளை உடைத்து கடுஞ்சினங்கொண்டு யெகோவாவின் தனித்துவத்தை நிலைநாட்டினதை நாம் பார்க்கிறோம். வேறே தேவர்கள் வேண்டாம் விக்கிரகங்கள் வேண்டாம் என்ற இரண்டாம் கற்பனையை இங்கு ஞாபகப்படுத்திக் கொள்வது அவசியம். "உன் தேவனாகிய கர்த்தர்" "உன்னை அழைத்தவர்" "உன்னை வழிநடத்தினவர்" "உன்னைப் போஷித்தவர்" என எடுத்துக்காட்டி, யாரைச் சேவிப்பீர்கள்? என அறைகூவின யோசுவா பக்தன் உண்டு.

கிறிஸ்து பிறப்பதற்கு முன் சுமார் ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்னுள்ள ஆமோஸ், ஓசியா, ஏசாயா, எரேமியா போன்ற தீர்க்கதரிசிகளும், மற்ற தீர்க்கதரிசிகளும் "ஒரே கடவுள்" என்ற சத்தியத்தை முழங்கி போதித்தார்கள். இஸ்ரவேலுக்கு மாத்திரம் யெகோவா ஆண்டவராயிராமல் தமஸ்குவுக்கும், காசாவுக்கும், தீருவுக்கும், ஏதோமுக்கும், அம்மோனுக்கும் யெகோவாவே ஆண்டவர். இஸ்ரவேல், யூதா பாவங்களை மாத்திரமல்ல மோவாப், எமோரியா போன்ற கானானியரின் ஏனைய வகுப்பினரின் பாவங்களையும் ஆக்கினைக்குட்படுத்துகிறவர் யெகோவாவே என்பது ஆமோஸின் போதனை. யெகோவாவின் வணக்கத்தைவிட்டு வழி விலகுவது சோரம்போதலின் வாழ்க்கைக்கு ஒப்பானதாய் ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஏனெனில் யெகோவா ஒருவரே ஆண்டவர். ஏசாயாவுக்கு ஒரே ஆண்டவரின் மகிமையை பூமியனைத்தையும் நிரப்ப வேண்டியது "பூமியனைத்தையும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது"

கர்த்தரின் மகிமை வெளிப்படுமானதும், மாம்சமான யாவரும் அதை ஏகமாய்க் காணும்" "அவர் பூமி உருண்டையின் மேல் வீற்றிருக்கிறவர்" எவரும் யேகோவாவிற்கு நிகரவர் யேகோவா தனி ஆண்டவர்"

" என்னை யாருக்கு ஒப்பிடுவீர்கள்; எனக்கு யாரை நிகராக்குவீர்கள்?" முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும்" இது ஏசாயாவின் போதனை இத்தகைய போதனை எரேமியா, எசேக்கியேல், மல்கியா போன்ற தீர்க்கதரிசிகள் ஆகமங்களிலும் காணலாம்.

வேத சித்தாந்தம் என்ன சொல்லுகிறது ஜீவனுள்ள ஒரே மெய்த்தேவன் உண்டு. அவர் நித்தியர் சரீரம் இல்லாதவர், பகுக்கப் படாதவர் தாபம் இல்லாதவர், அளவில்லாத வல்லமையும், ஞானமும், கிருபையும் உள்ளவர் காணப்படுகிறதும், காணப்படாததுமாகிய சகலத்தையும் சிருஷ்டித்துக் காப்பாற்றுகிறவர் இந்த ஒரே தேவத்துவத்தில் ஒரே தன்மையும், வல்லமையும், நித்தியத்துவத்தையும் உடைய பிதா, குமாரன், பரிசுத்தஆவியானவர் மூவர் உண்டு.

பரிசுத்த வேதாகமத்தைப் போலவே, வேத சித்தாந்த பிரமாணமும் 'ஒரே கடவுள்' அவர் சுயம்புவானவர் (Self Existant) சர்வ வல்லமையுடையவர் (Omnipotent), சர்வ வியாபகர் (Omnipresent)என எழுதப்பட்டுள்ளது. உலக ஞானத்தாலும், தத்துவத்தாலும் அறிந்து கொள்ள முடியாத இப்பெரிய சத்தியத்தை எபிரேய மக்கள் கடவுள் வெளிப்பாட்டின் மூலமாக அறிந்து கொண்டனர்.

-(தொடரும்)

"பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர் பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே இம்மூவரும் ஒன்றாய் இருக்கிறார்கள்."
(1 யோ. 5 :7)

"கர்த்தர் எருசலேமைக் கட்டுகிறார் துரத்துண்ட இஸ்ரவேலைக் கூட்டிச் சேர்க்கிறார்"-சங் 147;2

புதிய எருசலேம் சபை-கிளை துவக்க விழா

தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர்- கிளை

02-12-98 புதன்கிழமை காலை 11-00 மணியளவில் திருச்சபையின் தலைமை அப்போஸ்தலர் N. லாசர் அவர்கள் (பம்பாய்) புதிய சபையை திறந்து வைத்து அருளுரை ஆற்றி மக்களை ஆசீர்வதித்தார்கள். நூற்றுக்கணக்கான மக்கள் ஆராதனையில் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஊழியர் R. பவுல்
புதிய எருசலேம் சபை
[illegible] பூதலூர்-கிளை தஞ்சாவூர் மாவட்டம்

மார்த்தின் லூத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

அகுஸ்தாபுரி விசுவாச அறிக்கைக்குக் கையொப்பமிட்ட அல்லது பிறகு அதற்குச் சம்மதம் கொடுத்த சுவிசேஷ பிரபுக்கள் இராயனுடைய உபாயங்களால் சீர்திருத்தலுக்குக் கொடிய மோசம் வரும் என்று கண்டு இராயனுடைய உபாய தந்திரங்களை நிஷ்பலம் செய்வதற்கு வேண்டிய வழிகளைப் பற்றி ஆலோசிப்பதற்காக ஸ்மால்கால்தென் பட்டணத்தில் கூடி வந்தார்கள். விற்றன்பர்க் வேத சாஸ்திரிகளுடைய யோசனையைக் கேட்ட போது அவர்கள் அது உலக நீதிக்குரிய விஷயமானதால் நியாய சாஸ்திரிகள் அதைப் பற்றித் தீர்மானிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இதற்கு முற்றி லூத்தரும் அவருடன் உழைத்த வேத சாஸ்திரிகளும் சக்கரவர்த்திக்கு விரோதமாக பட்டயம் எடுத்துயுத்தம் செய்வது சரியில்லை என்று சொன்னார்கள். ஆனால் இப்போது அவர்கள், இராஜ அதிகாரங்கூட தேசப் பிரமாணத்திற்கு உட்பட்டதென்று அறிந்தபடியால், இவ்விஷயத்தை நியாய சாஸ்திரிகள் இராஜ தர்ம நிபுணர்களுடைய தீர்மானத்திற்கும் பொறுப்புக்கும் சாட்டி விட்டார்கள். பின்னாலும், சக்கரவர்த்தியை எதிர்த்து யுத்தம் செய்யும் படி லூத்தர் தான் தூண்டிவிட்டார் என்று சொல்லப்பட்டபோது, லூத்தர் சொன்னதாவது: "வேத சாஸ்திரியாக நான் கொடுத்த யோசனையாவது: "நியாய சாஸ்திரிகள் யுத்தம் செய்து இராயனை எதிர்ப்பது தேசப்பிரமாணத்திற்கு ஒவ்வும் என்று சொன்னால், தேசப்பிரமாண ஒழுங்கின் படி, அவர்கள் செய்வதற்கு நானும் இடம் கொடுக்கிறேன். இராயனுடைய சட்டத்தின் படியே இவ்விஷயத்தில் அவனை எதிர்ப்பது நியாயமென்று நிரூபிக்கப்பட்டால் இராயனாகிய சார்ல்ஸ் தானே தேசப் பிரமாணத்திற்கு வகை சொல்லட்டும்" என்பதே

1531-ம் வருஷம் மார்ச்சு மாதம் சுவிசேஷப் பிரபுக்கள் மறுபடியும் ஸ்மால்கால்தென் நகரில் கூடி வந்து இராயனுக்கு விரோதமாக ஒரு தற்காப்பு உடன்படிக்கை செய்தார்கள். இந்த உடன் படிக்கைக்கு உட்பட்ட அங்கத்தினர் யாரெனில்: யோவான் நியமப் பிரபு, புருன்ஸ்விக்- லீன் பர்க்கின் மூன்று பிரபுக்கள் அன்ஹால்த் பிரபுவாகிய -உல்ப் காங், மான்ஸ்பெல்ட் பிரபுக்களாகிய – ஆல்பர்ட்டும் கேபார்டும் வட சர்மானியிலுள்ள மாக்தேபர்க, பிரேமன், லியுபெக் பட்டணத்தார் தென் சர்மானியிலுள்ள ஸ்திராஸ்பர்க், கான்ஸ்தென்ஸ், மெம்மிங்கன், லிந்தோ, உல்ம், ராய்ட், லிங்கன், பிபெராக், இஸ்னிக பட்டணத்தாருமே

லூத்தரைச் சார்ந்தவர்களுக்கு விரோதமாக இராயன் யுத்தம் செய்ய ஆரம்பித்தால் சர்மானியர் எல்லாம் நடந்து கொள்ள வேண்டுமென்று " நேசிக்கப் பட்ட சர்மானியருக்கு எச்சரிப்பு " என்னும் ஒரு பிரபந்தத்தின் மூலமாக லூத்தர் பின்வருமாறு புத்திசொன்னார்: "சமாதானமாயிருக்க வேண்டுமென்று போதிப்பதே எனக்குத் தகுந்தது. இதையே நான் எப்போதும் உற்சாகமாய் செய்தேன். இதற்கு உலகம் எனக்குச் சாட்சி. ஆனால் யுத்தம் செய்ய யோசனை சொல்லுவது அல்லது தூண்டிவிடுவது எனக்கு அழகல்ல. யுத்தம் செய்யும் படி அவசியம் நேரிட்டால், போப்பையும் இரத்தப் பிரியருமான பாப்பு மார்க்கத்தாரை எதிர்த்து யுத்தம் செய்கிற

வர்களை கலகக்காரர் என்று குற்றம் சொல்ல நான் சம்மதிக்க மாட்டேன். ஆனால் அதை அவசியமான தற்காப்பு என்று சொல்லுவது எனக்கு இஷ்டம். பராபரனுடையதை பராபரனுக்கும் இராயனுடையதை இராயனுக்கும் செலுத்த வேண்டுமென்று ஒரு சிறுவனுக்கு நன்றாய்த் தெரியும் ஆனால் இரத்தப் பிரியமுள்ள வேட்டை நாய்களுக்கல்ல ஏனென்றால் அது அவர்களுக்குரியதல்ல. நேசிக்கப்பட்ட ஜெர்மானியருக்கு எச்சரிப்பாக நான் சொல்லப் பிரியப்படுவது இது " நான் ஒருபொழுதும் எவரையும் சமாதானத்திற்கே அல்லாமல் யுத்தத்திற்கும், கலகத்திற்கும் தூண்டி விடமாட்டேன் என்பதே. ஆனால் நம்முடைய சத்துருக்களாகிய பாப்பு மார்க்கப் பேய்கள் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகப் பிரதியுத்தமே வேண்டும் என்று பிடிவாதம் பண்ணி சமாதானத்தை நாடாதிருக்கிறார்கள். நான் இதைச் செய்ததும் இல்லை. அதற்குக் காரணமுமல்ல. ஆனால் அவர்களே அதை விரும்பித் தெரிந்து கொண்டார்கள் அவர்களுடைய இரத்தம் அவர்கள் தலை மேலே இருக்கட்டும். நான் என் கடமையை மகா உண்மையாய்ச் செய்து விட்டேன். நான் எல்லாவற்றையும் நியாயந்தீர்க்கச் சித்தமுள்ளவரும், வேண்டியவரும் வல்லமையுள்ளவருமாகிய ஆண்டவருக்கே ஒப்பித்து விடுகிறேன். அவருக்கே மகிமையும் கனமும், தோத்திரமும் புகழ்ச்சியும் என்றென்றைக்கும் இருப்பதாக. 'ஆமென்' என்பதே.

தென்மார்க் தேசத்து அரசு இழந்த இரண்டாம் கிறிஸ்தியான் என்னும் மன்னன், இழந்து போன தன் இராஜ்ஜியத்தைப் பாப்புவின் உதவியாலும் தன் மைத்துனராகிய இராயனுடைய உதவியாலும் திரும்ப அடைவதற்காகப் பாப்பு மார்க்கத்தைச் சேர்ந்து கொண்டான். இராயனுடைய பழைய சத்துருவாகிய பிரான்ஸ் தேசத்து அரசன் புரொட்டஸ்டாந்து பிரபுக்களுடைய ஐக்கியத்தைச் சேருவதற்குச் சமோபாயம் செய்தான் இது இராஜாங்கத்திற்கு அடுத்த தேசக்ஷேமமன்றி மார்க்கத்திற்கு அடுத்தது அல்லாததால் . புரொட்டஸ்டாந்து பிரபுக்கள் தங்களுடைய ஐக்கியத்தில் அவனொரு அங்கத்தினனாயிருக்கச் சம்மதிக்கவில்லை.

மேலும் ஸ்மால்கால்ட் நகர உடன் படிக்கையில் ஓர் அங்கத்தினனாயிருக்க ஒரு புற தேசத்து அரசனும் விரும்பி சமோபாயம் செய்தான் அது எட்டாம் ஹென்றி என்கிற இங்கிலாந்து தேசத்தரசனே. அவனைப் பற்றி நாம் மேலே சொல்லியிருக்கிறோம் இறந்து போன தன் சகோதரனுடைய விதவையும் அரகன் நாட்டு அதிபதியின் குமாரத்தியும் . சார்லஸ் இராயனுக்கு அத்தை முறையுமுள்ள கத்தெரினாள் என்னும் இராணியாரை என்பவளை கல்யாணம் செய்து அந்த அம்மாளோடு இருபது வருஷம் வாழ்ந்திருந்தான். ஆனால் இப்போது இராஜ பரிவாரத்தைச் சேர்ந்த ஒரு சீமாட்டியும், இராணியாரின் தோழிகளில்

கொண்ட நோக்கத்தை நிறைவேற்றப் பிடிவாதம் கொண்ட படியால் பாப்புவின் ஐக்கியத்தை விட்டு நீங்கி, இங்கிலாந்து இனி சுயாதீனமான தேசமென்றும், ஆங்கிலேய சபைக்கு இனித் தானே தலைமையானவன் என்றும் விளம்பரம் செய்து, தேச சட்டப்படி விவாக விமோசனம் பண்ணுவதற்கு அனுமதி பெற்று இவ்விதமாக நடந்தவைகளையெல்லாம் மேற்கொண்டு ஆன்போலின் என்னும் சீமாட்டியை மணம் புரிந்து கொண்டான். இவ்வரசன் ஐரோப்பா கண்டத்திலுள்ள லூத்தரன் பிரபுக்களுடைய ஐக்கியத்தைச் சேரும்படி பல வருஷங்களாக எத்தனம் பண்ணினான். ஆனால் அவனுடைய பிரயத்தனங்களெல்லாம் விருதாவாயின. லூத்தரன் பிரபுக்கள் அவனுக்கும் பாப்புவுக்கும் வித்தியாசமில்லை என்றெண்ணித் தங்கள் ஐக்கியத்தில் அவன் சேருவதற்கு இடம் கொடுக்கவில்லை.

அதி 35. லூத்தர் தம் தாயாருக்கு எழுதிய கடைசி கடிதம்

ஏறக்குறைய மேற்சொன்ன சம்பவங்கள் நடந்த காலத்தில் யாக்கோபு லூத்தர் தம் தமையனாகிய மார்த்தின் லூத்தருக்குத் தங்கள் தாயாருடைய வியாதியைப் பற்றி தெரிவித்தார். லூத்தர் தம் தாயாரிடம் துரிதப்பட்டுப் போகக் கூடவில்லை. ஆனால் அவர் தம் அன்பான தாயாருக்கு ஓர் ஆறுதலான கடிதம் எழுதினார். இக்கடிதத்தில் அவர் தம் தாயாருடைய வியாதியினிமித்தம் தமக்கிருந்த விசனத்தையும், தாம் உடனே போய்த் தாயாரின் பக்கத்திலிருக்க முடியாமலிருந்ததற்காக உண்டான மன வருத்தத்தையும் தெளிவாய் விளக்கிச் சொன்னார். அவர்களுடைய வியாதி, இரக்கமும் தகப்பனுடையதுமான தண்டனை என்றும், ஆண்டவர் பக்தியற்றவர்களுக்கும், ஆம், அவருடைய பிள்ளைகளுக்கும் கூட அனுப்பும் தண்டனைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இது வெகு அற்பமானதென்றும் ரூபகப்படுத்தி அவர்கள் தேவ குமாரனும், நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு தமக்காக அல்ல, நமக்காகவும் நம்முடைய பாவங்களுக்காகவும் பட்டுத் தரித்த பாடுகளையும் உபத்திரவங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த வியாதி மகா சொற்பமான உபத்திரவமென்று அவர்கள் அறிந்து உணர்ந்து துயரப்படாமல் நன்றியுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்று சொன்னார். அவர் இப்படி அவர்களை இயேசுவண்டைக்கு வழிநடத்தி, ஜெயசீலராகிய எல்லாருக்கும் இரட்சகராகிய அவர் அவர்களுக்கு "சந்தோஷமாயிருங்கள், நான் லோகத்தை ஜெயித்தேன்" அதாவது உலகத்தின் அதிபதியாகிய சாத்தான் மேலும் அவனுடைய எல்லா வல்லமையின் மேலும் வெற்றி சிறந்தேன்" என்று சொல்லுகிற ஆறுதலான வார்த்தைகளைத் தம் தாயாருக்கு எடுத்துக் காட்டினார். முடிவில அவர் அவர்களுக்கு எழுதும் வார்த்தைகள் இவை: "பரம தகப்பனும் எல்லா ஆறுதலுக்கும் ஆண்டவருமாகிய பராபரன் தாமே தம்முடைய பரிசுத்த வசனத்தினாலும் பரிசுத்த ஆவியானவராலும் உங்களுக்கு உறுதியும் சந்தோஷமும் நன்றியுமுள்ள விசுவாசத்தை அளித்து இந்த வியாதியையும் இன்னும் எல்லாத் துன்பங்களையும் மேற்கொள்ளவும் கடைசியாக "சந்தோஷமாயிருங்கள், நான் லோகத்தை ஜெயித்தேன்" என்று அவர் தாமே சொல்லுகிற வார்த்தைகள் சத்தியமென்று நீங்களும் அறிந்து உணர்ந்து அனுபவிக்கும்படி அருள் புரிவாராக. மேலும் இத்துடன் உங்களுடைய ஆவியையும் தேகத்தையும் அவருடைய இரக்கத்திற்கு ஒப்புவிக்கிறேன், ஆமென் என் எல்லாப்

பிள்ளைகளும் கத்தேரினாளும் உங்களுக்காக ஜெபிக்கிறார்கள் சிலர் அழுது கொண்டிருக்கிறார்கள் வேறு சிலர் பாட்டியம்மாள் அதிக வியாதியாயிருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் ஆண்டவருடைய கிருபை நம்மெல்லாரோடும் இருப்பதாக. ஆமென்

உங்கள் பிரிய மகன்,
மார்த்தின் லூத்தர்

" 1531-ம் வருஷம் மே மாதம் 20-ம் தேதி தம் மகனுடைய இந்த ஆறுதலான கடிதத்தை வாங்கி வாசித்த பிறகு, அவர்கள் 1531-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ம் தேதி கர்த்தருக்குள் அமைதியாய் நித்திரையடைந்தார்கள்

(தொடரும்)

சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார் யோ. 18:37

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் அன்பு கூர்ந்தார் யோவான் 3:16.

தேவனுக்கு உகந்த பரிசுத்தம்

மனிதன் தேவ கட்டளையை மீறினபடியால் தேவனுடைய வார்த்தையின் மேல் இருந்த விசுவாசம் அவனை விட்டு நீங்கி விட்டது அவன் அவிசுவாசியாக தேவனை, தேவன் என்று அறிக்கையிட முடியாதவனாக போய் விட்டான் அவரால் எல்லாம் கூடும் என்று நம்பாமல் அவர் மேலுள்ள நம்பிக்கையை இழந்து விட்டான் தேவன் சர்வ வல்லவர் என்றும், நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்றும், எனக்காக யாவற்றையும் செய்து முடிப்பார் (முடித்தார்) என்றும் அறிக்கையிட்டு மகிமைப் படுத்துவது, அவர் மகா பெரியவர், அன்பில் பரிசுத்தர், மகா பரிசுத்தர் என்றும் விளங்கப்பண்ணுவதாகும்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்திலே தேவனுடைய மகிமை மேகமும், அவருடைய அதிசயமான கிரியைகளையும் கண்டு இருந்தும் அவர்கள் அவரை பரீட்சை பார்த்தார்கள் (எண் 14 22). தேவனுடைய பரிசுத்தத்தை அவமதித்தார்கள் அவர்கள் திரும்பி பரீட்சை பார்த்து இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்டுப் படுத்தினார்கள்.

(சங் 78:41)

இஸ்ரவேல் ஜனங்கள் சீன் வனாந்தரத்தில் வந்த போது அவர்களுக்கு தண்ணீரில்லாதிருந்தது அப்போது ஜனங்கள் மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்தார்கள். மோசே தேவனை நோக்கி முறையிட்டார் தேவன் மோசேயை நோக்கி நீ கோலை எடுத்துக் கொண்டு நீயும், உன் சகோதரனாகிய ஆரோனும் சபையோரை கூடி வரச் செய்து அவர்கள் கண்களுக்கு முன்பே கன்மலையைப் பார்த்து பேசுங்கள் அப்போது அது தன்னிடத்தில் உள்ள தண்ணீரைக் கொடுக்கும் (எண் 20:7,8) என்றார். ஆனால் மோசே சபையாரைக் கூடி வரச் செய்து கலகக்காரரே, கேளுங்கள் உங்களுக்கு இந்த கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்பட

பண்ணுவோமா? என்று சொல்லினான் (20:10) தேவனுடைய வார்த்தையை விசுவாசியாது, அதன்படி செய்யாது விசனமாய் புத்திபேசி (சங் 106: 32,33) தன்கையை ஓங்கி கன்மலையை தன் கோலினால் இரண்டு தரம் அடித்தார் உடனே தண்ணீர் ஏராளமாய் புறப்பட்டு வந்தது. கர்த்தர் மோசேயையும், ஆரோனையும் நோக்கி இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னை பரிசுத்தம் பண்ணும்படி நீங்கள் என்னை விசுவாசியாத படியால் (எண் 20:12) (தேவனை விசுவாசியாது தேவன் தம்முடைய வார்த்தையின்படி கிரியை செய்ய வல்லவராய் இருக்கிறார் என்றும், அவர் சொன்னதை நிறைவேற்றுகிறார் என்றும் ஜனங்கள் மத்தியிலே விசுவாசத்தோடு அறிக்கையிடாது) அவருடைய வார்த்தையை கைக்கொள்ளாது போனது தேவனை அவருடைய பரிசுத்தத்தை மட்டுப்படுத்துவதாகும்

தேவனை உங்கள் இருதயத்தில் பரிசுத்தம் பண்ணுங்கள்

மனிதர்கள் தேவனை விசுவாசியாது தங்களுடைய பெலத்தினால் எல்லாம் கூடும் என்று நினைத்து செயல்படுகிறபடியினால் தேவனை மட்டுப்படுத்துகிறார்கள். தேவன் எல்லாவற்றையும் செய்ய வல்லவராயிருக்கிறார் என்ற தேவன் மேல் உள்ள விசுவாசம், நம்பிக்கையைக் குறித்து தேவ ஜனங்கள் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும் பதில் கூறி, தேவனை மகா பரிசுத்தர் என்று நாம் விசுவாசித்து காட்டிட வேண்டும். அது நாம் தேவனை இருதயத்தில் பரிசுத்தம் பண்ணுவதாகும் (1 பேது 3: 14,15)

தேவன் எப்படி தம்முடைய கிரியைகளில் வல்லவரோ, தம்முடைய பரிசுத்தத்தில் மகா பரிசுத்தமுள்ளவரோ அதுபோல, மனிதன் நிலையுள்ள தேவன் மேல், வார்த்தை (வசனத்தின்) மேல் வைக்கும் நிலையுள்ள விசுவாசம் வல்லமையுள்ளதாகவும், மகா பரிசுத்தமுள்ளதாயும் இருக்கிறது

விசுவாசம் – வல்லமையுள்ளது

தேவன் ஒரு வார்த்தை சொன்னால் அது கிரியையில் நிறைவேறுகிறதாய் இருக்கிறது அதுபோல மனிதன் தேவன் மேல் வைக்கும் நிலையுள்ள விசுவாசம் கிரியைகளில் நிறைவேறுகிறதாயிருக்கிறது. தேவனால் எல்லாம் கூடும் என்பது போல தேவன் மேல் வைக்கும் விசுவாசத்தினால் எல்லாம் கூடும். இயேசு அவனை நோக்கி நீ விசுவாசிக்க கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். (மாற் 9:23)

நூற்றுக்கு அதிபதியொருவன் பிரதியுத்தரமாக ஆண்டவரே நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல, ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்றான் அவன் வேண்டிக் கொண்டபடி அந்த சமயத்திலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான் (மத் 8: 8,13)

விசுவாசம் – மகா பரிசுத்தமுள்ளது

மனிதன் நிலையுள்ள தேவன் மேல், தேவனின் வார்த்தை (வசனத்தின்) மேல் வைக்கின்ற நிலையுள்ள விசுவாசம் (மத்தேயு 17:20) மகா பரிசுத்தமாயிருக்கிறது (யூதா 20)

இந்த மகா பரிசுத்த விசுவாசத்தை விட்டு விடுகிறவர்கள் ஆக்கினை தீர்ப்பு அடைவார்கள். (1 தீமோ 5: 12). பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக, உபதேசத்திற்காக நீங்கள் தைரியமாய் போராட வேண்டும் (யூதா 3); அப்போஸ்தலருக்கு, பரிசுத்தவான்களுக்கு,

ஊழியர்களுக்கு கீழ்படிந்து விசுவாசத்தில் வளர வேண்டும் (1 பேது 2 5,7) உங்கள் மகா பரிசுத்த விசுவாசத்துக்குள் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்(யூதா 20).

பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி தேவனுடைய அன்பில் உங்களைக் காத்துக் கொண்டு நித்திய ஜீவனுக்கு ஏதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெற காத்திருங்கள் (யூதா 21)
இது தேவனுக்கு உகந்த பரிசுத்த மாயிருக்கும்

கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள் --(1 பேது 3:15)

அற்புத சுகம்

சாட்சி

கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என் பெயர் ஷெர்லி எனது ஊர் பள்ளிகொண்டா நான் புதிய எருசேலம் சபையில் சேர்ந்ததிலிருந்து என் வாழ்க்கையில் கர்த்தர் செய்த அதிசயத்தை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். எனக்கு அடிக்கடி வயிற்று வலி வருவது உண்டு அவ்வாறு வலி ஏற்படும்போது நடக்கமுடியாததாயும், வலி தாங்க முடியாதபடியும் காணப்பட்டது ஒரு நாள் அதிக வலியால் தாக்கப்பட்டு. உடனே நானும் என் கணவரும் வேலூர் மருத்துவமனைக்கு (CMCக்கு) கடந்து சென்று மருத்துவரை அணுகிய போது அவர் உனக்கு கர்ப்பப் பையில் புற்றுநோய் இருக்கும் என்றும். உடனே சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொல்லி எல்லாவிதமான பரிசோதனையும் செய்தார்கள் நான் இதைக்குறித்து தேவனுடைய சமூகத்தில் அதிக கண்ணீரோடு பொருத்தனை பண்ணியும், புதிய எருசேலம் சபையின் பத்திரிக்கையில் சாட்சி எழுதுவேன் என்று கூறி தொடர்ந்து ஜெபித்தேன் என் சீரத்தை பரிசோதித்ததின் அறிக்கையை பெற்றுக்கொள்ள கடந்து செல்வதற்கு முன் இரவன்று "அவர் பெரிய அதிசயங்களை செய்கிறவர் " என்று எனக்கு ஒரு சத்தமானது கேட்கப்பட்டது. இப்படியாக மருத்துவமனைக்குச் சென்று சீரத்தை பரிசோதித்ததின் அறிக்கையின் முடிவைப் பார்க்கும் போது எதுவுமே இல்லை என்று கூறிவிட்டார்கள். தேவன் இவ்வாறாக எனக்கு அற்புதமாக சுகத்தைக் கொடுத்தார் அல்லேலூயா வயிற்றுவலி மறைந்தது. தேவனுக்கே ஸ்தோத்திரம்!

இப்படிக்கு
சகோதரி ஷெர்லி,
புதிய எருசலேம் சபை கிளை பள்ளிகொண்டா.

நன்றியுடையவர்களாயிருங்கள்

மனிதனுக்கு கொடுக்கப்பட்ட ஒவ்வொரு நாளும் மிக அருமையானதாகும் ஒவ்வொரு நாளும் உயிரோடு விழித்தெழும்புவது தேவனுடைய கரத்திலிருக்கிறது

நம்முடைய ஜீவனும், சுவாசமும் தேவனுடைய கரத்திலிருக்கிறது பிரசங்கி சொல்லுகிறார், தேவன் ஜீவனை எடுத்துக்கொண்டாரென்றால் ஆவி தேவனிடத்திற்கும், சரீரம் மண்ணிற்கும் போய்விடும் மனிதன் மரிக்கும்பொழுது அவனை சரீரம் தான மரிக்கிறது. அவனுடைய ஆவி (ஆத்துமா) அழிகிறதில்லை கடந்த ஆண்டு ஜீவனை சரீரத்தில் வைத்து, காத்து இந்த புதுஆண்டுக்குள் நம்மை பிரவேசிக்கச் செய்த தேவனுடைய அளவற்ற கிருபைக்காக நாம் அவருக்கு நன்றி ஏறெடுக்க கடமைப்பட்டிருக்கிறோம்

இந்த புத்தாண்டில் புது ஆசீர்வாதம் கிருபைகள், புது பிரதிஷ்டைகளுடன் நாம் இறை சந்நிதானத்தில் பிரவேசிக்க தேவன் அருள் செய்தார் '' கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன் (சங் 116 12) என்று நன்றி பெருக்கோடு ஏக்கத்துடன் தேவன் கடந்த ஆண்டு, செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் என்னத்தைச் செலுத்துவேன்? என்று தாவீது அரசர் கூறுகிறார் பலவகையான துன்பங்கள் துக்கங்கள், உபத்திரவங்கள் மத்தியிலே, பிரச்சனைகள் மத்தியிலே வனாந்தரத்திலேயும் கன்மலைகளிலும், குகைகளிலும் கர்த்தர் காத்துக்கொண்டார் ஆனபடியினால் அவர் அப்படிச் சொல்லுகிறார் எல்லா உபகாரங்களுக்காக நான் என்னத்தைச் செலுத்துவேன் இந்த சங்கீதத்திலே சங்கீதக்காரன் 7 பொருத்தனை செய்ததாக எழுதியிருக்கிறது அவர் அதற்கு பதிலும் நன்றியும் சொல்லுகிறார்

1) நான் கர்த்தரில் அன்பு கூருவேன் (சங் 116:1)

கர்த்தர் என் விண்ணப்பத்தையும், சத்தத்தையும் கேட்டபடியினால் நான் கர்த்தரில் அன்பு கூருகிறேன் என்று சொல்லுகிறார் கடந்த ஆண்டு முழுவதும் நம்முடைய ஜெபங்களை கேட்டார் விண்ணப்பங்களுக்கு பதில் கொடுத்தார் என்று அறிந்திருக்கிறோம் ஆகவே அவரில் அன்பு கூற அவருக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம்

2) அவர் செவியை எனக்கு சாய்த்தபடியால் உயிரோடிருக்குமளவும் அவரைத் தொழுது கொள்வேன் (சங் 116 :2)

நான் உயிரோடிருக்குமளவும் தொழுதுகொள்வேன் என்கிறார் தேவனை தொழுதுகொள்வது மிகவும் ஒரு அருமையான அனுபவமாகும் தேவனை பக்தியோடும், ஆவியோடும் ஆத்துமாவோடும் தொழுது கொள்ளும் சிலாக்கியம் மனிதர்களாகிய நமக்குத்தான் கிடைத்திருக்கிறது அநேகர் ஆராதனையை விட்டு விட்டு, சபை ஐக்கியத்தை விட்டு விட்டு ஆத்தும மரணத்தை அடைகிறார்கள் ஆனால் தாவீதுராஜா உயிரோடிருக்கும் மட்டும் அவருக்கு ஆராதனை செய்வேன், அவரைத் தொழுது

ஜீவ தேவனுக்கு மட்டும் அவருக்கு ஆராதனை செய்வேன், அவரைத் தொழுது கொள்ளுவேன் அவரை மகிமைப் படுத்துவேன் என்று சொல்லுகிறார் மரித்தவர்களும் மவுனத்திலே இறங்குகிறவர்களுமாகிய எவரும் கர்த்தரைத் துதியார்கள் என்ற வாக்கின்படி அவர்கள் தேவனை தொழுது கொள்வதில்லை. ஆராதனை செய்கிறதில்லை ஆகவே அவர்களுடைய ஆத்துமா மரித்துவிட்டது என்று சொல்லலாம்

3) நான் கர்த்தருக்கு முன்பாக ஜீவனுள்ளோர் தேசத்தில் நடப்பேன் என்று சொல்லுகிறார் (சங் 116:9)

தேவனோடு கூட, பரிசுத்தவான்களோடு கூட தேவனுக்கு ஆராதனை செய்கிறவர்களோடு கூட ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகளோடு கூட நான் ஜீவனுள்ளோர் தேசத்திலே நடப்பேன் என்று சொல்லுகிறார் "நான் கர்த்தருக்கு முன்பாக ஜீவனுள்ளோர் தேசத்திலே நடப்பேன்" என்று சொல்லுகிறார்

4) நான் இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன் என்று சொல்லுகிறார் (சங் 116:13)

இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு என்று சொல்லப்பட்டுள்ளது அதாவது இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கர்த்தருக்கு ஒழுங்காக ஆராதனை செய்து அவருடைய திருபந்தியில் பங்கு பெறுவேன் என்று சொல்கிறார் லூக்கா 22 17 ல எழுதியிருக்கிற பிரகாரம் அவர் பழைய ஏற்பாட்டின் காலத்திலிருந்த போதிலும் அவர் சொல்லுகின்ற பொருத்தனைகள் புதிய ஏற்பாட்டின் காலத்திலிருக்கிற நமக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது எப்பொழுதும் கர்த்தருக்கென்று சாட்சி கொடுப்பேன், ஆராதனை செய்வேன், ஸ்தோத்திரம் சொல்லுவேன், கர்த்தருக்கு ஊழியம் செய்வேன் என்கிறார் இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுவேன்

5) நான் பொருத்தனைகளை சபையின் நடுவே அவருடைய ஜனங்கள் எல்லோருக்கு முன் பாகவும் செலுத்துவேன் என்று சொல்லுகிறார் (சங் 116: 14,18)

தேவ ஜனங்கள் மத்தியிலே தேவனுக்கு ஆராதனை செய்கிற இடத்திலே, தேவ சன்னிதியிலே அவருக்கு பொருத்தனைகளை செலுத்துவேன் என்று சொல்லுகிறார் கர்த்தரை மகிமைப்படுத்துவது அவருக்கு ஆராதனை செய்வது மிகப் பெரிய சிலாக்கியமாகும் கர்த்தர் இதை எனக்குச் செய்தார் கர்த்தர் காரியத்தை வாய்க்கப் பண்ணினார் என் விண்ணப்பத்தைக் கேட்டார் என்று சொல்லி பொருத்தனையை செலுத்துவதாகும் நாம் கர்த்தருக்கு பொருத்தனை பண்ணி அவருடைய சந்நிதானத்திலே, தேவ ஜனங்கள் மத்தியில் செலுத்துவது கர்த்தருக்கு உகந்ததாகவும் பிரியமானதாகவும் இருக்கிறது மனிதர்கள் இப்படியே நம்முடைய வாயைத் திறந்து இருதயத்திலே பொருத்தனை செய்கிறார்கள் அது வெவ்வேறு விதமாக இருக்கலாம்.

6) நன்றிபலி, ஸ்தோத்திரபலி ஏறெடுப்பேன் என்று சொல்லுகிறார் (சங் 116:17)

நாம் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் அவர் செய்த உபகாரங்களுக்காக கர்த்தரை துதிக்க வேண்டும் யார் தேவனுக்கு நன்றி ஏறெடுக்கிறார்களோ அவர்கள் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார் தேவ

சந்நிதானத்துக்கு வந்து எப்போதும் புலம்பல் பாடிக் கொண்டு இருக்காமல் நன்றி ஏறெடுக்க கற்றுக்கொள்ளவேண்டும் நமக்கு வந்த அந்த நெருக்கடிகள், அந்த இடையூறுகள் அதை வெற்றியாக தேவன் முடித்து தருபவராயிருக்கிறார் என்று நாம் விசுவாசத்தோடு ஸ்தோத்திரபலி செலுத்த வேண்டும் கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை, ஆசீர்வாதங்களை நினைவு கூர்ந்து ஸ்தோத்திர பலி செலுத்த வேண்டும். மனிதன் ஸ்தோத்திரம் செலுத்தும் ஒரு இயந்திரம் போல படைக்கப்பட்டு இருக்கிறான் ஸ்தோத்திரம் செலுத்தி பரிசுத்த ஆவியானவர் ஏவுகிற காரியங்களுக்காக விண்ணப்பம் பண்ண வேண்டும். எப்போதும் தேவனுக்கு துதி ஏறெடுக்கும் படியாக நாம் சிருஷ்டிக்கப்பட்டு இருக்கிறோம் (சங் 34:1)

7) எருசலேமே உன் நடுவிலே அதை நிறைவேற்றுவேன் என்று சொல்லுகிறார். (சங் 16:19)

தாவீது நெருக்கடியிலே, குகையிலே ஒளிந்து உயிர்பிழைக்க ஓடிக்கொண்டு இருக்கிறார் எந்த வேளையிலும் சவுலும், சவுலுடைய படைகளும் விரட்டி கொன்று போடும்படி வருகிறார்கள் இந்த மத்தியிலும் கர்த்தர் எனக்குச் செய்த உபகாரங்களுக்கு என்னத்தை செலுத்துவேன் என்று சொல்லி, கர்த்தருடைய ஆலய பிரகாரங்களிலும், எருசலேமே உன் நடுவிலும் என் பொருத்தனைகளை நிறைவேற்றுவேன் என்று சொல்லுகிறார்

கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின் நிமித்தம் தன்னுடைய ராஜ்யத்தை உயர்த்தினார் என்று தாவீது கண்டறிந்த போது அவர் எபிரோனிலிருந்து வந்த பின்பு எருசலேமிலே ---(2 சாமு 5:12,13) என்று வாசிக்கிறோம்.

தாவீது தன் வாயினால் இருதயத்தில் சொன்னதை நிறைவேற்றின அவருடைய நம்பிக்கையும் பொருத்தனை நிறைவேற்ற நேர்மையும் நாம் காண்கிறோம் கர்த்தர் கடந்த ஆண்டு முழுவதும் நமக்கு செய்த நன்மைகளுக்காக என்னத்தை செலுத்துவேன்

1) அவர் மேல் அன்பு கூருவோம்.

2) உண்மையோடு இருதயத்தோடும் அவரைத் தொழுது கொள்ளுவோம்

3) ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருக்கு முன்பாக நடப்போம்.

4) இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவோம்

5) கர்த்தருக்கு நன்றி. ஸ்தோத்திர பலி ஏறெடுப்போம்.

6) நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை செலுத்துவேன்.

7) பொருத்தனை செய்து அவருடைய ஜனங்களுக்கு முன்பாகவும் எருசலேமே உன் நடுவிலும் நிறைவேற்றுவேன் என்று சொல்லி சங்கீதக்காரர் தாவீது ஏழு பொருத்தனை செய்து கொண்டது போல நாமும் புத்தாண்டில் பொருத்தனை செலுத்தி அதைக் கேட்டு பெற்றுக் கொண்டு இந்த ஆண்டில் பொருத்தனைகளை நிறைவேற்றி கர்த்தருடைய நாமத்தை மகிமை படுத்துவோமாக

" ---------நான் பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன் " யோனா 2:9

வேத பாடம்

நியாயாதிபதிகளின் புத்தகம்

நியாயாதிபதிகளின் புத்தகம் என்ற தலைப்பு [illegible] யோசுவா மரித்தபின் [illegible] இந்த புத்தகம் [illegible]

[illegible] நியா 17:6 ல் வாசிக்கிறோம் [illegible]

நியாயாதிபதிகளின் [illegible] 15 நியாயாதிபதிகள் [illegible] 7 பேர் [illegible] நியாயாதிபதிகளின் [illegible] எபி 11:32 ல் [illegible] நியாயாதிபதிகளின் புத்தகம் [illegible]

[illegible] நியாயாதிபதிகளின் புத்தகம் [illegible]

[illegible]

வாழ்க்கையில் நடைபெற்ற வரலாற்றுத் தொடர்ச்சியின் ஒரு விவரமல்ல. அதற்குமாறாக அது இஸ்ரவேலர் சம்பந்தமாகத் தேவனுடைய நடத்துதலின் விவரமும், அவர்கள் தேசிய வாழ்க்கையின் வாயிலாக அவருடைய மீட்பின் இடைவிடாத விருத்தியடைதலை இந்த புஸ்தகத்திலே பார்க்கிறோம். பழைய ஏற்பாடு முழுவதிலேயும் இஸ்ரவேலர்கள் மத்தியிலே தேவன் தம்முடைய சித்தத்தையும், தம்முடைய நோக்கத்தையும் கிரியை நடப்பிக்கிறதையே காண்பிக்கிறது. ஆனபடியால் பழைய ஏற்பாட்டுச் சரித்திரம் தேவனுடைய கிரியைகளின்படி படிப்படியான செய்திகளை வெளிப்படுத்துவது அதனுடைய நோக்கமாகும். இஸ்ரவேலர்களிலே காணப்பட்ட கீழ்ப்படியாமையும், பாவமும் அசுத்தமும் உண்மையற்றதுமான சம்பவங்கள் மனித சுபாவத்தையும் இருதயத்தையும் வெளிப்படுத்துவதாகக் காண்பிக்கிறது. இது ஒவ்வொரு மனிதனுக்கும் எச்சரிப்பாக இந்த சரித்திரம் எழுதப்பட்டுள்ளது. தனித்த மனிதர்களை அவர் நடத்துவதற்கு ஒப்பாக அந்தத் தேசத்தாரை நடத்தினவிதம் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

நியாயாதிபதிகளின் புஸ்தகம் சரித்திரம் சம்பந்தமான சம்பவங்களை தெய்வீக வெளிப்படுத்தலோடும் இணைத்து நமக்குக் காண்பிக்கிறது. இந்த புஸ்தகத்தை எழுதினது யார் என்பதைக் குறித்து கருத்து வேறுபாடு உண்டு. யோசுவா மரித்தபின்பு என்று எழுதப்பட்டிருக்கிறது. யோசுவா புத்தகத்திற்கு அடுத்தபடியாக இந்த புஸ்தகம் வைக்கப்பட்டிருக்கிறது. சம்பவங்களும் அப்படியே.

தற்கால தொல் பொருள் ஆராய்ச்சி பண்ணுகிறவர்கள் எரிகோ பட்டணம் விழுந்து கானானின் ஆக்கிரமிப்பு ஆரம்பமான காலம் சுமார் கி.மு. - 1300 ஆகும். 1 இராஜா 6:1 ல் நாம் வாசிக்கிறபடி யாத்திராகமத்தின் காலத்திலிருந்து சாலொமோன் ராஜ்யபாரம் செய்த நாலாம் வருஷத்தில் தேவாலயம் கட்டப்பட ஆரம்பமானது வரை 480 வருஷங்கள் சென்றன. வனாந்தர பயணம் 40 வருஷமும், சவுலின் ஆளுகை 40 வருஷமும், தாவீதின் ஆளுகை 40 வருஷமும், சாலொமோனின் 4 வருஷ ஆளுகை இவைகளும் சேர்ந்து 124 வருஷங்களை ஆகின்றன. ஆகவே யோசுவா நியாயாதிபதிகளின் புஸ்தகங்கள் 356 வருஷ கால சம்பவங்களை அறிவிக்கின்றன. எனவே நியாயாதிபதிகளின் புஸ்தகம் கி.மு. - 1300க்கும் 1100 க்கும் இடையில் நடைபெற்றிருக்கும்.

இந்த புஸ்தகத்தை சாமுவேல் எழுதினதாக சிலரும் வேறே தீர்க்கதரிசிகளும் எழுதினதாக நம்புகிறார்கள். பழைய ஏற்பாட்டிலே தீர்க்கதரிசிகளின் வரிசையிலே நியாயாதிபதிகள் வைக்கப்பட்டிருக்கிறது. அதாவது இஸ்ரவேலின் சரித்திரத்தில் தேவனுடைய பிரசன்னத்தையும் நடத்துதலையும் குறிப்பிடும்படியாகத் தீர்க்கதரிசி சரித்திரத்தைப் பிரயோகித்தபடியினால் இப்புஸ்தகம் தேவனுடைய நடத்துதலை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

நியாயாதிபதிகளின் புஸ்தகத்தை நாம் வெவ்வேறு பகுதிகளாக பிரித்து ஆராயலாம்.

-தொடரும்

"அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை. அவனவன் தன்தன் பார்வைக்கு சரிபோனபடி செய்து வந்தான்."

(நியா 21 25)

கடைசி காலத்தில் தோன்றும் பரியாசக்காரர்கள்

தேவன் தம்மை பரியாசம் பண்ண வொட்டார். மனிதன் எதை விதைக் கிறானோ அதையே அறுப்பான். (கலா. 6:7)

அனாதியான தேவனுடைய ஜனங்களே தேவன் தம்மை பரியாசம் பண்ண எப்போதும் இடங்கொடுத்துக் கொண்டிருக்க மாட்டார். உலகிலுள்ள மனிதர்கள் வேறு வேறு விதமாக காணப்படுகிறார்கள். சிலர் ஞானிகள், சிலர் அறிவாளிகள், சிலர் அறிவில் குறைவுள்ளவர்கள், சிலர் தேவ பக்தி யுள்ளவர்கள், பரிசுத்தவான்கள், சிலர் நல்லவர்கள், சிலர் அநியாயக்காரர்கள், சிலர் மாயமாலக்காரர்கள், சிலர் கலகப் பண்ணுபவர்கள், சிலர் அமைதி, இன்னும் சிலர் மரியாதைக்காரர்கள், சிலரோ பரியாசக் காரர்கள். குடிகாரர்களுக்கும் பரியாசக் காரருக்கும் வித்தியாசமில்லை. பரியாசம் என்பது சிரிப்பு இல்லை. விளையாட்டல்ல கருவில்லை, வெற்றிச் சிரிப்புமல்ல விரும்பத்தக்கதுமல்ல.

பரியாசம் செய்வது ஒருமதியீனமான செயல். பெருமையுள்ளவர்களுக்கும், அகந்தை, இடும்புள்ளவனுக்கும் பரியாசக்காரன் என்று நீதி 21:24-ல் எழுதப்பட்டுள்ளது. இவர்கள் நல்லோரை, தேவபக்தியுள்ளோரை, பெரியவர்களை, தேவனின் காரியங்களைப் பரியாசம் பண்ணுகிறார்கள். எதற்கெடுத்தாலும் பரியாசம் பண்ணுவார்கள். இவர்களின் சிரிப்பு மூடனின் சிரிப்பு, பானையின் கீழ் எரியும் முட்களைப் போல் இருக்கிறது.

இந்த பரியாசக்காரர் உலகத்தில் அவ்வப்போது இருந்து வருகிறார்கள். அவர்களுடைய கிரியைகளில் எல்லாம் பரிதாபமாகவே முடிந்தாலும் சரி. பரியாசம் நல்லது அல்ல. ஏழையைப் பரியாசம் செய்கிறவன் தன்னை உண்டாக்கின தேவனை நிந்திக்கிறான். பல பரியாசம் செய்கிறவர்கள் இராஜாக்களையும் பெரியவர்களையல்ல, மகிமையுள்ளவர்களையல்ல, எளிமையானவர்களையே பரியாசம் பண்ணுகிறார்கள்.

மனிதனுக்கு தேவன் வாயைக் கண்களைக் கொடுத்திருக்கிறார். பேசும் திறன் சிந்திக்கும் திறன் மனிதனுக்கு மட்டுமே பூவுலகில் உண்டு. மனிதன் தன் கருத்தை பிறருக்குத் தெரிவிக்கவும், தனக்கு வேண்டிய உதவியைக் கேட்டு பெறும்படியும் தன் கருத்தைச் சொல்லவும் வாயானது மனிதனுக்கு அருளப்படுகிறது. பேசாமல் எழுதியும் சைகையாலும் கூட தெரிவிக்கலாம். ஆனால் வாய் பேசும் திறனைப்போல் அது அவ்வளவு எளிதானதல்ல. இந்த வாயின் வார்த்தை மூலம் மனிதன் நல்லவைகளை, பக்தியுள்ளவைகளை, சத்தியமானவைகளை, பிறரை மகிழ்விக்கும் ஆரோக்கியமான வார்த்தைகளை, உபதேசங்கள், நல்ல போதனைகளை அதிகாரமுள்ள வார்த்தைகளைப் பேசவே வாய். வாயின் வார்த்தைகள் பேச சந்தர்ப்பமாகப்படுகிறது.

பரியாசக்காரர்கள் இடும்பர், நாஸ்திகர்கள், சத்தியக்காரர்கள் செய்வது மனித தன்மையற்ற அநாகரீக செயலாகும். பரியாசம் பாவமாகும். பரியாசம் பண்ணுகிறவன் பிறரை அவமதிக்கிறது மாத்திரமல்ல தனக்கே கேடுண்டாக்கிக் கொள்கிறான். அதில் சிலர் புகழுகிறார்கள்

சொல்கிறார்கள் அதில் சிலர் பழகுகிறார்கள் அதிலே அவர்களுக்கு ஒரு சேவை சந்தோசம் இருக்கிறது அதை எக்கையும் செய்கிறார்கள் சில மனிதர்கள் பெண்களை பரியாசம் செய்ததால் தைப்பப் படைக்கப்பட்டு போர்களில் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் கரடிகள் முன்பு அடி. தடி. கொள்ளவும் நிகழ்ந்ததாக நாம் தினசரி பேப்பர்களில் அடிக்கடி பார்க்கிறோம் பரியாசம் பண்ணுகிறவர்கள் ஆதரவற்றவர்களை, வயதானவர்களை, ஏழைகளை, ஊமை பெண்களை, தேவ பக்தியுள்ளவர்களை, தெய்வீக காரியங்களையுமே பரியாசம் செய்கிறார்கள்

பரியாசம் செய்தல் தகாது. பரியாசம் பாவம் என்று பரிசுத்த வேதாகமத்தில் எழுதியிருக்கிறது (எபே 5 4) சில தேவ பக்தியற்றவர்கள் பரிசுத்தவான்களை, கர்த்தருடைய பிள்ளைகளை தூஷிப்பது வழக்கமாக இருக்கிறது ஏன் தூஷிக்கிறார்கள் தெரியுமா? இதென்ன இவர்கள் நம்மோடு இருந்தவர்கள் நம்மைப்போல குடிக்கவில்லை பாவம் செய்ய வரமாட்டேன் என்கிறார்களே, கடவுளுடைய பிள்ளைகளாகி விட்டார்களே என்றும் (1 பேது 4 4, ஆதி 21 9, கலா 4 29) தங்களுக்குப் பிடிக்காததினிமித்தமும், இவர்கள் நேர்மையாயிருக்கிறதினிமித்தமும் (யோபு 12 4) இவர்களுடைய விசுவாசத்தைக் கண்டும், கர்த்தருடைய வசனத்தை உண்மையாய் பிரசங்கிப்பதினிமித்தமும் (எரே 20 7,8), தேவனுடைய ஆலயத்தின்மேல் வைராக்கியம் மேல் உண்மையான வாஞ்சையாய் இருப்பதினாலும் (நெகே 2 19) பரியாசம் பண்ணுகிறார்கள் இவ்விதம் பரியாசம் பண்ணுகிறவர்கள் அருவருப்பானவர்கள் என்றும் அவர்களை துரத்திவிடுங்கள் என்றும் வேதத்தில் எச்சரிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் இவர்கள் பரிசுத்தவான்களின் சபையில் நிலைவரப்படமாட்டார்கள் நல்ல மனிதர்களும் பரிசுத்தவான்களும் இவர்களை புறக்கணிப்பார்கள் (சங் 1 1, எரே 15 17). பரியாசம் அந்திக் கிறிஸ்துவின் ஆவியின் கனியாகும் கடைசிக்காலத்தில் பரியாசக்காரர்கள் தோன்றுவார்கள் (2 பேது 3 3) நீ பரியாசக்காரனா? பரியாசக்காரியா? நீ பரியாசம் செய்கிறவனாய், செய்கிறவளாய் இருந்தால் எச்சரிக்கையாயிருங்கள்

கடைசிக்காலத்தில பரியாசக்காரர்கள் தோன்றுவார்கள் தங்கள் சுய இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர்கள், இப்பொல்லாத கள்ள மனுஷனாம் பண்ணி, பரியாசம் பண்ணி அநேகத் தெய்வீக காரியங்களை பரியாசம் பண்ணுவார்கள் என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது இவர்கள் இயேசு கிறிஸ்துவின் 2-ம் வருகையை (2 பேது 3 3,4) பரிசுத்த ஆவியின் வரத்தை, மீட்பை (அப 2 13) போதகர்களை, தேவ ஊழியர்களை (2 நாளா 36 15, சங்123 4, புல 3 14,63), தேவனுடைய பிரமாணங்களை, உபதேசத்தை, மரித்தோர் உயிர்தெழுதலை (அப 17 32) ஜெபத்தை, தேவ பக்தியை, தேவனுடைய எல்லா பணத்தினை எச்சரிப்புகளையும் (2 நாளா 30 6-10) பரியாசம் பண்ணுவார்கள் தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிப்பவர்களும், தங்கள் இஷ்டப்படி நடந்து பாவம் செய்பவர்களுமாயிருக்கிறார்கள்

கவனமாய் கேள, தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார் மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் கடைசிக் காலத்தில் தோன்றும் பரியாசக்காரர்கள் துணிகரமாய் ஜீவிப்பார்கள், நாம் மரிக்கப் போகிறதில்லை போலும் நியாயத்தீர்ப்பு ஒன்று இல்லை என்பது போலும் இவர்கள் நினைப்பு. சிலர் தேவ பக்தியுள்ளவர்களைப் போல் நடிப்பார்கள், ஜெபமும் செய்வார்கள், பாட்டும் பாடுவார்கள், ஜீவியத்தினால் தேவனை

படுவார்கள் ஜீவியத்திலும் தேவனை பரிகாசம் பண்ணுவார்கள் (நீதி 1:16 நீயும் அப்படி தானா? நீ பரியாசக்காரனாயிரு எச்சரிக்கையாயிரு. இது கடைசி காலத்திற்கு அடையாளம் உலகத்தை நேசித்து இயேசு கிறிஸ்துவை விட்டு விட்ட அநேகரும் போதகர் மற்றவர்களையும் மோசத்துக்குட்படுத்துவார்கள் (நீதி 29:8) உன் மேல் தேவ கோபம் வரும் உனக்கு அழிவு காத்திருக்கிறது (2 நாளா 36:17) என்று தேவன் சொல்லுகிறார் (நீதி 19:29 ஏசா 29:20) உனக்கு தண்டனை இருதய வேதனை வரும் (புல 3:64, 65) ஈசாக்கை தேவனுடைய வாக்குத்தத்தத்தின் பிள்ளையை பரியாசம் பண்ணின மாம்ச இச்சையின் கனியாகிய இஸ்மவேலை, ... பரியாசம் பண்ணின ... (ஆதி 21:9) எலிசாவை பரியாசம் செய்த பெத்தேலின் பிள்ளைகளை, தேவனுடைய ஆலயத்தைக் கட்டின நெகேமியாவை தேவனுடைய பிள்ளையையும் பரியாசம் பண்ணின சன்பல்லாத் தொபியாவை நீ அவர்களுக்கு என்ன சம்பவித்தது என்பதைக் கவனி (விளக்கம் ...) விடலாம் என்று எண்ணாதே

தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார். கடைசி கால அறிகுறியான பாவம் உன்னிலுண்டா? பரியாசக்காரனே ... மனந்திரும்பு கேள். தேவனைத் தேடு. பரியாசக் காரனாயிராதே. மதுபானம் பரியாசம் பண்ணும். தேவனைத் தேடு. தேவனைக் கனம் பண்ணு. ... பரியாசக்காரர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டார்கள். இயேசு கிறிஸ்துவைப் பரியாசம் பண்ணின தருணம். அந்த சொல்லை செய்த கூட்டத்தாரில் நீயும் ஒருவனாயிராதே. தேவன் தம்மை எப்போதும் பரியாசம் பண்ணவொட்டார். நீ தேவ பக்தியுள்ளவனாக ...

> " ... கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படி நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்த விதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள் "
>
> (2 பேது . 3: 3, 4).

ஞானஸ்நானம் !

23-10-1998 அன்று குஜராத் மாநிலத்திலுள்ள பாலாசினோர்-புதிய எருசலேம் கிளை சபையில் 6 பேர்கள் திருமுழுக்கு பெற்று திருச்சபையின் அங்கமானார்கள் என்றும், 25-12-98 அன்று தலைமை சபை பம்பாய்-ல 9 பேர்கள் திருமுழுக்குப் பெற்று திருச்சபையின் அங்கமானார்கள் என்றும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்

புதிய எருசலேம் செய்தி

PUDHIYA YERUSALEM CHEIDHI

எக்காளம் 18 ; சத்தம் : பிப்ரவரி '99



வீட்டெஜமான் (இயேசுகிறிஸ்து) சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவா(ர்)ன என்று நீங்கள் அறியாதபடியால் விழித்திருங்கள். உங்களுக்கு சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள். மாற்கு 13 : 35-37

EDITOR : CHIEF APOSTLE N. LAZAR

MUMBAI, INDIA

பத்திரிகையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒரு மனப்பட்டு கிறிஸ்துவுக்கேற்பான பூரண வளர்ச்சியடையும் படியாகவும் தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும், சபையானது வஞ்சகப் போதனைகளுக்குத் தப்பி ஒரே சிரசப் பூரண வளர்ச்சியடையும் படியாகவும் இப்பத்திரிகை வெளியிடப்படுகிறது. (எபே. 4:11-16)

புதிய எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தரிசனமாகி 'தேபோபஸ்துலே, இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட அதிகாரங்களும் கட்டளைகளும் 7 (அப 1 1-3)' என்க்கு காண்பித்து, ஸ்தாபித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள்

1 உலகமெங்கும் போய், மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் மத் 28 18, மாற்கு 16 15

2 விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களை பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தில் ஞானஸ்நானப்படுத்துங்கள் · மத் 28 19 (இயேசுவானவர் (Through Action) செய்து காண்பித்தார்

3 திருச்சபையைக் கட்டி (மத் 16 18) [illegible] யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு [illegible] மத் 28 20

4 அவர்களுடைய பாவங்கள் [illegible] யோவான் 20 23

5 அவர்களை மேய்த்து ஆளுகை [illegible] யோவான் 21 15-17

6 இவைகளை நடப்பிக்க [illegible] பெற்றுக்கொண்டு (அப-1 5-8)

7 நான் வருகிற வரையிலும் என்னை நினைவுகூரும்படி திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார் -1 கொரி 11 23-26

நான் ஆண்டவரே சிலர் அஸ்திபார உபதேசங்கள் இரண்டு (2) என்கிறார்கள் வேறு சிலர் ஏழு (7) என்கிறார்களே அது எப்படி? என்றேன்

இயேசுவானவர் பிரதியுத்தரமாக இவை அஸ்திபார உபதேசங்கள் ஏழு ஆகும் (நீதி 9 1-6) இது ஆதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளும் அதிகாரங்களுமாகும் இவைகளை நான் உனக்கு கொடுக்கிறேன் என்றார் (அப. 1 1, 10 40-43)

இதழின் உள்ளே ......

ஆசிரியர் உரை



இந்து மதம் தோல்வியடைந்து விட்டது இந்து மத தத்துவங்கள் ஒன்றுக்கும் உதவாது தங்கள் பிழைப்புக்கு ஆபத்து வந்து விட்டது என்று அறிந்து கொண்ட இவர்கள் மனித கொலைத் தொழிலாகிய புலைத் தொழிலை செய்கிறார்கள் சில நாட்களுக்கு முன் ஒரு இந்து மத வாத இயக்கம் ஒரு நோட்டீஸ் அடித்து விட்டிருந்தார்கள் ஆசனம் செய்து யோகாப்பியாசம் செய்தால் முக்தி கிடைக்கும் என்று, இந்து மதம் சொல்லுகிறது என்று அதில் எழுதப்பட்டிருந்தது பாவம் இந்த இந்துக்களை நரகத்துக்கே போவார்கள் ஏனென்றால் அவர்கள் கூறுவது யோகாப்பியாசம் செய்பவர்கள் 8 ராஜ யோகத்தின் எட்டு படிகள் யமம், நியமம், ஆசனம் பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி

யமம் - எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் பிற உயிர்களை இம்சித்தல் கூடாது மேலும் பொய் பேசுதல், களவாடல், உடைமைகளைப் பெருக்குதல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும் சத்தியத்தையும், அன்பையும் கடைப்பிடிக்க வேண்டும்

நியமம் - இது தகும் இது தகாது என உடம்பட்டு மூலமாக விதிகளை வகுப்பது அதாவது தூய்மை, திருப்தி, நல் விரதங்களைக் கடைப்பிடித்தல் தத்துவ ஞான நூல்களையும், சாஸ்திர நூல்களையும் கற்று அவற்றை தமது சுய அறிவால் ஆராய்தல் என்பதாம்

இந்த யமம் நியமம் இல்லாமல் ஒருவன் யோகத்தை செய்யக் கூடாது மீறினால் இந்த யோகம் அவர்களையே கொன்று விடும். மேற்கண்டபடி இவர்கள் இல்லாவிட்டால் நரகம் தானே இறைதேதாற் போல நான ஆசனத்தையும் பிராணாயாமத்தையும் தொடர வேண்டும் இன்னும் உண்டு அவர்களால் முடியாததை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நிழலில் நாம் யமம், நியமத்தைக் கைகொண்டு வாழ்கிறோம் ஆதலால் தான் மனந்திரும்புங்கள், மெய் தேவனிடம் வாருங்கள் என்று அழைக்கிறோம் நாமே சரி கிறிஸ்தவமே மெய்மார்க்கம் நாம் முக்தி வழி செல்லுகிறோம் கிறிஸ்தவர்களே மகிழ்ந்திருங்கள் எல்லா மதத்திலுள்ள தத்திரம் அங்கேயில்லை இங்கே கிறிஸ்தவத்தில் இருக்கிறது அல்லேலூயா!

கிறிஸ்துவுக்குள

(Chief Apostle N.Lazar)

திரியேகத்துவம் (தொடர்ச்சி)

ஒரே கடவுள் என்ற சத்தியம் 'பாகுபடுத்தப்படாதவர்' (Indivisible) எனவும் பொருள்படும். கடந்த காலத்துக்கு ஓர் கடவுள் நிகழ் காலத்துக்கு ஓர் கடவுள் என வகுக்கக்கூடாது. ஓர் செயலுக்கு ஒரு கடவுள், மற்றொரு செயலுக்கு மற்றொரு கடவுள் எனக் கூறுவதும் கூடாது. ஒரே கடவுள் எனக் கூறும் போதும் மற்றவற்றிலிருந்து தனிப்படுத்தப்பட்ட ஒன்று என்பதும், மற்றெதனோடும் ஒப்பிடக்கூடிய நிலையைத் தாண்டிய ஒப்பற்ற தன்மையுடையவரென்பதையும் காட்டும் (Single unit as we l as uniqueness) செமா என்ற எபிரேய போதனையின் கருத்தை நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வற்புறுத்தியதும் (மாற் 12 29) ஆனால் இத்தகைய தனித்துவத்தில் (Unity) பிரிவிருத்தியும் உண்டு (Diversity) என்பதையும் மறந்து விடக் கூடாது. ஒன்றின் பிரிவிருத்தி வேறு, பல தெய்வ வணக்கம் வேறு. திரித்துவ சித்தாந்தத்தை ஆராயும் போது பிரிவிருத்தி (Diversity) பல தெய்வ வணக்கம் வேறு (Polytheism) என்ற பதங்களைக் குறித்து மிக எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். இருவரும் கூற முடியாதது " ஒன்று " எனக் கூறப்படுவதில் ஒன்றுக்கு மேற்பட்ட என்ற தன்மையும் அடங்கியிருக்கிறது என்பதே.

" The Doctrine of the Trinity does not destroy but safeguards the unity of God. The highest type of unity is not a mere barren numerical unity, but one that embarrass within itself a wealth of diversity ".

தம்முடைய அறிவு, எண்ணம், அன்பு, வெறுப்பு, பண்பு முதலியவற்றை வைத்து கடவுளின் குணங்களை (Attributes) ஆராய்வது தவறு.

மனிதனின் குணங்கள் என சொல்லப்படுவது, கடவுளின் குணம் என ஒருபோதும் படைக்கப்படவில்லை. எனினும் அவர் 'மாறாதவர்' உணர்வற்றவர் கடவுள் ஆளும் நிலையானவர் எனவும் ஒரே கடவுளின் ஒரே தனித் தன்மையையே குறிக்கும்.

கடவுளின் தனித்துவம் மற்றொரு முக்கிய சத்தியத்தையும் காட்டும். கடவுள் பாடு படமாட்டார் (God is without passions) குறிப்பாக 'பாடுபடக் கூடியவரல்ல' எனப் பொருள்படும் (Incapable of suffering). இக்குறிப்பிலும் ஒரே கடவுள் மற்றொன்றும் செய்யக் கூடாத 'நித்திய' தன்மை உடையவர் எனக் கூறுவது கூடாது. இன்றும் கடவுள் மாறாதவர் என்பதே முக்கிய பொருள். கடவுளின் நோக்கமும் அவரின் சித்தமும் (Character) என்றும் ஒன்றே (மல்கி 3 6 எண் 23 19)

ஒரே கடவுள் எனக் கூறும் போது பல உறுப்புகளை ஒன்றுபடுத்தும் தலை என்றோ, பல உறுப்புகளுக்கு உயிரளிப்பதும் ஒரு பொருள் என்றோ பொருள்படக் கூறும் ஆங்கிலத்தில் " Organic Unity " எனச் சொல்லப்படும் மனித சரீரத்தின் அவயவங்கள் பல, தலை ஒன்று, ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்கக் கூடாது. ஒன்றின் செயல் தனிச் செயலாய்க் கருதப்படாமல் சரீரம் என்ற பொதுச் செயலாகவே முழுச் செயலாகவே கருதப்படும் (I கொரி 12 12 27) ரோமர் 15 1 6 ல் சொல்லப்பட்டிருக்கிற கொடியின் ஒருமைப்பாடும் இக்கருத்தை நன்கு விளக்கும். செடியிலிருந்து கொடியைப்

பிரிப்பது கூடாது. தெய்வத்தொடும் ஒரே தனி நோக்கத்தையே எடுத்துக் காட்டும் கடவுளின் தனித்துவத்தில் இதுவும் சிறந்த குறிப்பு. ஒரே கடவுள் ஒரே நோக்கத்தில் எல்லாவற்றிலும் ஒன்றுபட்டவராக அமைந்திருந்து தனித்து நின்று செயலாற்றுகிறார்.

இக்குறிப்பில் 'எல்லாம் கடவுள' (Pantheism) என்ற தப்பு உபதேசத்தைக் குறித்துக் கவனமாய் இருக்க வேண்டும்.

'ஒரே' என்ற பதம் கூட்டு நோக்கத்தில் ஒருமைப்பாட்டையும் குறிக்கும். பலர் சேர்ந்து ஒரு கூட்டு விளையாட்டை விளையாடுவதை நாம் அறிவோம். கூட்டு விளையாட்டில் ஒவ்வொருக்கு வெவ்வேறு பங்கேற்புகள் ஆனால் யாவரின் நோக்கமும் ஒரே நோக்கம் விளையாட்டு வெற்றிபெற வேண்டும். அப். 4 32-ல் 'விசுவாசிகளான திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமும் உள்ளவர்களாயிருந்தார்கள் ----- சகலமும் அவர்களுக்கு பொதுவாயிருந்தது' என்று நாம் வாசிப்பது இந்த ஒரே நோக்கை எடுத்துக் காட்டும்.


கடவுள் மனிதனுக்கு தூரமானவர் அல்ல. மனிதனுடைய பாடு துன்ப துக்கங்களில், பங்கெடுத்து நிவர்த்தி செய்கிறவராயிருக்கிறார். ஒரு தெய்வம் துன்பப்படுத்த மற்றொரு தெய்வம் உதவி செய்கிற புராணபாடுடைய பல்தெய்வ கடவுள் கடவுள் நிர்க்குணருமல்ல. துர்க்குணருமல்ல. அவர் மக்களுக்காக அனுதாபப்படுகிறவர். கடவுள் ஆளத்துவத்தில் ஒருமைப்பாடுடையவர். மக்களோடு ரூபத்தில் உறவாடும் ஆள்தத்துவ ஒருமைப்பாடுடையவர் (God as Organic Unity) கடவுளின் அந்நியோன்யத்தை மிகப்படக் கூறி 'கடவுள் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார்' நீயே கடவுள் கடவுளே நீ கடவுளும் மனிதனும் சமநிலையே ஒன்றுபடுவர்' என்ற சிலர் கூறுகின்றனர். அது தவறு. அப்படியானால் கடவுளின் ஆள்தத்துவமும் மனிதனின் ஆள்தத்துவமும் நிராகரிக்கப்பட்டு 'நீ நான்' (I and Thou) என்ற உயரிய வேறுபாடு நீக்கப்பட்டு கடவுளுக்குரிய சித்தாந்த இலட்சியமும் மனிதனுக்குரிய சித்தாந்த இலட்சியமும் யாவும் ஒழிந்து போகுமே.

திரித்துவ உபதேசம் கூறுவதென்ன? ஆதியிலே வார்த்தை---- 'அவர் தேவனாயிருந்தார்' அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே நமது நடுவிலே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். பிதாவாகிய தேவனின் அன்பையும் குமாரனாகிய தேவனிலும், குமாரனாகிய தேவனின் அன்பைத் பரிசுத்த ஆவியாகிய தேவனிலும் சீஷர்கள் கண்டனர், அடைந்து கொண்டனர் (யோவா 1 1-3, 14, 1யோவா. 1 1-3) ஒவ்வொரு படிகளும் அந்தத்தில் அந்நியோன்யத்தையும் அந்நியோன்யத்தில் அந்தத்தையும், ஒருவரில் மூவரையும், மறைவில் வெளிப்பாட்டையும், வெளிப்பாட்டில் மறைவையும் திரித்துவ உபதேசம் அழகாகக் காட்டுகிறது ஏனெனில் இது தெய்வீகத்தைப் பற்றியது.

(தொடரும்)

"கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள் ; இவைகளில் ஒன்றும் குறையாது ; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது ; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்."

ஏசா 34 : 16



மார்ட்டின் லூத்தர் சாஸ்திரியாரின்ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

அதி. 36 சுல்தான் சொலிமான் இராஜ்ய அமைதிக்குக் காரணம்

சுவிசேஷ பிரபுக்கள் செய்த பகைத்த தற்காப்பு உடன் படிக்கை துருக்கி சுல்தானும், இராயனும் அறியாத மறை பொருளல்ல. சுவிசேஷப் பிரபுக்கள் இராயனுடைய கட்டளைக்கு அடங்கும் படி குறிக்கப் பட்ட தவணைக் காலமும் யாரும் அறியாமலே தவறிப் போயிற்று. என்றாலும் லூத்தரன் பிரபுக்கள் கீழ்ப்படியக் கட்டாயம் பண்ணும்படி தேசப் பிரமாண ஏற்பாடுகள் செய்வதற்கு ஏற்கனவே ஆரம்பமாயிற்று. ஆனால் துருக்கி சுல்தான் படை எடுப்பதாக பயமுறுத்தினது இராயன் தன் யுத்த சூழ்ச்சியை மாற்றும்படி ஏவிற்று. ஆகையால் லூத்தரன் பிரபுக்களைப் பலவந்தமாய்க் கீழ்ப்படியச் செய்ய வேண்டுமென்ற தன நோக்கத்தை இராயன் தற்சமயத்தில் நிறுத்தி வைத்தான். வேறொரு இராஜ்ய சங்கம் ரேகன்ஸ்பர்க்கில் கூட்டப்பட்டது. சுவிட்சர்லாந்து தேசத்தில் அநேகமாய் சுவிங்கிலியால் ஏவப்பட்டுப் பாப்பு மார்க்கத்திற்கும் சுவிங்கிலியத்தைச் சேர்ந்தவர்களுக்கும் மார்க்க விஷயமாக ஒரு யுத்தம் ஆரம்பித்தது. சுவிங்கிலியைச் சார்ந்தவர்கள் தோல்வியுற்றார். சுவிங்கிலியும் 1531-ம் வருஷம் அக்டோபர் மாதம் 11-ம் தேதி காப்பெல் என்னுமிடத்தில் இறந்து போனதால் பேர்டினாந்து அரசன் வெகு மகிழ்ச்சியடைந்து லூத்தரைச் சார்ந்தவர்களையும் இவ்விதமாய் அடக்கலாம் என்று எண்ணிக்கொண்டு அவர்களோடும் யுத்தம் ஆரம்பிக்க தைரியங்கொண்டான். ஆனால் ரேகன்ஸ்பர்க் பட்டணத்தைத் தாக்கி சண்டை செய்யும் படி சுல்தான் சொலிமான் இரண்டு லட்சம் சேனை யோடு படையெடுத்து வருகிறான் என்ற செய்தி கேட்டவுடன் செடி நாயகித் திடுக்கிட்டுப் போனான். அப்போதவன், லூத்தரைச் சார்ந்த சுவிசேஷ பிரபுக்கள் தன்னோடு உடன்படிக்கை செய்யும்படி அவர்களோடு பேசத் தன் சகோதரனாகிய ஜூத்தரம் சான்ஸலைக் கேட்டுக் கேட்டான். ஒரு பக்கம் துருக்கியரால் நெருக்கப்பட்டு, மறுபக்கத்தில் பிரான்சிய அரசனால் பயமுறுத்தப் பட்டபடியால் இராஜ்ய செழிப்பிற்கு ஜெர்மனியா முழுவதும் உடனே ஒன்றாய் ஐக்கியப்படுவது அவசியமென்று இராயன் நன்றாய் அறிந்தான்.

இந்தக இராயன் முதலில் செய்த எத்தனங்கள் வியர்த்தமாயின. ஆனால் முடிவாக ஸ்மால்கால்ட் தன உடன் படிக்கை பண்ணினவர்கள் அதிகாரத்துடன் கேட்ட நிபந்தனைகளுக்கு இணங்கினான். அப்போது 1532-ம் வருஷம் ஜூலை மாதம் 23-ம் தேதி நியூரம்பர்க்கில் சமாதான உடன்படிக்கை செய்யப்பட்டது. அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளாவன - மார்க்கவாத விவகாரங்கள் நிறுத்தி வைக்கப்பட வேண்டும். மறுபடியும் ஒரு பொது இராஜ்ய சங்கம் கூடும் வரையில் லூத்தரைச் சார்ந்தவர்கள் தங்கள் கொள்கைப்படி தேவாராதனை செய்வதற்கு சுயாதீனமிருக்கவேண்டும். தேசத்தில் அமைதியும் ஐக்கியமுமிருந்தால் சுவிசேஷ அருளரின் மேற்சொன்ன நிபந்தனைகளை அங்கீகாரம் செய்து திருப்தியுள்ளவர்களாய் இருப்பதாக ஒப்புக் கொண்டார்கள். லூத்தர் விரும்பியது இதுவே. 1532-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 2-ம் தேதி இராயன் இந்த உடன்படிக்கையை உறுதிப்படுத்தினான். இந்த உடன் படிக்கைக்கு இராயன் சம்மதம் கொடுத்த படியால், லூத்தரைச் சார்ந்தவர்கள

துருக்கியர் படையெடுத்தபோது அவர்களை எதிர்த்துச் சண்டை செய்ய இராஜாக்கு உதவிபுரிவோமென்று வாக்களித்தார்கள். இராஜன் சேர்த்த எண்பதினாயிரம் போர் வீரர் அடங்கிய சேனையில் முத்துச் சலாபத்தவர்கள் சிறந்த உதவி செய்தார்கள். ஆகையால் துருக்கியர் அடிபோட்டு துரத்தப்பட்டார்கள். இந்த நிபந்தனைக் உடன்படிக்கையால் சீர்திருத்தம் சபையை நிலைபெற்று ஸ்தாபிக்கப்பட்டது. மேலும் அது மொத்த சேவைக்கடைத்து தெளிவை விட்டும் அதிக விருத்தியாயிற்று. இவ்விதமாக உடன்பாட்டு யுத்தமும் அதன் பலன்களும் நடக்கப்பட்டன.

பரவர் சமாதான விருத்திக்காக வெகு சுக்கிரமாய் உழைத்த பேர்னான் நிலமைப் பிரபு இந்த சமாதான உடன்படிக்கை உறுதிப்படுத்தப்பட்ட நாளைக் காணுமட்டும் ஜீவித்திருந்தார். இதற்கு பிறகு சீக்கிரம் 1532-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி வேட்டையாடித் திரும்பும்போது நள்ளி தேசத்தவரைப் பிடித்து உடனே முத்தரை வரும்படி அழைத்தார்கள். ஆனால் அவர் வந்த போது நிலமைப் பிரபு தன்னறிவு அற்றிருந்தார். அப்படியே இருந்து அடுத்தநாள் மரித்தார். அதற்கு பின் வந்த குருவிறுதைக்கிழமை அவருடைய பிரேதம் அவருடைய சகோதரராகிய டாகிரீஸ் பிரபுவின் கல்லறைக்கு பக்கத்தில் அடக்கம் பண்ணப்பட்டது. முத்தர், வித்தன்புர் கோட்டை ஆலயத்தில் கிறிஸ்துவின் பேரில் உறுதியான பக்தரும், சிவிய அதைக் கப்பலாக் கேள்விகொண்டும் கேட்கப்பட்ட தன் அன்பான நண்பருக்கு ஞாபகக்குறியாக 1தெச 4:13-18 வசனங்களை ஆதாரமாகக் கொண்டு எழுப்பப்படுவதை பிரசங்கம் பண்ணினார். அவருக்குப் பிறகு மார்ட்டின் தாண்டி லோபஸ் பிந்தாடோ என்ற பேர்பெற்ற அவர் குமாரன் நிலமைப் பிரபு ஆனார். முத்தரும் இவரும் அதிக நண்பர்களாய் இருந்தார்கள்.

அதி 37. பாப்புவின் பிரதிநிதியை வெளியேற்றல்

மூன்றாம் பவுல் என்ற பாப்பு ஒரு இராஜ சபை கூட்டுவதற்குத் தனக்கு முதலில் பாப்புவாகிய ஏழாம் கிளெமெந்து விட்ட அதிக ஆவலாய் இருந்தான். சபை கூடி வரும் இடத்தைப்பற்றி பிரபுக்களோடு கலந்து யோசித்து தீர்மானிக்கும்படி வெர்கேரியோ என்னும் ஒரு இத்தாலிய பிரதிநிதியைப் பாப்பு அனுப்பினான். 1534-ம் வருஷம் நவம்பர் மாதம் 6-ம் தேதி வெர்கேரியோ வித்தன்பர்க் வந்து வித்தன்புர கோட்டையைத் தன் பிரதான இல்லிடமாக வைத்துத் தங்கியிருந்தான். அடுத்த நாள் முத்தரும் புகெனகன் என்கிறவரும் காலை போஜனத்திற்கு வரும்படி கோட்டையிலிருந்து அவர்களை அழைத்தான். அங்கே அந்த நாளில் அவர்களிருவரும் பிரதிநிதியைச் சந்தித்து சம்பாஷித்தார்கள். இச்சம்பாஷணையில் முத்தர் வெர்கேரியோவுக்குச் சொன்னதாவது: "ஒரு சபைக் கூட்டுவதற்குச் சிரத்தையும் நீர் ஆவலாய் இருக்கிறீரென அப்படியே ஒரு சபை கூடி வந்தாலும் அதில் நீங்கள் இரட்சிப்புக்கு அவசியமான போதகங்களைப் பற்றி பேசாமல் அனர்த்தமான விஷயங்களாகிய சிரமுடி, சவுளம், போஜன பானங்களைப் பற்றி பேசுவீர்கள். எங்கள் நிமித்தமாக ஒரு சபைக் கூடவேண்டிய தேவையில்லை. எங்கள் நிலை இப்போது ஸ்திரப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியானவருடைய உதவியால் நாங்கள் விசுவாசிக்கிறோமென்று எங்களுக்குத் தெரியும். ஆனால் உங்களுக்கு இஷ்டமானால் நீங்கள் ஒரு சபைக் கூட்டலாம். கர்த்தருக்குச் சித்தமானால் நான் அங்கே வருவேன். ஆம் நீங்கள் என்னை அக்கினிக்கு இரையாக்குவீர்களென்று அறிந்தாலும் நான் கட்டாயம் வருவேன்" என்றார்.

பாப்புவின் பிரதிநிதி புறப்பட்டு குதிரை மேல் ஏறின போது

புத்தரை நோக்கி, "சங்கத்திற்கு வருவதற்கு நீர் தயாராயிருக்க வேண்டும்" என்று சொன்னார். அதற்கு புத்தர் "இந்த எனது கருத்து தலையுடன் தான் சட்டயம் வருவேன்" என்று பதில் சொன்னார். இவ்விதமாக வேர்வேரியுல் புறப்பட்டுப் போனார். சில வருஷங்களுக்குப் பிறகு அவர் புத்தரன் சபையைச் சேர்ந்து தான் முந்தி மறைத்து அழிக்க அதிக 'எண்ணம்' கொண்டிருந்த புத்தருடைய புஸ்தகங்களை இத்தாலியா பாஷையில் மொழி பெயர்த்தும் சீர்திருத்தம் விருத்தியாவதற்காக வெகுவாய் உழைத்தாரென்று சொல்லப்படுகிறோம்.

(தொடரும்)

"தேவையானது ஒன்றே"
லூக்கா 10 :42.

குஜராத்தில் கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல்

குஜராத் மாநிலம் டாங் மாவட்டத்தில் கிறிஸ்தவர்கள் மீது இந்து வெறியர்கள் நடத்திய தாக்குதல்களும் அதை தொடர்ந்து ஏற்பட்ட சேதங்களும்.

1. டாங் மாவட்டத்தில் கிறிஸ்மஸ் பண்டிகை அன்று ஏற்பட்ட கலவரம் எதிர்பாராத விதமாக ஏற்படவில்லை ஒரு வருஷமாக ஆதிவாசி மக்கள் கிறிஸ்தவர்களாவதை எதிர்த்து விஸ்வ இந்து பரிஷத் RSSகாரர்கள் செய்த எதிர் வேலைகளின் முடிவாகும்

டாங் மாவட்டம், குஜராத்திலுள்ள வால்சட், வாபி, என்ற பெரிய நகரங்களை அடுத்துள்ள மாவட்டமாகும் இந்த மாவட்டத்தில் 98 சதவீதம் ஆதிவாசி பழங்குடியினர் வசிக்கின்றனர் அதில் 55 சதவிகிதம் 'பில்' என்ற ஆதிவாசி இனத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மாவட்டத்தில் மொத்தம் 311 கிராமங்கள் இருக்கிறது அதில் 185 கிராமத்தில் 5 முதல் 10 சதவிகிதம் கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர். மற்ற 126 கிராமங்களில் 25 முதல் 33 சதவிகிதம் கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர் டாங் மாவட்டம் காடுகள் நிறைந்த மாவட்டமாகும் தேக்கு மரங்கள் அதிகம் உண்டு ஆங்கிலேயர்கள் ஆட்சியின் போது தேக்கு மர வியாபாரம் அங்கு அதிகம் நடைபெற்றது அந்நாட்களில் கலிசேரு ஊழியம் செய்யப்பட்டு பழங்குடி மக்கள் கிறிஸ்தவர்களாக மாறினர் அதைத் தொடர்ந்து வட இந்திய திருச்சபை நண்பர் கலிசேரு ஜெபக் குழு, பெந்தெகொஸ்தே இயக்கங்கள் போன்ற இன்னும் அநேக கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் தொடர்ந்து அங்கு ஊழியம் செய்ததின் விளைவாக ஆதிவாசி மக்கள் கிறிஸ்தவர்களாக மாறினர் 1948 - ல் சுமார் 500 கிறிஸ்தவர்கள் இருந்தனர் அது 1998 ல் 50,000 ஆக மாறி இருக்கிறது என்றால் கிறிஸ்தவர்கள் செய்த முயற்சிகள் எத்தனை! தியாகங்கள் எத்தனை! மக்கள் நாகரீகம் அடைந்து மெய்யான தெய்வம் இயேசு என்று அறிந்து மனம் மாறி கிறிஸ்தவர்களாயினர் மிஷனெரிகளும், கிறிஸ்தவர்களும் 'பில்' இனத்தைச் சேர்ந்த ஆதிவாசி மக்களோடு

பகுதி அரசுகள் கையாண்டுவிட்ட சாகடிடு அக்கிரமங்கள் அவர்களைத் திருத்தி வரவேற்பும் அறிவித்து மக்களுடைய கருத்தை நம்தரு மாற்றியமைத்தனை எதிர்த்த செய்து அரசாங்கம் ஆதிவாசி மக்களுக்காக இவ்வளவு விழித்துக்கொண்டு செயல்படுகிறது அவ்வப்போது கிறிஸ்தவர்களின் சேவை அதிகம், அதனுடைய மக்களிடையே வாழ்வியல் மாறுபட்டு 42 கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன

ஆதிவாசி மக்களின் பெரும்பான்மை யானவர்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவி செல்வதை பொறுக்காத "சங்பரிவார்" (SANGH PARIVAR) என்ற கூட்டமைப் பிலுள்ள விஷ்வ இந்து பரிஷத், RSS, பஜ்ரங்தள இந்து ஜாக்ரண் மஞ்ச் போன்ற இன்னும் பல இந்து தீவிரவாத இயக்கங்கள், இதுவரை மதம்மாற்றப்படுவதை (மதம் மாறாதபடி) தடுக்க பல முயற்சிகள் செய்தனர். அது முடியவில்லை. 4-12-98-ல் டாங் மாவட்டத்தில் ஆஹ்வா என்ற முக்கிய நகரத்தில் கூட்டம் நடத்தினர். 25ஆம் தேதி கிறிஸ்தவர்கள் பண்டிகையின் போது கலவரம் எழுப்ப வேண்டும் என்ற நோக்கத்தோடு ஊர்வலம் நடத்த உத்தரவும் கேட்க வேண்டும் என்று முடிவு செய்து 4-12-98 அன்று கூட்டமும் ஊர்வலமும் நடத்தினர்.

டிசம்பர் 25 ம் தேதி அரசாங்கம் இதற்கு அனுமதி கொடுத்தால் கலவரம் ஏற்படும் என்று எவ்வளவோ கிறிஸ்தவர்கள் மனு கொடுத்த போதிலும் அரசாங்கம் "அதை" ஒரு பொருட்டாக எண்ணாமல் திட்டமிட்டே அனுமதி கொடுத்தது ஏனென்றால் அது பாரதீய ஜனதா கட்சியின் (BJP) அரசாங்கம் ஆகும். டிசம்பர் 25 ம் தேதி மாலையில் இந்துக்களின் ஊர்வலத்தில் அதிர்ப்பட்டேல் என்பவர் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக மிகவும் தரக்குறைவாக பேசியதை தாங்க மாட்டாத ஆதிவாசி மக்களில், கூட்டத்தில் கல்லெறிந்ததாக பொய்யான வதந்தியை பரப்பி, அதை காரணமாக வைத்துக் கொண்டு வெள்ளிக்கிழமை 2004க்கும் மேற்பட்ட இந்துக்கள் 'லத்தி' என்ற கம்பி முனை கொண்ட ஆயுதங்களுடன் கிறிஸ்தவப் பள்ளியில் இரவு கூட்டு வந்து பத்து நாட்களுக்கும், மதியமுடைய தீப்பெட்டிகள் மற்றும் கொள்ளையடித்தும் தீ வைத்து கொளுத்தினர் இன்னும் பல இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொருட்களையும் எரித்து உடைத்து சேதப்படுத்தினர்

ஆஹ்வா என்ற நகரத்தில் உள்ள கிறிஸ்தவ பள்ளியையும் தாக்கி சேதம் விளைவித்தனர் டாங் மாவட்டத்தில் மேல், ஆஹ்வா என்ற இடமல்லாமல் சேர்ந்து மொத்தம் நான்கு இடங்களில் மட்டுமே கிறிஸ்தவ பள்ளிகள் உண்டு இப்போது கிறிஸ்தவ மாணவர்களை எதிர்க்கும் டாங் மாவட்டத்தில் உள்ள எல்லா அரசியல் தலைவர்களும் இந்த மிஷனரி கிறிஸ்தவ பள்ளியில் படித்து பட்டம் பெற்றவர்களே. கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு டிசம்பர் 25-ம் தேதி நடந்த கலவரம் தீ வைத்து பேசும் பகுதி முழுவதுமாக பிரேதுவான், சிகிர், நிலண்டமாள், கல்குண்ட ஆகிய இடங்களிலுள்ள ஆலயங்களை தீ வைத்தும், கிறிஸ்தவ மக்களை தாக்கியும் வாழ்க்கையை பெரும் சேதம் விளைவித்தனர்

டாங்கிலுள்ள 42 ஆதிவாசி கிறிஸ்தவ ஆலயங்களில் 16 ஆலயங்களை சேதப்படுத்தியதாக செய்தி தாள்களில் வெளியானது இந்த கலவரங்களில் ஒரு பேர் அநியாய காயப்பட்டு ஆலய மருத்துவமனையில் உயிருக்கு போராடிக் கொண்டு இருப்பதாக செய்திகளில் வெளியானது. பாஸ்டர்களுக்கு முக்கியமான தலைவர், அன்பான "தியாகிய" என்ற கிறிஸ்தவ பணி மிகவும் சிறப்பு வாய்ந்தது. பெரும் பாலான அரசியல் தலைவர்கள் இதில் படித்தவர்களே. இந்த தேச விரோதிகளை கிறிஸ்தவ மக்கள் மேல் பொய் குற்றம் சாட்டி ஒரு அநுபவம் கொள்ளையிடுவதை ஒருவரை தாக்கப்பட்டுக் கொண்டு கிறிஸ்தவர்கள் உடைந்ததாக பொய்யான செய்திகள் பரப்பி இப்படி செய்வது தன்மானமற்ற இந்துக்களின் வழக்கம்.

பகுதியில் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக வேலை செய்கிற தலைவர்கள் (1) பிரதீப படேல் (2) இந்து ஜாகரன் மஞ்ச் செயலாளர். ஜாருபாய பவார் ஆகும். குஜராத் முழுவதும் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக வேலை செய்து தூண்டி விடுகிறவன் தோக்கடியா என்ற சர்தேம (ஜாதிய பெயர்) உடையவனாகும்

II. இந்த கலவரத்தையொட்டி நாந்தகிய விம்பாயத் என்ற இடத்தில் உள்ள தெருவரு கிறிஸ்தவர்கள் ஆராதிக்கிற ஆலயத்தை பகலில் ஆராதனை நடந்து கொண்டிருக்கும் போது RSS காரர்கள் கல்லெறிந்து ஆலய கண்ணாடி கதவையும், வெளியே நின்ற மாருதி காரையும், வாகனங்களையும் சேதப்படுத்தியுள்ளார்கள்

III. அகமதாபாத்தின் அருகில் உள்ள வாட்வா விவேகானந்த் நகரில் உள்ள R.C. கோவிலையும் மக்களையும் கல்லெறிந்து கிறிஸ்மஸ் தினத்தன்று சேதப்படுத்தியுள்ளார்கள் இந்துக்கள் கிறிஸ்தவ ஆலயத்தை தாக்கியதும் ஆலய கண்ணாடி உடைக்கப்பட்டதும் காவல் நிலையத்தில் வழக்கு பதிவாகியுள்ளது இந்த சம்பவம் மதக்கலவரம் மட்டுமல்ல ஜாதி கலவரமாகும்

தாழ்ந்த ஜாதி மக்கள் கல்வி அறிவு பெற்று வாழ்க்கையில் மேன்மை அடைகிறதை சகிக்க முடியாத ஜாதி பேய் பிடித்த உயர் ஜாதிகள் என்று தங்களை எண்ணிக் கொண்டு இருக்கிற கீழ் ஜாதிகளின் வைராக்கியம் இது எல்லாம் பிரம்மம் என்னும் இந்து மத போதனை பொய் என்பது இதன் மூலம் விளங்குகிறது கிறிஸ்தவம் வளர்கிறது என்பதற்கு இதுவே சான்று இவர்களுக்கு விரோதமாக ஜெபிக்க வேண்டும்

மேற்கண்ட கலவரத்தில் ஆதிவாசி மக்கள் மிக கலக்கத்துடனும், பயத்துடனும் இருக்கின்றனர் சத்தூர் கிறிஸ்தவர்களை தேற்றவும், சேதம் ஏற்பட்ட ஆலயங்கள் பள்ளிகள் திரும்ப கட்டப்படவும் ஜெபிக்க வேண்டும் கிறிஸ்தவர்களே சிலாத்தே மூலகள், சாத்தானுடைய திட்டத்தை உடைத்திடுவோம் வாரீர்களா ?

இயேசுவின் நாமத்தில் !
ஒன்று சேர்ந்திடுவோம்
தீமையை வென்றிடுவோம்

(இன்னும் வரும்)

"ஆகிலும் மாம்சத்தின்படி பிறந்தவன் ஆவியின்படி பிறந்தவனை அப்பொழுது துன்பப்படுத்தினது போல, இப்பொழுதும் நடந்து வருகிறது" (கலா . 4: 29)

தொப்பியில் தாயின் நினைவு

அனாதைப் பிள்ளைகளின் ஆதரவு சாலைக்கு திக்கற்ற சிறுவன் ஒருவன் கொண்டு வரப்பட்டான். அவனுடைய தாய் சில நாட்களுக்கு முன்னர்தான் மரித்துப் போயிருந்தாள். சிறுவன் போட்டிருந்த கந்தைகளை அகற்றிவிட்டு குளிப்பாட்டி மற்ற பிள்ளைகள் போட்டிருந்த சீருடையை தரித்தார்கள். அந் நிறுவனத்தின் மேலாளர் தம் அறையில் அமர்ந்து கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு அழு குரல் கேட்டு வெளியே எட்டிப் பார்த்தார். புதிதாக சேர்ந்திருந்த பையன் வெளியே எறிந்திருந்த தனது கந்தை துணி பழைய தொப்பி இவைகளுக்கு மத்தியிலிருந்து தொப்பியிலுள்ள பழைய துணிகளை அழுகையோடே பிரித்துக் கொண்டிருக்கக் கண்டார். மேலாளர் அவனைக் கூப்பிட்டுக் காரணம் கேட்டார் அவன் சொன்னான் " ஐயா என் ஏழைத்தாய் இத்துணியைத் தன் ஆடையிலிருந்து கிழித்து என் தொப்பியில் வைத்து தைத்து தந்தாள் என் தாயின் நினைவாக இதைத் தவிர வேறொன்றுமில்லை. இதை நான் என்னோடு வைத்துக் கொள்ள உத்தரவு தரவேண்டும் " என்று கூறி ஏங்கி ஏங்கி அழுதான்

இந்தப் பாத்திரம் என் இரத்தத்தின் மூலம் ஏற்படும் புதிய உடன்படிக்கை; நீங்கள் இதைப் பருகும் போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இவ்வாறு செய்து வாருங்கள் என்றார் இயேசு.(I கொரி 11:25)

தொடர்ச்சி

வேத பாடம்

நியா 1:1– 3,6 :- [illegible] இஸ்ரவேலர் .

[illegible] இஸ்ரவேலருடைய [illegible] [illegible] (1 1-2, [illegible] (1 3-10) [illegible] 7, 8 [illegible] 1900 [illegible] 14 16 [illegible] 16 3) [illegible] நியா 1 11-15 [illegible]

[illegible] 15 13 19 [illegible] இஸ்ரவேல் [illegible] நியா (1 16-21) [illegible] நியா (1 22-26, [illegible] 12 8 13 3, 4 28 19 31 33) இஸ்ரவேல் [illegible] (1 29 36) [illegible]

[illegible] இஸ்ரவேல் [illegible]

1) [illegible] (1 19)

2) [illegible] இஸ்ரவேல் [illegible]

3) [illegible] இஸ்ரவேல் [illegible]

4) தேவனைக் குறித்த [illegible], [illegible] பற்றிய அனுபவங்களையும் [illegible] பாவம் இவர்களில் தோன்றிற்று

நியா 2 1-3 6 :-

கர்த்தருடைய தூதனானவர் அவர்களை எதிர்த்து வந்து பேசினபோது அவர்களிடையே ஒரு ஆழ்ந்த மனஸ்தாபம் உண்டானது போல காணப்படுகிறது (2 1-5) கிதியோன் [illegible] போன்ற மனிதர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துவதை பற்றி [illegible] பேசுவதை "கர்த்தருடைய தூதனானவர்" என்று குறிப்பிடுகிறது (நியா 6 11-24 13 3-21) தேவன் அவர்களை எதிர்த்ததால் தோல்வியடைய படும் அவலங்களைப் பற்றியது

யோசுவாவின் காலத்தை பற்றிய ஒரு விமர்சனத்திற்குப்பின் (2 6-10) நியாயாதிபதிகளின் காலத்தைக் குறித்த ஒரு சுருக்கம் வருகிறது.(2 21 23) இஸ்ரவேலின் பாவங்களுடைய போக்கையும் தேவன் அதற்கு தண்டிக்கும் முறைகளையும் இப்பகுதியில் விவரிக்கப்பட்டிருக்கிறது [illegible] துரத்திவிட்ட பின் இஸ்ரவேலர் தங்கள் அண்டை [illegible] அவர்களோடே [illegible] கலந்து விவாக ஒப்பந்தங்களும் செய்து கொண்டார்கள்(3 6) இவர்கள் விக்கிரக ஆராதனைகளை [illegible] தேவனுடைய கோபம் இவர்கள் மேல் மூண்டது அவர்களை அவர்களுடைய சத்துருக்களின் கையில் ஒப்புக் கொடுத்தார்(2 11-15)

[illegible] தேவன் [illegible] நியாயாதிபதிகளை எழுப்பினார், [illegible] (2 16-19) [illegible] இஸ்ரவேலரை [illegible] தேவன் [illegible] தம் சொந்த ஜனங்களை [illegible] அவர்களை [illegible] (2 20-23) இந்த [illegible] பற்றிய [illegible] 3 1-5 ல் [illegible] ஒரு [illegible] ஆனால் [illegible] தேவன் [illegible] இது [illegible]

தேவனுடைய ஜனம் கர்த்தருடைய [illegible] தேவன் அவர்களை [illegible] கர்த்தருடைய [illegible] அவர்கள் சத்துருக்களை துரத்தி விட்ட [illegible] அவர்களுடைய விக்கிரகங்களை [illegible] நிலைகளை [illegible] தங்களுக்குத் [illegible] இந்த [illegible] இவர்களுக்கு உண்டான [illegible] இவர்கள் [illegible] காணப்படுகிறது

[illegible] தேவனுடைய [illegible] [illegible] என்று கர்த்தர் சொல்லுகிறார் " [illegible] இந்த [illegible] என்று தேவன் [illegible] தேவன் நம்மை [illegible]

நம்முடைய ஆத்துமக் கோட்டைக்கு நம்மையே காவலாளியாக வைத்திருக்கிறார் இறைவன் நம்மை இரட்சிக்கும் போது அநேக பெரிய பெரிய பாவங்களிலிருந்து விடுதலை செய்கிறார் சின்னச்சின்ன பாவங்கள், கேலிகள் கிண்டல்கள், பொறாமைகள் கோபங்கள் இலேசானதான பாவங்கள் இச்சையான பாவங்கள் நம்மிலே இருக்கும் இவைகளைத் தேடி கண்டு பிடித்து முற்றிலுமாக அழித்து வெளியேற்றி விட வேண்டியது, விரட்டி விட வேண்டியது நம்முடைய கடமையாகும் அது வாழ்க்கைக்கு தேவை கொஞ்சம் இருக்கட்டும். இதுவும் அவசியம்தான் என்று சொல்லி நாம் வைத்துக் கொள்வோம் என்றால் நாம் பெலவீனப்படும் பொழுது, அவைகள் நம்மை மேற்கொண்டு நம்மை அடிமைப்படுத்தும் ஆத்மீக காரியங்களையும், நாம் தேவனுக்கு உண்மையுள்ளவைகளிலிருந்து தடுக்கக்கூடும் போராடி அதை மேற்கொள்ள விரும்புகிறோமா என்றும் தேவன் கவனித்து பார்ப்பார்

பாவத்தை விட விருப்பமில்லை, ஆனால் போகீமே அழுகிறோம் என்றால் எந்த பிரயோஜனமும் இல்லை (நியா 2 4 5) போகீம் என்றால் அழுகிறவர்கள் என்று அர்த்தம் சிலர் பாவஞ் செய்து தேவ சமூகம் போகும் பொழுதெல்லாம் அழுது கூப்பாடு போட்டு கண்ணீர் விட்டு ஒப்பாரி வைக்கிறது, பாவத்தையோ விட விருப்பமில்லாதவர்கள் நீ பாவத்தை அறிக்கை செய்து சுத்திகரித்துக் கொண்டு தேவ சமூகத்தில் போய் அழுகை. ஜெப கீதம் பாடு எப்போதும் அழாதே பாவம் செய்தால் அழு பாவம் செய்ய விரும்பி வாஞ்சிப்பவர்களையும், தங்களுக்கு ஆதாரமாக வைத்துக் கொண்ட இஸ்ரவேலர்களுடைய கதி என்ன ஆயிற்று என்று நாம் தொடர்ந்து நியாயாதிபதிகளின் புத்தகத்திலே தியானிப்போமாக (தொடரும்)

மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவும் கூடாது. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ் செய்தலே தகும். (எபே. 5. 3, 4)

தேவனுடைய அதிசயங்களும், அற்புதங்களும்

கொடைக்கானல் பிராந்தியத்திலுள்ள பள்ளங்கி கோம்பை என்னுமிடத்தில் புதிய எருசலேம் ஆலயம் உள்ளது. மலைகளும், பள்ளத்தாக்குகளும் நிறைந்த இந்தப் பகுதியில் மலைவாசிகள் அநேகருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக மாறி கொண்டிருக்கிறார்கள். ஒரு நாள் பாஸ்டர் [illegible] அவர்கள் வந்திருந்த சமயத்தில் ஆதிவாசி சகோதரியான பழனியம்மாள் என்னும் ஊமையான சகோதரி ஜெபம் பண்ண வந்தார்கள். பாஸ்டர் அச் சகோதரியின் விடுதலைக்காக ஜெபம் பண்ணி அனுப்பி வைத்தார். கர்த்தர் அற்புதமாக அந்த சகோதரியின் நாவின் கட்டுகளை அவிழ்த்து, பேசும்படியான கிருபையை கட்டளையிட்டார். பழனியம்மாள் என்ற அந்த சகோதரிக்கு விவாகம் ஆகி தற்சமயம் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். தேவனுக்கே மகிமை அல்லேலூயா! ஸ்தோத்திரம்.

ஊழியர் M. பீட்டர்

புதிய எருசலேம் சபை, பள்ளங்கி- கோம்பை கொடைக்கானல்

சிறுவர் பகுதி

தாயை விடவும் மேலான அன்பு

ஞாயிறு சிறுவர் பள்ளியின் ஆசிரியர் பாலி பிள்ளைகளை ஒழுங்குபடுத்தி சிறுவர் பள்ளியினை ஜெபத்துடன் ஆரம்பித்தார். பிள்ளைகள் மகிழ்ச்சியோடு இறைவனை பாடி மகிமைப்படுத்தினார்கள். அது மிகவும் நேர்த்தியாகவும், அருமையானதாகவும் காணப்பட்டது.

வகுப்புகளை ஆரம்பிக்கையில் ஆசிரியர் வேதமுத்து தனது மாணவர்களுக்கு, இன்று நம்முடைய தேவன் மனிதர்களாகிய நம்மை ஒரு தாயை விடவும் அதிகம் நேசிக்கிறார் என்று சொல்லிக்கொண்டு இருக்கும் போதே குறும்புக்கு பேர் போன சிம்சோன் என்னும் மாணவன் இது எப்படி சார் தேவன் நம்மை தாயை விடவும் அதிகம் நேசிக்க முடியும்? தேவன் பரலோகத்தில் இருக்கிறார். அவர் வந்து உதவி செய்ய நேரம் ஆகும். ஆனால் என் தாயோ, என் அருகிலேயே இருக்கின்றார்கள் என்று வினவினான். அவனுக்குப் பதிலளிக்க ஆசிரியர் வேதமுத்து பின்வரும் தேவசித்த வசனத்தைக்கொண்டு ஒரு இனிய சம்பவத்தை ஞாயிறு பள்ளி மாணவ மாணவிகளுக்கு சொல்லலானார்.

ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை (ஏசா 49 15) இவ்வுலகில் மனிதர்கள் பொதுவாக பெற்றெடுத்த தாயையே அதிகம் நேசிப்பார்கள். அவ்விதமே தாயும் தன் பிள்ளையை மறவாமல் கண்ணும்கருத்துமாய் சிறுவயதில் கவனிப்பாள். இது இயல்பு. அப்படிப்பட்ட தாய் தனது பிள்ளையை மறந்தாலும் நம் தேவன் நம்மை மறப்பதில்லை. எப்படியெனில் ஒரு ஏழை தாயானவள் தனது ஒரே பேரான ஒரு குமாரனுடன் கஷ்ட வாழ்க்கையை வாழ்ந்து வந்தாள். கணவன் மரித்து போனான். அந்த அம்மா தேவ பக்திக்குரியவர்கள். மகனை செல்லம் கொடுத்து வளர்த்து வந்தாள். அவனோ வெகுநாளாக தேவனுக்கு கீழ்ப்படியாதவன். 'நான் ஏன் தேவனிடத்தில் அன்பு கூர வேண்டும்?' என் மீது அன்பு கூர்ந்து வரும் என் தாயினிடத்தில் அன்பு வைத்தால் போதும் என்பான். அவனது தாயோ வெகுநாளாய் இறைவனது அன்பை அவனுக்கு போதிப்பாள். அவன் அதற்கு செவிகொடுக்க வில்லை. ஆயினும் தனது ஏழைத் தாயை இறைவன் அற்புதமாக நடத்துவதை நன்கு அறிந்தே இருந்தான்.

ஏழை விதவையின் மகன் வளர்ந்து இளைஞன் ஆனான். கூடவே துடுக்குத் தனமும், ரவுடித்தனமும் வளர்ந்து விட்டது. குற்ற செயல்களில் ஈடுபட்டு மற்றவர்களை நடுங்கும் மனிதனாகி விட்டான். ஏழை தாயானவளோ ஒன்றும் செய்வதறியாது தேவனை நோக்கி தனது மகனது இரட்சிப்புக்காக மனந்திரும்புதலுக்காக ஜெபித்து வந்தாள். ஒரு நாள் கொலைக்குற்றம் ஒன்றில் குற்றம் சாட்டப்பட்டு அது நிரூபிக்கப்பட்டு அரசாங்கத்தினரால் தூக்கு தண்டனை நியமிக்கப்பட்டது. தனது ஒரே பிள்ளை தன்னை காப்பாற்றும் என்று எண்ணியிருந்த தாய், இப்போது தவியாய் தவிக்கிறாள், கலங்குகிறாள். தனக்கு முன்பாகவே தனது மகனது வாழ்க்கை முடியப் போகிறது என்று வேதனையோடு கூட, தேவனிடத்தில் அவனது விடுதலைக்காக ஜெபித்தாள்.

தூக்கு தண்டனை நிறைவேறும் நாளும் வந்தது. மகனுக்கு அப்பொழுது தான் புத்தி வந்தது. தன்னை அதிகமாய் நேசித்து வந்த தன்னுடைய தாயை விட்டு பிரியப் போகிற சம்பவத்தை எண்ணி அழுதான். வேதனைப்பட்டான். அச்சமயம் இறுதியாக அவனது தாய் அவனைப் பார்த்து, " என் மகனே இறைவனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி எவ்வளவோ உனக்கு எடுத்துக் கூறி

புத்தி சொன்னேன். நீயோ அவைகளை விட்டுவிட்டு துன்மார்க்கத்தில் வாழ்ந்தாய் அதின் பலனாக தண்டனை பெற்று மரிக்கவும் போகிறாய். ஆனாலும் உன்னை நான் பத்து மாதம் சுமந்து பெற்ற தாய் என்பதினால் என் உள்ளம் உனக்காக பரிதவிக்கிறது. ஆயினும் உனக்காக நான் ஜெபம்தான் பண்ண முடியும். உனது தண்டனையை ஏற்றுக்கொள்ள என்னால் இயலாது. இயேசுவை நோக்கி வேண்டிக்கொள். அவர் உன்னை விடுவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் (என்னைக் காட்டிலும்) உன்னை அதிகம் நேசிக்கிறார். இப்பொழுதாவது செய்த பாவங்களுக்காக மனம்வருந்தப்பட்டு இறைவனிடம் இயேசுவை ஏற்றுக்கொள் என்று கண்ணீரோடு அந்தத்தாயவள் தனது மகனிடம் கூறினாள்.

முரட்டு வாலிபனாகிய அவன் மனங்கசந்து நொறுங்குண்ட இருதயத்தோடு கூட இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டான். அப்பொழுது அவனது தூக்குத்தண்டனைக்காக எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருந்தது. கடைசி மணி நேரத்தில் ஜனாதிபதியின் இடத்திலிருந்து ஓர் அவசர கடிதம் ஒன்று சிறை அதிகாரிக்கு கொடுக்கப்பட்டது. அதில் அந்த ஏழை தாயானவள் தனது மகனுக்காக ஜனாதிபதியினிடத்தில் கொடுத்திருந்த கருணைமனு ஏற்றுக் கொள்ளப்பட்டு தூக்கு தண்டனையை ரத்து செய்வதாக அறிவித்திருந்தது. இச் செய்தியைக் கேள்விப்பட்ட தாயின் இருதயம் இறைவனை நன்றி பெருக்கோடு துதித்தது. ஏழை விதவைத்தாயின் ஒரே மகன் அற்புதமாக இறைவனால் தூக்கு தண்டனையிலிருந்து தப்பினான்.

வாலிபனாகிய அவனும் இறைவனது அளவற்ற அன்பை அறிந்து இரட்சிக்கப்பட்டான். தேவனின் பிள்ளையானான் மெய்யாகவே. ஒரு தாயை விடவும் இறைவனாம் இயேசு மனிதனை அளவளவாக நேசிக்கிறார் என்று அறிந்து கொண்டான்.

இச்சம்பவத்தைக் கூறிய ஆசிரியர் வேதமுத்து மாணவ, மாணவிகளைப் பார்த்தார். அவர் சொன்ன சம்பவத்தின் மூலம் எல்லாரும் இறைவனை, அவரது மறவாத அன்பை எண்ணி பின்வருமாறு பாடினார்கள்

இயேசுவின் அன்பை நினைத்திடுவோம்
இறுதிவரை நாம் பாடுவோம்
தாயின் அன்பை மறவோமே
துதித்து மகிழ்ந்து களிகூருவோம்

ஆசிரியரும், ஞாயிறு பள்ளி மாணவர்களும் இயேசு கிறிஸ்துவின் அன்பினால் நிரப்பப்பட்டவர்களாக இல்லம் சென்றனர்.

புதிய வஸ்திரம்

அன்பான வாசகர்களே கர்த்தருடைய கிருபையால் நாமெல்லாம் புத்தாண்டுக்குள் பிரவேசித்திருக்கிறோம். கடந்த 1998 ஆம் ஆண்டில் நம்முடைய ஜீவியங்களில் குறைவுகள் இருந்த போதிலும் கிருபையுள்ள கர்த்தர் நம்மைக் காத்து வந்தார் காத்து வருகிறார்.

இந்த புத்தாண்டை காணச் செய்த தேவனை ஸ்தோத்திரிப்போமாக. புத்தாண்டில் புதிய திட்டத்தோடும் "பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தம் அடைவோம்" என்ற புதிய தீர்மானத்தோடும் பிரவேசிப்போமாக. கண்களின் இச்சை மாம்சத்தின் இச்சைகளால் வஸ்திரம் கறைபடாது காத்துக் கொள்ளுங்கள் என்று தேவாவியானவர் கூறுகிறார். அழுக்குப்பட்ட, கறைபட்ட ஆடையை உடுப்பதற்கு நாம் எப்படி விரும்புவதில்லையோ, அப்படியே மாம்ச இச்சைகளால் கறைபட்ட அழுக்கு வஸ்திரத்தை வெறுத்துத் தள்ளி விட்டு

புத்திரனுடைய அங்கியை அணிந்து கொள்ளுங்கள் அப்பொழுது உங்கள் மேல் பிரியமாயிருப்பேன் என்று கர்த்தர் கூறினார்

இதுவே அப்போஸ்தலனாகிய யாக்கோபும் நமது உலக ஆசா பாசங்களால் கறைபடாதபடி தன்னைக் காத்துக் கொள்வது பிதாவாகிய தேவனுக்கு முன்பாக சுத்தமான பக்தியாயிருக்கிறது என்கிறார் (யாக் 1 27) இதைப்போல ஜனங்கள் மத்தியில் கர்த்தர் பெரிய, பெரிய தீர்க்கதரிசிகளையும், மோசேயைப் போன்ற தேவனோடு முகமுகமாய்ப் பேசியவரை அனுப்பிய போதிலும் அவர்கள் கழுத்து கடினமுள்ளவர்களாகவும், அவர்களுடைய மீதி நாம்பு இரும்பாக வணங்காத இருதயமுள்ளவர்களாக இருந்ததனால் ஆண்டவர் தீர்க்கதரிசியாகிய எரேமியா தீர்க்கதரிசியின் மூலம் இதைப்போல் ஜனங்களைக் குறித்து " நீ உன்னை உவர் மண்ணினால் கழுவி, அதிக சவுக்காரத்தை போட்டாலும் உன் அக்கிரமத்தின் கறைகள் எனக்கு முன்பாக இருக்கும் " (எரேமி 2 22) என்று வருத்தப்பட்டு கூறினார் நாம் அவ்விதமாக இராதபடி அக்கிரமத்தினால் நம்முடைய ஆவிக்குரிய வஸ்திரம் கறைபடாதபடி காத்துக் கொள்வோமாக அப்போஸ்தலனாகிய யோவானும் வெளிப்படுத்தின விசேஷத்தில் பரலோகவாசிகளைக் குறித்து தரிசனம் பெற்று ஸ்திரீகளால் கறைபடாதவர்கள் இவர்களே (வெளி 14 4) என்று எழுதுகிறார் ஸ்திரீ உலகத்தை, கள்ள உபதேசங்களை சபைகளைக் குறிக்கிறது. உலகத்தை, உலகத்தின் இச்சைகளை நம்மை போதனைகளால் கறைபடாதபடி நம்மைக் காத்துக் கொள்வது சுத்தமான பக்தியாயிருக்கிறது ஆடையின் ஒரு பக்கத்தில் மட்டும் கறைபட்டிருக்கிறது ஆடை முழுவதும் கறை இருக்கிறது வாசி ஒரு கறையும் கூட ஆக விலையேயே முழுவதும் இல்லாமல் மதிப்பில்லாமலே என்று ஒதுக்கி வைக்கப்பட்டு கறைபட

எதுவாயிருக்கும் என்ன உபதேசத்தை, சரியானதை தெரிந்துக் கொள்ளுங்கள்

இரட்சிப்பு என்னும் ஆடையை தரித்துக் கொள்ளுங்கள் (II நாளா 6 41) நம்முடைய பிதாவாகிய தேவன் மகிமையையும் மகத்துவத்தையும் அணிந்து கொண்டிருப்பது போல (சங் 93 1), நாமும் மேன்மையான தேவனுடைய ஊழியர்களாகிய ஆசாரியர்களை அணிந்து கொண்டவர்களாக நீதியை அணிந்து கொள்வோமாக (சங் 132 9) பரிசுத்தத்தில் தெளிவுபோல சுத்தமும், பிரகாசமும், வெண்மையுமான மெல்லிய வஸ்திரங்களை தரித்தவர்களாக நாடுவோமாக (வெளி 15 6, 19 14) வீர நடை நடப்போமாக

ஆவிக்குரிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்னும் நற்குணங்களால் அலங்கரிக்கப்பட்ட (Embroidery Work) சித்திரத் தையலாடையை அணிந்து கொள்வோமாக (எசே 16 10) எல்லா காரியத்திலும் மேலான மன தாழ்மை என்னும் மெல்லிய வஸ்திரத்தை அணிந்து கொள்வோமாக (I பேது 5 5) பரிசுத்தவான்களின் நீதியாகிய மெல்லிய தேசு வஸ்திரத்தை (வெளி 19 8) உடுத்திக்கொள்வோமாக ஆட்டுக்குட்டியானவரின் கலியாணத்தில் பிரவேசிப்பதற்கு கல்யாண வஸ்திரம் தரித்தவர்களாக காணப்படுவோமாக (மத் 22 11) பாவம் என்னும் அழுக்கு வஸ்திரத்தை மாற்றி உனக்கு முன்பாக வருகிற நாளுக்கு இடம் கொடுப்பாயாக அக்கிரமம் என்னும் அழுக்கு வஸ்திரத்தை களைந்து போட்டு, சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பிக்க சிரசின் மேல் சுத்தமான பாகை வைக்க நாடுவோமாக (சகரி 3 4 5)

உன்னுடைய பாவங்களுக்காகவும் அக்கிரமத்திற்காகவும் அடிக்கப்பட்டு

இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தை தரித்திருக்கிற இயேசுவை நோக்கிப் பார்ப்போமாக. உன்னுடைய பாவங்களினால் அவருடைய உடுப்பு சிவப்பாகவும், அவருடைய வஸ்திரம் ஆலையை மிதிக்கிறவனுடைய வஸ்திரம் போல் சிவப்பாயிற்று (ஏசாயா 63:2) கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கு தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த இயேசுவின் உள் சிந்தையை புரிப்பாயாக(எபே 5:27). பாவத்தை விட்டு விலகி ஓடுவோமாக. புதிய வல்லமை பெற்று கர்த்தருக்கென்று பிரகாசிப்போமாக. இந்நாட்களில் இதுவே தேவை. புதிய வஸ்திரத்தைத் தரித்துக் கொள்ளுங்கள்.

"வெள்ளை அங்கி தரித்திருக்கிற இவர்கள் யார்?....இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்"

வெளி 7: 13,14.

[illegible]

அவருடைய தழும்புகளால் குணமானேன்.

என் பெயர் J. ஜெயம். எனக்கு திருமணமாகி ஐந்து வயதில் ஒரு பெண் குழந்தையும், இரண்டு வயதில் ஆண் மகனும் உண்டு. நாங்கள் தூத்துக்குடி கிளை புதிய எருசலேம் சபையாக தேவனை ஆராதித்து வருகிறோம். எனது மகள் டேவிட்டுக்கு திடீரென்று முகத்திலும் உடம்பிலும் கொப்புளங்கள் கொத்துக்கொத்தாகப் புண்களாக மாறியது மற்றவர்கள் அருவருக்கத்தக்கதாகவும் முகம் முழுவதும் விகாரமாக இருந்தது என் மகள் வேதனையால் துடித்தாள் நாங்களும் மிகவும் வேதனைப்பட்டோம் ஏனென்றால் CSI சபைக்கு சென்று கொண்டிருந்த என் சகோதரிக்கும் அவளுடைய பத்து மாத ஆண் குழந்தைக்கும் இப்படியே இருந்து மருத்துவர்களால் காப்பாற்ற கூடாமல் இருவரும் மரித்துப் போனார்கள் என் குடும்பத்தினர் அதைப் போல் ஆகிவிடுமோ என்று மிகவும் கவலையினால் மற்றவர்களோ மருத்துவர்களிடம் காண்பிக்கவேண்டும் என்றும் மற்றும் வேறு வேறு ஆலோசனைகளையும் சொன்னார்கள். ஆனால் நாங்கள் தூத்துக்குடி பாஸ்டர் ஜோசப் ஜுவா அவர்களிடம் ஜெபிக்க சொன்னோம். அவர்களும் என் மகளுக்காக ஜெபித்து, மருத்துவரிடம் கொண்டு செல்ல வேண்டாம், இது அசுத்த ஆவியின் போராட்டம் என்று சொல்லி என் வீட்டிற்கும் வந்து பிள்ளையின் மேல் கை வைத்து ஜெபித்து எண்ணெய் பூசினார்கள் ஜெபித்து தந்த எண்ணெயை பிள்ளையின் மேல் பூசினோம். என்னே ஆச்சரியம், என்னே தேவனுடைய மகிமை "அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" என்ற வேத வாக்கின்படி தேவனுடைய பரிசுத்தவான்களின் ஜெபத்தால் என் மகள் ஒரு நாட்களுக்குள்ளாக குணமடைந்தாள் இரட்சிக்கப்படாத என் வீட்டிலுள்ளவர்களும், மற்றவர்களும் புதிய எருசலேம் சபை மூலமாக தேவன் செய்த இந்த அற்புதத்தைக் கண்டு மிகுந்த ஆச்சரியப்பட்டார்கள்

தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது நாங்களும் மிகவும் சந்தோஷப்பட்டு தேவனுக்கு மகிமை செலுத்தினோம்.

ஆலோசனை இல்லாத இடங்களில் ஜனங்கள் விழுந்து போவார்கள்(நீதி 11 14)என்று எழுதியிருக்கிறபடி, என்

சகோதரிக்கு அவள் சென்ற CSI சபையில் சரியான வெளிப்படுத்தலும், ஆலோசனையும் இல்லாதபடியால் இருவரும் மரித்துப் போனார்கள். இப்படியே சில சபைகளில் தேவ ஆலோசனை இல்லாமல் மரிக்கிறார்கள். ஆனால் நமக்கோ தேவன் வாசம் செய்யும் புதிய எருசலேமில் தேவனை ஆராதித்து வருகிறபடியாலும் அங்கு உள்ள தேவனுடைய மனிதர்கள் சொல்லும் ஆலோசனைக்கு கீழ்படிந்தபடியாலும், என் மகளுக்கு தேவன் பூரண சுகம் கொடுத்தார். அல்லேலூயா! தொடர்ந்து நானும் எனது குடும்பமும் தேவனுக்கும் திருச்சபைக்கும் உழைத்து, தேவ நாமத்தை மகிமைப்படுத்தத் தீர்மானித்துள்ளோம்.

இப்படிக்கு
கிறிஸ்துவுக்குள் உண்மையுள்ள,
சகோ. J. ஜெயம்
புதிய எருசலேம் சபை
தூத்துக்குடி(கிளை)

உன்னதத்தில் வாசம் பண்ணும் தேவன் உன் இருதயத்திலும் வாசம் பண்ணுவார்

மனிதர்களில் சிலர் தங்களுடைய சன்மார்க்க ஜீவியத்தாலும் செய்கின்ற சில நற்கிரியைகளாலும் மற்ற ஜனங்களின் மத்தியில் நற்பெயர் பெறுகின்றனர். மற்றும் சிலர் அசாதாரண காரியங்களைச் செய்து முடிப்பதின் மூலமும் ஒரு மாதிரியாக வாக்கோ ஒரு நாட்டவர்க்கோ உதவி செய்வதன் மூலம் நற்பெயர் பெறுகின்றனர். அவர்கள் செய்யும் காரியங்களை நீதி என்று மக்கள் எண்ணுகின்றனர். அவர்கள் செய்யும் காரியங்கள் எப்படிப்பட்டவைகளாக இருந்தாலும் அவர்கள் சாதாரண மனிதர்களே. தங்கள் ஜீவியத்தில் குறைவுள்ளவர்களே. குறைவுள்ள மனிதர்களின் காரியங்களும் குறைவுள்ளவைகளே. எனவே அவர்களுடைய நீதிகளும் குறைவானவைகளே.

ஆனால், ஒரு மனிதனுக்கல்ல, எல்லா மனிதர்களுக்காகவும், ஒரு நாட்டவர்க்கல்ல முழு உலகத்திற்கே நன்மை செய்யுமாறும் அனைவரையும் பாவத்திலிருந்து விடுதலை செய்யுமாறும், தம்முடைய ஜீவனையே கொடுத்த நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எவ்விதக் குறைவும் அற்ற தேவனாயிருக்கிறார். அவரிடத்தில் யாதொரு மாறுதலும் வேற்றுமையின் நிழலுமில்லை (யாக் 1 17) என்று வேதம் சொல்லுகிறது. எனவே அவர் தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்த செயல் நீதியானதாக இருக்கிறது. ஒரு பக்தன் "கர்த்தாவே, நீர் என்றென்றைக்கும் உன்னதமானவராயிருக்கிறீர் (சங் 92 8) என்று பாடுகிறார். கர்த்தராகிய ஆண்டவர் உன்னதமானவராக இருக்கிறபடியால், அவர் செய்த நீதியான செயல் உன்னதமானதாக இருக்கிறது. "தேவனே உம்முடைய நீதி உன்னதமானது. பெரிதானவைகளை நீர் செய்தீர் (சங் 71 19) என்று தாவீது அரசன் கூறுகிறார். அவர் உன்னதமான தேவனாக இருக்கிறபடியால் அவர் வாசம் செய்யும் இடமும் உன்னதமானதாக இருக்கிறது. 'தேவன் பரலோகத்தின் உன்னதங்களிலிருக்கிறார் அல்லவோ?' (யோபு 22 12) என்றும் உன்னதங்களில் வாசம் பண்ணுகிற நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குச் சமானமானவர் யார்? (சங் 113 5) என்றும் 'கர்த்தர் உயர்ந்தவர் அவர் உன்னதத்தில் வாசமாயிருக்கிறார்' (ஏசா 35 5) என்றும் வேத வாக்கியங்கள் கூறுகின்றன. அவர் உன்னதத்தில் செய்யும் காரியத்தையும் வேதம் கூறுகிறது. 'அவர் தமது உன்னதமான ஸ்தலங்களில் சமாதானத்தை உண்டாக்குகிறார்' (யோபு 25 2) என்று கூறுகிறது.

இவ்விதமாக, உன்னதத்தில் வாசம் செய்து, உன்னதத்தில் சமாதானத்தைக்

உண்டாக்கும் நமது ஆண்டவர், மனிதர்களின் இருதயத்திலும் வாசம் செய்து அவர்களுக்கு சமாதானத்தைக் கொடுக்கவும் விரும்புகிறார் 'நித்திய வாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறதாவது: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிறவர், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும் நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம் பண்ணுகிறேன்' (ஏசா57 15) என்று அவர் கூறுகிறார் ஆகவே நொறுங்குண்ட இருதயத்தோடு நாம் கர்த்தரிடம் சேருவோமானால் அவர் நமது இருதயத்தில் வந்து வாசம் செய்வார். அவர் நமது இருதயத்தில் வாசமாயிருப்பதை அவர் நமக்கு தந்தருளும் சமாதானத்தினால் அறியலாம். ஏனெனில் அவர் வாசமாயிருக்கும் [illegible] சமாதானத்தை உண்டாக்குகி[illegible] என வேதம் கூறுகிறது (யோபு 25 [illegible]


எனவே, 'உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்' (மத் 28 20) என்று கூறிய நமது ஆண்டவரிடம் நாம் கேட்போமானால் என்றென்றைக்கும் நம்முடனேகூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை (பரிசுத்த ஆவியானவரை) அவர் நமக்குத் தந்தருளுவார்' (யோ 14 16) அவர் நம்முடனே வாசம் பண்ணி, நமக்குள் இருப்பதால் நாம் அவரை அறிவோம் (யோ 14 17)

இவ்விதமாக, உன்னதத்தில் வாசமாயிருக்கிற தேவன் நமது இருதயத்திலும் வாசம் பண்ண வரும் போது, நாம் உன்னத பெலனால் தரிப்பிக்கப்படுவோம் அதற்கு கர்த்தர் கூறும் ஆலோசனை 'உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்'' (லூக் 24 49) அதாவது காத்திருங்கள் என்பதே

ஆனால், இந்நாட்களில் அநேகர் காத்திராதபடி நாங்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தவுடன் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டோம் என்று கூறி தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறார்கள் ஆனால் ஆதி அப்போஸ்தலர்களும் மரியாளும் மற்றவர்களும் கர்த்தருடைய ஆலோசனையின்படி (லூக் 24 49, அப் 1 5) காத்திருந்து (அப 1 14), பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டதாக வேதம் கூறுகிறது (அப 2 2-4) பரிசுத்த ஆவியானவர் நம்மிடம் வருவதை மற்றவர்களும் காணவும், கேட்கவும் முடியும் (அப 2 12-33) எனவே நாம் கர்த்தருடைய சமூகத்தில் அவருடைய உன்னத [illegible] காத்திருக்கும் போது கர்த்தர் [illegible] நமது உன்னத பெலனால், பரிசுத்த [illegible] தரிப்பார் உன்னதங்களில் வாசமாயிருக்கிற தேவனானவர் நம்முடைய இருதயத்திலும் வாசம் பண்ண வருவார் அவருக்குக் கீழ்ப்படிவோமானால் நமக்கு சமாதானம் பெருகும்

'அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம் (1 யோ 3:24).

'உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக---(லூக் 2·14).




தேவனைத் தேடு"
'SEEK GOD"

Regd. No. 04066564
Postal Regd. No. MH BY NE-94/95
Tamil Monthly Magazine

இந்துத்துவ மதவெறி பிடித்த அதிகாரிகளின் மோசடி செயல்.

"கிறிஸ்தவர்களே விழிப்படையுங்கள்"



படத்தில் குறிப்பிட்ட ஒரு ரூபாய் நாணயத்தின் அடியில் குறிக்கப்பட்டுள்ள வளையத்தின் நிலை காண்பது ஓம் (OM) என்ற எழுத்தாகும். இது 1997ல் ஆட்சியில் இருந்த [illegible] முன்னணி ஆக இருக்கும் போது வெளியிடப்பட்டுள்ளது. ஒரு ரூபாய் நாணயத்தில் வழக்கமாக அந்த இடத்தில் ஒன்று அல்லது இரண்டு புள்ளிகள்தான் இருக்கும். ஆனால் நிலை காண்பது ஓம் (OM) என்ற எழுத்து. இது இந்துத்துவ கொள்கையை பரப்ப வேண்டும் எனும் நோக்கத்தோடு பாரதிய ஜனதா (BJP) வை ஆதரிக்கும் சில அதிகாரிகள் செய்துள்ள ஒரு மோசடி குற்றமாகும். இது எதைக் காண்பிக்கிறது என்றால் இந்திய மதச்சார்பின்மையை விட்டு விலகி விட்டதையே காண்பிக்கிறது. இதனை பொது மக்களுக்கும் [illegible] இந்த பிரச்சனையை [illegible] [illegible] மதச்சார்பின்மைக்கு [illegible]

அறிவிப்புகள்

முழு இரவு விழிப்பு ஜெபம்
2 (மார்ச்) செவ்வாய் 1999
1 (ஏப்ரல்) வியாழன் 1999

புதிய எருசலேம் செய்தி பத்திரிகை
ஆண்டு சந்தா Rs. 30.00
வெளிநாடு Rs. 400-00

அனுப்ப வேண்டிய முகவரி
**CHIEF APOSTLE N. LAZAR
"NEW JERUSALEM CHURCH"
CHURCH LANE, TILAK ROAD,
DARGA CROSS ROAD, SONAPUR,
BHANDUP, MUMBAI - 400 078. (INDIA).**

மணி ஆர்டர் கூப்பனில் உங்கள் சந்தா (எண்) நம்பரை குறிப்பிடவும். பழைய சந்தாதாரா அல்லது புதிய சந்தாதாரா என்பதையும் குறிப்பிடவும்.

பணம் அனுப்புகிறவர்கள் சந்தாவா அல்லது நன்கொடையா என்பதை தெளிவாகக் குறிப்பிடவும்.

"புதிய எருசலேம் செய்தி" பத்திரிகை வேண்டுவோர் ரூ 30 (முப்பது) சந்தா தொகையுடன் தங்கள் விலாசத்தை தெளிவாகக் கொட்டை எழுத்துக்களில் (CAPITAL LETTER) எழுதி பத்திரிகையை பெற்றுக் கொள்ளும்படி கேட்டு கொள்ளப்படுகிறீர்கள்.

Edited and Published by : Chief Apostle N. LAZAR, New Jerusalem Church, Church Lane, Tilak Nagar, Darga Cross Road, Sonapur, Bhandup, Mumbai - 400 078.
Printed at : NEW JERUSALEM PRESS, Tilak Nagar, Bhandup, Mumbai - 400 078.

புதிய எருசலேம் செய்தி

PUDHIYA YERUSALEM CH

எக்காளம் 19 ; சத்தம் : மார்ச்-ஏப்ரல் '99



EDITOR : CHIEF APOSTLE N. LAZAR

MUMBAI, INDIA.

பத்திரிகையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டு கிறிஸ்துவுக்கேற்ற பூரண வளர்ச்சியடையும் படியாகவும் தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும், சபையானது வஞ்சகப் போதனைகளுக்குத் தப்பி ஒரே சிரசு பூரண வளர்ச்சியடையும் படியாகவும் இப்பத்திரிகை வெளியிடப்படுகிறது (எபே. 4 11-16)

புதிய எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து என்கிற நாமமாகி தெய்வப்பிறப்போ இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்குக் கட்டளையிட்ட அதிகாரங்களும் கட்டளைகளும் 7 (அப 1 1 3) என்கிற காண்பித்து ஸ்தாபித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள்

1 உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் மத் 28 18 மாற்கு 16 15

2 விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களை பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தில் ஞானஸ்நானப்படுத்துங்கள் மத் 28 19 (இயேசு [illegible] Through Action) செய்து காண்பித்தார்

3 திருச்சபையைக் கட்டி (மத் 16 18) நான் உங்களுக்குக் கட்டளையிட்ட [illegible] யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு [illegible] 20

4 அவர்களுடைய பாவங்களை மன்னிப்பதற்கு [illegible] 12 5

5 அவர்களை மேய்த்து ஆளுகை [illegible] 1 15 17

6 இவைகளை நடப்பிக்க கர்த்தருடைய [illegible] (அப 1 5 8)

7 நான் வருகிற வரையிலும் என்னை [illegible] திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார் -1 கொரி 11 23 [illegible]

நான் ஆண்டவரே சிலர் அஸ்திபார உபதேசங்கள் இரண்டு (2) என்கிறார்கள் வேறு சிலர் ஏழு (7) என்கிறார்களே அதெப்படி? என்கிறேன்

இயேசுவானவர் பிரதியுத்தரமாக இல்லை அஸ்திபார உபதேசங்கள் ஏழு ஆகும் (நீதி 9 1-6) இது ஆதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளும் அதிகாரங்களுமாகும் இவைகளை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப 1 1 10 40-43)

இதழின் உள்ளே ....

ஆசிரியர் உரை



[illegible]

1. [illegible] (... 3 16)
2. [illegible] (... 8 36,37)
3. [illegible] (... 53 5,6,10,11)
4. [illegible] (... 12 13)
5. [illegible]

[illegible]

Chief Apostle N. LAZAR

(தொடர்ச்சி)

திரியேகத்துவம்

இந்த கடைசிக் காலத்தில் தேவன் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார். ஒரே கடவுள் உண்டு அவர் தாமே தம்மில் தம்மூலம் தம்மை வெளிப்படுத்தினார், கிரியைகளின் மூலம் வெளிப்படுத்தினார், சிருஷ்டிப்பின் மூலம் கிரியை நடப்பித்தார் என்று கூறுத காலக் குறிப்பாக மாத்திரம் கொள்ளாமல் அவரது பொது வெளிப்பாட்டின் மூலமாகத்திருமே வெளிப்பாடு உண்டாயிற்று என்று கொள்ளாமல் இன்னும் வெளிப்படுத்துகிறார். கிரியை நடப்பிக்கிறார் என்ற குறிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது

எபிரேய நிருப ஆசிரியர் கூறுவது பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட ஒரே கடவுள் தம்முடைய ஒரே குமாரனை அனுப்பியதின் மூலம் ஒரு விசேஷ வெளிப்பாட்டை (Special Revelation) நிறைவேற்றினார் என்பதையே எடுத்துக் காட்டும். எபிரேய மக்கள் ஒரே கடவுள் உண்டு என்ற கொள்கையை வற்புறுத்திய காலத்தும் அக்கடவுளின் உள் ஏவுதலினாலும் எழுச்சியினாலும் இத்தகைய வெளிப்பாட்டிற்கு உரியதான பேற்றோனவைளை உடபோதித்திருப்பது நாம் வேதாகமத்தில் பார்க்கலாம். பின்வரும் ஒரு சில குறிப்புகள் அதை விளக்கும்

ஸ்திரீயின் வித்து (ஆதி 3:15) யாக்கோபின் நட்சத்திரம் இஸ்ரவேலின் செங்கோல் (எண் 24:17) பெரிய வெளிச்சம் (ஏசா 9:2) பாலகன். குமாரன் (ஏசா 9:6), ஈசா என்னும் அடிமரம் ஒரு கிளை (ஏசா 11) என் தாசன் (ஏசா 42) இளங்கிளை துளிர் கிளை. வேர் (ஏசா 53) கிளையென்னப்பட்ட தாசன் (சகரியா 3:8) முதலியவை ஒரே கடவுளின் ஒன்றிற்கு மேற்பட்ட வெளிப்பாட்டை எதிர்நோக்கிய சித்தாந்தத்தை காண்பிக்கிறது. தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பியதானது இக்குறிப்புகள் எல்லாம் அவரில் நிறைவேறின பெத்லகேமில் பிறந்த குழந்தை மாம்சத்தில் தோன்றிய போதிலும் மனித சித்தத்தினால் தோன்றாமல் தேவசித்தத்தினால் தோன்றிற்று

கடவுளின் ஒருமைப்பாட்டின் அறிவும் அனுபவமும் கொண்ட ஆதிசீஷர்கள் இயேசுவையின் உற்பத்தியை பெத்லகேம் மாட்டுக் கொட்டிலோடும், நாசரேத்தின் குடிசையோடும் நிறுத்திவிடாமல் ஆபிரகாமையும் ஆதாமையும் இணைக்க முயன்றனர். யோவான் இன்னும் மேலே போய் வார்த்தை மாம்சமானார் எனக்கூறினார் (யோவான் 1:1-14) வசனங்களும் ஒரு சிறந்த விவிலிய விளக்கமாய் காணப்படுகிறது நம் திரித்துவ ஆராய்ச்சிக்கு ஏற்புற்ற அடிப்படையாகும்

ஆதியிலே வார்த்தை. அந்த வார்த்தை தேவன், வார்த்தை மாம்சமானார், நமக்குள்ளே வாசம் பண்ணினார் பிதாவுக்கு ஏற்ற மகிமை இத்தொடர்களில் திரித்துவ சித்தாந்தம் காணப்படுகிறது இதுவரையும் இஸ்ரவேலே கேள் நம் தேவனாகிய கர்த்தர் ஒருவரே என்ற அறைகூவிக்கிடந்த மக்கள் நாசரேத்தூர் இயேசுவில் மறுதொரு குறிப்பான பூரண வெளிப்பாட்டைக்கண்டனர் பழைய ஏற்பாடு ஒருத்துவத்திற்கும் (UNITY), பிதா குமாரன் மூலமாய் திருவுளம் பற்றின வெளிப்பாட்டிற்கும் எந்த வேறுபாடும் இல்லை. என்று கண்டுகொண்டனர் பிறப்பிலும், வளர்ப்பிலும், போதனையிலும், பாவமன்னிப்பிலும் தாங்கள் இதுவரையும் அனுபவித்த ஒரே கடவுளின் சித்தாந்தத்தாரும் குறிப்பு வெளிப்பாட்டின் மூலம் வெளிப்பட்ட நாசரேத்தூர் இயேசுவின் சித்தாந்தத்துக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை அவருடைய பிறப்பில் அவருக்கு இயேசு என்று பெயரிடப்பட்டது அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என சொல்லப்பட்டுள்ளது

(மத்1 21)

அவரின் ஆரம்பகாலப்பணியிலேயே இயேசு உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்க தேவாட்டுக்குட்டி என்று அறிமுகமுடையவராய் யோவான் போதித்தார். மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்தது. பரலோக ராஜ்யம் உங்கள் மத்தியிலிருக்கிறது. பரலோக ராஜ்யத்தின் மக்களாகுங்கள் என்று அறைகூவி விளித்தார். பிணிகளைத் தீர்த்தார். வியாதியஸ்தரை குணமாக்கினார். மரித்தோரை உயிரோடு எழுப்பினார். அற்புத அடையாளங்களை நிறைவேற்றினார். உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று சொன்னார். நான் உனக்குச் சொல்லுகிறேன் என்று நியாயப்பிரமாணத்தை மாற்றி அமைத்தார். என்னில் பாவம் உண்டென்று யார் சொல்லக்கூடுமோ அறைகூவினார். சத்தியத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தைக் குறித்தும் போதித்தார். என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றார். பிதாவுக்குத்தலைவன் எனதுபிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதே எனக்குப் போஜனம் என்றார். நானே வழி, நானே சத்தியம், நானே ஜீவன், நானே வாசல், நானே மேய்ப்பன், நானே ஜீவ அப்பம், நானே ஜீவ தண்ணீர், நான் ஆபிரகாமிலும் பெரியவன், யாக்கோபிலும் பெரியவர், சாலமோனிலும் பெரியவர் தேவாலயத்திலும் பெரியவர் நானே உயிர்த்தெழுதலும் ஜீவனும் என்றார் இயேசு. மேற்கண்ட தொடர்களை உபயோகித்து ஆணித்தரமாய் நான் கடவுளின் குறிப்பிட்ட வெளிப்பாடு என இயேசு போதித்தார்

அன்பு இன்னதென்பதை போதித்து விளக்கி நிரூபித்துக் காட்டினார். உலகத்தின் சிலுவைக்கு ஒப்புக் கொடுத்தார், மரித்தார், மூன்றாம் நாளில் உயிரோடு எழும்பினார். சுருக்கமாய் சொல்ல வேண்டுமானால் இயேசு சுவாமியின் வாழ்க்கை முழுவதும் பழைய ஏற்பாட்டு ஒரே கடவுளின் வாழ்க்கையின் வெளிப்பாடாகவே காணப்பட்டது. அவரின் சமகாலத்துக்கூட்டத்து மக்கள் யாவரும் "இவர் யார்" என கேட்கத் துணிந்தனர். காற்றும் கடலும் இவருக்குப் பணிந்திருக்கிறதே நானும் பிதாவும் ஒன்றெனக் கூறுகிறாரே பிதா செய்யும் கிரியைகளை நான் செய்கிறேன் எனக் கூறுகிறார் இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள் எனக் கூறுகிறாரே இவர் யார்? இவர் சொல்லுவது தேவதூஷணமோ, இவர் கூறுவது பைத்தியமோ? ஆம் கேட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாகவும், பழைமைவாதத்தில் சிக்கிக்கிடப்பவருக்கு இவர் கூற்று பைத்தியமாய் குருகிய வைராக்கியம் உடையவருக்கு தேவதூஷணமாய் தோன்றினாலும் நாசரேத்து இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை முழுவதுமாய இவர் யார்? என்ற பெரும் கேள்வியை உண்டாக்கிற திரித்துவ சித்தாந்தத்தை நாம அறிய கிடைப்பதும், நாம் அனுபவிக்க வேண்டியதும். இம்மாபெரும் கேள்விக்கு மாபெரும் விடையே

ஒரு சிறு குறிப்பு கவனிக்கப்பட வேண்டும் ! நாசரேத்தூர் இயேசுவோடு வெளிப்பாட்டை மட்டுப்படுத்தி விடாது தெய்வகுமாரனாகிய கிறிஸ்துவோடு வெளிப்பாட்டை அனுபவித்து அறியவே சகைச்சிறந்தது இயேசுவில் நிறைவேறின வெளிபாடே தனித்துவம் உடையது கடவுள் எப்படிப்பட்டவர் ? கடவுள் யார்? அறிய வேண்டுமா நீர் கிறிஸ்துவை அன்றும் இன்றும் என்றும் அறிக்கையிடக்கூடிய இயேசுவையன்றி வேறு எவரிலும், வேறு எங்கும் அறிய முடியாது ஆனால் அவ்வெளிப்பாடு கிறிஸ்துவானவரை வாழ்க்கையிலும், சேவையிலும், பாடுபடுதலிலும் உயிர்த்தெழுதலிலும் மக்களுக்குப் புத்துணர்ச்சியாய் நிறைவடைந்தது

என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்று சொன்ன கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள் என்பதின் மூலம்

தம்முடைய ஆவியினாலே சீஷர்கள் வெளிப்பாட்டை இன்னும் ஆழ்ந்து அறிந்து நமக்கு சாட்சியாய் இருக்க துணை செய்தார்.

பரிசுத்தாவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து தேற்றப்படுவீர்கள். பெலனடைவீர்கள் என்பதின் கருத்தும் இதில் காணப்படுகிறது. இவ்வெளிப்பாட்டை மக்கள் பரிசுத்தாவியினால் உண்டான கூட்டு வாழ்க்கையிலும், சகோதரத்துவத்திலும் ஆழ்ந்து அறிவதையே வெளிப்பாட்டின் தத்துவத்திற்கேற்ற மறைநிலையில் மக்களை தன்னிடம் இன்றும் அழைத்துக் கொண்டே இருக்கும் மக்கள் தங்களை ஒப்புக் கொடுத்தினாலும் வெளிப்பாட்டுக்கு கீழ்ப்படிதலினாலும் அவ்வெளிப்பாட்டை நாளுக்கு நாள் அறிந்து கொண்டே (Apprehend) இருக்க வேண்டும். வெளிப்பாட்டில் கடவுளின் மறைதன்மை உண்மை என்றும் மக்களின் அறிந்து கொள்ளுதலை நம்பிக்கை விசுவாசம் (Faith) என்றும் சொல்லலாம். ஆழ்ந்த இரகசியங்கள் கிறிஸ்துவ சித்தாந்தத்தில் மாத்திரமே ஒருங்கே அமைந்துள்ளன

(தொடரும்)

"....நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்"

(மத்தேயு 16:16)

பெரிய வியாழக்கிழமை

பெரிய வெள்ளி என்று சொல்லப்படும் நாளைக்கு முந்திய நாள். உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மனுகுல பாவத்துக்காக தன்னைப் பலியாக ஒப்புக் கொடுத்த நாளைக்கு முந்திய நாள். பெரிய வியாழக்கிழமை என்று அழைக்கப்படும் விசேஷித்த நாளாகும். இயேசு கிறிஸ்துவானவர் தம்முடைய சீஷரில் இரண்டுபேராகிய பேதுருவையும், யோவானையும் அழைத்து பஸ்காவைப் புசிக்கும்படிக்கு நீங்கள் போய் அதை நமக்கு ஆயத்தம் பண்ணுங்கள் என்றார் (லூக் 22:7 8) அப்படியே சீஷர்கள் போய் தங்களுக்குச் சொன்னபடியே கண்டு பஸ்காவை ஆயத்தபடுத்தினார்கள் (லூக் 22:13)

பஸ்காவுக்கு இரண்டு நாட்கள்தான இருந்தது செவ்வாய் இரவு இரண்டு நாளைக்குப் பின்பு பஸ்கா பண்டிகை வருமென்று அறிவீர்கள் அப்பொழுது மனுஷகுமாரன் சிலுவையில் அறையப் படுவதற்கு ஒப்புக் கொடுக்கப்படுவார் என்றார் (மத் 26 1–3)

பஸ்கா என்றால் கடந்து போகுதல் என்று அர்த்தம் எகிப்தியரின் தலைச்சன்களை கொலை செய்த சங்கார தூதன் இஸ்ரவேலர்களின் வாசல் நிலைகளில் பூசிய இரத்தத்தைக் கண்டு கடந்து போனான் ஆகவே பஸ்கா என்ற பெயர் இந்த பண்டிகைக்கு வழங்கப்பட்டது இந்த பண்டிகைக்கு அடிக்கப்பட்ட ஆடும், சமைக்கப்பட்ட போஜனமும் பஸ்கா என்றே அழைக்கப்பட்டது.

சீஷர்கள் தாமும் பஸ்காவை தங்கள் இனத்தார் பந்துக்களோடே புசித்து கொண்டாடியிருப்பார்கள். ஆனபடியால் சீஷர்கள் இயேசுவினிடம் வந்து பஸ்காவை புசிப்பதற்கு நாங்கள் எங்கே உமக்கு ஆயத்தம் பண்ண சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள் (மத் 26.17) இயேசுவோ தாமும் தம்முடைய சீஷரும் இந்த பஸ்காவை ஆசரிக்க தீர்மானித்திருந்தார். இன்ன இன்னபடி போய்ச்சொல்லுங்கள். அங்கே ஆயத்தம் பண்ணுங்கள் என்றார். அந்தபடியே அவர்கள் போய் கண்டு பஸ்காவை ஆயத்தப்படுத்தினார்கள்

யூதருடைய பண்டிகைகள் எல்லா வற்றிலும் விசேஷித்ததாக பஸ்கா பண்டிகை இருந்தது. இது விசேஷமானதாக எகிப்தின் அடிமை தனம் ஒழிந்ததை காட்டுகிறதல்லவா ! எகிப்தின் அடிமைத் தனத்திலும் கொடூரமான அடிமைகளும், பாவத்தினடிமைத்தனம் அது முடிவடையும் படி பிதாவாகிய தேவன் சித்தம் கொண்டு தமது குமாரனை எனக்காக, உனக்காக, உலகத்தின் எல்லா ஜனங்களுக்காக பஸ்கா ஆட்டுக் குட்டியாக தந்தார்

பழைய பண்டிகைக்கும், இந்த பண்டிகைக்கும் பெரிய வித்தியாசம் உண்டு இயேசு கல்வாரி சிலுவையில் இவை எல்லாம் நீக்கிப்போட்டார். இந்த பஸ்காவை புசிக்கிறவன் எவனென்றும் பிழைப்பான்; இது கர்த்தருடைய பண்டிகையாயிருப்பதால் கர்த்தரே பண்டிகையாயிருக்கிற மகாமேன்மை பொருந்தியது ஆதலால் பழைய புளித்த மாவோடேயல்ல, துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்த மாவோடுமல்ல, துப்புரவு, உண்மை என்னும் பரிசுத்த குணங்களோடே இந்த ஆசரிப்பு (பண்டிகை) கொள்வோம்

பஸ்கா பந்தி

"சாயங்காலமானபோது பன்னிருவரோடுங்கூட அவர் பந்தி இருந்தார். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்த பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசையாயிருந்தேன் தேவனுடைய இராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும் நான் இனி இதைப் புசிப்பதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்26 20 லூக்கா 22 15 16)

பஸ்கா ஆடு எப்பொழுதும் சாயங்காலம் மூன்று மணிக்கு கொல்லப்பட்டு, பொழுது அஸ்தமிக்கிற போது புசிக்கப்படும் ஆபிப் மாதம் 14ம் தேதியில் பஸ்கா கொண்டாட வேண்டியது. ஆனால் இந்த பஸ்கா அந்த தேதியில் புசிக்கப்படாமல் அதற்கு முந்தின நாள் புசிக்கப்பட்டதாக தெரிகிறது (யோவான் 13:1, 18:28) இயேசுவானவர் தாம் மரிக்கும் பொழுதான பஸ்கா பலி சமயம் பஸ்கா நாளாகிய மறுநாளிலே நடக்கப் போகிறபடியால் அதற்கு முந்தின நாளில் அதின் முன் நிழலையும், பின்நிழலையும் காட்டிவிட விரும்பி பழைய பஸ்காவை ஆசரித்தார் அதில் முன் நிழலையும் பரிசுத்த ராபோஜனத்தை ஸ்தாபித்ததால் அதில் பின் நிழலையும் காட்ட சித்தங் கொண்டார் என்று அறிகிறோம் இந்த பஸ்காவில் பன்னிருவரும் இருந்தார் இதற்கு முன் ஒரு தடவையாவது இயேசு தமது சீஷர் அனைவரோடும் பஸ்காவை ஆசரித்ததாக சொல்லும் குறிப்பும் இல்லை இயேசு விசேஷித்தப் பிரகாரமாக தமது சீஷருடன் இதை ஆசரிக்க விரும்பினார் "இந்த பஸ்காவை" என்ற வசனம் தாம் கொண்டாடப்போகும் பஸ்கா சாதாரண பஸ்கா அல்ல, இது விசேஷித்த பஸ்கா என்று உணர்த்துகிறது இந்த பஸ்கா பந்தியில் இயேசு தமது தாயாரையாகிலும், சகோதர சகோதரி மற்றும் தமது சிநேகிதரையாகிலும் வரவழைத்துக் கொள்ள வில்லை இது பரலோக இராஜ்யத்துக்கேற்ற முதலாம் பஸ்காவாய் இருந்ததால் அந்த இராஜ்ய சம்பந்தமான பன்னிருசீஷருடன் மாத்திரம் இது ஆசரிக்கப்பட இயேசு சித்தங் கொண்டார் இதில் பாதியில் யூதாஸ் போய்விட்டான் இந்த பஸ்கா விருந்தில் இயேசு தம் பாடுகளை குறித்து விவரித்தார் "நான் பாடுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்த பஸ்காவை புசிக்கிறதற்கு ஆசையாயிருந்தேன்" என்று கூறியதால் இது பூர்வமானதல்ல, புதிய பஸ்காவாயிருக்கிறது இந்த பஸ்கா ஆடு நீர்தான் இயேசு கிறிஸ்துவை அறிந்த அப்-பவுல் "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறாரே" என்றார் இந்த புதிய பஸ்காவை நம்மோடு கடைபிடிக்க அவர்

எப்போதும் வாஞ்சையாயிருக்கிறார் நாம் வாஞ்சையாயிருக்கிறோமா? இதை இயேசுவே ஆயத்தப்படுத்தினார். இதில் பரிமாறப்படும் அப்பமும், மாமிசமும், இரசமும் அவர்தாமே. தேவ தூதர்கள் இந்த பஸ்காவில் ஆசைப்படுகிறார்கள். ஆகிலும் அதன் வாசனை முதலாக அவர்களுக்கு கிடையாதபடி அதை இந்த பூலோகத்தில் ஆயத்தப்படுத்தி ஸ்தாபித்தார். இது வனாந்திரத்திலே இஸ்ரவேலர்கள் புசித்த மன்னாவைப் போன்றதல்ல; அவர்கள் மரித்தார்கள். இந்த பந்தியில் சேருகிற செம்மறிகளுடைய சரீரமும், ஆத்துமாவும் உயிர்த்தெழுதலுக்குரிய மகிமையடைகிறது. இதில் சரியான ஆயத்தத்தோடும், உணர்வோடும் பங்கு பெறுகிறவர்கள் இயேசுவின் மாம்சத்தைப் புசித்து அவர் இரத்தத்தை பானம்பண்ணுகிறார்கள். அவர்கள் என்றென்றும் பிழைப்பார்கள். இதற்கு முன்னால் யோவான் 13 1-3ல் இப்படி வாசிக்கிறோம்.

1 பஸ்கா பண்டிகைக்கு முன்னே இயேசு இவ்வுலகத்தை விட்டு பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்தார்

2 தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்திலே அன்பு வைத்தபடியே முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்

3 தம்முடைய கையில் பிதாவானவர் எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தார் என்பதையும் அறிந்தார்

4 தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும் அறிந்தார்

5 தாம் தேவனிடத்திற்குப் போகிறதையும் அறிந்தார்

உலக பிரகாரமாகப் பார்த்தால் இந்த ஐந்து குறிப்புகளுமுள்ள ஒருவர் தாம் தாழ்மைப்படவோ ஒருவரையும் சேவிக்கவோ வேண்டிய அவசியமில்லை. ஆனால் இயேசு ஒரு அடிமைபோல நடந்து கொண்டதைப் பாருங்கள். அவருடைய உன்னத தாழ்மை அவர் இறைமைத்தன்மை என்று காட்டுகிறது அவர் தமது தேவத்துவத்தையும், அன்பையும், தாழ்மையையும் பூரணமடையும். இதனிலிருந்து நமது வாழ்க்கைக்கும், ஊழியத்திற்கும் மாதிரியாயிருக்கிறார்

பஸ்கா பந்தியில் முதலாம் நாம் திராட்சை ரசம் பரிமாறப்பட்ட பின்பு கால்கழுவுதல் வழக்கமுண்டு. விட்டால் பிரதான வேலைக்காரன் அப்பணி விடையைச் செய்ய வேண்டும். இயேசு சீஷர்களில் யாவரில் எவன் பெரியவன் என்ற வாக்குவாதமாயிற்று. ஏனெனில் "தேவனுடைய இராஜ்யத்திலே இது நிறைவேறுமளவும்" என்று இயேசு பேசினார். இதில் ராஜ்யம் என்னும் பதம் சீஷர்கள் வேறு காரமாக ஆவிக்குரிய பூலோக (இராஜ்யம்) அரசாட்சி ஸ்தாபிக்கப்படுகிறது அதற்கு இது முதலாம் விருந்தென்று தப்பாக ஆலோசித்து இந்த விருந்திலே அவர்களுக்குரிய அந்தஸ்து ஒழுங்கினைத் நிர்ணயித்து ஸ்தாபித்து மறுமைக்கிக் கொள்ள விரும்பினார்கள்.

இயேசுவோ போஜனத்தை விட்டெழுந்து மேலங்கியைக் கழற்றி வைத்துவிட்டு ஒரு துண்டை அரையிலே கட்டிக்கொண்டு ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்துக் கொண்டு சீஷர்களுடைய கால்களைக் கழுவவும், துடைக்கவும் தொடங்கினார். பேதுருவின் கால்களையும் கழுவித் துடைத்தார்



யூதாசுடைய கால்களையும் துடைத்தார் அவர் தம்முடையவர்களிடத்தில் அன்பு கூர்ந்தபடியே முடிவுபரியந்தம் அன்பு கூர்ந்தார் என்னே இறைவனின் அன்பு

பேதுருவிடம் அவர் வந்தபோது ஆண்டவரே நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான். ஆண்டவர் நான் உன்னைக் கழுவாவிட்டால் உனக்கு என்னிடத்தில் பங்கில்லை என்றார். அதற்கு சீமோன் பேதுரு ஆண்டவரே என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும், என் தலையையும் கூட கழுவ வேண்டும் என்றான். அதற்கு ஆண்டவர் அவரை நோக்கி முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாயிருக்கும், மற்றபடி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான் என்றார். யூதாசோ மனதால் தடுத்தான். எனக்குப் பங்கு பிரதான ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும் இருக்கிறது என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான். அவனுடைய செய்கைகள் அப்படி இருந்தது.

"அவர் அவர்கள் கால்களைக் கழுவினபின்பு தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு திரும்ப உட்கார்ந்து அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களே. நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால் நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள், நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால் இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள் (யோவா :13.12,17) என்றார். ஆதிசபை பின்நாளில் படிப்படியாய் இந்த நியமத்தை மறந்து போயிற்று. மறுபடியும் சபையாய் புதிய எருசலேமாய் தேவன் நம்மை அழைத்திருக்கிறபடியால் பெரிய விருந்துக்கிறவை முறையில் சபையார் கூட கர்த்தர் காண்பித்த மாதிரியின்படி ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவி அந்த வைபவத்தில் பங்கு பெறுவோமாக, மேலும் நாம் அப்பம் பிட்க வரும்போதெல்லாம் நற்கருணையின் அடையாளமாகிய கால் கழுவுதலை, ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவி வருகிறோம். அருமையான தேவனுடைய பிள்ளைகளே பெரிய வெள்ளிக்கிழமை மாத்திரமல்ல, கர்த்தர் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே கட்டளையிட்ட கால்கழுவுதலையும் கொண்டாடி தேவனுடைய பெறுவோமாக.

" நான் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவா : 13:15)

எப்போதும் இறைவனை துதிப்போமாக அல்லேலூயா

"ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்".

(யோவான் 13:14-15)

பரிசுத்த விவாகம்

[illegible] புதிய எருசலேம் சபை (கிளை) ஆலயத்தில் வைத்து Eld. Bro. [illegible] அவர்களுக்கும், Sis. [illegible] அவர்களுக்கும் 14 1 99 அன்று பரிசுத்த விவாகம் நடைபெற்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம்.

(தொடர்ச்சி)

வேதபாடம்

இஸ்ரவேலர்களை ஒடுக்கினவர்களும் அவர்களை மீட்ட மீட்பர்களும் (நியா 3:7-16:31)
இஸ்ரவேலர்களின் அடிமைத் தனம் இவ்விதமாய் உண்டாயிற்று

முதலாம் அடிமைத்தனம் :- மெசபத்தோமியா (நியா 3:11)

இஸ்ரவேலர்களின் விக்கிர ஆராதனை இதைத் தொடர்ந்து 8 வருஷம் இவர்கள் மெசெப்பத்தோமியா காரர்களுக்கு அடிமைப்பட தேவன் ஒப்புக் கொடுத்து விட்டார்

நியாயாதிபதியும் இரட்சகனுமாகிய ஒத்னியேல் காலத்தில் 40 வருஷம் அமைதி உண்டாயிற்று நியாயாதிபதிகளின் புஸ்தகத்தில் அடங்கியுள்ள பிரதான நிகழ்ச்சிகளின் சம்பந்தமாய திரும்பத் திரும்ப எடுத்துரைக்கப்படும் பூரணமான காட்சியின் ஒரு மாதிரியை இப்பகுதி எடுத்துரைக்கிறது. அதில் அவர்களைக் கொடுமையாய் நடத்தினவனின் நாமதேயம் மெசெபொத்தோமியாவின் ராஜாவாகிய கூசான் ரிஷதாயீம் என்பதே மேலும் அவர்களை விற்றுப் போட்டார் என்று எழுதப்பட்டுள்ளது நெருக்கப்பட்டவர்கள் அவர்களை விடுவித்த இரட்சகனின் பெயர் ஒத்னியேல் இதன் முதலாக இளைப்பாறுதல் கிட்டின காலம் இவைகள் அறிவிக்கப்படுகிறது. இந்த சமயத்தில் இவர்கள் கர்த்தரை விட்டு பாகாலையும், அஸ்தரோத்தையும் சேவித்தார்கள் என்று வாசிக்கிறோம் (நியா 1:13, 3:7) இவை நகரங்களின் காவற்தெய்வங்களாக ஆண் பெண் தெய்வங்களாயிருந்தன இவ்விதமாக ஒவ்வொரு பட்டணத்துக்கும் தெய்வங்களை உண்டு பண்ணி கும்பிட்டு கொண்டிருந்தது உண்டு.

சகல நியாயாதிபதிகளின் விஷேசித்திரம் உண்மையாக இந்த இரண்டு விஷயங்களும் ஒத்னியேலைப் பற்றி உரைக்கப்பட்டவை திருஷ்டாந்தங்களாக இருக்கின்றன

1) உபத்திரவத்தின் மத்தியிலிருந்து ஜனங்கள் உதவியை தேவனிடம் கூப்பிட்டதற்கு அவர் மறு உத்தரவாகவும்

2) கர்த்தருடைய ஆவியின் பலத்தினாலும் இரட்சகர்கள் எழுப்பப்பட்டார்கள், ஒத்னியேல் மேல் கர்த்தருடைய ஆவி வந்தார் (3:10)

பழைய ஏற்பாட்டின் மக்களில் நிரந்தரமாக ஒரு சிலரில் மாத்திரம் பரிசுத்த ஆவியானவர் வந்து தங்கியிருந்தார் என்று தெரிகிறது. மற்றும் அநேகரில் அந்தந்த சமயத்திற்கேற்ற விதமாய் விசேஷித்த பெலனும் வைராக்கியமுமாய் உடையவர்களாய் கிரியை செய்யும்படி பரிசுத்த ஆவியானவர் அவர்களை ஆட்கொண்டு கிரியை நடப்பிக்கிறதும் பின்பு பரிசுத்த ஆவியானவருடைய கிரியை அவர்களை விட்டு நீங்கி போவதுமான சம்பவங்களை பார்க்கலாம். ஆனால் எந்த ஒரு மனிதனும் கர்த்தருக்கு உண்மையாயிருந்து கர்த்தருடைய வார்த்தையின்படி ஜீவித்து கர்த்தருடைய ஊழியம் செய்தால் பரிசுத்த ஆவியானவர் அவர்களில் தங்கி இருக்க முடியும். இதற்கு உதாரணமாய் சிம்சோனின் வாழ்க்கை வரலாற்றில் இருந்து நாம் கற்றுக் கொள்ளலாம். பரிசுத்த ஆவியானவர் அவ்வப்போது வந்து விசேஷித்த கிரியைகள் செய்தது. குறிப்பாக கிதியோன் (6:34) யெப்தா (11:29) சிம்சோன் (13:25, 14:6-19, 15:14) ஆகிய வசனங்களில் வாசிக்கிறோம் உலகத்தில் தேவனுடைய சித்தம் செய்ய பரிசுத்த ஆவியானவருடைய வருகை மிக அவசியமென்பதை இதன் மூலமாக உணர்த்தப்படுகிறது

இரண்டாம் அடிமைத்தனம் - மோவாபியர் (3:12-31)

இஸ்ரவேலர்கள் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால் தேவன் அவர்களை எக்லோன் என்னும் மோவாபிய ராஜாவின் கையில் ஒப்புக் கொடுத்தார் அவன் அம்மோன் புத்திரரையும் அமலேக்கியரையும் கூட்டிக்கொண்டு இஸ்ரவேலை முறியடித்தான், இந்த அடிமைத்தனம் 18 வருடங்கள் சென்றது பின்பு இஸ்ரவேலர்கள் கர்த்தரைநோக்கி கூப்பிட்டு கர்த்தரைநோக்கி கெஞ்சினார்கள் அப்பொழுது கர்த்தர் அவர்களுக்கு ஏகூத் என்னும் இரட்சகனை எழும்பப் பண்ணினார் இவர் இரண்டாவது நியாயாதிபதியும் இரட்சகருமாய் இருக்கிறார் இவர் எழும்பி மோவாபியரை முறியடித்து இஸ்ரவேலருக்கு விடுதலையை வாங்கிக் கொடுத்தார் இப்போது இவர்களுடைய அடிமைத்தனத்திலிருந்து தேவன் அவர்களை விடுவித்தார் எண்பது வருஷம் இவர்கள் நிம்மதியாக இருந்தார்கள்

காலை நேரத்தில் இஸ்ரவேல் புத்திரர் ஜோர்டான் நதியைக் கடந்து சென்ற அதே கல்காலுக்கு அருகே இன்றைய ஜோர்தானிய ஊரில் குடியிருந்தனர் பேரீச் சமரங்களின் ஊர் என்பது (நியா 3 13) எரிகோ பட்டணத்தை குறிப்பதாகும்.

மூன்றாவது அடிமைத்தனம்:- கானானியர் (4:1-5:31)

கானானிய அரசனின் பெயர் யாபீன் அவனுடைய சேனாதிபதியின் பெயர் சிசெரா இஸ்ரவேல் புத்திரர்கள் 20 வருஷம் அடிமைத்தனத்திற்குட்பட்டார்கள் இவர்களை இரட்சிக்கும்படி பாராக், தெபொராள் என்னும் தலைவர்களை தேவன் எழுப்பினார். இதன் மூலமாக இஸ்ரவேலர்கள் 40 வருஷம் அமைதி பெற்றார் சிசெராவிடம் ஏறக்குறைய 900 இரும்பு ரதங்கள் இருந்தன. வெல்லமுடியாத நிலையில் சிசெரா இருந்து வந்தான் கீசோன் ஆறு கணவாயின் அருகே இருந்தது. சாதாரணமாக எப்போதும் வறண்டுகிடக்கும் ஆறு அது பெருகி ஓடினபோது (நியா 4·7) அதில் சிசெரா சேனை பெருக்கெடுத்த இரதங்களை அடித்துச் சென்றது வானமண்டலத்தில் மாற்றம் உண்டாயிற்று தேவன் இஸ்ரவேலுக்கு முன்பாக யாபீனையும், சிசெராவையும் தாழ்த்தினார் (நியா 5 20-22)

தெபொராளின் பாட்டு (நியா 5:20-22)

உணர்ச்சி ததும்பிய பாடலாயிருக்கிறது கர்த்தருடைய யுத்தங்களின் புஸ்தகத்திலே ஒரு வேளை எழுதி பதிவுசெய்யப்பட்டிருக்கலாம் (எண் 21 14) பாராக் கொஞ்சம் பின் தங்கிய போது தெபொராள் காண்பித்த ஆர்வமும் பாராட்டத்தக்கது மிகுந்த வலிய முடையவளாய் முன் சென்றாள், இது சாதாரணமாய் நடைபெறுவதில்லை, தேவ ஆவியினால் உண்டாயிற்று. ஆண்கள் கலங்கும் போது பெண்கள் வலிமை கொண்டு செயல்பட்டு யாகேலுடைய வலிமை அசாதாரணமாய் இஸ்ரவேலின் சத்துருவை முறியடித்தாள். கர்த்தரைப் பகைக்கிற யாவரும் இப்படியே முறியடிக்கப்படுவர். கடவுளின் அன்பு கூறுகிறவர்கள் சூரியனைப் போல பிரகாசிப்பார்கள் என்று தெபொராளும், பாராக்கும் பாட்டுப் பாடினார்கள்

(தொடரும்)

கர்த்தர் நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணினார்: அவர்கள் கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார்கள். (நியா : 2·16)

இராப்போஜன ஸ்தாபகம்

"அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதை பிட்டு, சீஷருக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்" (மத் 26:26-30, மாற்14:22-24, லூக் 22:19-20; 1கொரி 11:23-25)

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது ஜீவியம், இப்பூவுலகத்துக்குரிய வாழ்க்கை முடிவடைய போகிறது என்பதை நன்றாக அறிந்திருந்தார். அதைப்பற்றி அடிக்கடி சொல்லிக் கொண்டும் வந்தார். ஆனால் வெளிப்படையாய் அப்படிப்பட்ட அடையாள மொன்றும் காணப்படவில்லை. தம்முடைய ஜீவிய காலத்தின் முடிவு சாதாரண மரண மாயிராமல் பிராயச்சித்த மரணமாயிருக்கிற தென்பதை உலகமுடிவு வரையுள்ள மக்கள் யாவரும் அறிந்து கொள்ளும்படியாக அவர் இந்த இராப்போஜனத்தை (திருவிருந்தை, நற்கருணையை) நியமித்து ஸ்தாபித்தார். இவ்வுலகத்திலிருந்து மறைந்த வீரர் முதலானவர்கள் பிறருக்கு அவர்களுடைய பெருமையும், பேரும் காலத்தால் விழுங்கப்பட்டு போயின. தம்முடைய மரணம் அப்படி மறந்துபோகத்தக்க தல்லவென்றும், உலகம் தன்னை எப்போதும் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறதென்றும் இந்த நியமத்தால் இயேசு கிறிஸ்து வெளிப்படுத்துகிறார்.

கர்த்தருடைய பந்தியைப்பற்றிய வரலாறு

முதல் மூன்று சுவிசேஷங்களிலும், பரிசுத்த அப்போஸ்தலனாகிய பவுலாலும் வரலாறு எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளில் பலவகையான வாசகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றது. பரிசுத்த மத்தேயுவும் மாற்கும் ஏறக்குறைய ஒரேவிதமான வாசகங்களை எழுதுகிறார்கள். பரிசுத்த லூக்காவும் பவுலும் ஏறக்குறைய ஒரேவிதமான வாசகங்களையும் எழுதுகிறார்கள். ஆனால் பரிசுத்த லூக்கா உங்களுக்காக கொடுக்கப்படுகிற என் சரீரம் என்றும், பரி. பவுல் உங்களுக்காகப் பிட்கப்படுகிற என் சரீரம் என்றும் சொல்லுதல எழுதுகிறார்கள். இந்த நாலு வரலாறுகளில் அமைந்த இராப்போஜன ஸ்தாபக வாசகத்தை கூட்டினால் அது பின்வருமாறு இருக்கிறது. இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து (ஸ்தோத்திரம் செய்து) அதைப்பிட்டு சீஷருக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள் இது உங்களுக்காக பிட்கப்படுகிறதும் கொடுக்கப்படுகிறதுமான என்னுடைய சரீரமாயிருக்கிறது என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி அவர்களுக்குக் கொடுத்து நீங்களெல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள் இது பாவமன்னிப்புண்டாகும்படி உங்களுக்காகவும், அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புதிய உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது என்றார். பின்னும் அவர் இந்த பாத்திரம் என்னுடைய இரத்தத்தாலாகிய உடன்படிக்கையா யிருக்கிறது. இதில் பானம்பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி செய்யுங்கள் என்றார்.

இந்த அப்பமும் திராட்சரசமும் முதல் வகுப்புக்களாயிராமல் அநேக பிரயத்தனம் கருதுகிறபின்பு நமது சரீரத்துக்கு ஆகார வஸ்துக்களாகிறது போலத்து வேதனையும்

திராட்சைக் குலையுமாகிய இயேசு தெய்வமகனே செய்கிறார். கொல்கதா என்னும் ஆலையிலும் ஆட்டப்பட்டு, பிழியப்பட்டு, தேவநீதி என்னும் அக்கினியால் வெந்து நமக்கு ஆகாரமாகவும் பானமாகவும் நம்மை வந்தடைகிறதை இது திருஷ்டாந்தப் படுத்துகிறது. கர்த்தராகிய இயேசு இப்பூலோகத்தை விட்டு பிதாவினிடத்தில் போகும்படியான வேளை வந்ததென்று அறிந்து தம்முடைய பிள்ளைகளிடத்தில் அதிக அன்பு காட்டினார். நாம் உலகத்திலிருக்கும் போது இவ்வுலக வனாந்தரத்தில் உண்டாகும் பசியும் தாகமும் இன்னபடியிருக்கும் என்று அவர் உணர்ந்திருந்தார்.

இந்த வனாந்தரமான தேசத்தில் அவர்களைப் பசியும் பட்டினியுமாய் ஆத்தும நைந்தவர்களாக விட்டுவிட்டால் தங்கள் ஜீவிய பாதையில் சோர்ந்து போவார்கள் அல்லது பாதாளலோகத்து பாதாள போஜனங்களைத் தின்று மாண்டு போவார்கள் என்று கண்டார். இந்த அழுகையின் பள்ளத்தாக்கில் ஆவிக்கு அடிக்கடி பசியும், தாகமும் உண்டாகும் என்பது அவருக்குத் தெரியும். ஆகவே இந்தப் பந்தியை ஆயத்தப்படுத்தினார். என் சத்துருக்களின் பழிப்புக்கு இடமில்லாமலும் அவர்களுக்கு எதிரே எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தினார். அவர் என்னைவிட்டு பிரிய மனமில்லை. நான் அவரைவிட்டுப்பிரிய மனம் வந்து விடக் கூடாதென்றும் நினைத்து பரிசுத்த இராபோஜனம் என்னும் விருந்தை ஸ்தாபித்து தமது சரீரத்தையும் இரத்தத்தையும் நமக்குப் போஜனமாக நியமித்தார். தமக்கு நேரிடப்போகிற முடிவு தாம், தம்மேல் வைத்த நேசத்திற்கு முடிவாகமாட்டாது. அந்த நேசம் நித்திய நேசம், அனாதிநேசமாயிருக்கிற தென்பதை இந்தப் பந்தியால் உணர்த்துகிறார். இது இயேசுவின் அன்பை விளக்கும் சாக்கிரமந்தாகவும் அவருடைய மரணத்தை விளக்கும் நித்திய நியமமாயும் இருக்கிறது. போஜனமானது அதை புசிக்கிறவனுடைய உடலோடுகூட சேர்ந்து போகிறது. இயேசுவை பரிசுத்த இராப்போஜனத்தில் புசிக்கிற விசுவாசிகள் அனைவரும் தன்னைப்போல் ஆகிவிட சித்தமாயிருக்கிறார். வெவ்வேறு மெழுகு வர்த்திகள் நெருப்பினால் உருக்கப்பட்டு ஒன்றோடொன்று பொருத்தப்பட்டு ஒரே மெழுகுவர்த்தியாகப்படும் அல்லவா? இந்த திருவிருந்தின் மூலமாய் நம்முடைய பாவமுள்ள சரீரம் கிறிஸ்துவின் பரிசுத்தமுள்ள சரீரத்தோடு அவரின் அக்கினியினால் இணைந்து அவர் நமக்குள்ளும் நாம் அவருக்குள்ளும் வாசமாகி இருவரும் ஏக சரீரம்போல் விளங்கவேண்டும் என்று இயேசு விரும்புகிறார். இந்த பரிசுத்த நியமத்தால் இயேசு நம் மீட்பர் என்பதை விட, நம் இரட்சிப்பின்நாயகர் என்று தெளிவாகிறது.

தாயானவள் தன் அமுதால் தன் பாலகனைப் போஷிக்கிறாள். இயேசு தம் திரு சரீரத்தாலும் இரத்தத்தாலும் நம்மைப் போஷிக்கும் தாயாராயிருக்கிறார். ஒவ்வொரு பாலகனும் தன் தாயின் பலத்தை, தான் குடிக்கும் பாலால் உண்டு தன்னைப்பலப்படுத்தி ஜீவித்து வளருகிறது. நாம் நம் இரட்சண்ய மாதாவாகிய இயேசுவின் பலத்தையும், குணத்தையும், சுபாவத்தையும் இந்த நற்கருணை என்னும் உபகாரத்தால் பெற்று நம் ஜீவ காலத்தை கழிப்போமாக. தேவன் மனுஷனுக்கு போஜனமாகிறது எவ்வளவு அதிசயம். இவ்வுலகத்திலுள்ள எந்த போஜனமும் அவ்வளவு பலமுள்ளதல்ல. ஏனெனில் இவ்வுலக வஸ்துக்களைப் புசிக்கிற சகல ஜீவன்களும் நோவுக்கும் சாவுக்கும் இரையாகியிருக்கிறது. நோவை அழிக்கும், சாவை அழிக்கும் போஜனம் இவ்வுலகத்தில் இல்லவே இல்லை. அப்படிப்பட்ட ஒரே ஒரு போஜனம் பரலோகத்தில் மாத்திரம் உண்டு. அந்த போஜனம் கர்த்தராகிய இயேசுதான்.

நானே வானத்திலிருந்து இறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தை புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான். நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே – என்று இரட்சகர் சொல்லுகிறார் (யோவா 6:51)

இவ்வுலக பொருள்களில் அழிவு உண்டு இந்த பரமபோஜனத்தில் அழிவேயில்லை இதுநித்திய ஜீவன் வரைக்கும் ஒருவனுடைய பசியை ஆற்றி அவனுடைய தாகத்தைத் தீர்க்கிறது இது சாவுக்கேதுவான நம் சரீரத்தை மகிமையுள்ள உயிர்த்தெழுதலுக்கு சேர்த்தளிக்கிறது (யோவா 6:54) இப்படிப்பட்ட மேலான போஜனத்தை இயேசு நமக்குத் தந்தது எவ்வளவு தயவு! எவ்வளவு அன்பு! இந்த போஜனத்தின் ருசியும் மணமும் இனிதுள்ள பெலனும் வானத்திலுள்ள தேவதூதர்கள் முதல் அறியார்கள் பாவிகளாகிய நாம் இந்த விருந்தை அருந்தும்போதெல்லாம் தேவதூதர்களெல்லாம் ஆதாமின் மகனுக்கும் ஏவாளின் மகளுக்கும் வந்த அதிஷ்டத்தைப் பாருங்கள் என்று மெதுவாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து திருவிருந்தை தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே நியமித்தார் உலகத்தால் என்னென்ன பாடுகளும், எவ்வளவு அவமானங்களும் நேரிட்டாலும், ஆ உலகம் என்னைச் சிலுவையில் அறைந்து கொன்றாலும் நான் உலகத்தைப் பகையேன் உலகத்தை நேசிக்கிறேன், உலகுக்கு விருந்தளிக்கிறேன் என்று சொல்லுகிறது போலிருக்கிறது இச் சம்பவம்.

ஜெபம் ஆ! தேவ இயேசுவே உமக்கு ஸ்தோத்திரம். நீர் உமது பரிசுத்த நடக்கைகளையும் உபதேசங்களையும் என ஆச்சரியங்களையும் உமது பாடுகளின் பலன்களை என் மீட்பையும் தந்ததோடு உம்முடைய சரீரத்தையும் இரத்தத்தையும் எனக்கு விருந்து கொடுக்கிறீர் ஆகவே நீர் உம்முடையதில் எனக்குத் தராமல் நிறுத்திக் கொண்டதும், மறைத்துக் கொண்டதும் ஒன்றுமில்லை. நீர் உமது ஐசுவரியத்திலிருந்து எனக்குக் கொடுக்கும் தானம் உம்மையே முழுவதுமாய்த் தந்து என்னை ஆசீர்வதிக்கிறீர். இப்படி செய்யத்தக்க மனுஷபுத்திரன் ஒருவனுமில்லை

உம்மை நினைவுகூரும்படி இந்த விருந்தை நியமித்தீர் என் மனதின் பலவீனமும், நான் மறதியுள்ளவனென்பதும் உமக்குத் தெரியும். அப்படியொன்றும் நேரிடாதபடி இதை உமக்கு ஞாபக நியமமாக இவ்வுலகம் ஆசரித்து வரவேண்டுமென்று நீர் விரும்பினீர் உம்மை மறவாதபடிக்கு இந்த ஏற்பாட்டை ஸ்தாபித்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன் நீர் என்னால் நினைவு கூரப்படப் பாத்திரராயிருக்கிறீர் உம்மைத்தவிர இந்தப் பூமியில் எனக்கு வேறே விருப்பமில்லை என் மீட்பரே, நான் உம்மை மறந்தால் என் வலது கை தன் தொழிலை மறப்பதாக. இந்த நியமம் ஆசரிக்கப்படும் போதெல்லாம் "மறக்கப்படாத நித்திய உடன்படிக்கையினால் நாம் கர்த்தரை சேர்ந்து கொள்ளுவோம் வாருங்கள் என்ற சகலர் சத்தம் தொனிக்கிறது" இதை ஆசரியாமல் அசட்டைபண்ணுகிற உம்முடைய பிள்ளைகளை நீர் பார்த்து "என்னை மறந்துபோனாய்" என்று சொல்லுகிறீர் (எசே 22 12) ஆமென் இந்த இராப்போஜன ஸ்தாபகம் பற்றி பின்னால் ஏராளம் விவரிக்கப்படும்

"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறாரே" (1 கொரி. 5:7)

இயேசுவின் மரணம் பாவநிவாரண பலி

சிலுவையில் இயேசுவின் பாடுகள் பாவ நிவாரண பலியாயிருக்கிறது. பூலோகம் பாவத்தால் பீடிக்கப்பட்டுப் போனதால் அக்கேட்டை நிவிர்த்திசெய்து ஆதிவாழ்வை அதற்கு உண்டாக்கும் படியாகவும், பிதாவாகிய தேவனுடைய நீதியை திருப்தி செய்யும் படியாகவும் ஒரு பலி அவசியமாயிருந்தது. ஆதிமுதல் சட்ட மில்லாததும், சட்டத்தோடும் செலுத்தப்பட்ட எல்லாவகையான பலிகளும் பாவ நிவாரணத்துக்கு அவசியமாயிருந்த நித்திய பலிக்கு நிழலாக மாத்திரம் இருந்தன. அந்த பலியோ, நித்திய தேவநீதியை திருப்திப்படுத்தவும் பாவிகள் ஒவ்வொருவரையும் மீட்கவும் தக்கதான நிறைவும் பூரணமும் உள்ளதாய் ஒரேபலியாய் இருக்க வேண்டும். மனுஷமீட்புக்கு மாடு, ஆடுகளின் இரத்தமல்ல, மனுஷ இரத்தம் தான் அவசியம். பாவத்தின் சம்பளம் மரணம் ஆகையால் ஒவ்வொரு மனுஷனுடைய ஒவ்வொரு பாவத்துக்கும் நிவிர்த்தியுண்டாக ஒவ்வொருவரும் சாக வேண்டியது நியாயமாகும். அப்படியானால் ஒரு மனுஷனும் பிழைத்திருக்க வழி இல்லை. அவனுடைய ஒவ்வொரு பாவத்திற்கும் ஒவ்வொரு மனுஷ ஜீவன் பலியானாலும் எல்லா மனுஷர்களும் சாவுக்குள் ஆவார்கள். ஏனெனில் ஒரு மனுஷனுடைய பாவங்களின் தொகையும் அவைகளுக்கு வரவேண்டிய தண்டனைகளும் எல்லா மனுஷருடைய தொகையிலும் அவர்கள் பலியாகும் சாவிலும் அதிகமாயிருக்கும். அதுவுமன்றி அப்படி பலியாகும் ஒவ்வொரு மனுஷ ஜீவனும் பாவமுள்ளதாகையால் அது அந்த ஒரே மனிதனுடைய பாவத்தை முதலாய் நிவர்த்தி செய்ய மாட்டாதே. தேவனுடைய நீதியை திருப்திப்படுத்தவும் மாட்டாது. பாவமுள்ளபலி பாவ நிவாரணத்தை உண்டாக்கமாட்டாது. ஆகவே மனுமக்கள் அனைவரும் பலியானாலும் அவர்கள் தங்களைப் பலியாக ஒப்புக் கொடுப்பதால் ஒரு மனுஷனுக்கும் மீட்பை உண்டாக்கிக் கொள்ளமாட்டார்கள். அப்படியானால் மனுமக்கள் அனைவருக்கும் மீட்பு எப்படி கிடைக்கும், அவர்கள் பாவம் எப்படி நிவர்த்தியாகும் ? இவ்வண்ணம் மனுஷத்திரள் தங்களைத் தாங்களே கெடுத்து தங்கள் கேடுகளை நிவர்த்திக்க சக்தியற்றவர்களாயும், தேவனும் தமது நீதியைச் சரிக்கட்ட கூடாததுமாயிருப்பதை பிதாவாகிய தேவன் கண்டு பரிதாபம் கொண்டார். தேவனுடைய பரிதாபம் அவருடைய பரிசுத்தமுள்ள நீதிக்கு திருப்தியாக மாட்டாது. காரியம் இப்படி இருக்கையில் நித்திய வார்த்தையும் தேவனுடைய குமாரனுமாகிய இயேசு கிறிஸ்து, பிதாவே, உமது நீதியை திருப்தி செய்யவும் மனுமக்களுக்கு பாவநிவர்த்தி உண்டாக்கவுமாக எனக்கு ஒரு சரீரத்தை ஆயத்தப்படுத்தி என்னை அனுப்பும் நான் உமது நீதியின் தண்டனையைத் தாங்கி, உமது சிட்சைக்குட்பட்டு, நீர் குறிப்பிக்கும் பாவமில்லாத பரிசுத்த இரத்தத்தை மீட்கும் கிரயமாகச் செலுத்தி இவ்வண்ணம் உமக்குத் திருப்தியும் மனுக்குல மக்களுக்கு மீட்பையும் உண்டு பண்ணுவேன் என்று ஆலோசனை பண்ணி, தேவனாயிருந்தவர் மனுஷனானார். தேவதூதரால் வாக்குத்தத்தம் பெற்றவர் சற்றுக் காலம் தேவதூதரிலும் சிறியவராக்கப்பட்டார். அந்த புண்ணிய நாதர் தம்மை தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபம் எடுத்து மனுஷனாகி சிலுவையில் மரண பரியந்தம் தம்மைத் தாழ்த்தினார். மொத்தமாகச் சொன்னால் நமக்குப் பாவநிவாரண பலியானார். இதில் நாம் அதிகமாய்த் தெரிகிறது பிதாவையா ? குமாரனையா ? அவ்விருவருடைய அன்பில் இது முதல், இரண்டாவது என்று பிரிக்கப்படாத வண்ணமாய் இருக்கிறது. ஆதலால் நாம்

எப்போதும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்கவும் வணங்கவும் கடமைப்பட்டவர்களாய் இருக்கிறோம்

ஆ உன்னத அன்பே ! பரலோக தேவ ஆட்டுக் குட்டியே! பாவத்தை அறியாத பரிசுத்த இரட்சகா !!! தேவரீர் மனுமக்கள் எல்லாருடைய வணக்கத்துக்கும், ஸ்தோத்திரத்துக்கும் நேசத்திற்கும் பாத்திரராய் இருக்கிறீர் தேவரீர் நேசித்த மனுஷரெல்லாம் ஒருவருமில்லை நீர் உமது பரிசுத்த பலியால் உலகமனைத்தையும் மீட்டுக் கொண்டீர். நீர் என்னையும் உலகமனைத்தையும் மீட்கும்படி சர்வாங்க தகனபலியாக நீர் உமது சரீரத்திலும் ஆத்துமாவிலும் மனதிலும் பாடுபட்டீர் ஒவ்வொரு பாவியும் உம்மைப்பார்த்து நீர் என்னில் அன்பு கூர்ந்து எனக்காக உம்மை ஒப்புக் கொடுத்தீர் என்று சொல்ல வேண்டியது நியாயமாய் இருக்கிறது

நாம் இயேசுகிறிஸ்துவினுடைய பாடு மரணங்களைத் தியானிக்கிறோம் இது படுபாவியை குணமாக்குகிறதும் பரிசுத்தவானை சுத்தமாக்குகிறதும், நொறுங்குண்ட ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதும், நருங்குண்ட ஆவியை களிப்பாக்குகிறதும், கல்லான இருதயத்தை மாற்றிப் போட்டு சதையான இருதயத்தை அருளுகிறதும், மனிதனுடைய ஆத்துமாவானது மோட்சானந்தமடையும் படியும் இரட்சிப்படைகிறது இயேசு கிறிஸ்துவினுடைய பாடு மரணம்

தேவ குமாரன்பட்ட பாடுகளை உற்றுப் பார்ப்போம். மனதில் வியாகுலம். ஆவியில் கலக்கம், வாயில் பெருமூச்சு கண்ணில் கண்ணீர், காதில் தூஷணம், முகத்தில் உமிழ்நீர், முதுகில் பிரம்படி, சிரசில் முள்முடி, விலாவில் ஈட்டிக்காயம், நாவில் வறட்சி, கைகால்களில் ஆணிகளால் கடாவப்பட்டு இவ்வண்ணமாக தேவன் தமது குமாரனைப் பாடுகளுக்கு உட்படுத்தப் பிரியமானார் குமாரன் தாமே தாழ்ந்து பிதாவின் சித்தம் செய்ய என் பேரில் அன்பானார் இந்த என்பாவ பாடு



சகிப்பித்தும் என் பாவங்களை மன்னித்தருளும், என் ஆத்துமாவின் நோயை மாற்றி குணமாக்கியருளும் உம்முடைய பரிசுத்தாவியைக் கொண்டு இந்தப் பாடுகள் அனைத்தையும் என் இருதயத்தில் எழுதி என்னை நேசித்துமீட்டுக் கொண்ட உமது குமாரனை நான் எப்பொழுதும் நேசித்து நடக்கும்படி உதவிசெய்யும் என்று வேண்டிக் கொள்வோமாக ஆமென

அவருடைய ஆத்துமா தன்னை குற்ற நிவாரண பலியாக ஒப்புக் கொடுத்தது (ஏசா 53:10)

கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்

8 2 1999 அன்று புதிய எருசலேம் சபைப் பாஸ்டர் சமுத்திரசீலி அவர்களின் தகப்பனாரும் கோவில்பட்டி கிளையைச் சேர்ந்த மூத்த ஊழியருமாகிய அரிய செல்வம் (வயது77) அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்

25 2 1999 அன்று புதிய எருசலேம் சபை பெரியகுளம் கிளையைச் சேர்ந்த E. அன்னம்மாள் (வயது 70 என்பவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்

இவர்களது பிரிவால் வருத்தத்திலிருக்கும் குடும்பத்தாருக்கும் உற்றார் உறவினருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தால் ஆறுதல் கூறிக் கொள்கிறோம்

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பாடு மரணம்

வணக்கத்துக்குப் பாத்திரமான கிறிஸ்துவின் மரண இரகசியமுடிவுகளுக்கும் ஞானிகளுக்கும் இடறலாயிருக்கிறது சிலருக்கு பைத்தியமாகத் தெரிகிறது விசுவாசிக்கிற நமக்கோ சிலுவையாகிய மாண்டவரைப் பற்றியது யாதொரு இடறுமில்லை. மற்றவர்களுக்கு இடறலாயிருப்பது, விசுவாசி இடறாது பரலோகத்திற்குப் பறந்துபோக உதவி செய்யும் செட்டைகள் போலிருக்கின்றன.

இயேசு இரட்சகர் நமது சிலுவை மரணத்தால் பிசாசின் இராஜ்யத்தை அழித்துவிட்டார் – மரணத்தை ஜீவனாக மாற்றிவிட்டார் – பாதாளத்தின் அதிகாரத்தை அடக்கிவிட்டார் – இப்பிரபஞ்சத்தின் அதிபதியை வெளியேற்றினார் – தம்முடைய சிறைச் சாலையை இடித்து விட்டார் நமக்கு விரோதமாய் இருந்த தீர்ப்பை மாற்றி போட்டார் இவையெல்லாம் அவருடைய மரணத்தால் நமக்குண்டானதால் அந்த மரணம் வணக்கத்துக்குரிய இரகசியமல்லவா?

வாருங்கள் இன்னும் அறிவிருக்கிற இரகசியங்களைப் பார்ப்போம். இயேசு சுவாமியின் சிலுவைப் பாடுகள் இவ்வுலகத்தில் பிரசங்கிக்கப் பட்டவுடனே விக்கிரகாராதனைகள் தாழ்ந்தன-விக்கிரக பீடங்கள் பாழாயின-விக்கிரக ஆலயங்கள் இடிபட்டன-சிலைகள் பிடுங்கப்பட்டன-இருண்ட தேவதைகளிலிருந்து பிறந்த கள்ள சத்தங்கள் ஒழிந்தன–அசுத்தமான செயல்களான எல்லா இரகசியங்களும் வெளியாகி நசுக்கப்பட்டன-உலகத்தாரின் தீயபேய்களே மறைந்துவிட்டன–அவர்கள் இரகசியங்களின் மதியீனம் வெளிப்படையாகி வளர்ந்தன - மருளுடையவர்கள் அழுகைசெய்வோராய் மறுதலிக்கப்பட்டன-பிசாசுகளின் பலி பீடங்களையும், பலிபீடங்களுக்குரியவைகள் இயேசு சுவாமியின் பாடுமரணத்தால் இல்லாமல் மறைந்துவிட்டிருக்கிற போது அதனை

அவைகூட கூடாததும் வணக்கத்துக்குத் தகுதியான ஒரு இரகசியமிருக்கிறதல்லவா?

பிற மத தேவாலயங்களின் பிரசாரம் இதற்கு நேர்மாறான கிரியைகளை நடப்பிக்கும். அதை இந்நாட்களில் நாம் கண்கூடாகப் பார்க்கிறோமே குஜராத் மாநிலம் டாங் ஜில்லா வனப் பகுதியிலிருக்கிற அசிமானந்த சாமியார் சொல்லுகிறார் (இவர் ஒரு சங்கபரிவார் மந்திரவாதி) தம்முடைய முன்பிதாக்கள் குரங்குகளை விருத்தனர் குரங்கைக் கும்பிட்டனர் ஆதலால் நாம் குரங்கைத்தான் கும்பிட வேண்டும். குரங்கு ராமனைக் கும்பிட்டது ஆதலால் நாம் குரங்கையும், இராமனையும் கும்பிடுவோம். குரங்கு சேனையாய் இருப்போம் (பஜ்ரங்தள் என்றால் குரங்கு சேனை என்று அர்த்தமாகும்) என்று சில மனிதர்கள் குரங்குகளைப் போல் ஆகிறார்கள் பார்த்தீர்களா? நம் மனதிலும் உடுத்து நாகரீகமுள்ள, ஒழுக்கமுள்ளவர்களாயிருப்போமாக.

மனுஷர் தேவதூதர்களையும் நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்ள இயேசு சுவாமியின் பாடுகளையே நாடி வரவேண்டும் என்ற அப்போஸ்தலர்கள் உலகமெங்கும் ஒரு இணையற்ற சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க முயன்றும், துன்பங்களையும், உபத்திரவங்களையும் சகித்துப் பலவிதமும் தீயோர்களின் அனுப்பின் பிரசங்கிகளை பலவிதமும் இயேசுவானவரின் சிலுவை பாடுகளின் இரகசியப் பரலோகமும் செய்யவே இவ்வுலக இரகசியமுடிவுகளின் சுகமுள்ள நாம் பிரவேசித்து பரிசுத்த ஆவியின் வல்லமையால் அதின் பொக்கிஷத்தைப் பெற்றுக் கொள்வோமாக.

துரைத்தனங்களையும், அதிகாரங்களையும், உரிந்து கொண்டு வெளியரங்கமாக கோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்.

(கொலோ 2:15)

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தார்

கிறிஸ்தவ மதத்தின் மாபெரும் சக்தி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் இருக்கிறது. சீஷர்கள் யூதர்களுக்குப் பயந்து கதவுகளைப் பூட்டிக் கொண்டிருந்தார்கள் இயேசுகிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால் ஒவ்வொருவரும் ஒருவருக்குந் தெரியாமல் ஒருவர் தங்கள் இடங்களுக்கு ஓடிப்போயிருப்பர். ஆனால் உயிர்த்தெழுந்த கர்த்தரை அவர்கள் தரிசித்தனரல்லவோ அவர்கள் கூடியபொழுது அவரைக் கொலை செய்த எருசலேம் நகர வீதியில் ஓடி இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தார்! என்று உரக்க கூவினார்கள் அவரைக் கொலை செய்த ஆசாரியக் கூட்டத்தாரிலும் அநேகர் கிறிஸ்துவை விசுவாசித்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறினார்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்திராதவரல்லவோ தர்சுபட்டணத்து சவுல் கிறிஸ்தவ மார்க்கத்தை ஒழித்துப் போடுவேன் என்று சபதம் கட்டி சென்றவர், இயேசுவின் அடியாராய் மாறி கிறிஸ்தவநெறி நிலை நாட்டும் பெரும் கருவியானார் சுவிசேஷங்கள் எழுதப்படும் முன்னே தாம் ஸ்தாபித்த கொரிந்து சபைக்கு நிருபம் எழுதுகையில் இயேசுவானவர் அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்று எழுதினார் (1கொரி 15 1-4) தான் அடைந்ததும் பிரதானமாக ஒப்புவித்ததும் மரணமும் என்னவென்றால் கிறிஸ்துவானவர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் எனக்கும் தரிசனமானார் என்கிறார் (1 கொரி 15 8)

இது ஒருவர் பாரம்பரியமோ, புராணக் கதையோ அல்ல ஒரு பாரம்பரிய புனைவு வெறுமையைம் பிடிக்கும் இயேசு வானவர் (கடவுள்) உயிர்த்தெழுந்து தம்முடையவர்களுக்கு அடிக்கடி காட்சியருளி அவர்களுடன் பேசினார், அவர்களுடன் புசித்தார், தம்முடைய சமூகம் அவர்களை விட்டு பரலோகத்துக்கு எடுபடும் வரை, 40 நாட்கள் அவர்களுக்கு கட்டளையிட்டு கட்டளையிட்டு விட்டு அவர்கள் கண்காண பரலோகத்துக்கு எழுந்தருளினார். அவர (இயேசுவானவர்) மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார் அவர் உயிர்த்தெழுந்தார் என்ற செய்தி காட்டுத் தீ போல பரவ ஆரம்பித்தது. 6 வாரங்களுக்குள் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியைப் பிரஸ்தாபப்படுத்த தொடங்கி விட்டனர் மக்கள் கூட்டங்கூட்டமாக மாறுதல் அடைந்து கிறிஸ்தவர்களாகத் தொடங்கி விட்டனர் அன்று முதல் இன்று வரை கிறிஸ்தவர்களாகி வருகின்றனர். இனிமேலும் ஆவார்கள் ஏனெனில் சரித்திரத்தில் எந்த மனிதனும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார் என்று இல்லை, வேறு எந்த மதத்திலும் இல்லை உயிருள்ளவர் உயிருள்ளவரை வணங்குவார் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் நானும் தரிசித்தேன்.

"......உயிரோடு இருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன ? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்.

(லூக். 24:5,6)

ஞானஸ்நானம்

28 1 99 அன்று தஞ்சாவூர் மாவட்டம் புதுக்கோட்டை புதிய எருசலேம்-சபையில் 4பேரும், 29 1 99 அன்று புதுக்கோட்டையிலுள்ள புதிய எருசலேம் சபையின் கிளையில் 4பேரும் ஞானஸ்நானம் பெற்று திருச்சபையில் அங்கமானார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்

ஊழியப் பணியில் இரத்த சாட்சியாக உயிர் துறந்த கிரஹாம் ஸ்டேயின்ஸ்

1999-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் தேதி [illegible] (வயது 58) [illegible] (வயது 9) மற்றும் [illegible] (வயது 7) [illegible] (வயது 13) [illegible]

[illegible] (Brisbane) [illegible] 1965-ம் ஆண்டு [illegible] (Rairangpur) [illegible] Evangelical Missionary Society [illegible] 30 [illegible]

[illegible] Evangelical Missionary Society [illegible] 1895ல் [illegible] (Mayurbhanj Leper Asylum) [illegible] (Mayurbhanj Leper Home) [illegible] 1907 [illegible]

[illegible] 1965 [illegible] 14 [illegible]

[illegible] 100 [illegible]

[illegible] (Bajrangdal) [illegible] BJP [illegible] 50 [illegible]

[illegible]

"தேவனைத் தேடு"
"SEEK GOD"

Regd. No. 040068/84
Postal Regd. No. MH BY NE-94/99
Tamil Monthly Magazine

[illegible]

[illegible]

[illegible]

Form IV
(See Rule 8)

1.	Place of Publication	: Bombay
2.	Periodicity of its	Monthly
3.	Printer's Name	Chief Pastor. N. LAZAR
	Whether citizen of India?	YES
	(If foreigner, state the country of origin)	
	Address	Church Lane, Tilak Nagar, Darga Road, Bhandup, Mumbai-400 078.
4.	Publisher's Name	Chief Pastor N. LAZAR
	(Whether citizen of India ?)	YES
	(If foreigner, state the country of origin)	
	Address	Darga Road, Bhandup, Mumbai-400 078.
5.	Editor's Name	Chief Pastor N. LAZAR
	Whether citizen of India?	YES
	(If foreigner, state the country of origin)	
	Address	Church Lane, Tilak Nagar, Darga Road, Bhandup, Mumbai-400 078.
6.	Names and address of individuals who own the newspaper and partners or shareholder holding more than one percent of the total capital	New Jerusalem Church, Church Lane, Tilak Nagar, Darga Road, Bhandup, Mumbai-400 078.

I Chief Pastor N. LAZAR hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Sd.
Chief Pastor N. Lazar
Editor/Printer/Publisher

Dated : 11.2.99

அறிவிப்புகள்

[illegible]
5 (ஏப்ரல்) [illegible] 1999
31 ([illegible]) [illegible] 1999
[illegible]
[illegible] Rs. 30.00
[illegible] Rs. 400. 00

[illegible]
CHIEF APOSTLE N. LAZAR
"NEW JERUSALEM CHURCH"
CHURCH LANE, TILAK ROAD,
DARGA CROSS ROAD, SONAPUR,
BHANDUP, MUMBAI - 400 078. (INDIA).

[illegible] ([illegible])

[illegible]

"புதிய எருசலேம் செய்தி" பத்திரிகை [illegible] 30 ([illegible]) [illegible] (CAPITAL LETTER) [illegible]

Edited and Published by : Chief Apostle N. LAZAR, New Jerusalem Church, Church Lane, Tilak Nagar, Darga Cross Road, Sonapur, Bhandup, Mumbai - 400 078.
Printed at : NEW JERUSALEM PRESS, Tilak Nagar, Bhandup, Mumbai - 400 078.

புதிய எருசலேம் செய்தி

PUDHIYA YERUSALEM CHEIDHI

மலர் 17 : இதழ் : மே '99



வீட்டெஜமான் (இயேசு கிறிஸ்து) சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவா(ர்)ன் என்று நீங்கள் அறியீர்கள் விழித்திருங்கள் உங்களுக்கு சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன் விழித்திருங்கள் மாற்கு 13 35–37

பத்திரிக்கையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒரு மனப்பட்டு கிறிஸ்துவுக்கேற்பான பூரண வளர்ச்சியடையும் படியாகவும் தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும், சபையானது வஞ்சகப் போதனைகளுக்குத் தப்பி ஒரே சீராய் பூரண வளர்ச்சியடையும் படியாகவும் இப்பத்திரிகை வெளியிடப்படுகிறது. (எபே. 4:11-16)

புதிய எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தரிசனமாகி "உயிரோடெழுந்தவர், இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் 7 (அப 1:1-3)" எனக்கு காண்பித்த வைபவித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள்

1 உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் மத் 28:16; மாற்கு 16:15

2 விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்களை பிதா, குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தில் ஞானஸ்நானப்படுத்துங்கள் - மத் 28:19 (இயேசு மாதிரி (Through Action) செய்து காண்பித்தார்.

3 திருச்சபையைக் கட்டி (மத் 16:18) நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு [illegible] உபதேசியுங்கள் - மத் 28:20

4 அவர்களுடைய பாவங்களை [illegible] யோவான் 20:23

5 ஆடுகளை மேய்த்து ஆளுகை [illegible] யோவான் 21:15-17

6 இவைகளை நடப்பிக்க சத்தி [illegible] பெற்றுக்கொண்டு (அப்-1:5-8)

7 நான் வருகிற வரையிலும் என்னை நினைவுகூரும்படி திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார் -1 கொரி 11:23-26.

நான் ஆண்டவரே, சில அஸ்திபார உபதேசங்கள் இரண்டு (2) என்கிறார்கள் வேறு சிலர் ஏழு (7) என்கிறார்களே அதெப்படி? என்றேன்.

இயேசுவானவர் பிரதியுத்தரமாக இல்லை, அஸ்திபார உபதேசங்கள் ஏழு ஆகும். (நீதி. 9:1-6). இது ஆதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளும் அதிகாரங்களுமாகும். இவைகளை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப் 1:1, 10:40-43).

இதழின் உள்ளே......

ஆசிரியர் உரை



கல்லையும், மண்ணையும் கதி தரும் கடவுள் என்று கண்ணில்லாதோர் கும்பிடும் இந்நாட்களில் நாம் இருக்கிறோம். கண்டதையும் தெய்வம் என்று கும்பிடாமல் மெய்தேவனை, ஜீவனுள்ள தேவனை, சிருஷ்டிகராகிய தேவனை தொழுது கொள்ளும் சிலாக்கியம் நாம் பெற்றுள்ளோம். எல்லாவற்றிலும் அன்புகூற வேண்டும் என்று சொல்லி மரத்தையும் மாட்டையும் கட்டித்தழுவி மனிதனை வெறுக்கும். எதுக்கும் தீர்வளவாக எண்ணும் எண்ணம், ஏன்? தன் பிழைப்பு பாதிக்கபட்டுபோகுமோ என்று மனிதனைக் கொலை செய்யும் மதவெறியர் கொள்கைகளுக்கு விலகி, கடவுளாம் இயேசுவை அவர்தம் பிதாவை தொழுது கொள்ளும் சிலாக்கியம் பெற்று நாம் பெரும் பாக்கியம் பெற்றவர்களாகும். நமக்கு ஒரு இரட்சகர் இருக்கிறார். அவர் உயிருடன் இருக்கிறார். "மரித்தேன் ஆனாலும் சதாகாலமும் உயிரோடிருக்கிறேன்" என்று சொன்ன இயேசுவின் உயிர்த்தெழுதலை பண்டிகையாக கொண்டாடி மகிழ்ந்தோம். அப்படியே அவரோடு அனுபவரீதத ஆவியானவரின் பண்டிகையையும் கொண்டாடி மகிழுகிற நாம் உயிர்த்தெழுந்த கர்த்தரின் பிரசன்னத்தினால் நிரம்பி வாழ்விலும், சாவிலும் சாதனைப் படைப்போமாக. ஏன் சாவுபிந்தி போகுமேயானால் அவர் திரும்ப வரப்போகிறார். அவருடைய நேரடி பிரசன்னத்தைக் காண தயார் ஆவோமாக.

கிறிஸ்துவுக்குள்,

Chief Apostle N. LAZAR

கிறிஸ்தியல்

(தொடர்ச்சி)

நாசரேத்து இயேசு இவர் யார் ?

நாசரேத்து இயேசுவின் வாழ்க்கை முழுவதையும் மனிதர் ஒருவருக்குரிய இயல்புகளையும், குழந்தையும், வேலையினையும் உடைத்தான விளக்கிற்று என கூறலாம். அவரின் வாழ்க்கை ஒரு இரகசியம் என கூறினாலும் மிகையாகாது. ஆம் இந்த இரகசியம் பெரியது ஏனெனில் அவர் வாழ்க்கையின் இரு தன்மைகள் தனித்தும், சேர்ந்தும், ஒன்றுபட்டும், ஒன்று படாமலும் ஒன்று மற்றதன் பூரணமும், மற்றது ஒன்றின் அடிப்படையாக விளங்கிற்று. கல்வாரி கல்லறையிலே ஒரு குமாரனைப் பெற்றார் என்ற ஒரே குறியீட்டிலேயே இரு தன்மையின் ஒன்றிப்பும், ஒரே தன்மையின் இரட்டிப்பும் விளங்குவதைக் காணலாம். "நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜெனிப்பித்தேன்" என்ற வாக்கியத்தில் கடவுள் தன்மையும் மனித தன்மையும் கலந்திருப்பதைக் காணக்கூடியதாகவே ஆக்கியோன் எழுதினார். இக்காரணம் நாசரேத் இயேசுவின் பிறப்பை வசித்த காலத்தோடு இணைத்திருப்பதையும் தூய மேரியாள் வார்த்தை ஊடுருவின் மூலம் கடவுளோடு இணைந்திருப்பதையும் முதற்படியிலேயே நாம் பார்க்கிறோம் அதன் பலனாக எழுகிறது கேள்வி

இவர் யார் ?

நாசரேத் ஊர் இயேசுவின் வாழ்க்கையைப் படிக்கும் போது இவர் ஒரு யூதர், பூரண மனிதன். பெற்றோருக்குப் பணிந்து வாழ்ந்தார் ஞானத்திலும், வளர்ச்சியிலும், தேவ கிருபையிலும் வளர்ந்தார் (லூக் 2 40 52 எபி 5 7-9) பசி, தாகம், களைப்பு மற்றும் மனிதனின் தேவைகளெல்லாம் அவருக்கு உண்டு (மத் 4 2 மத் 4 38 யோ 4 6 7) மனித உணர்ச்சி, கோபம் விசனம், துக்கம், அனுதாபம் முதலியவை உண்டு (மாற் 3 5 6 6 லூக் 7 9 யோ11 33) செபமுறையுடனான ஜெபித்தார் பிதாவினிடமே விசுவாசம் கொண்டார் (மாற் 35.14 33 லூக் 9 26 யோ 11 41-42). சோதிக்கப்பட்டு பாடுகளை அனுபவித்தார் (மத்14 23 மத்4 1 லூக்12 50 எபி2 18). யூதமுறைப்படிச் சடங்குகளை முடித்தவராய் ஞானஸ்நானம் பெற்றார் (மத் 3 15 மாற் 1 21 லூக் 2 42-49) மனிதனைப் போல் அறியாமையுள்ளவர் போல் கேட்டு தெரிந்து கொண்டார் (மாற் 9 21 11 13 யோ 11 34). பூரண மனிதனாக உண்மையான மனிதனாக வாழ்ந்தார்; இவர் யார் ? இத்தகையவரின் சொல்லப்பட்ட நாசரேத் ஊர் இயேசுவைப் பற்றி மத்தேயுவின் முதலில் குறிப்பு என்ன? இவர் தேவனுடைய குமாரன். பிசாசுகளும் ஆரம்பத்தில் இவர் தேவனுடைய குமாரன் "நீர் தேவனுடைய குமாரனேயானால்" என சோதனை விடுத்தனர் (மத் 4 3). இயேசுவே தேவனுடைய குமாரனே என பேய்களும் கூட்டம் கூக்குரலிட்டன (மத் 8 29 லூக் 8 28) படகில் உள்ளவர்கள் நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லிப் பணிந்து கொண்டனர் (மத் 14 33) நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று பேதுரு அறிக்கை செய்தார் (மத் 16 14) இயேசுவினுடைய சத்துருக்கள் கூட "நீ தேவனுடைய குமாரனானால்" என்று நிந்தித்தார்கள் (மத் 27 40-43) உயிர்த்தெழுதலின் மூலம் பலமாய் நிரூபிக்கப்பட்ட தேவகுமாரனென அடையாளம் காட்டினார் (ரோ1 4) தேவகுமாரன் என யோவான் ஸ்நானன் சாட்சி கொடுத்தார் (யோ 1 34) இவ்வாறு சுவிசேஷங்களிலும் நிருபங்களிலும் ஏனைய புதிய ஏற்பாட்டு பகுதிகளிலும் நாசரேத் ஊர் இயேசு தேவனுடைய குமாரன் என விவரிக்கப்பட்டிருப்பதை பார்க்கக் கூடும் இவ்வாறு கூறப்பட்ட இவர் யார் ?

இரண்டாயிரம் ஆண்டுகளில் பேசப்பட்ட சத்திய அருமையுள்ள ஆண்டவர் ?

தங்களைப்பற்றி கூறிய குறிப்புகள் மிக முக்கியமானவைகள். ஒரு சில வசனங்கள் இங்கு குறிப்பிடுவது அவசியம்.

வார்த்தை மாம்சமானார் : (யோவா:1:14).

தேவனை ஒருவரும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் (யோவா 1 18) இவரே தேவனுடைய குமாரன் (யோவா 1 34) பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து சகலத்தையும் அவர் கையில் ஒப்புக் கொடுத்திருக்கிறார். குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான் (யோவா 3:35-36) ஜீவ அப்பம் நானே (யோவா 6 35,48). பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னை தனியே இருக்க விடவில்லை (யோவா 8 29) நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன் (யோவா 8 42) என்னிடத்தில் பாவம் உண்டென்று யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும் (யோவா 8 46) ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் (யோவா 8 58) நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் (யோவா 10 30) நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் (யோவா 11·25) நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன் (யோவா 12 32) ஆண்டவரும் போதகருமாயிருக்கிற நானே (யோவா 13:14) நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோவா 14 6) நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள் (யோவா 14 11) பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன் (யோவா 14:31). நான் மெய்யான திராட்சச்செடி (யோவா 15·1). என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக் கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் (யோவா 16 24) ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் (யோவா 17·3) நாம் ஒன்றாய் இருக்கிறது போல (யோவா 17 22) நீதியுள்ள பிதாவே (யோவா 17 25) நீர் சொல்லுகிறபடி நான் இராஜாதான் (யோவா 18:37), என் ஆண்டவரே, என் தேவனே (யோவா 20 28) அவர் கர்த்தர் என்றான் (யோவா 21:7) ஆண்டவரே உமக்கு தெரியுமே (யோவா 21 16) நான் வருமளவும் (யோவா 21 22) இப்பொழுது [illegible] [illegible] [illegible] என்ன? என்பதே.

இக்கேள்விக்கு விடை கண்டுபிடிப்பது புதிய ஏற்பாட்டு [illegible] [illegible] [illegible] இயேசு [illegible] [illegible] இயேசுவை [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] பெற்றார் [illegible]

[illegible] கடவுளை [illegible] பெற்றார். புதிய ஏற்பாட்டுப் பகுதியில் 'மேசியா' என்ற [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] மேசியா [illegible] [illegible] [illegible] [illegible] (யோவா 1 41). [illegible] [illegible] இயேசு [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] இயேசு [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] புதிய ஏற்பாட்டு [illegible] நாசரேத் [illegible] இயேசுவின் [illegible] நாசரேத் [illegible] இயேசு [illegible] இயேசு [illegible]

பூரண மனுஷத்துவமும் பூரண தேவத்துவமும் சுவலித்திருப்பும், எவ்வித வேறுபாடும் (Division) இல்லாமல் கலப்பற்றவிதமாக அன்றி, இரண்டு என்று வகைப்படுத்தப் படாமல், சுற்றுத்தாழ்வு என்று பிரிக்கப்படாமல் வெவ்வேறு மூலப்பொருள் (Material) உடைத்தென கொள்ளப்படாமல் இயக்கும் தனித்தனி ஆள்போல் அமைந்து ஆள்தன்மை (Person) உடைத்தென கொள்ளாமல் நாசரேத் ஊர் இயேசுவில் ஒரே கடவுளையே அனுபவித்து அறிந்து கொண்டனர். பழைய ஏற்பாட்டில் அவர்கள் அறிந்து அனுபவித்த ஏக கடவுளுக்கும் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்ட இயேசு கிறிஸ்துவுக்கும் வித்தியாசம் இல்லை. அது பற்றி தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவா3 16) என்று யோவான் சுவிசேஷகர் துணிந்து கூறுகிறார். கிறிஸ்துவில் பழைய ஏற்பாட்டுக் கடவுளின் அத்தனை மனிதனோடு சம்பந்தப்படுத்தி அவரில் வெளிப்பாட்டின் மூலம் அந்த கடவுளுக்கும் மனிதருக்கும் உள்ள தொடர்பு விளக்கப்பட்டது. தேவனை ஒருவரும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் (யோவா 1 18) ஒருவராய் சாவாமையுள்ளவரும், சேரக் கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும் மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும் காணப்படாதவருமாய் இருக்கிறவருமாகிய கடவுளைக் கிறிஸ்துவில் கண்டு கொண்டனர் ஆனபடியால் அவரை ஆண்டவரென ஒப்புக்கொள்ள தயங்கவில்லை. பிதாவின் சித்தத்தையும் அவரின் குணத்தையும் கிறிஸ்து இயேசுவிலே கண்டு கொண்டனர் இயேசுவானவர் செய்த கிரியைகளில் பிதாவின் கிரியைகளை கண்டு கொண்டனர். பிதா வேறு குமாரன் வேறு அல்ல, என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்.

கடவுள் சத்தியமுள்ளவர் என்ற கேள்விக்கு எத்தனை விடைகள். இடையறாமல் உள்ளவரோ அத்தனையும் இயேசு கிறிஸ்துவில் கண்டு கொண்டனர் கடவுளின் அன்பு (1யோவா 4 8 ரோம 5 8) புத்துயிர் (யோவா 3 3-6 ரோம 6 9-11 தீத்து 3 4-7) உள்ளத்தில் உருவாகும் உலகத்தில் வேலை கொள்ளுதல் (1யோவா 3 24 1கொரி 3 16, ரோம 2 19-22 எபே 1 22, கொலோ 1-18), பக்தி வைராக்கியம் (எபே 1 5 1யோவா3 1 யோவா1 12 கலா 4 6-7) இவற்றின் மூலம் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையிலும் ஒரே கடவுளின் வாழ்க்கையைக் கண்டு கொண்டனர் ஆகையினால் அவரைச் சத்தியம் என அறிக்கை செய்தார் (யோவா 21 7) தோமா கண்ட பின்பு முதலாய் என் ஆண்டவரே என் தேவனே, என்றார் (யோவா 20 28) ஒரே அந்த கடவுளின் செயலாக மக்களில் கிறிஸ்துவின் ஆள்த்துவத்தின் மூலம் பிரதிபலித்தது (The Action of the one transcendal God extended His Personality among men in two forms in his word or his son and in his holy sprit) இவ்வித அனுபவ வாழ்க்கையே இயேசுவை மெய்யான கடவுள் என ஒப்புக்கொள்ள அதனால் எதும் ஏற்படவில்லை அவருடைய வருகையும், தெய்வீகமும் வேறு பிரச்சனை எதையும் எழுப்பவில்லை. பிரச்சனைகள் யாவும் சீஷர்களின் சிந்திய காலத்தில் குறியவைகளே இப்பகுதி ஆரம்பத்திலும் ஒரு சிறிய சபையில் நாம ஆராய்ச்சி கிறிஸ்துவை உடபேசும் ஆசிரியர்களும் ஆதி புதிய ஏற்பாட்டு மக்களாலும் வரையறுக்கப்பட்டு விட்டது எனக் கூற முடியாது கிறிஸ்தவ அனுபவம் படிப்படியாக வளருகிறது சீஷர்கள் அவர்மேல் நம்பிக்கை வைத்தார்கள் அவர்கள் யூதர்களாலும் அறிவாலும் ஒரு ச

சித்தாந்தத்தை உண்டாக்கத் துணியவில்லை ஆனால் இயேசுவின் வாழ்க்கை முழுவதையும் படித்து அனுபவிக்க, அனுபவிக்க அடிப்படை புதிய சரித்திரம் ஆழ்ந்து விசாலமடைந்து அனுபவமும் விசாலமுமே இப்பெரிய அறிவூட்டுதலைக் கொண்டு வரும். நிறைவேறின போது கர்த்தரிடத்தில் பிறந்தவரும் நியாயப் பிரமாணத்திற்கு கீழானவருமாகிய நம்முடைய குமாரனை தேவன் அனுப்பிய பெரிய செயலில் அதை மனுஷரானவரே, குமாரனும் அனுப்பப்பட்டவரே என்ற பெரிய உண்மையை புதிய ஏற்பாடு மக்கள் உணர்ந்து கொண்டனர் என்பதாம்.

(தொடரும்)

ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் (யோ. 17:3).

மார்டின் லூத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

அதி. 38 விந்தன்பர்க்கில் ஏற்பட்ட போதக ஒற்றுமை.

மார்ட்டின் சம்பாஷணையின் திரு இராப்போஜனத்தில் கிறிஸ்துவின் சரீரம் மெய்யாய் பிரசன்னமாயிருக்கிறதில்லை என்று மறுத்தவர்களில் ஒருவரும் ஸ்திராஸ்புர்க் சேர்ந்த சபைகளின் பிரதிநிதியுமாகிய பூசர் சாஸ்திரி, லூத்தர் கோபுர்க்கோட்டையில் இருந்த காலத்தில் 1530-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 25-ம் தேதி வந்து அவரைச் சந்தித்து சம்பாஷித்தார். இந்த சம்பாஷணையில் இருவரும் தங்கள் அபிப்பிராயங்களை தாராளமாய் வெளியிட்டுச் சொல்லிக் கொண்டார்கள். லூத்தர் இதை ஒரு சாமோபாய பேச்சென்று சந்தேகித்தார் என்றாலும் உண்மையாய் ஒரு ஒற்றுமைக்கு வருவதற்கு, எவ்வளவுக்கும் இடம் கொடுக்கத் தமக்கு மனம் உண்டென்று அறிவித்தார். இந்த சம்பாஷணையைப் பற்றிய பூசர் சாஸ்திரியார் சொல்லுகிறதாவது, "லூத்தர் மெய்யாய்த் தேவனுக்கு பயந்து அவருடைய மகிமையையே நாடுகிறவரென்று அறிந்து கொண்டேன்" என்பதே. மற்றும் இதுபற்றிச் சொல்லுகிறதாவது, "ஸ்திராஸ் புர்க் சேர்ந்த சாஸ்திரிகள் தம்மோடு ஒப்புரவாகுவார்கள் என்கிற நம்பிக்கை எனக்குண்டு" என்பதே. பூசர் சாஸ்திரி, போதக விஷயங்களில் லூத்தரோடு மெய்யாய் ஒப்புரவான பிறகு தம்மைச் சேர்ந்தவர்களுக்கும் தம் முன்மாதிரியைப் பின்பற்றும் படியவர்களை வசப்படுத்தி இழுக்கப் பேச்சினாலும், எழுத்தினாலும் விடா முயற்சியாயும் சோர்வடையாமலும் உழைத்தார். ஜூரிக்பட்டணத்தாரும் மற்றவர் சுவிஸ் தேசத்தாரும் ஒப்புரவாக மாட்டோம் என்றனர். காசெல் பட்டணத்தில் நடந்த கான்பரன்சில் [illegible] கொண்டுவரப்பட்ட [illegible] ஒப்பந்தத்திற்குப் பிறகு இத்தான் 1534-ம் வருஷம் டிசம்பர் மாதம் 27ம் தேதி லூத்தருடைய சம்மதத்தின் பேரில் மெலாங்தன் சாஸ்திரியாரும் பூசர் சாஸ்திரியாரும் சந்தித்து சம்பாஷிக்கும் படியாய் பிறகு ஓர் ஏற்பாடு செய்தார். இந்த நம்பிக்கையின் விஷயங்களைத் தீர ஆலோசித்து திட்டமாயும் தீர்க்கமாயும் எல்லாக் கருமமும் சந்தோஷமாய் நடக்கும் என்றதை, அப்பத்திலே கிறிஸ்துவின் சரீரம் மெய்யாய்ப் பிரசன்னமாயிருக்கிறதென்றும், ஆனால் அது சேர்ந்து சரீரத்துக்கு ஆகாரமாகச் சாப்பிடுகிறதில்லை என்றும் எழுதி அனுப்பினார் லூத்தர். பூசர் சாஸ்திரியாருடைய

[illegible] 1535-ம் [illegible] "[illegible]" [illegible]

1536-ம் [illegible] 14ம் தேதி [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] 10,15 [illegible]

[illegible] 29ம் தேதி [illegible]

"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலை யாக்கும்". (யோ. 8:32)

பரிசுத்த ஆவியானவர்

பரிசுத்த ஆவியானவர் The Holy Ghost Holy Spirit (இஸ்பிரீத்து சாந்துவானவர்) திரியேகத்துவத்தின் மூன்றாம் ஆள்.

வேதாகமத்தை வாசிக்கிறவர்கள் விசேஷமாக புதிய ஏற்பாட்டை வாசிக்கிறவர்கள், பிதா குமாரனோடு பரிசுத்த ஆவியானவர் என்ற சொற்றொடரைக் குறித்தும் வாசிப்பர். பழைய ஏற்பாட்டு மக்கள் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி அதிகம் அறிந்திருக்க முடியாது. புதிய ஏற்பாட்டு மக்கள் பிதாவாகிய தேவனோடு குமாரனாகிய தேவனையும் கண்டு கொண்டனர். பெந்தெகொஸ்தே நாட்களுக்குப்பின் நம்மோடு கூட எப்பொழுதும் தங்கி கிரியை செய்கிற, பேசுகிற, நடத்துகிற வல்லமை அருளுகிற பெலத்த ஒருவரைக் கண்டனர். குமாரனாகிய தேவன் மனிதருக்காக அவதாரமாக இப்பூவுலகிற்கு வந்து மரித்தடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்து பரலோகத் திருப் பேசுவயே பரிசுத்த ஆவியானவர் நமக்கென மேலே இருந்து வந்து நம்முள்ளும் நம்மோடும் இருப்பதை கண்டோம். இயேசு தம் சீஷர்களுடன் கூடவே நாட்களில் நான் பிதாவினிடத்திற்குப் போகிறேன் நான் பிதாவை வேண்டிக்கொள்வேன் அவர் என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் தந்தருளுவார் (யோவா 14 12,16) நான், போகாதிருந்தால் அவரை உங்களிடத்தில் அனுப்புவேன் (யோவா 16 7) என்று சொன்னார். தேற்றரவாளன் என்பதற்கு கிரேக்க வார்த்தை "பாராக்லீட்டாஸ்" என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளது அதன் பொருள் எப்பொழுதும் கூட இருக்கும் பக்கத்துணை ஒருவர்' என்பதாம். தேவனைப் பற்றி சொல்லப்பட்டுள்ளவை இவ்வளவுதான் பழைய புதிய ஏற்பாடுகளில் சொல்லப்பட்டுள்ளவை அப்படியே பொருந்துமல்ல. உடன் நின்று பேசச் சொல்லக் ஆள்தன்மையுடைய ஒருவராக வெளிப்படுத்தப்பட்டுள்ளார் ஆம் அவர் ஆள்தத்துவமுடையவரே. அவர் தேவனே. என்னைப் போன்ற தேற்றரவாளன் என்று இயேசு சொன்னார். குமாரன் தேவன், பரிசுத்த ஆவியானவரும் தேவன். பிதாவோடும், குமாரனோடும் பரிசுத்த ஆவியானவர் சமநிலையில் இருக்கிறார். ஒரே தேவனில் மூன்று ஆள்தத்துவங்கள் வெவ்வேறாகவும், இணைந்தும் ஏகமாய் ஒரே தேவனாக இருக்கிறார் சித்தத்தில், கிரியையில், ஒருமித்த உறவில், ஒருவருக்கொருவர் பகிர்ந்து பேசுதல், ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளுதல், அங்கீகரித்தல் ஆகிய அரும் பெரும் பண்புகளோடு ஒருங்கிணைந்த மூவர் தேவன் விளங்குகிறார்.

தேவன் என்கிற போது பிதாவைப் பெரும் பகுதியினர் அறிவார்கள், அவர் அனுப்பியவராகிய குமாரனையுமே ஏற்று தொழுது கொள்ளுதல் அல்லாமல் மற்ற பரிசுத்த ஆவியானவராகிய தேவனைத் நாம் தொழுது விசேஷித்த வேண்டும். பெந்தெகொஸ்தேநாளை பரிசுத்த ஆவியானவருக்கு பண்டிகையாக ஏற்படுத்தி அவரைத் தொழுது கொண்டு மகிமை ஏற்படுத்துவோமாக பரிசுத்த ஆவியானவரைப் பற்றி விளக்கமாக மேலும் காணுவோம்

"ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்". (அப் 1·5)

வேதபாடம்

[illegible] (நீதி : 6.1-9.57)

1 [illegible] (நீதி 6.1-40) [illegible] 40 [illegible] (நீதி 6.1-6) [illegible] (6.7-10)

[illegible] (6.11-24) [illegible] (6.25-32) [illegible]

[illegible] (6.33-40) [illegible] (6.34) [illegible]

யுத்தம் (நீதி 7.1-25)

[illegible] (7.1-3) [illegible] 300 [illegible] (7.4-8) [illegible] (7.15-25) [illegible]

3) யுத்தத்தின் விளைவு (நியா 8:1-35)

வெற்றி சிறந்தபின் எப்பிராயீமியரின் எதிர்ப்பை முதலாவதாகப் பார்க்கிறோம் (நியா 8:1-3). சுக்கோத் பெனூவேல் ஊரார் கிதியோனியரின் படைக்கு ஆகாரங்கொடுக்க மறுத்தனர் (நியா 8:4-17) விவரங்கள், இஸ்ரவேல் கோத்திரங்களுக்குள்ளிருந்த பிரிவினைகளையும் தங்களைக் குறித்து மட்டுமிருந்த அக்கறையையும் வெளிப்படுத்துகின்றன. மீதியானியரின் இராஜாக்களைக் கொன்று தன் சகோதரர் மேல் வைத்த பாசத்தை கிதியோன் உறுதிபடுத்தினார் (நியா 8:18-21)

இராஜ்யபதவியை கிதியோன் ஏற்க மறுத்ததினால் தேவன் மேலுள்ள உத்தம பக்தியை வெளிப்படுத்தினார் (நியா 8:22-23). ஆனால் பிறகு ஆசாரியனுடைய பதவியை வகிக்கும்பொருட்டு தன் ஊரில் ஒரு ஆசாரிப்புக்குரிய ஏபோத் ஆக்கிரமிப்பாக வைப்பதற்கு இடங்கொடுத்தார். அவர் இட்டம் குமாம் மதிப்பான ஏபோத்து ஆசாரியனாகத் தரித்துக் கொண்டிருந்தபடி அவன் தேவ ஊழிய உரிமை அதிகாரம் பெற்றான் என்பதற்கு அறிகுறியாய் இருக்கிறது. இதனால் கிதியோன் தவறு செய்தார் (நியா 8:27)

4) நியா (9:1-57) அபிமெலேக்கு

கிதியோனின் அடிமை குமாரன் அபிமெலேக்கும் ஒருவன். அவனுடைய தாயார் சீகேம் ஊரார். சீகேம் மனுஷரோடே அபிமெலேக்கு சேர்ந்து எழுபதுபேராகிய தன் சகோதரரைக் கொன்று இஸ்ரவேல் மேல் ஆளுகையைப் பிடித்துக் கொண்டான் (நியா 9:1-6). தேவபக்தியுள்ள மனிதரின் பிள்ளைகள் தவறாக உத்தமராய் இருப்பதில்லை. ஒலிவமரமும் அத்திமரமும் திராட்சச்செடியும் ராஜாவாக இருக்க மறுத்து முட்செடியைத் தங்கள் ராஜாவாகத் தெரிந்து கொண்ட இஸ்ரவேலரைக் குறித்து யோதாம் சொன்ன உவமையை அபிமெலேக்கு கேட்டபோது கெரிசீம் மலையிலிருந்து உரைத்தார் (நியா 9:7-21). மூன்று வருஷம் ஆளுகைக்குப்பின் அபிமெலேக்கும் சீகேம் ஊராருக்கும் பகை மூண்டது (நியா 9:22-29). அந்த ஊராருக்கு விரோதமாக கலகம் செய்து அப்பட்டணத்தை அபிமெலேக்கு அழித்தான் (நியா 9:30-49). ஆனால் அடுத்த பட்டணம் தாக்குகையில் அபிமெலேக்கு இறந்து போனதைப் பார்க்கிறோம் (நியா 9:50-55). சிலகாலம் நாமறிந்தாலும் ஒரு போதும் நமக்கு நிம்மதி வரும் தேவனுடைய பழிவாங்குதலுக்கு அபிமெலேக்கின் வரலாறு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது (ரோ 1:18). ஆம் அக்கிரமங்களின் மூலம் நடக்கிறவர்களுடைய முடிவை உத்தமமானவர் தேவன் உண்டாக்கினார்.

அக்கிரமங்கள், அநியாயங்கள் அதிகமாய் செய்தால் தேவ தண்டனை வரும். அது எதிர்பாராத விதமாய் நிகழும் என்பதற்கு அபிமெலேக்கின் சரித்திரம் சாட்சி ஆகும்.

"துன்மார்க்கரோ பூமியிலிருந்து அறுப்புண்டு போவார்கள்; துரோகிகள் அதில் இராதபடி நிர்மூலமாவார்கள்" (நீதி 2:22)

ஞானஸ்நானம்

14.2.99 அன்று புதிய புதிய ஏற்பாட்டு சபை ([illegible]) வளாகத்தில் 6 பேர் ஞானஸ்நானம் பெற்று திருச்சபையின் அங்கமானார்கள்

செழிப்பாய் இருப்பாய்

கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார், நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும் வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய் (ஏசா 58·11) என்று ஏசாயாதீர்க்கதரிசி கூறுகிறார் இது தேவனுடைய திருச்சபையைக் குறித்த ஒரு வெளிப்படுத்தல் ஆகும் தேவனுடைய திருச்சபையை ஒரு தோட்டமாகப் பரிசுத்தவேதாகமம் கூறுகிறது "சேனைகளின் கர்த்தருடைய திராட்சத் தோட்டம் இஸ்ரவேல் வம்சமே, அவருடைய மனமகிழ்ச்சியின் நாற்று யூதாவின் மனுஷரே" (ஏசா 5·7) என்று ஏசாயா கூறுகிறார்

தோட்டம் என்றால் நான்கு பக்கங்களும் வேலியினால் அடைத்து பாதுகாப்பாக இருக்கிற ஓர் இடமாகும் "அக்காலத்திலே யூதா தேசத்திலே பாடப்படும் பாட்டாவது பெலனான நகரம் நமக்கு உண்டு. இரட்சிப்பையே அதற்கு மதிலும் அரணுமாக ஏற்படுத்துவார்" (ஏசா 26 1) என்றும் ஏசாயா கூறுகிறார் இதிலிருந்து தேவனுடைய திருச்சபை என்றால் அது ஒரு பாதுகாப்பான இடம் என்றும், அதற்கு இரட்சிப்பையே மதிலும் அரணுமாக ஏற்படுத்துவார் என்றும், இரட்சிக்கப்பட்ட ஆவிக்குரிய இஸ்ரவேல் வம்சமே அந்த தோட்டம் என்றும், இயேசு கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய யூதாவின் வம்சமே அங்கு நாட்டப்படும் நாற்றுகள் என்றும் (ஏசா 5.7) ஏசாயா கூறுகிறார்

தேவனாகிய கர்த்தர் இந்த பூமியை மிகவும் சேர்த்தியாக சிருஷ்டித்து இந்த பூமியையும் பூமியிலுள்ள சகல சிருஷ்டிகளையும் ஆளுகை செய்யும்படி தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார் (ஆதி 1 26-28) என்று வாசிக்கிறோம் தேவனாகிய கர்த்தர் தம்முடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட மனுஷனை கிழக்கே ஏதேன் என்ற ஒரு தோட்டத்தை உண்டாக்கி தாம் உருவாக்கின மனுஷனை அங்கே வைத்தார் (ஆதி 2·7-8) என்று வாசிக்கிறோம். இப்படியே இரட்சிக்கப் படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் (தோட்டத்தில்) சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார் (அப் 2.47)

மேலும் ஏசாயா கூறும் போது நீ நீர்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும் வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய். (ஏசா 58·11) என்று கூறுகிறார். நீர் பாய்ச்சலான தோட்டம் என்றால் அந்த தோட்டத்திற்கு வாய்க்கால் மூலம் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது என்று பார்க்கிறோம்.

தேவனாகிய கர்த்தர் தம்முடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட ஆதி மனிதனாகிய ஆதாமை ஏதேன் என்கிற தோட்டத்தில் வைத்தார் என்றும் அந்த தோட்டத்துக்கு தண்ணீர் பாயும்படி ஏதேனில் இருந்து ஒரு நதி ஓடி அங்கே இருந்து பிரிந்து நாலு பெரிய ஆறுகளாயிற்று. (ஆதி 2 10) என்று வாசிக்கிறோம். தேவனாகிய கர்த்தர் தம்முடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட மனுஷன் வாசம்செய்யும் தோட்டத்தை செழிப்படைய செய்வதற்கு ஒரு பெரிய நதியை புறப்பட செய்து அதிலிருந்து நான்கு பெரிய ஆறுகள் பிரிந்து ஏதேன் தோட்டத்தை செழிப்படைய செய்தார் என்று காண்கிறோம்.

இது எதை குறிப்பிடுகிறது என்றால் தேவனாகிய கர்த்தர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும் (I கொரி 12 28) பின்னர் தீர்க்க தரிசிகளையும், சுவிசேஷகரையும், மேய்ப்பரையும், போதகரையும் ஏற்படுத்தினார் (எபேசி. 4:13) என்று எழுதியிருக்கிறபடியால் தேவனாகிய கர்த்தர் தம்முடைய சாயலாகிய சபையை (தோட்டத்தை) செழிப்படைய செய்வதற்காக ஐந்து வகையான பெரிய ஊழியங்களை

நிறைந்திருக்கிறார் என்று காண்கிறோம். ஆதியிலுள்ள ஏதேன் தோட்டத்தை செழிப்பாக்குவதற்காக நான்கு பெரிய ஆறுகளை புறப்படச்செய்தது போல் தேவனானவர் சபையிலே முதலாவது ஒரு பிரதான அப்போஸ்தலரை உருவாக்கி அதன் மூலமாய் நான்கு பெரிய ஊழியர்களை உருவாக்கி தம்முடைய சபையை செழிப்படையச் செய்கிறார் என்று காண்கிறோம்.

இப்படியே பழைய ஏற்பாட்டு சபையாகிய இஸ்ரவேல் மக்களை வழி நடத்துவதற்கு தேவனாகிய கர்த்தர் தெரிந்து கொண்ட தம்முடைய தாசனாகிய மோசேயின் மேலிருந்த ஆவியை மூப்பர்களாகிய எழுபது பேர் மேல் வைத்தார், அந்த ஆவி அவர்கள் மேல் தங்கின மாத்திரத்தில் அவர்கள் எல்லாரும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள் (எண் 11:25) என்று எழுதியிருக்கிறது. போலவும் கர்த்தர் மோசேயை நோக்கி ஆவியை பெற்றிருக்கிற மனுஷனாகிய யோசுவா என்னும் நூனின் குமாரனை நீ தெரிந்துகொண்டு அவன் மேல் உன் கையை வைத்து அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி அவர்கள் கண்களுக்கு முன்பாக அவனுக்கு கட்டளை கொடுத்து இஸ்ரவேல் புத்திரராகிய சபையார் எல்லாரும் அவனுக்கு கீழ்ப்படியும்படிக்கு உன் கனத்தில் கொஞ்சம் அவனுக்கு கொடு (எண் 27:18-20) என்று தேவனாகிய கர்த்தர் சொன்னது போலவும் தேவனாகிய கர்த்தர் நமது சீயோனாகிய திருச்சபை என்னும் தோட்டத்தை நீர் பாய்ச்சலான தோட்டமாய் ஆக்குவதற்கு ஏதேனிலிருந்து ஒரு பெரிய நதி ஒரு ஊற்றிலிருந்து நான்கு பெரிய ஆறுகள் புறப்பட்டு ஏதேனை செழிப்பாக்கச் செய்தது போல் தேவனாகிய கர்த்தர் நமது சீயோனாகிய சபையில் முதலாவது தலைமை அப்போஸ்தலரை ஏற்படுத்தி, அவர்கள் மூலமாய் தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர்கள் போதகர்கள் ஆகிய நான்கு பெரிய ஊழியர்களையும் ஏற்படுத்தி திருச்சபையின் தோட்டத்தை செழிப்பாக்கச் செய்கிறார் என்று காண்கிறோம்.

இந்த திருச்சபையாகிய தோட்டத்திற்குள் வருகிறவர்களுடைய ஆத்துமாவும் நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போல் இருக்கும் அவர்கள் இனி தொய்ந்து போவதில்லை (எரேமியா 31:12) என்று தேவனாகிய கர்த்தர் கூறுகிறார்.

மேலும் ஏசாயா கூறும்போது வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய் (ஏசா 58:11) என்றும் கூறுகிறார். சாலொமோன் கூறும்போது என் சகோதரியே! என் மணவாளியே! நீ அடைக்கப்பட்ட தோட்டமும், மறைவு கட்டப்பட்ட நீரூற்றும், முத்திரிக்கப்பட்ட கிணறுமாயிருக்கிறாய் (உன் 4:12) என்று கூறுகிறார். தேவனுடைய திருச்சபை வற்றாத நீரூற்று மட்டுமல்ல. அது மறைவு கட்டப்பட்ட நீரூற்று என்றும் கூறுகிறார். அதாவது வெளியேயிருந்து எந்த விதமான தூசிகள், அழுக்குகளும், (துர்நாற்றங்களும், உப்பு நீருமோ) உள்ளே பிரவேசியாதபடி அது மறைவு கட்டப்பட்ட நீரூற்றாய் இருக்கிறது.

இந்த வற்றாத நீரூற்றைக் குறித்து ஏசாயா சொல்லும் பொழுது இதை இரட்சிப்பின் ஊற்று என்று கூறுகிறார்.

"நீங்கள் இரட்சிப்பின் ஊற்றுகளிலிருந்து மகிழ்ச்சியோடே தண்ணீர் மொண்டு கொள்வீர்கள்" (ஏசா 12:3). இந்த திருச்சபைக்குள் வருகிறவர்கள் யாவரும் இரட்சிக்கப்படுகிறவர்கள் "இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்" (அப் 2:47) என்று காண்கிறோம்.

மேலும் ஏதேன் தோட்டத்திலிருந்து புறப்பட்ட ஆறுகள் வெளியே பாய்ந்து சென்று இந்த ஆறுகள் பாய்கின்ற இடங்களில் பொன்னும் கோமேதக கல்லும் விளைந்தது (ஆதி 2:11,12) என்று

கனிக்கிறோம். பரிசுத்த பவுல் கூறும் போது "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவையல்லாமல் வேறே அஸ்திபாரம் போட ஒருவனாலும் கூடாது. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின் மேல் பொன், வெள்ளி, விலையேறப் பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால் அவனவனுடைய வேலைப்பாடு வெளியரும், நாளானது அதை விளங்கப் பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும் அவனவனுடைய வேலைப் பாடு எத்தன்மையுள்ளது என்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின் மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால் அவன் கூலியை பெறுவான் (I கொரி 3 11-14) என்று கூறுகிறார்

இந்நாட்களில் அநேக கட்டடங்களைக் மரம், புல் வைக்கோல் ஆகியவைகளைக் கட்டப்பட்ட பெரிய கட்டடங்களைக் காணப்படுகிறது. அவைகளில் அக்கினி இறங்கும் பொழுது அதின் முடிவு பரிதாபமாய் இருக்கும். ஆனால் தேவனுடைய தோட்டமாகிய தேவனுடைய சீயோனாகிய புதிய எருசலேம் சபையிலிருந்து புறப்படும் ஆறுகள் (ஊழியர்கள்) போகிற இடங்களிலெல்லாம் பொன், விலையேறப் பெற்றகல் போன்ற ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவோடு ஒரே ஆவியாக சேர்த்துக் கட்டப்பட்டு வருகிறார்கள் (எபே 19 22) அத்தகைய சத்தியத்தை உபதேசிக்கிறோம்

மீண்டும் ஏசாயா சொல்லும் பொழுது "இதோ நான் 'புதிய' காரியத்தைச் செய்கிறேன் இப்பொழுதே அது தோன்றும் நீங்கள் அதை அறியீர்களா? நான் வனாந்தரத்திலே வழியையும், அவாந்தர வெளியிலே ஆறுகளையும் உண்டாக்குவேன். வலுசர்ப்பங்களும், கோட்டான் குஞ்சுகளும் என்னைக் கனம் பண்ணும்" (ஏசா 43 19-20) என்று கூறினார். இது எவைகளைக் குறிப்பிடுகிறது என்றால் தேவனாகிய கர்த்தருடைய தோட்டமாகிய திருச்சபையை செழிப்பான மேய்ச்சலாகிய திருச்சபைக்குள் உருவாக்கிய ஆறுகள் வெளியே வனாந்திரமான இடங்களில் கடந்து போகும்பொழுது. அதாவது திருச்சபையின் ஊழியர்கள் கடந்து செல்லும் இடங்களில் காட்டு மிருகங்கள் அதாவது அறிவில்லாமல் மிருகத்தைப் போல் வாழ்ந்து வந்த மக்களும், வலுசர்ப்பம் போல் பிறரைத் தாக்கி அழிக்கிறவர்களும், கோட்டான் குஞ்சுகள் நிலையில்லாதபடி இங்கும் அங்குமாக இரட்சிப்பைத் தேடி அலைந்து திரிகிறவர்களும் தாகம் தீர்க்கப்பட்டு கர்த்தரை கனம் பண்ணுவார்கள். என்று ஏசாயா கூறுகிறார்

மீண்டும் தேவனாகிய கர்த்தர் யாக்கோபே உன் கூடாரங்களும், இஸ்ரவேலே உன் வாசஸ்தலங்களும் எவ்வளவு அழகானவைகள்! அவைகள் பரவிப் போகிற ஆறுகளைப் போலவும் நதியோரங்களிலுள்ள தோட்டங்களைப் போலவும் கர்த்தர் நாட்டின சந்தன மரங்களைப் போலவும், தண்ணீர் அருகேயுள்ள கேதுரு விருட்சங்களைப் போலவும் இருக்கிறது (எண் 24 5-6) என்று கூறுகிறார்

தோட்டத்துக்குள்ளே வளர்க்கப்படும் மரங்கள் உயர்ந்து கோட்டைச் சுவருக்கு மேலாக வெளியே செழுமையாகத் தெரிய வரும் பொழுது தான் அந்த தோட்டத்தின் சிறப்புகளை வெளியேயுள்ள மக்கள் அறிவார்கள் அதுபோல தேவனுடைய தோட்டமாகிய புதிய எருசலேம் இரட்சிப்பின் மதிலுக்குள்ளாக வளர்ந்து வந்தது. இப்பொழுதோ அதிலுள்ள சந்தன மரங்களும் கேதுரு மரங்களும் உயர்ந்து வளர்ந்து உலகுக்கு தங்களைக் காண்பிக்கும் வேளை வந்து விட்டது

என் சகோதரியே! மணவாட்டியே! நீ அடைக்கப்பட்ட

தோட்டமும் மறைவு கட்டப்பட்ட நீரூற்றும், முத்திரிக்கப்பட்ட கிணறுமாய் இருக்கிறாய். உன் தோட்டம், மாதளஞ் செடிகளும் அருமையான கனிமரங்களும், மருதோன்றிச் செடிகளும் நளதச் செடிகளும், நளதமும், குங்குமமும், வசம்பும், லவங்கமும், சகல விதத் தூபவர்க்க மரங்களும், வெள்ளைப்போளச் செடிகளும் சந்தன விருட்சங்களும் சகலவித சுகந்தவர்க்கச் செடிகளுமுள்ள சிங்கார வனமாயிருக்கிறது. தோட்டங்களுக்கு நீரூற்றும், ஜீவ தண்ணீர்த் துரவும், லீபனோனிலிருந்து ஓடி வரும் வாய்க்கால்களும் உண்டாயிருக்கிறது (உன் 4:12-15) என்று சாலொமோன் ஞானியும் கூறுகிறார். சம்பவிப்பது என்னவென்றால் இந்த நதிபோகும் இடமெங்கும் சஞ்சரிக்கும் ஜீவ பிராணிகள் யாவும் பிழைக்கும். இந்தத் தண்ணீர் அங்கே வந்த படியினால் வெகு ஏராளமான மச்சங்களும் உண்டாயிருக்கும். இந்த நதிபோகுமிடமெங்குமுள்ள யாவும் ஆரோக்கியப்பட்டுப் பிழைக்கும் (எசே 47:9) என்று சேனைகளின் கர்த்தர் கூறுகிறார்.

ஆம் இந்நாட்களில் தேவனுடைய ஜீவனாகிய பரிசுத்தாவியைப் பெற்ற மக்களும் மீண்டும் பாவம் செய்து ஆத்தும மரணத்தை அடைகிறார்கள். எனவே "இந்த நதிபோகும் இடமெங்கும் சஞ்சரிக்கும் ஜீவபிராணிகள் யாவும் பிழைக்கும்" (எசே 47:9) என்று எசேக்கியேல் கூறுவது போல தேவனுடைய திருச்சபையின் வழியாக கடந்து செல்லும் இடங்களிலுள்ள ஜீவபிராணிகள் ஏற்கனவே பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் பாவம் செய்து பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை அடையாதபடி திருச்சபையின் மூலம் கொடுக்கப்படும் பாவமன்னிப்பின் உபதேசத்தினாலே ஆத்தும மரணம் அடையாதபடி பிழைப்பார்கள். "இந்த நதி போகுமிடமெங்குமுள்ள யாவும் ஆரோக்கியப்பட்டுப் பிழைக்கும்" பாவம் செய்து ஆத்துமத்திலே மெலிந்துள்ள யாவரும் பாவமன்னிப்பைப் பெற்று ஆரோக்கியமடைந்து பிழைப்பார்கள்.

ஆகையால் தேவனாகிய கர்த்தர் நமது சரீரமாகிய புதிய எருசலேம் சபையைப் பார்த்து நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும் வற்றாத நீரூற்றைப் போலவும் இருப்பாய் (ஏசா 58:11) என்று கூறுகிறார். கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக.

கர்த்தர் மேல் நம்பிக்கை.... கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீர்களண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத் தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றி தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான்

(எரே : 17:7)

ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது சங் 42:7

தேவன் ஆதியிலே வானத்தையும் பூமியையும் படைத்தார். படைத்து அது நல்லது என்று கண்டார் என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவனுடைய ஆழத்தை, அவரது சிருஷ்டிப்புகளின் அசைவுகள் தேவனுடைய சர்வத்துவம், சர்வவல்லமை (OMNIPOTENT), சர்வ வியாபம் (OMNIPERESENT) சர்வத்தையும் அறியும் தன்மை (OMNICIENT) ஆகிய வல்லமைகளை அவருடைய சிருஷ்டிப்பு முறைகளைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். இவற்றைக் கொண்டு குறித்து இறையியலை அறியலாம்.

சிருஷ்டிப்பின் அழகைக்காண ஆதி ஏதேன் தோட்டத்திற்கு செல்வோமா. பலவகை விதமான பட்சிகளும், செடிகொடிகளும் உள்ள ஏதேன் ஆற்றங்கரையின் அழகைக்

சத்தமா! (ஆதி 2:12) என்றெல்லாம் இராஜ ரீகதுகளின் அருமை [illegible] திராட்சைத் தோட்டத்திலும், எருசேமின் தேவாலயத்திலும், [illegible] பள்ளத்தாக்கில் கீழ்படிதலிலும் [illegible] சிலுவையின் [illegible] இந்த [illegible] அழைக்கும் [illegible], [illegible] (குறுக்கு)களிலும் [illegible] கேட்கின்றது. இறைச்சல் தான் சத்தமா! [illegible] தண்ணீரும் [illegible] மலைகளிலிருந்து பாறைகளைப் பிளந்து கொண்டு ஆழங்களில் பாய்கின்றன.

தண்ணீரின் இறைச்சலின் சத்தத்தை கேட்கும் போது ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது போல் இருக்கிறது. இதையே தாவீது பக்தனும் "உமது மதகுகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது உமது அலைகளும் திரைகளும் எல்லாம் என்மேல் புரண்டு போகிறது" சங் 45 6 என்று பாடுகிறார்.

இப்பொழுதும் இந்த வசனத்தின் உள்ளர்த்தத்திற்கு செல்வோமானால் ஆழமான சத்தியத்தை வாஞ்சிக்கிறவர்களை திருச்சபையில் ஆழம் கூப்பிடுகிறது என்று அர்த்தம் கொள்ளலாம். திருச்சபையின் ஆழம், ஆழமான சத்தியத்தை வாஞ்சிக்கிறவர்கள் மட்டுமே அறிந்து கொள்வார். தேவன் தாம் வாக்குத்தத்தம் பண்ணின [illegible] தெரிந்து கொள்ளவில்லை. அழைக்கப்பட்டவர்கள் அநேகர் தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலரே. தேவன் ஒரு கூட்டத்தை மட்டும் தெரிந்து கொண்டு தம்முடைய இரத்தத்தால் கழுவி சுத்திகரித்து தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக இராஜாக்களும், ஆசாரியர்களுமாக [illegible] தெரிந்து கொள்கிறார் (வெளி 1:6)

தமக்கு முன்பாக அவர்களை அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமற்றவர்களுமாயிருப்பதற்கு அவர்களை உலகத் தோற்றத்துக்கு முன்னே தெரிந்து கொண்டார் (எபேசி 1:4) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இதையே சத்தியமாகிய இயேசு கிறிஸ்துவும் தம்முடைய சுவிசேஷத்தில் "பிதாவாகிய தேவன் ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரான்" என்கிறார். தேவன் இந்த கடைசி காலத்தில் தம்முடைய திருச்சபையாம் புதிய எருசலேமைத் தெரிந்து கொண்டு அதற்கு ஆழமான சத்தியங்களை கொடுத்து விசுவாசிக்கிறவர்களுக்கு ஆழமான அனுபவங்களை கொடுத்து வருகிறார். இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டு ஒன்று, பத்து, நூறாக பலன் கொடுக்கிறவர்கள்.

இதுபோல் ஆழமான ஆழங்களை, [illegible] கர்த்தருடைய ஆவியானவர் அசைவாடுகிறார் (ஆதி 1:2) இந்த ஜனத்தை பாசானிலிருந்து திரும்ப அழைத்து வருவேன் (ஆழமான கட்டு, பாவங்களிலிருந்து மீட்டு) சமுத்திர ஆழங்களிலிருந்தும் திரும்ப அழைத்து வருவேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார் (சங் 68:23) இவைகளை [illegible] கர்த்தருடைய யோசனைகள் மகா ஆழமானவைகள் (சங் 92:5) இதையே பிரசங்கியும் [illegible] மகா ஆழமுமாயிருக்கிறதைக் கண்டுபிடிப்பவன் யார்? என்கிறார் (பிரசங் 7:24). கர்த்தாவே ஆழங்களிலிருந்து உம்மை நோக்கி கூப்பிடுகிறேன் என் போமாக (சங் 130:1) இப்படி ஆழங்களில் நடக்கப்பண்ணின தேவனைத் துதிப்போமாக (ஏசா 63:13)

இவ்விதமான அனுபவங்களை தானியேல் பக்தனும் அனுபவித்தார் என்பதை வாசிக்கிறோம் (தானி 2:22) ஆழமும், இரகசியமான காரியங்கள் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டது அதற்கு அவர்

தந்திரங்களையும் ஆழமான தரிசனங்களை வாசிக்கிறவர்களையும் இருந்தார் உருவான தரிசனங்களின் அர்த்தத்தை அறிய 21 நாள் உபவாசம் இருந்ததாகத் தெரிகிறது (தானி 10 2 3 13) இவ்விதமான கடின பயிற்சி செய்பவர்களுக்கு, உண்மையுள்ளவர்களுக்கு மட்டுமே தேவ இரகசியம் வெளிப்படும் ஆழமான அனுபவங்கள் உண்டாகும்

மோசேயும் கூட ஆழமான ஆவிக்குரியவனை [illegible] கிறிஸ்துவினிமித்தம் ஆழ்ந்த துன்பத்தை அனுபவித்தது அடைந்த பலனின்மேல் நோக்கமாயிருந்து (எபிரெ 11 26) இவ்வாறு செய்ததினால் தான் அதிசயங்களை அடைபட்டவன் அதிசயமான காரியங்களைக் கண்டவன், அதிசயமாக பிரசன்னப்பட்டவன் என்கிறது (எபிரெ 11 23) அதிசயமான பிரசன்னப்படுகிறவர்களுக்கு மட்டுமே உண்மையான காரியங்கள் வெளிப்படும் உன்னத ஆசீர்வாதங்களை அடைவர் ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள் கேட்கிறவனும் வா என்பானாக (வெளி 22 17) சிறியவர்களுக்காக துன்பத்தை அனுபவித்த பக்தர்களின் நீதிய பலனை நோக்கிய பார்வையாக ஆழமான புதிய எருசலேம் திருச்சபையை உற்றுப்பார்த்து அதில் சேர்ந்து கொள்வோமாக

பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்றும் பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும்.
(எபி. 5:14)

தேவனுடைய அதிசயங்களும், அற்புதங்களும் !

என்னுடைய குழந்தை பெயர் ரூபன் ஆபிரகாம் இப்பொழுது இரண்டு வயது ஆகிறது அவன் 2½ மாத குழந்தையாக இருந்த போது திடீரென்று ஒருநாள் காய்ச்சல் ஏற்பட்டது மருத்துவரிடம் குழந்தையை எடுத்துச் சென்றோம் மருத்துவர் சிகிச்சை அளித்த பிறகும் காய்ச்சல் குணமாகவில்லை இந்த காய்ச்சல் 101° முதல் 106° வரை எல்லா நேரமும் வரை இருந்து கொண்டே இருந்தது இதினிமித்தமாக சரியாக ஆகாரம் உட்கொள்ள முடியாமலும் வாந்தி எடுத்துக்கொண்டும் பெலவீனமுமாக அவதிப்பட்டான். குழந்தை காண்பிக்கப்பட்ட மருத்துவர்கள் இரத்த பரிசோதனை சிறுநீர் பரிசோதனை எக்ஸ்ரே ஸ்கேன் போன்ற எல்லா பரிசோதனைகளை செய்து சிகிச்சை அளித்தும் காய்ச்சல் குணமாகவில்லை குழந்தைக்கு ஒரு வயது ஆகியும் இந்த பெலவீனத்தின் நிமித்தமாக ஆறாத குழந்தை மாதிரியே இருந்தான் இதினிமித்தமாக குழந்தையைப் பார்க்கிறவர்கள் இந்த குழந்தை உட்காரமாட்டான் என்றும் நடக்கவே மாட்டான் என்றும், சிலர் நாளடைவில் இந்தக்குழந்தை கைகால்கள் சிறிதாகி குள்ளமாகிவிடுவது போல ஆகிவிடும் என்றும் கூறிக்கொண்டிருந்தார்கள்

திருச்சபையின் (புதிய எருசலேம் சபை) பரிசுத்தவான்கள் குழந்தைக்காக அதிகமாக ஜெபித்தார்கள் நாங்களும் குடும்பமாய் உபவாசித்து ஜெபித்து வந்தோம் கர்த்தர் நம்மே [illegible] எல்லோரும் அதிசயமடையத்தக்கதாய் குழந்தையின் பெலவீனங்கள் யாவையும் மாற்றி குழந்தை உட்காரவும் நிற்கவும் நடக்கவும் பெலன் கொடுத்திருக்கிறார்

மனுஷரால் இது கூடாதது தான் தேவனால் எல்லாம் கூடும் (மத் 19 26) என்ற திருவார்த்தையின்படி உலக வைத்தியர்கள் யாரால் குணப்படுத்த முடியாத பெலவீனத்தை, மேலான பரம வைத்தியராகிய தேவன் நமமே குணப்படுத்தி பெலப்படுத்தினார் அவருடைய நாமத்திற்கே மகிமை உண்டாவதாக ! அல்லேலூயா !!

சகோதரி ரேவதி மோகன்
புதிய எருசலேம் சபை - சென்னை [illegible]

அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலை

என்னுடைய பெயர் பாபுலால் (Babulal) நான் குஜராத் மாநிலத்திலுள்ள கோடியாவில் வசிக்கிறேன். நான் அசுத்த ஆவியின் தாக்குதலிலிருந்து எவ்விதமாக விடுதலை பெற்றேன் என்பதை சுருக்கமாக உங்கள் மத்தியில் சொல்ல விரும்புகிறேன்.

குஜராத்தின் நவராத்திரி உற்சவம் விமரிசையாக கொண்டாடப்படும். நான் ஒரு இந்துவாக இருந்தபடியால் இந்த ஒன்பது நாளும் இரவும், பகலும் இறைபக்தர்களாக பயணித்து வேண்டிக் கொண்டேன். இந்நாட்களில் என்னுடைய மனைவிக்கு சாபங்கள் உண்டாயிற்று. அப்பொழுது நான் செய்த பொருத்தனை நிறைவேற்றப்பட்டு அதை செலுத்துவதற்காக தாகோத் (DAHOD) நகருக்கு சென்றேன். பொருத்தனை நிறைவேற்றும்போது ஒரு அசுத்த ஆவி என்னை ஆட்கொண்டது. ... செய்வதை ... அந்த ஆவி ... உண்டானதால் அதை ... மந்திரவாதியிடம் கொண்டு சென்றோம். அவன் ... என்னை ஒன்பது நாள் ... கட்டி வைத்தான். ஒரு மாற்றமும் உண்டாகாததால் என்னை ... கொண்டு சென்றோம். அங்கும் என்னை ... கட்டி வைத்தான். ... என்னை இரண்டு முறை அடித்தும் ... தெரியவில்லை. அங்கும் ஒரு மாற்றமும் உண்டாகாததால் என்னை திரும்பவும் சொந்த ஊருக்கு கொண்டு வந்தார். வீட்டிலும் இரண்டு மூன்று மந்திரவாதிகளை கூட்டிக்கொண்டு வந்து மந்திரித்த போதிலும் மந்திரிக்கும் சமயம் சில மாற்றம் உண்டாயிற்று; பின்பு பழையபடியும் அந்த ஆவியின் கிரியை ஆரம்பித்தது.

அதற்கடுத்த ... என்னுடைய சித்தி வீட்டிற்கு என்னை கொண்டு வந்தார். அங்குள்ள புதிய எருசலேம் சபையின் புதிய ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு இரண்டு முடிவடைந்ததை கொண்டாட சிறப்பு ஆராதனை நடைபெற்று கொண்டிருந்தது. ... அப்போஸ்தலர் ... அந்த கூட்டத்திற்கு என்னை அழைத்து சென்றார். மாலையில் எழுப்புதல் கூட்டம் நடைபெற்று முடிவில் விசுவாசிகளுக்காக ஜெபிக்கும் போது என்மேலும் தலைவர் அப்போஸ்தலர் [redacted] கைவைத்து ஜெபம் பண்ணினார்கள். அப்போது என்னிலுள்ள அந்த அசுத்த ஆவி போய்விட்டது. நல்ல சுகம் பெற்றேன். அதை தொடர்ந்து சகோதரிகள் நடத்த உபவாச ஜெபத்தில் பங்கு பெற்று அங்கு வரும் பாஸ்டர் M. எருசலேம் ஐயா என்மேல் கையை வைத்து ஜெபிக்கும் போது பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றேன். அதற்கு பின்னர் ... மூன்று மாதமாக வங்கி (Bank) வேலைக்கு செல்லாமல் இருந்த நான் சுகம் பெற்று திரும்பவும் வேலைக்கு செல்கிறேன். ... புதிய எருசலேம் சபையின் ஆராதனைகளில் பங்கு பெற்று வருகிறேன். நான் ஒரு நல்ல கிறிஸ்தவனாக வாழ விரும்புகிறேன். நீங்கள் எனக்காக ஜெபிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

சகோ. பாபுலால்
கோடியா, குஜராத் மாநிலம்

கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு.
(II கொரி. 3:17)

"தேவனைத் தேடு"
"SEEK GOD"

Regd. No. 040085/84
Postal Regd. No. MH BY NE-94/99
Tamil Monthly Magazine

வார்த்தைகளில்லாத வேதம்

வார்த்தைகளில்லாத வேதபுஸ்தகம் எப்படி இருக்கும்? ஒரு சுவிசேஷகர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த ஒரு கைதியை கிறிஸ்துவண்டை வழி நடத்த வேண்டும் என்ற விருப்ப வாஞ்சையோடு ஒரு வேத புத்தகத்தை அவனுக்கு அன்பளிப்பாக கொடுத்தார். அந்த கைதியோ படிப்பறிவில்லாதவன். ஆகையால் வேத வசனங்களை வாசிக்க முடியவில்லை. ஆனால், வேதத்தின் மீதோ அதிக பிரியம் கொண்டான். மறுமுறை சுவிசேஷகர் கைதியை சந்திக்க வந்தபோது அவன் "ஐயா, இதில் எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகளை என்னால் படிக்க முடியவில்லை. ஆனால் இந்த புஸ்தகத்தின் முழு கருத்தையும் அறிய விரும்புகிறேன். ஆகையால் வார்த்தைகள் இல்லாத வேதத்தை எனக்கு தாருங்கள்" என்று கேட்டுக் கொண்டான். அவன் பதில், சுவிசேஷகரை சிந்தனைக்குள்ளாக்கியது. வார்த்தைகளில்லாத வேத புஸ்தகம் ஏது? அவனுக்கு எதை கொடுப்பது? என்ற பலவாறான சிந்தனை ஓடவே அமைதியாக ஜெபித்தார். மறுவாரம் வார்த்தைகளில்லாத ஒரு வேத புத்தகத்தை தயாரித்து எடுத்துக் கொண்டு கைதியை காண சென்றார். அதை அந்த கைதி ஆவலோடு பிரித்தான். நான்கு தாள்கள் மட்டுமே இருந்தது.

முதல் தாள் கறுப்பு : சுவிசேஷகர் சொன்னார் இந்த கறுப்பு பாவத்தை காட்டுகிறது. நாமும், நீயும் பாவம் செய்யும்போது நம் உள்ளம் இப்படித்தான் கறுப்பாகிறது. அப்பொழுது தேவன் துக்கப்படுகிறார்.

இரண்டாம் தாள் சிவப்பு : இந்த சிவப்பு இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை குறிக்கிறது. கிறிஸ்துவின் இரத்தத்தால் மட்டுமே பாவம் [illegible] முடியும்.

மூன்றாவது தாள் வெண்மை : இது [illegible] கிறிஸ்து நமக்கருளும் இரட்சிப்பையும், பரிசுத்தத்தையும் குறிக்கிறது. [illegible] ஆத்துமா வெண்மையாக தூய்மையடையும்.

நான்காவது தாள் பொன் நிறம் : இது [illegible] பரலோக ராஜ்யத்தை குறிக்கிறது என்று அருமையாக விளக்கினார். அந்த வேத [illegible]த்தை கைதி மகிழ்வோடு அணைத்துக் கொண்டான்.

அறிவிப்புகள்

முழு இரவு விழிப்பு ஜெபம்
29 ([illegible]) [illegible] 1999
31 ([illegible]) [illegible] 1999

புதிய எருசலேம் செய்தி பத்திரிகை
ஆண்டு சந்தா Rs. 30.00
வெளிநாடு Rs. 400-00

அனுப்ப வேண்டிய முகவரி :
CHIEF APOSTLE N. LAZAR
"NEW JERUSALEM CHURCH"
CHURCH LANE, TILAK ROAD,
DARGA CROSS ROAD, SONAPUR,
BHANDUP, MUMBAI - 400 078. (INDIA)

மணி ஆர்டர் கூப்பனில் உங்கள் சந்தா (எண்) நம்பரை குறிப்பிடவும். பழைய சந்தாதாரரா அல்லது புதிய சந்தாதாரரா என்பதையும் குறிப்பிடவும்.

பணம் அனுப்புகிறவர்கள் சந்தாவா அல்லது நன்கொடையா என்பதை தெளிவாகக் குறிப்பிடவும்.


"புதிய எருசலேம் செய்தி" பத்திரிகை வேண்டுவோர் ரூ 30 (முப்பது) சந்தா தொகையுடன் தங்கள் விலாசத்தை தெளிவாக கொட்டை எழுத்துக்களில் (CAPITAL LETTER) எழுதி பத்திரிகையை பெற்றுக் கொள்ளும்படி கேட்டு கொள்ளப்படுகிறீர்கள்.

Edited and Published by : Chief Apostle N. LAZAR, New Jerusalem Church, Church Lane, Tilak Nagar, Darga Cross Road, Sonapur, Bhandup, Mumbai - 400 078.
Printed at : NEW JERUSALEM PRESS, Tilak Nagar, Bhandup, Mumbai - 400 078.

புதிய எருசலேம் செய்தி

PUDHIYA YERUSALEM CHEIDHI

[illegible] 17 ; [illegible] '99



வீட்டெஜமான் (இயேசு கிறிஸ்து) சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவா(ர்)ன் என்று நீங்கள் அறியீர்கள் விழித்திருங்கள். உங்களுக்கு சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள்.

மாற்கு 13 , 35-37

EDITOR, CHIEF [illegible]

MUMBAI INDIA

பத்திரிக்கையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமனப்பட்டு கிறிஸ்துவுக்கேற்ப பூரண வளர்ச்சியடையும் படியாகவும் தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும், சபையானது வஞ்சகப் போதனைகளுக்குத் தப்பி ஒரே சீராய் பூரண வளர்ச்சியடையும் படியாகவும் இப்பத்திரிகை வெளியிடப்படுகிறது. (எபே. 4.11-16)

புதிய எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தரிசனமாகி "[illegible], இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்குக் கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் 7 (அப் 1 1-3)" எனக்கு காண்பித்து, ஸ்தாபித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள்

1 உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் மத் 28 18, மாற்கு 16.15

2 விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களை பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தில் ஸ்நானப்படுத்துங்கள் - மத். 28 19 (இயேசு மாதிரி Through Action) செய்து காண்பித்தார்

3 திருச்சபையைக் கட்டி (மத் 16 18) [illegible] உபதேசங்களையும் அவர்களை கைக்கொள்ளும்படி அவர்களுக்கு [illegible] மத் 2 20

4 அவர்களுடைய பாவங்களை [illegible] 2 23

5. அவர்களை மேய்த்து ஆளும்படி [illegible] 21 15-17

6. இவைகளை நடப்பிக்க [illegible] (அப். 1 5-8)

7 நான் வருகிற வரைக்கும் என்னை நினைவுகூரும்படி திருவிருந்து (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார் -1 கொரி. 11 23-26

நான் ஆண்டவரே சிலர் அஸ்திபார உபதேசங்கள் இரண்டு (2) என்கின்றனர் வேறு சிலர் ஏழு (7) என்கின்றனரே அதெப்படி? என்றேன்

இயேசுவானவர் பிரதியுத்தரமாக இல்லை, அஸ்திபார உபதேசங்கள் ஏழு ஆகும் (நீதி. 9 1-6) இது ஆதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளும் அதிகாரங்களுமாகும் இவைகளை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப் 1 1, 10 40-43)

இதழில் உள்ளே ......

ஆசிரியர் உரை



"அந்தப்படியே நாம் அவரால கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறோம்", என்னே மகிமை பிதாவாகிய தேவன் நம்மை கிறிஸ்து இயேசுவுக்குட்படுத்தியிருக்கிறதாக எழுதிக் கொடுத்திருக்கிறார் ஆம் இயேசுகிறிஸ்து 1900 வருஷங்களுக்கு முன் மரித்தபோது நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, நம்மையும் தம்மோடு சேர்த்து சிலுவையில் அறைந்தார் எப்படியெனில் ஆதாம் பாவம் செய்தபோது ஆதாமுக்குள் முழு மனுக்குலமும் இருந்தபடியால் எல்லாரையும் பாவத்துக்குள்ளாக்கினார் நாம் பாவிகளானோம் நாம் பாவம் செய்கிறதினால் பாவிகளல்ல. பாவிகளாயிருப்பதினால் பாவம் செய்கிறோம் இந்த பழைய மனுஷன் கிறிஸ்து இயேசுவுடனே சிலுவையில் அறையப்பட்டு மரித்து விட்டதால் புது மனிதனாகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்ட நாம் தேவன் மனுமக்களை இரட்சிக்க செய்தகிரியையை அறிந்து இயேசுவை ஏற்றுக் கொண்டிருக்கிறோம், ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம் ஆனபடியால் கிறிஸ்துவின் ஞானம், நீதி, பரிசுத்தம், மீட்பு நம்முடையதாகிறது நாம் பாவம் செய்யாமல் ஜீவிக்க முடியும். நாம் ஆதாமுக்குள் இருந்தபோது ஆதாமின் பாவ சுபாவம் கிரியை செய்தது போல இப்பொழுது கிறிஸ்துவின் தன்மை கிரியை செய்யும் கிறிஸ்துவோடு இணைந்திருங்கள். கிறிஸ்துவுக்குள் இருக்க ஜாக்கிரதையாக இருங்கள். நமக்கு எல்லாம் ஜெயந்தான். மேன்மையான ஆசீர்வாதங்கள் ஏராளம் குவிந்திருக்கின்றன சபையைப் சுதந்தரித்துக் கொள்வீர்களாக!

கிறிஸ்துவுக்குள்,

Chief Apostle N. LAZAR

மார்த்தின் லூத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

அதி. 39 ஸ்மால்கால்தன் சங்கதிகள்

மூன்றாம் பவுல் என்னும் பாப்பு இராயனுடைய கேட்டுக்கொள்ளுதலுக்கு இணங்கி இத்தாலியா தேசத்திலுள்ள மந்துவா பட்டணத்தில் ஒரு பொதுச் சங்கம் கூடி வரும்படி கட்டளை அனுப்பி அழைத்தான். துவக்கத்திலிருந்து லுத்தேரும் பிரபுக்கள் ஒரு பொதுச் சங்கம் கூடவேண்டுமென்று மனுப் பண்ணியிருந்த போதிலும் அதற்கு மாறாய பாப்பு இப்படிச் செய்ததால் நியாயப் பிரபு இச்சங்கத்திற்கு ஆதரவாக மனமற்றிருந்தான். ஏனென்றால் இராயனுடைய கட்டளை லுத்தரன் என்னும் பெருவாரி நேரமே வேரோடு பிடுங்கிப் போடுவது சங்கத்தின் நோக்கமென்று அறிவித்திருந்தது. லுத்தரும் மெலாங்தானும் ஒரு லுத்தரன் பிரதிநிதி சங்கம் ஒன்றைத் தெரிந்தெடுத்துக் கூட்டிப்போகும் இப்போதும் சபைத்திற்கு அனுப்பலாமென்று ஆலோசனை சொன்னார்கள். நியாயப் பிரபுக்கள் செய்வதென்ன தெரியாமல் குழம்பிக்கொண்டிருந்த போதிலும், ஒரு வேளை பாப்புமார்க்கத்தாருக்கு எந்த விஷயத்தில், எம்மாத்திரம் இணங்க மனதுள்ளவர்களாய் இருக்கிறோம் என்றும், எதை நாம் முடிவாய்ப் பிடித்து அதில் நிலைநிற்க வேண்டுமென்றும் ஒரு வேளை ஆலோசிக்க நேரிட்டால், தங்கள் அதற்கு ஆயத்தமாயிருக்கும்படி, லுத்தரன் போதனைகளை எல்லாம் சேர்த்தெழுதி ஒரு திரட்டாக்கி வைக்கும்படி நியாயப் பிரபு லுத்தருக்குக் கட்டளையிட்டான். லுத்தர், முக்கியமாக கிறிஸ்தவ போதனைகளை எல்லாம் ஒரே தொடர்ச்சியாகப் பிரிவு பிரிவுகளாய்த் தமக்கு இயல்பான அழுத்தமான பாஷையில் எழுதினார். அதில் முதல் பாகம், பொது விசுவாசப்பிரமாணங்களில் உள்ளபடி திரித்துவத்தைப் பற்றிச் சில சில பிரிவுகளை அமைத்திருந்தது. 'இரு கட்சியாரும் இவைகளை விசுவாசித்து அறிக்கையிட்டபடியால் இவைகளைப்பற்றி தர்க்கமாவது வாக்குவாதமாவது இருக்க நியாயமில்லை.' இரண்டாவது பாகம் கிறிஸ்துவின் உத்தியோகத்தையும் அவருடைய வேலையையும் பற்றி பேசுகிறது. இதின் முதற்பிரிவு விசுவாசத்தால் நீதிமான்களாக்கப் படுகிறோம் என்கிற போதகத்தைப்பற்றிப் பேசுகிறது. 'வானமும் பூமியும் நிலைமாறினாலும், எல்லாம் ஒழிந்து போனாலும், இதில் ஒன்றைக்கூட நாம் இணங்குவது, விலக்குவது முடியாது. இந்த விசுவாச அறிக்கையினால் நாம் பாப்புக்கும் சாத்தானுக்கும் முழு உலகத்திற்கும் விரோதமாய் போதித்துச் சாதித்து வருகிறதெல்லாம் அடங்கியிருப்பதாகும் என்பதே'' இரண்டாம் பிரிவு ''பூசைப்பலிகளின் ஏற்பாடாகிய மீசா என்னும் பூசையை விலக்குகிறது. இந்தப் பூசை நரகத்தின் வால் அநேக பயங்கர பூச்சி புழுக்களுக்கும், புழுங்கிப் போன பிறருடைய சாரத்தை உறிஞ்சி ஜீவிக்கிறவர்களுக்கும் விக்கிரகாராதனை வகைகளுக்கும் வேரும் ஊற்றுமாய் இருக்கிறது'' என்பதே

நாலாம் பாகத்தில் லுத்தர் பாப்புவைத் தாக்குகிறார். அவர் சொல்வதாவது ''பாப்பு மெய்யான அந்திக்கிறிஸ்து. அவன், கிறிஸ்தவர்கள் தன்னுடைய அதிகாரமில்லாமல் இரட்சிக்கப்பட முடியாது என்று சொல்லுகிறபடியால், தன்னைக் கிறிஸ்துவுக்கு எதிராகவும், அவருக்கு மேலானவனாகவும் துணிகரமாய் எண்ணிக் கொள்ளுகிறான். சரியாய்ச் சொன்னால், இது கடவுள் என்று சொல்லப்படும் எல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்திக்கொள்வதாகும். பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறபடி, கடவுள் என்று சொல்லப்படுவது அல்லது வணங்கப் படுவது எல்லாவற்றிற்கும் விரோதமாக எவன் எதிர்க்கிறானோ அல்லது மேலாக

வரைத் தன்னை எதிர்க்கொள்ளு கிறது அவன் தேவனுடைய ஆலயத்தில் தேவனாக உட்கார்ந்து தன்னைத் தேவனாகக் காண்பிக்கிறான் ஆனாலும் சாத்தானைக் கடவுளாகவும், ஆண்டவராகவும் என்னால் நாம் தொழுதிட முடியாததுபோல் அவனுடைய அப்போஸ்தலனும், அந்திக் கிறிஸ்துவுமாகிய பாப்புவின் ஆளுகைக்கு நாம் இடங்கொடுக்க முடியாது இதை நான் அறிந்து பயமில்லாமல் நிரூபித்திருக்கிறேன்" என்பதே

பாப்புவின் கொள்கையைப்பற்றி லூத்தர் சொல்லியிருப்பது. "பாப்புக்கு முன்பு கையும் ஆம், சாத்தானுக்கு முன்பாகவும் நாம் தெரியமாய் நிற்போம். ஆனால் அவன் அப்படியே ஆத்துமாக்கு உள்ளவர்களுக்கும், செல்வங்கள், விசுவாசிகளுக்கும் பணத்தும் பாவத்தால் ஆகிய இவைகளைப் பற்றி மாத்திரம் கேட்க என்னால் சொல்லுகிறேன் அவ்வளவு கேட்டுக்கும் கேட்க வைக்கிறதுக்கிறான் ஆனபடியால் நாம் அவனுடைய காலை முத்தமிடமாட்டோம். அல்லது, "நீர் என்னுடைய கருணைக் கர்த்தர்" என்று வணங்கி சொல்லமாட்டோம் ஆனால் நாம் அவனை, சகரி 3:2ல் தேவதூதன் சாத்தானுக்குச் சொன்னதுபோல், "கர்த்தர் உன்னை கடிந்து கொள்வாராக சாத்தானே" என்றுதான் சொல்லவேண்டும்.

லூத்தருடைய முடிவுரையாவது " இந்த அதிகாரங்கள் மேல் நான் மரணபரியந்தம் உறுதியாய் நிற்க வேண்டும் நான் இதில் எதையாவது மாற்றவேண்டுமோ அல்லது எதையாவது இணைக்க வேண்டுமோ என்று எனக்குத் தெரியவில்லை" என்பதே

இந்த அதிகாரங்களுக்கு விருத்தப்படக் கேத சாஸ்திரிகளும் மத சிரேஷ்டர்களும் கையொப்பமிட்டார்கள் மெலாங்தன் சாஸ்திரியாரும் இவைகள் சரி என்றும், மெய் கிறிஸ்தவர்களுக்கு ஏற்றவை என்றும் அங்கீகரித்தார் ஆனால் கவிசேஷத்தைத் தாராளமாய்ப் போதிக்கவும் அதைச் சரிக்கவும் பாப்பு இடங்கொடுத்தால் அவருடைய ஆட்சியை, மனுஷ உரிமையைக் மாத்திரம் அவருக்குள்ளது என்று இடங் கொடுக்கலாம் என்றும் அபிப்பிராயத்தைத் தெரிவித்து கையொப்பமிட்டார். இந்த அதிகாரங்களைப் பிரசங்கியார் பரிசீலிப்பதற்கு 1537-ம் வருஷம் பெப்ருவரி மாதம் 3-ம் தேதி அனுப்பப்பட்டன

இவைகளைப்பற்றி ஆலோசிக்கும்படி, கவிசேஷப் பிரபுக்கள் தங்களுடைய வேத சாஸ்திரிகளுடன் ஸ்மால்கால்ட் பட்டணத் தில் கூடினார்கள் நியாயப் பிரமாணிய போதகர் ப்ரூக்கிஸ், தன் வேத சாஸ்திரி களாகிய லூத்தர், மெலாங்தன், புகேனகன், ஆகியவர்களுடன் பெப்ருவரி மாதம் 7-ம் தேதி வந்து சேர்ந்தார் இந்த சமயத்தில் பாப்புவின் பிரதிநிதி ஒருவரும் தம் போதனையைச் சொல்ல வந்திருந்தார் பெப்ருவரி மாதம் 9-ம் தேதி லூத்தர், ஸ்மால் கால்டன் ஆலயத்தில் ஒரு மகத்தான பிரசங்கம் செய்தார் அந்த ஆலயம் மிகப் பெரிதும் உன்னதமுமானதால் அவன் சத்தம் அதில் ஒரு சமயமும் சரிவரக் கேட்கப்போகாமல் இருந்திருக்கும். ஆனால் பிரபுக்களும் வேத சாஸ்திரிகளும் பட்டணத் தாரும் அவருடைய மறுப்புகளும் சரியாகும் வரை பிரசங்கத்தை வெகு ஆவலோடு கேட்டார்கள்.

அடுத்த நாளில் கல்லடைப்பு நோயால் மிகவும் உபாதிக்கப்பட்டு வியாதிப்பட்டார் இதே வியாதியால் இதற்கு முன்னும் கஷ்டப்பட்டு லூத்தர் அடுத்த ஞாயிறு மறுபடியும் பிரசங்கம் செய்யவிருந்தார் ஒரு வாரத்திற்குள் சுகமடைந்தார். ஆனால் அவர் பிரசங்கம் பண்ணின உடனே அடுத்த வியாதி யால் உபாதிக்கப்பட்டு மரண வேதனைப் பட்டார், பிறகு அவர் கவலை மிக தமக்குக் கிடைத்த செய்தி தைரியத்தைப் பற்றி அவர்கள் தம்மை ஒரு சமய சமரசமான அபிப்பிராயத்தை கொடுத்துத் தம்மை நிரப்பியிருக்கவேண்டும் நன்றாக

சொன்னார். வைத்தியர்கள் என்ன சாமர்த்தியம் செய்தும் அவர் சுகத்தை அடைந்ததில்லை. அதனால் உண்டான வேதனை சகிக்க முடியாமலிருந்ததால் அவரும் அவருடைய சிநேகிதர்களும் மரணம் சமீபித்துவிட்டதென்று பயப்படும் படியாயிற்று. மெலாங்தன் சாஸ்திரியார் லுத்தருடைய படுக்கையண்டை நின்று விம்மியழுது கொண்டிருந்தபோது வியாதியஸ்தர் அவரை நோக்கி, "ஏன், கர்த்தருடைய கரத்திலிருந்து நன்மையை அனுபவிக்கிற நாம் தீமையையும் பெற்றுக் கொள்ளலாகாதோ?" என்று சொன்னார். அப்போது நிகலைப் பிரபுவாகிய ஜோவான் பிரெடரிக், 'நம்முடைய நம்பிக்கைக்கு மாறாக, உம்மைக் கர்த்தர் தம்மிடம் அழைக்கச் சித்தமானால், நீர் உம்முடைய பரிவார பிள்ளைகளுக்காகக் கவலைப்பட வேண்டாம். அவர்கள் என்னுடையவர்கள் போல் பராமரிக்கப்படுவார்கள்" என்று சொன்னார். தம் குடும்பத்தின் மேலிருந்த அன்பால், அவர்களை விட்டுப் பிரிவது அவருக்கு மனவருத்தமாயிருந்தபோதிலும், இவ்வுலகைவிட்டு மகிமையான பரலோக இராஜ்யம் சேர அவர் வாஞ்சையுடன், 'அன்புள்ள பரம தகப்பனே, இந்த ஆத்துமாவை, உம்முடைய கரத்தில் ஏற்றுக் கொள்ளும் என் ஆதாரமே இதைவிட்டுப் போ என்று ஆண்டவருடைய நாமத்தில் சொல்லுகிறேன்' என்று ஜெபித்தார். ஏன் வைத்தியத்திற்கு வேண்டிய ஆயுதங்கள் அங்கில்லாதபடியால், வைத்தியர்கள் அவரைக் கோத்தா பட்டணம் கொண்டு போவது நலமாயிருக்குமென்று சொன்னார்கள். அவர், நிகலைப் பிரபுவின் வாகனத்தில் ஏறிப் புறப்படும்போது அங்கிருந்த நண்பர்களை நோக்கி, "ஆண்டவர் உங்களைத் தம்முடைய ஆசீர்வாதங்களாலும், பாப்புவைப் பகைக்கும் பகையினாலும் நிரப்புவாராக" என்று வாழ்த்தி விடைபெற்றுப் போனார்.

வைத்தியருடைய சாமர்த்தியத்தால் தீராதபடியிருந்த, கரடுமுரடான ரஸ்தாவில் வாகனம் குலுங்கினதால் தீர்ந்தது. அடுத்த இரவு ஆறு கற்கள் வெளியேறுதலைவிட்டு வெளிப்பட்டன. அவ்வேளையில் ஒன்று அவரைக்கொண்ட அவை இருந்தது. 'கர்த்தருக்கு ஸ்தோத்திரம், லுத்தர் உயிரோடிருக்கிறார்" என்ற சந்தோஷ செய்தி ஒருவர் வாயிலிருந்து ஒருவருக்கு வெகு சீக்கிரம் எட்டிற்று. இக்கடம் தம்முடைய நண்பருடைய ஜெபங்களைக் கேட்டு ஆண்டவர் தம்முடைய தயவான பராமரிப்பினால் அளித்தாரென்று லுத்தர் சொன்னார். அவர் தம் மனைவிக்கு, "நான் மரணத்திற்குச் சமீபமாயிருந்தேன். நான் உன்னை மறுபடியும் பார்க்கமாட்டேன் என்றே எண்ணி, உன்னையும், என் பிள்ளைகளையும் ஆண்டவரும் கர்த்தருமாகிய பரமபிதாவுடைய கரத்தில் ஒப்புவித்தேன். உனக்காக நான் மெத்தப் பரிதாபப்பட்டபோதிலும், மரணத்திற்குப் பூரண ஆயத்தமாயிருந்தேன். ஆனால் இப்போது அநேகருடைய கண்ணீரையும் உருக்கமான ஜெபங்களையும் நோக்கி ஆண்டவர் அற்புதமாய் எனக்குப் புது ஜீவனைக் கொடுத்ததுபோல் தோன்றுகிறது. ஆகையால் கர்த்தரை ஸ்தோத்தரி. பிள்ளைகளும் அத்தை லேனாவும் மெய்யான பரம தகப்பனுக்கு நன்றி செலுத்தட்டும். அநேக பக்திமான்களுடைய ஜெபத்தால் ஆண்டவர் எனக்கு அற்புதமாய் ஜீவனைக் கொடுத்திருக்கிறார். நான் உங்கள் எல்லோரையும் சந்தோஷமாய்ச் சந்திக்க எதிர்பார்க்கிறேன்" என்று எழுதினார். மார்ச் மாதம் 14-ம் தேதி அவர் விட்டன்பர்க் சேர்ந்தபோது மகா பெலவீனமாய் இருந்தார். முதல் சில நாட்கள் அவர் நிற்கவும் நடக்கவும் சக்தியற்றிருந்தார்.

ஸ்மால்கால்டன் பட்டணத்தில் சுவிசேஷப் பிரபுக்கள் செய்த ஆலோசனையின் தீர்மானமாவது அவர்கள் நீண்ட காலமாகக் கேட்டது ஒன்று, பாப்பு செய்தது ஒன்று. அவர்கள் ஜெர்மானியாவில் ஒரு சுயாதீன சங்கம் கூட்ட வேண்டுமென்று கேட்டுக்

[illegible]

அதி. 40. [illegible] பிரபுவின் மருமகனும் [illegible]

1522-ம் வருடம் [illegible]

[illegible] 1530-ம் வருடம் [illegible] 17ம் தேதி [illegible]

[illegible] 1523-ம் வருடம் 19 [illegible]

[illegible]

(தொடரும்)

விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. ஒரு விசுவாசிக்கு உயிர் நாடியாக இருப்பது விசுவாசமே. விசுவாசம் என்னும் கேடகம் விசுவாசிக்கு நல்லதொரு தற்பாதுகாப்பு ஆகும். விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர் . 10 17) விசுவாசம் வசனத்தில் கட்டப்படுகிறது. வேத வசனங்களைக் கேட்கையில் விசுவாசம் அதிகரிக்கிறது. வாக்குத்தத்தங்கள் சாத்தியமற்ற வேளையிலும் விசுவாசத்தை ஸ்திரப்படுத்தும். விசுவாசிக்கவே முடியாத காரியங்களுக்காகவும் வசனத்தின் அடிப்படையில் அறிக்கை செய்யும் போது அந்த காரியத்திலே அபாரமான விசுவாசம் உண்டாகும். விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1 யோவா 5 4).

T.L. ஆஸ்போர்ன் தன் புத்தகத்தில் "போராட்டம், தோல்வி, வியாதி என அறிக்கையிடும் போது, உனக்கு சாத்தான் அனுப்புவதை கையொப்பம் இட்டுப் பெறுகிறாய். உன் அறிக்கை சாத்தான் அனுப்புவதை நீ பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சி. அவன் அனுப்புவதை உன் அறிக்கையின் மூலம் ஏற்றுக் கொண்ட சம்மதியதே" என்று குறிப்பிட்டுள்ளார். "என்னால் முடியாது", இது சாத்தியமில்லை என்று சொல்லும் போது சந்தேகம் ஒரு இராட்சதனைப் போல எழும்பி உங்களை தாக்கி விடும். விசுவாச சொற்களை எடுத்துரைக்கும் ஆவிக்குரிய உங்கள் வாயைப் பயன்படுத்துங்கள். விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின் வாங்கிப் போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது (எபி . 10.38) என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாமோ கெட்டுப் போக பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாக இருக்க வேண்டும் என்று வேதம் ஆணித்தரமாக பேசுகின்றது.

நம் மனதை கடந்த கால தோல்விகளும், பிறருடைய பட்டயக்குத்துகள் போன்ற சொற்களும், நம்பிக்கையில்லாத சூழ்நிலையும், நடக்கவிருப்பதைக் குறித்த பயங்களும், சந்தேகக் கேள்விகளும் குப்பை கூளங்கள் போல நிரம்பும் போது அகற்றுவதும், தேவனைக் குறித்து எதிரான ஆயுதங்களை முறியடிக்க வேண்டும். நம் முன்னோர்கள் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராக இருக்கிறார் என்ற விசுவாசத்துடன் பாதகமான சூழ்நிலையிலும் தேவனை விசுவாசித்தார்கள். தேவன் எனக்கு பதிலளிப்பார் என்ற உறுதியான நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது.

நாமும் கூட பாதகமான சூழ்நிலையிலும், எதிர்மாறான நடை நேரத்திலும் அதிகமாக தேவ சமூகத்தில் காத்திருந்து துதித்து ஜெபிக்கும் போது, தீவிரமான விசுவாசம் தீமையை ஒழித்து பலத்த கிரியை நடப்பிக்கும். நீ விசுவாசித்தால் நிச்சயமாக தேவனுடைய மகிமையைக் காண்பாய். நம்முடைய ஜெபங்களுக்கு உடனடி பதிலை நாம் பெற்றுக்கொண்டு, விடுதலையையும் ஜெயத்தையும் அனுபவிக்கும் போது நமக்கு பெரிய மகிழ்ச்சி உண்டாகிறது. விசுவாசம் பெருகிறது. ஆனால் தாமதம் ஏற்படும் வேளைகளில் நம்முடைய மனநிலை தடுமாறும். அந்த வேளையிலும் உறுதியான விசுவாசம் நமக்குத் தேவை. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்னும் வாலிபர்கள் போல நாமும் என் தேவன் விடுவிக்க வல்லவராய் இருக்கிறார். அவர் விடுவியாமற்போனாலும், நாங்கள் அவரையே ஆராதிப்போம் என்று சொல்ல வேண்டும். எந்த வேளையிலும் சோர்ந்து போகாதபடி, 'இதோ உடனிருப்பதால் சேதமில்லை' என்ற திடமான விசுவாசத்தை நம்

வாழ்க்கையில் பிரவேசிக்கும்போதெல்லாம், கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் சங் 138:8 என்ற வேத வாக்கின்படி உங்கள் வாழ்க்கையிலும் செய்து முடிப்பார்

தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1யோ: 5:4)

துதியின் பரிமாணங்கள் அநேகம்

பூமியிலே வாழும் எல்லா மனிதர்களுக்கும் மூன்று முக்கிய கடமைகள் உண்டு. ஒன்று, தன்னை படைத்த இறைவனைத் துதிப்பது. இரண்டாவது முழுமனதாய் நின்று துதிப்பது. மூன்றாவது, அநேகராய்த் துதிக்கும்போது ஒருமனதாய்த் துதிப்பது. அந்தப்படி துதிப்பது ஒன்றே மனிதனுக்கு உண்டான கடமையாக உள்ளது. தேவனோடு சஞ்சரிப்பவர்களும், தேவனோடு நெருக்கம் உள்ளவர்களும் இதனை அறிவார்கள். துதியென்பது படைப்பின் நோக்கம். எல்லா பேச்சுக்கும் தொடர்பேற்கும் ஒரு சாதனம் ஊடகம் (MEDIUM) வேண்டும். நாம் கர்த்தரோடு பேசுவதற்கு துதி ஒரு சாதனமாகவும் ஊடகமாகவும் உள்ளது. நாவின் வார்த்தைகள் மட்டுமல்ல, உயிர்த்தவைகளும் தேவனைத் துதிக்கும் என்று வேதத்திலிருந்து அறிகிறோம் (சங் 148)

படைக்கப்பட்டவைகளைத்தான், மனிதன் விசேஷித்தவன். ஏனென்றால் அவன் ஒன்றுக்கும் மேற்பட்ட பரிமாணங்களிலிருந்தும், பல நிலைகளிலிருந்தும் தேவனை துதிக்கும் வழியும், பாக்கியமும் அவனுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது மனிதன் ஒருவனாக இருந்தும், ஆவி, ஆத்துமா, சரீரம் என்னும் மூன்று நிலைகளில் நின்றும், (Three states), சொல், செயல், சிந்தனை என்னும் மூன்று வெளிப்பாடுகள் கருவிகளாகவும் நின்று வல்லமையாக துதிக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறான் வேதம் இதை நமக்கு தெளிவாக அறிவிக்கின்றது.

மூன்று நிலைகள்

1 சரீரம்

பரிசுத்த ஜீவபலியாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்று வேதம் கூறுகிற இப்படிப்பட்ட சரீரத்தின் அவயவங்களான உதடுகளின் கனி தேவ நாமத்தைத் துதிக்கும் ஸ்தோத்திர பலி (எபி.13:15) துதியின் மகிமை தேவபிரசன்னத்தை, தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தும். ஒருவன் தன் சரீரத்தின் பாடுகளிலும், பலவீனத்திலும் தேவ மகிமையை, பிரசன்னத்தை வெளிப்படுத்தக் கூடுமானால் அது அவன் சரீரத்தின் துதியின் வெளிப்பாடு எனலாம். இதைக்குறித்த அப்-பவுலின் சரீரபாடுகள், பலவீனத்தில் வெளிப்பட்டு மகிமை உண்டானது. அநேக அடிப்பட்ட அவர்களுடைய சரீரத்திலிருந்து எழுந்த துதியும், பாடலும் சிறைச்சாலையின் அஸ்திபாரங்களை அசைத்து, கதவுகளை திறக்கச் செய்து, காவல்காரனின் குடும்பம் இரட்சிக்கப்பட்டது (அப் 16:23) தானியேலின் சரீரம் பசியுள்ள சிங்கங்களின் வாயிலிருந்து காக்கப்பட்டதும், அவரின் நண்பர்களின் சரீரம் எரிநெருப்பிலிருந்து காக்கப்பட்டதும், சரீரம், தேவனை துதிக்க உண்டாக்கப்பட்டது என்பதற்கு சான்று.

2) ஆவி

மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது "மலைகளே நீங்கள் ஆட்டுக்கடாக்களைப் போலவும், குன்றுகளே நீங்கள் ஆட்டுக்குட்டிகளைப் போலவும் துள்ளுகிறதற்கும் உங்களுக்கு என்ன

வந்தது?" என்று தன் ஊனக் கண்ணுக்கு தெரியாத காட்சியினை தாவீது ராஜா தன் ஆவியின் கண்கொண்டு கண்டு தேவனை துதிக்கிறார் (சங் 114 6) அசைவற்றவை கலகலவென அசைந்தது. இறைவனைத் துதிப்பதை நாம் நம் ஆவியின் துதிதரும் வெளிச்சத்தில் காணலாம். சரீரம் பலமிழந்த நிலையிலும், நாம் நமது ஆவியினால் தேவனை துதிக்கலாம். தேவன் அதில் பிரியமாயிருக்கிறார் "கர்த்தரை நான் இனி உயிரோடிருக்கிறவர்களின் தேசத்திலே தரிசிப்பதில்லை" என்று தன் சரீரம் ஒடுங்கிய போன நிலையிலும், "புறாவைப்போல் புலம்பினேன்" என்று தனக்குண்டான ஆவியின் வேதனையால் தேவனைத்தேடினார், துதித்தார் எசேக்கிய ராஜா (ஏசா 38 11-14) எந்நேரமும் ஆவியில் துதிபாடுகிறவர்கள் கர்த்தரின் தீர்க்கதரிசியாயிருப்பார்கள் எலியாவின் ஆவி, எலிசாவின் மேல் இறங்கியிருப்பதை எரிகோவின் தீர்க்கதரிசிகளின் புத்திரர்கள் கண்டு அவனை வணங்கினார்கள் இதைக் கவனிக்கவேண்டும் சரீரத்துக்கு அப்பாற்பட்ட ஆவியின் துதிதரும் வெளிப்பாடுகளே.

3) ஆத்துமா

"மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல, தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது" என்ற தாவீது ராஜா "என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி" என்றும் தன் ஆத்துமாவுக்கு கட்டளையிடுகிறார் (சங் 42 1, 103 1) இப்படி நம் ஆத்துமாவில் ஏறெடுக்கும் துதியின் சத்தம் பரலோகத்தில் ஒலிக்கும் வல்லமையுள்ளது சரீரம் விழுந்தபோதும் ஆவி தொய்ந்து விலகப்பட்டிருந்தாலும், ஆத்துமாவின் பலத்தால் துதிக்க வழியுண்டு கர்த்தர் யோபுக்குண்டான சோதனையில் சாத்தானிடமிருந்து யோபுவின் ஆத்துமாவை மட்டும் தப்ப விட்டிருந்தார். (யோபு 2 6) அவன் சரீரம் ஆவி இரண்டுமே வாதிக்கப்பட்டு பலமிழந்து போனபோதும் "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், கடைசி நாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்" என்று தன் ஆத்துமாவின் சத்தத்தை பரலோகத்தில் கேட்கப்படும் துதியாக ஏறெடுத்தார். (யோபு 19 25) அதனாலும் தேவன் மகிமைப்பட்டார் ஆத்துமாவிலே இப்படி தேவனைத் துதிக்க அழைக்கப்பட்டவர்கள் அதிக பாக்கியவான்கள்

3. மூன்று கருவிகள்

1. நாவின்துதி :

அவர்களுடைய வாயிலே கர்த்தரை உயர்த்தித் துதிக்கும் துதியை வைத்து அவர் நமது பரிசுத்தவான்களை கனப்படுத்துகிறார் (சங் 149 6,9) நாவிலே உண்டாகும் துதிக்கு தேவன் எவ்வளவு பெரியதான கனம் அருளுகிறார். இப்படிப்பட்ட கனம் பெற்ற நாவிலிருந்து துதியோடு கூட தேவவசனமும் வெளிவரும் "கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார், அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது" (IIசாமு 23 2) இது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உண்டான ஒரு நிரந்தரமான உறவு. இதிலே தேவன் பிரியமாயிருக்கிறார். அவருடைய வல்லமை, மகத்துவம், மகிமை, பிரஸ்தாபம் உலகுக்கு அறிவிக்கப்படுகிறது இப்படி கர்த்தரைத் துதித்து புகழும் வண்ணமாய் தாவீது ராஜா லேவியர் கூட்டத்தை நிரந்தரமாய் நியமித்தார் அவரே நமது நாவின் துதியால் கர்த்தரை பிரஸ்தாபப்படுத்தினார் (I நாளா. 16) இப்படி துதிக்க இன்று நாம் கடமைப்பட்டுள்ளோம்.

2. கிரியையின் துதி

கர்த்தரின் சந்நிதியில் நின்று நாவினாலே துதி ஏறெடுக்கிறோம் அவருக்கு நாம் ஏறெடுக்கும் ஆராதனையில் பங்கு கொண்டு சந்தமாக துதிக்கிறோம் ஆனால் கர்த்தர் எங்கும், எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும் நம் ஜனங்களால் துதிக்கப்பட பாத்திரமானவர் கிரியைகள்

தேவனை மகிமைப்படுத்தும் நல்ல கிரியைகளைக் இந்த துதியை செல்லுமிடங்களிலெல்லாம் ஏறெடுக்கிறார்கள். தேவனுக்கு எதிராக எழும்பும் சக்திகளை தேவ மனுஷர்கள் தங்களுடைய கிரியைகளைக் முறியடித்து துதியை எழுப்புகிறார்கள். தேவ மனுஷன் மோசேக்கு எதிராக எழுந்த கோராகின் கூட்டத்தை மோசே தன் கிரியைகளால் முறியடித்தார். பூமி பிளந்து மொத்தமாக அவர்களை விழுங்கிப்போட்டது. (எண் 16 28) நல்ல கிரியை தேவனுக்கு ஏற்ற துதியாயிருப்பதால், அப்படிப்பட்ட துதி பலனுள்ள காரியமாயிருப்பதால், இயேசு கிறிஸ்து "அவனவனுடைய கிரியைகளின்படி நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது" என்றார் (வெளி 22:12)

3. சிந்தனையின் துதி

சோகமோ, வேதனையோ, இவற்றை நாம் அறியவும் பிறர்களையும் கேட்கவும், அதனை கட்டுப்படுத்தவும் முடியும். இவற்றுக் கெல்லாம் அடிப்படையாக இருக்கும் எண்ணங்களை நம்மை மீறி வரும் ஆற்றலுடையதாயிருக்கிறது. ஒருவன் தன் எண்ணங்கள் தேவனை நோக்கி ஒருநிலைப்படுத்த பிறர் தயவை நாடுவதுமுண்டு. துன்பம், துக்கம், சோதனைக் காலங்களில் எண்ணங்களை தேவனை விட்டு விலகி சிதறிவிடும் நிலைமை உண்டாகிறது இப்படிப்பட்ட நிலையிலும் அவன் தன் சிந்தனையில் தேவனை நோக்கி முழுமையாய்த் தேடவும் துதிக்கவும் கூடுமானால், அதுவே அவனுக்குண்டான பெரும் பாக்கியம். அன்னாள் தனக்குண்டான சிந்தனையிலும், முழுமனதோடு சத்தத்தோடு தன் இருதயத்திலே பேசினாள் என்று வாசிக்கிறோம் (1 சாமு 1:13) நோக்கம் எதுவாயிருந்தாலும், அது தேவ மகிமையை காணமுடியும் என்று அறிந்து, எல்லா வற்றையும் மறந்து அந்த வேளையில் நேரத்தில் அவள் தனது சிந்தனை முழுவதிலும் கர்த்தரின் துதியால் நிறைவு பண்ண, தேவன் அந்த துதியின் சத்தம் கேட்டார்

இப்படியாக படைப்புகளனைத்திலும் விசேஷமாக மனிதனுக்கு தேவசாயலாகவும் மனிதனுக்குண்டான கடமையாகவும் இருக்கும் துதி செலுத்தும் வல்லமையினை அவனை ஒன்றுக்கும் மேற்பட்ட வழிகளிலும், ஒன்றுக்கும் மேற்பட்ட நிலைகளிலும், வெளிப்படுத்தும் பாக்கியத்தையும் கொடுத்திருக்கிறார். இதனை உணர்ந்து எங்கும் எதிலும் எப்போதும் இறைவனைத் துதிப்போமாக. அல்லேலூயா

கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயில் இருக்கும். (சங்கீதம் 34:1)

வழுவாதபடி காக்க வல்லவர்

நாம் ஜீவிக்கின்ற இவ்வுலகத்தைக் குறித்து வேதம் கூறுகின்றது. (யோபு. 26.7) அவர் உத்தர மண்டலத்தை வெட்ட வெளியிலே விரித்து பூமியை அந்தரத்திலே தொங்க வைக்கிறார். விஞ்ஞானிகளின் இன்றைய கற்றுப்படி பூமி அந்தரத்திலே சுழன்று கொண்டிருக்கின்றது என்று கூறுகிறார்கள். தேவனின்வார்த்தையே பூமியை அந்தரவெளியிலே தொங்க வைத்து அதை வழுவாதபடி காக்கின்ற தேவன் உங்களையும் வழுவாதபடி காக்க தேவன் வல்லமையுள்ளவராக உள்ளார் (யூதா. 24) அல்லேலூயா

குறிப்பிடதக்கதென்ன ?

சரித்திர ஆசிரியர்கள் ஒருவருடைய சரித்திரத்தை எழுதும்போது அவருடைய வாழ்வில் புரிந்த குறிப்பிடத்தக்க சாதனைகளை எழுதுவார்கள். பரிசுத்த ஆவியானவர் ஆதாமின் வம்சத்தாரின் வரலாற்றை எழுதுகையில்,

ஆதாம் 800 வருஷம் ஜீவித்து, குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான்

சேத் 807 வருஷமாக உயிரோடிருந்து குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான்

ஏனோஸ் 815 வருஷம் வாழ்ந்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்

கேனான் 840 வருஷமாக வாழ்ந்து குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான்

மகலாலெயேல் 830 வருஷ ஜீவியத்தில் குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்

யாரேத் 800 வருஷம் குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

இப்படி 6 தலைமுறையாக பிதாக்களின் சரித்திரத்தில் அவர்கள் படைத்த சாதனையாக குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றார்கள் என்று தான் குறிப்பிட முடிந்தது

7ம் தலைமுறையில் ஏனோக்குடைய வரலாற்றில் அவர் 300 வருஷம் தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது அதுமட்டுமல்ல, ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருக்கையில் காணப்படாமல் போனார், தேவன் அவரை எடுத்துக் கொண்டார், என்று ஆதி. 5 22லும், விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். தேவன் அவனை எடுத்துக் கொண்டபடியினாலே காணப்படாமற் போனான். அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சி பெற்றான் என்று (எபி 11 5) ஆவியானவர் விசேஷமாக குறிப்பிட்டுள்ளார் சகல மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருக்க, இவர் விசுவாசத்தினாலே தேவனோடே சஞ்சரித்து இந்த சாபத்துக்கு நீங்கலானார்

சிலரைப்பற்றி வேதத்தில் நல்ல சாட்சியே இல்லை நியாயாதிபதிகளின் புஸ்தகத்தில் வீரதீரசெயல்களைச் செய்த நியாயாதிபதிகளைப் பார்க்கிறோம் இங்கே ஒரு நியாயாதிபதியைப் பாருங்கள். அவர் பெயர் 'இப்சான்' அவனுக்கு முப்பது குமாரர்களும், முப்பது குமாரத்திகளும் இருந்தார்கள் முப்பது குமாரத்திகளையும் புறத்திலே விவாகம் பண்ணிக் கொடுத்து, தன் குமாரருக்கு முப்பது பெண்களை புறத்திலே கொண்டான் (நியா 12 9) என்றே வேதம் இப்படியும் சில சில்லரை கிறிஸ்தவர்கள் இருப்பார்கள் இப்சான் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான், பாருங்கள் கெட்ட மாதிரியான நியாயாதிபதி சில நியாயாதிபதிகள் மரித்து அடக்கம் பண்ணப்பட்டார்கள் (நியா 12 11-15) விசேஷம் ஒன்றுமில்லை

உங்கள் வரலாறும் எழுதப்படுகையில் குறிப்பிடத்தக்க விசேஷ அம்சம் இருக்க வேண்டாமா ? ஒவ்வொரு நாள் முடிவிலும் எனக்காக தன்னுயிரைகொடுத்த என் ஆத்ம நேசர் இயேசு கிறிஸ்துவுக்காக இன்று நான் படைத்த சாதனை என்ன ? என்று சிந்திப்போமாக

தேவனுடைய அதிசயங்களும், அற்புதங்களும்

மரித்த அவயவங்களும் உயிரடைதல்

தேவனின் ஆவியானவர் மரித்துப் போன நிலையில் உள்ளதான சரீரங்களையும் உயிர்ப்பிக்க வல்லமையுள்ளவராக இருக்கிறார். இலங்கையில் சம்பந்துறை கிராமத்தில் ஒரு சகோதரன் பக்கவாத வியாதியினால் பீடிக்கப்பட்டு தலைநகர் வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். இறந்து போகக்கூடிய நிலையில் அவர் உடல் இருந்ததால் இனி வைத்தியம் செய்யும் பலனில்லை என்ற நிலையில் உறவினர்கள் இருந்தார்கள். அத்துடன் இறப்பதற்கு முன்பு அவரை உயிருடன் உறவினர்களுக்கு காட்டிவிட வேண்டும் என்று எண்ணினார்கள். தலைநகரில் இருந்து ஊருக்கு கொண்டு வருவதற்கிடையில் பிராண நேரத்தில் ஜீவன் போகலாம் இந்நேரத்தில். அவரை பற்றி புதிய சுவிசேஷ சபை ஊழியனாகிய அடியேனுக்கு தெரியவந்தது. ஏற்கனவே சபை மூலம் அவருக்கு சத்தியம் அறிவிக்கப் பட்டிருந்தபடியினால் அவர் [illegible] வந்து சேர சபையில ஜெபம் பண்ணினோம். தேவன் ஜெபத்தைக் கேட்டார் அவர் இறந்து போகாமல் வீடு வந்து சேர்ந்ததும் செய்தி சபைக்கு அறிவிக்கப்பட்டது. அவர் இறப்பதற்கு முன்பு ஆண்டவரைக் குறித்து இன்னும் சில வார்த்தைகள் அவருக்கு அறிவிக்க வேண்டும் என ஏவப்பட்டே அவருக்காக ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தேன் அப்பொழுது (ரோம 8:11) வசனம் உணர்த்தப்பட்டு விரைவாகச்சென்று அவர் வீடு சென்று பார்த்தபோது மரணத்தறுவாயிலிருந்த அந்த சகோதரனுடைய தொண்டைப் பகுதியில் ஆப்பிரேஷன் செய்யப்பட்ட காயத்தில் சீழ் வடிந்து கொண்டிருந்தது. அந்த சகோதரன் உணர்ந்து கொள்ளக் கூடிய வகையில் இந்த வார்த்தையைக் குறித்து அவர் காதருகே மெதுவாக சொல்லி விட்டு அந்த காயத்தின் மீதும் தலை மீதும் கரம் வைத்து அந்த வார்த்தையை சொல்லி ஜெபம் பண்ணிவிட்டு சபைக்கு நடந்து வந்தேன் ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையின் படியே தேவன் அற்புதம் நடப்பித்தார். அன்றே காயத்தில் இருந்து சீழ் வடிவது நின்று போயிற்று. சரீரத்திலும் பெலனுண்டாகி, [illegible] போலவும் படிப்படியாக நடக்கவும் ஆரம்பித்து பூரண குணமடைந்தார்

பாஸ்டர். ஏ.லோகன் ஸ்ரீதர்
புதிய சுவிசேஷ சபை, [illegible], [illegible]

உள்ளத்தின் உணர்வு அலைகள்

ஒரு தனிமனிதன் தன்னை சுற்றி உள்ள பல மனிதர்களுடன் ஈடுபாடு உள்ளவனாக இருக்கிறான். நம் இருக்கிறவர்களிடத்தில் எழுகிற பற்பல உணர்ச்சிகளும் ஒரு தனிமனிதனை பாதிக்க கூடியதாக உள்ளது. ஒருவன் பேரில் மற்றவனுக்கு உண்டாகிற சந்தோஷமோ, பிரியமோ, பாசமோ அல்லது வெறுப்போ, கசப்போ, பகைமையோ, எரிச்சலோ, பொறாமையோ அவனை தாக்க கூடியதாக இருக்கிறது. ஈசாக்கு தன்னுடைய முதிர் வயதில், தனக்கு பிரியமான தன்மகன் ஏசாவை ஆசீர்வதிக்க விருப்பங்கொண்டார் விரும்பினவர், அவனை அழைத்து. உடனே ஆசீர்வதித்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யாமல், தன் மகனை அழைத்து, நீ வேட்டைக்குப் போய் வேட்டையாடி, அதை எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள பதார்த்தங்களை சமைத்து நான் புசிக்கவும், நான் மரணமடையுமுன்னே, என் ஆத்துமா

உன்னை ஆசீர்வதிக்கவும் என்னிடத்தில் கொண்டுவா என்றார் (ஆதி 27.3,4) தனக்கு பிரியமான ஆகாரத்தை மகன் கையில் வாங்கிப் புசித்து மகிழ்ச்சி அடைந்து திருப்தியான நிலையிலே, மனநிறைவுடனே மகனை ஆசீர்வதிக்க விரும்பினார் ஈசாக்குடைய மனநிறைவு மகனுக்கு ஆசீர்வாதத்தை அருளக்கூடியதாக இருந்தது அதே போல அப்போஸ்தலனாகிய பவுலுக்கு பணப் பற்றாக்குறை உண்டான போது, பிலிப்பிய சபையார் அவருக்கு உதவியபடியால், பரிபூரணமடைந்து, திருப்தி அடைந்த நிலையில் 'என் தேவன் தமது ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்'' என்று மனதார ஆசீர்வதித்தார். அப்போஸ்தலன் அடைந்த நிறைவு, பிலிப்பியரை ஆசீர்வாதத்திற்குள்ளாக்கிற்று (பிலி 4 16-19). மேலும் அப்போஸ்தலனாகிய யோவானுக்கு பிரியமான சகோதரனாகிய காயுவு, சபையாருக்கும், மற்றவர்களுக்கும் செய்கிற உதவிகளை, கேள்விப்பட்ட யோவான் சந்தோஷமடைந்து. ''பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாக இருப்பாயாக'' என்று வாழ்த்தினார் யோவானுக்கு உண்டான மன சந்தோஷம் காயுவுக்கு இந்த அருமையான வாழ்த்துதலை [redacted].

அதேப் போல் ஒரு விதவையோ, திக்கற்ற பிள்ளையோ ஒடுக்கப்படும் போது, அவர்கள் எதிர்க்க திராணியின்றி மனங்குமுறி, தெய்வத்தை நோக்கி முறையிட்டால், கர்த்தர் கோபங்கொண்டு, ஒடுக்கினவனை கொலை செய்வார், அவன் மனைவி விதவையாகவும், பிள்ளைகள் திக்கற்றவர்களாகும்படியும் செய்வார் என்று எச்சரிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது (யாத் 22.22-24) ஒருவனிடத்தும் அநீதமாய்க் குண்டாகிற மனவேதனை, குமுறல்கள பெரும் சாபத்தைக் கொண்டு வரும். அதே வேளையில் காரணமின்றி விடப்பட்ட சாபம் பலிக்காது என்றபடி ஒருவரை நாமாக புறக்கணித்தோ, அல்லது நீதியை நிலை நாட்டி ஒருவருக்கு தண்டனை உண்டாக்கின நாமோ பாதிக்கப்பட்டவருடைய எதிர்மறையான உணர்வுகளைப் பற்றிக் கவலைப் படத்தேவையில்லை

காரியம் என்னவென்றால், நமக்கு அருமையானவர்கள் சத்துருக்களாகி, நமக்கு தீமைசெய்யும் போது நம் மனம் நொந்தால் நம்மவர்கள் சாபத்திற்குள்ளானவர்கள் அது நமக்கே நஷ்டம், கஷ்டம் ஆகையால் இயேசு சொன்னபடி, ''இப்படிப்பட்ட சத்துருக்களை சிநேகிக்கவும், ஆசீர்வதிக்கவும், அவர்களுக்காக ஜெபிக்கவும் வேண்டும்'' (மத் : 5.44)

நம் பேரில் யாருக்காவது குறையுண்டானால், அவர்களின் வேதனை நமக்கு சாபத்தை உண்டாக்குமுன், நம்மை தாழ்த்தி ஒப்புரவாகி அவர்களுடைய வேதனையை மாற்றிவிட வேண்டும் (மத் 5 . 23-28) யார் என்ன நினைத்தால் என்ன ? யார் என்ன கேடு அடைந்தால் என்ன ? என்ற நிலையைப் போக்கை மாற்றி நமக்கிருக்கிறவர்களுடைய உணர்ச்சிகளை கவனித்து, நமக்கும் நம் சந்ததிக்கும் சாபம் வராதிருக்க எச்சரிக்கையாயிருப்போமாக

அத்துடன் மற்றவர்களின், விசேஷமாக பரிசுத்தவான்கள், பெரியவர்கள் மனதை சந்தோஷப்படுத்தி, திருப்தி அடையச் செய்து, ஆசீர்வாத வாழ்த்துதலை சுதந்தரிக்கத் தீவிரப்படுவோமாக !

சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருத்துங்கள். நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு. (கலா.6:1).

தீமையை நன்மையினால் வெல்லு

ஒரு அலுவலகத்தில் ஒரு தொழிலாளி ஒருவர் இருந்தார். அவர் ஒரு கடின உழைப்பாளி, மிகவும் நல்லவரும்கூட. அவரிடத்தில் ஒரு பலவீனம் உண்டு. அது என்னவெனில், வெயில் காலம் வந்து விட்டால், மூளைக் கோளாறு உண்டாகும். அந்த நாட்களில் கண்டபடி பேசுவார். காரணமில்லாமல் கடுங்கோபங்கொள்வார். அதிகாரிகள் ஏதாவது வேலை செய்யச் சொன்னால் முறைப்பார். இவருடைய பரிதாப நிலையை அறிந்த அந்த அலுவலகத்தில் உள்ளவர்கள், இந்தக் காலங்களில் அவரது கிரியைகளை, வார்த்தைகளை ஒரு பொருட்டாக எடுப்பதில்லை.

இப்படியிருக்க ஒரு புதிய அதிகாரி அந்த அலுவலகத்திற்கு மாறுதலாகி வந்தார். அந்த தொழிலாளியைப் பற்றி கேள்விப்பட்டார். ஒரு நாள் இந்த தொழிலாளிக்கு அதிகாரி மீது குறைபாடு உண்டாயிற்று.

ஆனால் அது வெயில் காலமாகையால் தொழிலாளி கடுங்கோபங்கொண்டு அதிகாரியை திட்டினார், மிரட்டினார், முறைத்தார், இப்படி பல சேஷ்டைகள் பண்ணியதைக் கண்டும் அந்த அதிகாரி சிரித்துக்கொண்டு, சற்றும் பாதிக்கப்படாமல் அமைதியாக தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தார். தொழிலாளி வெட்கிப் போனார். வெளியே வந்து, தன் சக தொழிலாளியிடம் "நான் கோபமாகத்தான் இருக்கிறேன், நான் நியாயமாகத்தான் பேசுகிறேன். ஆனாலும் அந்த அதிகாரி வெயில் காலத்தில் எனக்கு உண்டாயிருக்கிற பலவீனத்தினால் இப்படி பேசுகிறேன் என்று நினைத்து எனது கடின வார்த்தைகளை கவனிக்கவே இல்லையே", என்று தனது பலவீனத்தை குறித்து அவமானப்பட்டான் அதுபோலவே, இதிலே நாம் அறிகிற சத்தியம் என்னவெனில் எதிராளி நம் மீது கோபிக்கும் போது நாம் கோபப்படாமல் சாந்தத்தைக் காண்பிக்கும் போது, நமது நல்ல பண்பும் வெளிப்படும். அதே சமயத்தில் நமது எதிராளியை நமது சாந்தத்தினால் அவனது குறையை உணர்ந்து வருந்தும்படி செய்து விடலாம். தீமையைத் தீமையினால் வெல்லாமல் நன்மையினால் வெல்வோமாக

நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1பேது. 2:1).

பரிசுத்த விவாகம்

மணமகன்	மணமகள்	இடம்	தேதி :
குணசேகரன்	ஜெஸில் மேரி	பள்ளப்பட்டி கோம்பை	12-4-1999
ஜெபசேகர	அனிதா	கோயம்புத்தூர்	22-4-1999
டேவிட்	மார்த்தாள்	மும்பை	28-4-1999

இரத்த சாட்சிகள்

அனைத்தையும் துறந்து விண்ணிலிருந்து மண்ணுலகம் வந்து ஏழும் தருகிறது மக்களுக்காகப் பல துன்பங்கள் பட்டு, சோர் சிலுவையில் இரத்தம் சிந்தி மரித்த இயேசுவைப் போல், தங்கள் பாவங்களைச் சோகுங்களை இரத்தம் சிந்த துணிந்த தன்நிறுவனங்களின் தொகுப்பு இது. பல கிறிஸ்தவர் நிர்ப்பந்தமானவை அவர் அறிவுறிவனை ஏசுவின் மரணம் அவர்களின் நித்திய வாழ்வை வழங்கிக் கைக்க முடியவில்லை. எனவே தான் எவர்க்கும் அவர்கள் அஞ்சவில்லை. "கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்" என்ற அப். பவுலின் வெற்றி முழக்கமே அவர்களது ஜீவ கோஷமாகவும் அமைந்திருந்தது.

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், மேல்வருகிறது ஆனாரு சீஷர்களின் உள்ளங்களை உயிர்ப்பித்து வெகுவாக அக்கறைத்து ஆவியானவரின் அபிஷேகம் நிரம்ப அவர்கள் பெற்றுக்கொண்ட வல்லமையினால் கிறிஸ்துவின் நாமத்தைக் குறித்து அவர்கள் காட்டிய சுயம் வைராக்கியம் பிறரை பெரும் வியப்பிலும், குழப்பத்திலும் உணரவைத்தது.

ஸ்தேவான் (Stephen) : கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக மரித்த முதலாம் இரத்த சாட்சி. ஆதி சபையில் உதவிக்காரராக தெரிந்துக்கொள்ளப்பட்ட ஏழுபேரில் முதலாமவரானவர். கிறிஸ்துவை கொன்றது யூதர்களுக்கு அவர் இட்டமாய் போதித்த கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்டு சினமடைந்த யூதர்கள் அவரை நகரத்துக்கு புறம்பே தள்ளி கல்லெறிந்து கொன்றார்கள்.

கிறிஸ்துவின் தன்மை ஐக்கியத்திலும் கடவுள் தன்மையோடு ஒன்று பட்டிருந்தும் தெய்வீகத்தின் இரு தன்மைகளும் இரண்டறக் கலக்கவில்லையென்றும் (without confusion) ஒன்று மற்றொன்றாக மாற்றம் அடைந்ததல்லவென்றும் (without conversion) பகுக்கப்படவில்லையென்றும் (without division) பகுக்கப்படவில்லையென்றும் விளங்கி இரண்டும் தனித்தன்மை இழக்கவில்லை (The property of each nature being preserved) கிறிஸ்துவில் ஒரே ஆள், ஒரே பொருள் (one person one hypostasis) என்ற முறையில் பூரணமாய் விளங்கிறது. நாம் முன்கூறிய வேத சித்தாந்த பிரமாணம் இதைத் தெளிவாக விளக்கும் அறிக்கை கொள்கை. அப்போலினேரியஸின் கொள்கை, நெஸ்டோரியஸ் கொள்கை, யூடிக்கஸ் கொள்கை, ஒரு தன்மை கொள்கை (Monophysitism) ஒரே சித்தக்கொள்கை (Monothelites) முதலிய தவறான கொள்கைகளும் கல்சிதோன் பொதுச் சங்கத்திலும் பின் அதன் வழி வந்த ஏனைய திருச்சபையின் சங்கங்களிலும் நிராகரிக்கப்பட்டன. திரித்துவ சித்தாந்தத்தை ஆராய்வதற்கு இதைப்பற்றிய ஆராய்ச்சியும் அவசியமாயிற்று. ஒன்றை வற்புறுத்தும்படி மற்றதைக் கைவிட்டதைப் பற்றியே இவர்கள் தெரியாதவைகளைத் துரோகிகளாக எண்ணப்பட்டு வந்தனர். ஆனால் இத்தகைய புதியவைகளும் தோன்றிய பின்னரும் திருச்சபை தன் விசுவாசக் கோட்பாட்டை அறிக்கை செய்ய நிர்ப்பந்தப் படுத்தப்பட்டது. திரித்துவ சித்தாந்தம் அறுபது ஒலிபெற்று தெளிவாக விளக்கலாயிற்று.

(தொடரும்)

ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன். (யோவா 17:3)

புதிய எருசலேம் சபையின் புதிய கிளைகள்

22-6-99 செவ்வாய்க்கிழமையன்று வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள இலத்தேரி என்னுமிடத்தில் புதியகிளை சபையும், 24-6-99 வியாழக்கிழமையன்று ஆந்திரா மாநிலத்திலுள்ள விஜயவாடாவில் புதிய கிளைசபையும் எழுப்பி தேவனை மகிமைப்படுத்த தேவன் கிருபை செய்தார். அநேகமக்கள் கடந்துவந்து தேவாசீர்வாதம் பெற்றுச் சென்றார்கள். தொடர்ந்து இந்தக் கிளைசபைகள் வேர் பற்றி பல கிளைசபை வளரவும் ஆத்துமாக்களை தேவன் கூட்டம் கூட்டமாய் திருச்சபையின் அங்கங்களாய் மாற்றும்படி இந்த சபைகளுக்காக திருச்சபையார் ஜெபிக்கும்படி வேண்டுகிறோம்.

மார்த்தீன் லூத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

அதி.43. லூத்தர் [illegible] புருஷருக்கு ஒரு நல்மாதிரி

[illegible]

[illegible]

[illegible]

இருக்கும்போது சாத்தான் அப்படி அடிக்கடி செய்கிறான். தயவாய் நான் தன் பிள்ளைகளுக்கு மகா நல்ல காரியங்களையே செய்து. நல் சிநேகிதர் அவர்களுடைய கேட்டுக்கும் கெடுதிக்குமல்ல, ஆனால் அவர்களுடைய நன்மைக்கும் நலத்திற்குமாக நடப்பிப்போருமாய் பழகுவார். ஏனென்றால் அவர்கள் அவருடைய சரீரமும் இரத்தமும், அவர் விருப்பத்தோடு பெற்ற பிள்ளைகளுமாயிருக்கிறார்கள்

என் மரணத்திற்குப் பிறகு அவருக்கு என்ன சம்பவித்தபோதிலும் (கடவுளுடைய சித்தத்திற்கும் செய்கைக்கும் நான் என்னை விட்டுக்கொடுக்கிறது), அவர் ஒரு நல்ல தாயைக் [illegible] [illegible] சேர்த்துப் [illegible] சேற்று விதமாய்த் தன் பிள்ளைகளுக்குப் பகிர்ந்து கொடுத்து அனுபவிப்பாரென்றும் எனக்கு முழு நம்பிக்கையுண்டு" என்பதே

நிசமாய் பிரபு, தம் ஊழியர்களுடைய [illegible] வேண்டுமென்றும் [illegible] இல்லைபோது . சாட்சி , கொடுக்க வேண்டுமென்றும் [illegible] சொல்லுகிறார் [illegible] "நான் இந்த பத்திரத்தில் [illegible] வார்த்தைகளையும் . உபயோகிப்பதற்கு எனக்கு காரணங்கள் உண்டு நான் [illegible] இவ்வார்த்தைகளை எல்லோரும் என் வார்த்தைகளாகவே அங்கீகாரம் செய்யும்படி விரும்புகிறேன் ஏனென்றால் நான் பரலோகத்திலும் பூலோகத்திலும் ஆம், நரகத்திலும் கூடப் பிரயாணமாய் என்னை , அறிந்தவர்கள் இவனை ஒரு சாதுவென்று [illegible] என்னை அறியாமல் நம்பும்படிக்கும் போதுமான [illegible] அறிவாளும் எனக்குண்டு [illegible] என்னைப்பற்றி [illegible] பிரசங்கிகளும் என் [illegible] [illegible] எனக்கு [illegible] என்னை [illegible] பிரசங்கங்களும் என்னை [illegible] [illegible] [illegible] இருக்கிறது. [illegible] என் [illegible] சுவிசேஷத்தைப் பெறவும் என்னை [illegible] [illegible] பரிசுத்த [illegible] [illegible] இரக்கமுள்ள [illegible] தேவன் [illegible] [illegible] [illegible] [illegible] என்னை [illegible] தம்முடைய [illegible] பற்றிய சுவிசேஷத்தை [illegible]. இதில் என்னை உண்மையும் [illegible] அப்படியே என்னைக் கண்டு [illegible] இருக்கும் [illegible] மேலும் [illegible]. இந்த [illegible] சாதுவின் [illegible] [illegible] [illegible] [illegible] என்னை நம்புவார்களாக. இந்தச் சாதுவின் உண்மை [illegible] இது தேவனுடைய [illegible] அவருடைய சுவிசேஷத்திற்குச் சாட்சியுள்ள [illegible] [illegible] உண்மையும் [illegible] [illegible] [illegible] நான் சொல்லுவதே போதும் என்று நம்புகிறேன்.

இது என் கையால் எழுதப்பட்டு முத்திரை அடையாளமிடப்பட்டது.

சாட்சிகள்: [illegible]
[illegible]
[illegible].

(தொடரும்)

ஞானஸ்நானம்

14-3-99 அன்று 19 பேர் [illegible], 21-6-99 அன்று 18 பேர் [illegible]. 24-6-99 அன்று 10பேர் [illegible]. 26.6.99 அன்று 15பேர் [illegible]. 2-7-99 அன்று 23 பேர் [illegible] B-L [illegible] [illegible] தேவனுக்கே [illegible]

வேதபாடம்

(தொடர்ச்சி)

நியாயாதிபதிகளின் புத்தகம் 17,1-21:

[illegible] (நியா 20 28)

நியா 17,1-13:

[illegible] (நியா 17 9 10) [illegible] (நியா 17 11) [illegible] (நியா 17 12) [illegible]

நியா 19 1-21:25:

[illegible] 19 22 24 [illegible] (நியா 19 27) [illegible]

[illegible] (1 [illegible] 8:15) [illegible] 10:9) [illegible] 20 [illegible] (21:1) [illegible] 21:5)

[illegible] (21:7) [illegible] (21:20-25) [illegible] 21:19) [illegible] (20:28) [illegible] 21:25, 17:6) [illegible]

[illegible] 21:25)

[illegible]

ஆயுசுநாள்

இவ்வுலகத்திலே மனிதனுடைய வாழ்க்கை நிரந்தரமற்றதாக இருக்கிறது. அதிலிருந்து ஆதாமின் பாவத்தால் மரணம் ஒரு எல்லை வைக்கப்பட்டது. ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது (எபி 9:27). ஒரு சிலர் சொற்ப காலத்திலேயே மரித்து விடுகிறார்கள். சிலர் நீண்ட நாட்களாக நீடித்து பூரண வயதில் மரிக்கிறார்கள் (ஆதி 25:8, 35:29). ஆனாலும் மனிதனுடைய ஆயுசுநாள் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமாகவும் நிச்சயிக்கப்பட்டதும் முடிவாக இருக்கிறது. "கர்த்தாவே" நான் எவ்வளவு நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும் என் நாட்களின் அளவு இன்னது என்பதையும் எனக்கு தெரிவியும். இதோ என் நாட்களை நான்கு விரற்கடையளவாக்கினீர் என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாதது போலிருக்கிறது. எந்த மனிதனும் மாயையே என்பது நிச்சயம் (சங் 39:4-5) என்று தாவீது ராஜா எழுதுகிறார்.

நரைவயது என்றோ நரைமேவுத்து என்றோ குறிப்பிடாமல் நரைமேவுத்து என்று பார் நரையிலும் எந்த வேதத்திலும் எழுதப்பட்டதாக தெரியவில்லை. ஆகவே நரைமேவுத்து, நரைவயது என்று சொல்ல நமக்கும் ...

இவ்வுலகத்திலே மனிதர்கள் எப்படி மகிழ்ச்சியாய் ஜீவிப்பதும் நல்ல சுக பெலத்தின் பலனை அனுபவிப்பதும் தேவனுடைய அனுக்கிரகமாக இருக்கிறது (பிர 3:12-13). தேவனுடைய ஈவாக இருக்கிறது (பிர 5:18-20).

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (மத் 6:33). ஆகவே இவ்வுலகத்தில் சமாதானமாய், சந்தோஷமாய் மகிழ்ச்சியாய் நீண்ட நாள் நீடிக்கவும் தேவ ஆசீர்வாதமும் தேவகிருபையும் தேவ அனுக்கிரகமும் வேண்டும்.

மனிதர்கள் நீண்டநாட்கள் வாழ வேண்டும் என்று தான் விரும்புகிறார்கள். வயதாகி விட்டவர்களும் இளைஞர்களும் சுகமுள்ளவர்களும் உயிர் பிழைத்து வாழ வேண்டும் என்று விரும்புகிறார்கள். இவ்வுலகில் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் சமாதானமாய் ஜீவிப்பதற்கும் நாம் செய்ய வேண்டிய காரியங்களை வேதத்தின் வெளிச்சத்தில் ஆராய்வோம்.

1) முதலாவதாக கர்த்தருக்கு பயப்படுதல் ஆயுசு நாட்களைப் பெருகப்பண்ணும் (நீதி 10:27). என்னாலே உன் நாட்கள் பெருகும், உன் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாகும் (நீதி 9:11). என் மகனே என் வார்த்தைகளை ஏற்றுக்கொள் அப்பொழுது உன் ஆயுசின் வருஷங்கள் அதிகமாகும் (நீதி 4:10). ஆகவே ஒரு மனிதன் கர்த்தருக்கு பயந்து அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு நடந்தால் அவன் நீண்டகாலம் ஆசீர்வாதமாக ஜீவிக்க முடியும் என்று அறிகிறோம்.

2) இரண்டாவதாக தகப்பனையும் தாயையும் கனம் பண்ண வேண்டும். உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக. (யாத் 20:12, எபேசி 6:1-3). பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள், இது கர்த்தருக்குப் பிரியமானது (கொலோ 3:20).

3) மூன்றாவதாக நீடித்த ஆயுளை நாம் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ண வேண்டும் கேட்க வேண்டும். தாவீது நீண்ட ஆயுளை கேட்டான் அவருக்கு நீடிய ஆயுளை அளித்தார் (சங் 21:4). எசேக்கியா ராஜா வியாதிப்பட்டு மரணத்துக்கு நேராக

இருந்தார். அப்பொழுது அவர் கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தார். கர்த்தர் அவருடைய ஆயுசு நாளில் 15 வருடம் கூட்டினார். (ஏசா 38:1-5, 15-16).

துன்மார்க்கருடைய வருஷங்களோ குறுகிப்போம் (நீதி. 10:27). மனிதர்கள் மதுபானத்திற்கும் சிகரெட் மற்றும் போதை வஸ்துக்களுக்கும் போதை மாத்திரைகளுக்கும் அடிமையாவதினால் சரீரம் பாதிக்கப்பட்டு விரைவில் மரித்து விடுகிறார்கள். இரத்தப் பிரியரும், சூதுள்ள மனுஷரும் தங்கள் ஆயுசுநாட்களில் பாதிவரையிலாகிலும் பிழைத்திருக்க மாட்டார்கள் (சங். 55:23).

மனிதன் தற்கொலை செய்வது மிகப்பெரிய பாவமாகும். அவர்கள் நரகத்தில் போய் சதாகாலமும் வாதிக்கப்படுவார்கள். நம்முடைய உயிரைப் போக்கிக் கொள்ளுவதற்கு உரிமையில்லை; அதன் உரிமை சிருஷ்டி கர்த்தராகிய தேவனையே சேர்ந்தது. துரோகியாகிய யூதாஸ்காரியோத் நான்று கொண்டு செத்தான். எலியா வனாந்தரத்தில் ஒரு நாள் பிரயாணம் போய் ஒரு சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்து தான் சாக வேண்டும் என்று கோரினான். தேவன் அதற்கு சம்மதிக்கவில்லை (I இராஜா. 19:4-5) எலியாவின் ஊழியம் முடிந்தவுடன் கர்த்தர் அவரை உயிரோடு எடுத்துக்கொண்டார் (II இராஜா 2:11). ஆகவே மனிதன் மரிக்க வேண்டியது கட்டாயமல்ல. மரியாமலும் எடுத்துக் கொள்ளப்படமுடியும்.

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய ஆயுசு நாட்களை வீணாக கழிக்காமல் கர்த்தருக்காக உழைப்போமாக! ஒரு கதையைப் போல எங்கள் வருஷங்களைக் கழித்துப் போட்டோம் என்று சொல்லாதபடி கர்த்தருக்காக இந்த காரியங்களை செய்தோம் என்ற சந்தோஷத்தோடு நாம் மரிக்க வேண்டும் (சங். 90:9-10). எவ்வளவு நாள் வாழ்ந்தோம் என்பதல்ல எப்படி ஜீவித்தோம் என்பதே காரியம். இரட்சிக்கப்பட்டு பாவமன்னிப்பைப் பெற்று பரிசுத்த வாழ்க்கை வாழும் தேவனுடைய பிள்ளைகளுக்கு மரண பயமில்லை. இன்று மரித்தாலும் பரலோகத்தில் கர்த்தரோடு என்றென்றும் வாழும் சிலாக்கியம் உண்டு என்ற முழு நிச்சயம் நமக்கு உண்டு. ஆகவே நாம் சாகும் மட்டும் கர்த்தருக்கே உழைப்போமாக! அல்லது அவருடைய வருகையில் எடுத்துக் கொள்ளப்படும் மட்டும் உழைப்போமாக!

நல்ல போராட்டத்தை போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார் அப்படியும் (II தீமோ 4:7-8).

அவரே உனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமானவர் என்றான் (உபா. 30:20).

பரிசுத்த விவாகம்

மணமகன்	மணமகள்	நாள்	இடம்
I.M இன்பராஜ்	T. தமிழரசி (எ) பிரபுலா	23-6-99	துரைச்சாமிபுரம்

உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். (ஏசா. 26:3).

இந்தப்பிள்ளையை எனக்கு வளர்த்திடு

[illegible]

[illegible] (ஆதி 6 5-6) [illegible]

[illegible] (ஆதி 33 5) [illegible]

இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்

[illegible] (சங் 127 4) [illegible]

இந்தப்பிள்ளைக்காக விண்ணப்பம் பண்ணினேன்

[illegible] (1 சாமு 1 27) [illegible]

[illegible] ஒப்புவிக்கிறேன் என்று ஜெபித்தாள் அவள் ஜெபித்ததின்படி சாமுவேலை அன்னாளுக்கு கர்த்தர் கொடுத்தார் தொடர்ந்து அந்த பிள்ளை வளர்ந்து தேவனுக்கு உகந்த பரிசுத்த பாத்திரமாக திகழ வேண்டும் என்று ஜெபிக்க வேண்டும். யோபு என்ற பக்தனுக்கு ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் இருந்தார்கள் அந்த பிள்ளைகளுக்காக ஜெபம் பண்ணினான் " யோபு ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து தேவனை தங்கள் இருதயத்தில் தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி, அவர்களை அழைத்தனுப்பி பரிசுத்தப்படுத்தி அதிகாலமே எழுந்து அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகன பலிகளை செலுத்துவான் இந்தப் பிரகாரமாக யோபு அந்நாட்களில் எல்லாம் செய்து வருவான்" (யோபு 1 5) யோபு தன் பிள்ளைகள் பாவஞ்செய்யக் கூடாது என்றும் பாவஞ்செய்யாமல் தேவன் அவர்களைக் காக்க வேண்டும் என்று ஜெபம் பண்ணினார் அப்படி ஒரு நாள் இரண்டு நாள் அல்ல அந்தப்பிள்ளைகள் பிறந்து பெரியவர்களாக வளர்ந்த பொழுதும் அவர் அப்படி செய்ததாக அந்நாட்களிலெல்லாம் செய்து வருவான்" என்று சொல்லப்பட்டிருக்கிறது

கர்த்தருக்கேற்ற போதனையிலும் சிட்சையிலும் வளர்ப்பீர்களாக :

ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு மகன் அந்த குடும்பத்தாருக்கு அவன் ஒரே பையனாகையால் மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்டான் பள்ளியில் முதல்படிப்பு படிக்கும் பொழுது அடுத்தவனுடைய பொருளை திருடி கொண்டு வந்து விட்டான் அதை தாயிடம் காண்பிக்க தாயானவள் அதைப்பார்த்து கண்டிக்காமல் விட்டுவிட்டாள் தொடர்ந்து அவன் திருடி பெரிய பொருட்களையும் திருட ஆரம்பித்து விட்டான் கடைசியாக கெட்ட நண்பர்களோடு சேர்ந்து பெரிய கொலைக்குற்றத்தில் குற்றம் சாட்டப்பட்டு நீதிபதிக்கு முன் நிற்க வேண்டிய நிலை நீதிபதியார் அவனுக்கு தூக்கு தண்டனை விதித்து தீர்ப்பளித்து விட்டார் அவனுடைய தண்டனை நிறைவேற்றப்படும் நாள் வந்த பொழுது அவனிடம் உன்னுடைய கடைசி ஆசை என்னவென்று கேட்கப்பட்டது என்னுடைய தாயைப் பார்க்க வேண்டும் என்றான் தாயானவள் அழைத்து வரப்பட்டாள் அப்பொழுது அவன் தாயைப்பார்த்து நான் இந்நிலைக்கு வருவதற்கு காரணம் நீ தான் என்று சொல்லி முகத்தில் காரி துப்பினான் நான் சிறுவனாக இருந்த பொழுது திருடி வந்த பொருளை திருப்பி கொடுக்க சொல்லி என்னை தண்டிக்காமல் விட்டுவிட்டீர்கள் என்னை அப்பொழுது தண்டித்திருப்பீர்களானால் நான் இந்த நிலைக்கு வந்திருப்பேனா? என்று கதறினான்

சாலொமோன் கூறியபடி பிள்ளையின் நெஞ்சிலே மதியீனம் ஒட்டியிருக்கும் அதை தண்டனையின் பிரம்பு அவனை விட்டு அகற்றும்" (நீதி 22 15) என்றும் "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து, அவன் முதிர்வயதிலும் அதைவிடாதிருப்பான்" (நீதி 22 6) என்றும் கூறுகிறார் தவறு செய்யும் பொழுது தண்டித்து சரியான வழியில் நடத்துவது பெற்றோரின் கடமை நம்முடைய தேவனும் நம்மை அப்படியே நடத்துகிறார் தகப்பன் பிள்ளைகளிடத்தில் அன்பு கூருகிறது போல தேவனும் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து நம்மை அவருடைய பிள்ளைகளாக, புத்திரர்களாக, அவருடைய பரிசுத்தத்திற்கு பங்குள்ளவர்களாக மாற்றும் படியாக நம்மை சிட்சிக்கிறார் (எபி 12 6 -10)

பிள்ளைகளின் பாடசாலை பெற்றோரே

பிள்ளைகள் ஒழுக்கமுள்ளவர்களாக, பண்புள்ளவர்களாக வளர்கிறார்கள் என்றால் முதலாவது அது பெற்றோரைப் பொறுத்ததே குடும்பத்தில் பெற்றோர்களின் நடக்கையின் மூலம் பிள்ளைகள் கற்றுக் கொள்கிறார்கள் ஒரு போதகர் ஒரு குடும்பத்திற்கு ஆலோசனை கூறச் சென்றார் அப்பொழுது அந்த வீட்டின் பிள்ளைகள் அருகில் விளையாடிக்

கொண்டிருந்தார்கள். போதகர் அந்த அந்த குழந்தைகளின் விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர்கள் இருவரும் சண்டையிடுவதும் கீழ்ப்படியாமையுமுடையதுமான அந்த குழந்தைகளின் கிரியை பார்த்து பின்பு அந்த வீட்டிற்கு சென்றார். அப்பொழுது அவர் நீங்கள் குடும்பத்தில் மனைவியோடு எதிர்த்து பேசுவதும், நீங்கள் மனைவியை அடிப்பதும், சண்டையிடுவதுமாகத்தானே இருக்கிறீர்கள் என்றார். அவர்களுக்கு ஆச்சரியமாகிவிட்டது. அவர்களும் ஒத்துக்கொண்டனர். பின்பு அவர் அந்த குழந்தைகள் விளையாடின சம்பவத்தையும் அவர் அதை பார்த்ததையும் கூறினார். இந்த சம்பவத்திலிருந்து நாம் என்ன அறிந்து கொள்கிறோம். பெற்றோர்கள் குடும்பத்தில் எப்படி நடந்து கொள்கிறார்களோ அதைப் பார்த்து அந்த நடக்கையின் மூலம் பிள்ளைகள் கற்றுக் கொள்கிறார்கள். இங்கே ஒரு தேவனின் குடும்பத்தை குறித்து பரிசுத்தாவியானவர் சாட்சியாக எழுதி வைத்துள்ளார்.

அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள் (லூக் 1:6) என்று எலிசபெத் சகரியாவை குறித்து பார்க்கிறோம். ஆகவே அவர்களிடத்தில் பரிசுத்தமும் நீதியுமான யோவான்ஸ்நானகன் பிறந்தார்.

"பிள்ளைகளின் மேன்மை அவர்கள் பிதாக்களே" (நீதி 17:6)

விசுவாசத்திற்கு ஓர் பள்ளி :

நான் பிள்ளைகள் வளர்த்து ஆதரித்தேன் என்ற பிரகாரம் தேவ ஜனங்கள் தேவனுடைய [illegible]களையும் அவருடைய கிரியைகளையும் போதித்து விசுவாசத்தில் பிள்ளைகளை வளர்க்க வேண்டும். அதற்கு அந்த விசுவாசம் முதலாவது பெற்றோர்களுக்குள்ளாக இருக்க வேண்டும். அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன் (II தீமோ 1:5) என்று தீமோத்தேயுவின் பெற்றோரைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாமுக்குள் விசுவாசம் இருந்தது. ஆகவே "தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார் என்று முழு நிச்சயமாய் நம்பி, விசுவாசத்தில் வல்லவனானான்" (ரோ 4:21) என்றும் அதை தன்னுடைய பிள்ளைகளுக்கும் போதித்தார் (ஆதி 18:19 சங் 44:1) என்று எழுதப்பட்டிருக்கிறது. அவர் வம்ச வழியில் இயேசுவானவர் பிறக்கும்படியான சிலாக்கியத்தை பெற்றார். ஆபிரகாமின் குமாரனாகிய, தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் வம்ச வரலாறு என்று (மத் 1:1) பரிசுத்த ஆவியானவர் எழுதி வைத்துள்ளார்.

வேரானது பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும் :

தேவன் மனோவாவின் குடும்பத்தாருக்கு ஒரு குழந்தையை கொடுப்பேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார். அப்பொழுது மனோவா நீர் சொன்ன காரியம் நிறைவேறும் பொழுது அந்த பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும், அதை எப்படி நடத்த வேண்டும் என்று (நியா 13:12) கேட்டார். ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைகளை எப்படி நடத்த வேண்டும் என்று தேவனிடம் தெரிந்து கேட்க வேண்டும். அதற்கு தூதனானவர் மனோவாவை நோக்கி: "நான் ஸ்திரீயினிடத்தில் சொன்ன யாவற்றிற்கும் அவள் எச்சரிக்கையாயிருந்து ... நான் அவளுக்கு கட்டளையிட்டதெல்லாம் கைக்கொள்ளக்கடவள் என்றார் (நியா 13:13,14). தேவன் சொன்ன யாத்திரைகளில் [illegible] படிகள் முதலாவது எச்சரிக்கையாயிருந்து அப்போதும் தேவன் கட்டளையிட்டதெல்லாம் கைக்கொள்ளக் கடவள் என்பதாகும். இந்த பிரகாரமாக (ஸ்திரீ) [illegible] ... [illegible], மாம்சமானவைகளுக்கு நீட்டாமலைகளுக்கு எச்சரிக்கையாயிருந்து.

கர்த்தரிட்ட சகல கட்டளைகளை, பிரமாணங்களை உபதேசங்களைக் கைக்கொண்டு செயல்பட வேண்டும். ஒரு குடும்பம் கட்டப்படுவதற்கு கணவன் மனைவியே முக்கிய பங்கு வகிக்கிறது போல தேவனுடைய நாமம் மகிமைப்படும் வகைக்கு திருச்சபையே முக்கியமானதாகும். "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய் தலைமுறைதலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக (எபே 3:21) மற்றும் "மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள் அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள் (கலா 4:26) என்று சொல்லப்பட்டிருப்பதால் திருச்சபை (புதிய எருசலேம்) நம்மெல்லாருக்கும் தாயாக முன்மாதிரியான சபையாக இருக்கிறது. வேதாகம (எசா 11:1) கிறிஸ்து பரிசுத்தமாய் இருப்பது. தேவனால் அழைக்கப்பட்டு இரட்சிக்கப்பட்ட திருச்சபையின் பிள்ளைகள் திருச்சபை தேவநாமம் மகிமைப்படவும் ஊழியத்திலும் பரவவும், சாட்சியாகவும், நம்மையே கிறிஸ்துவை அறிவிக்கின்ற ஊழியராகவும் இருக்க வேண்டும். குணசாலியான ஸ்திரீ (சபை) புருஷனுக்கு (இயேசுகிறிஸ்துவுக்கு) கிரீடமாயிருக்கிறாள்" (நீதி 12:4)

அந்த பெருமிதம் பெரியவர்களும் தன் மகனை சாலொமோனைக் கேட்டதாய்' என்று கூறுவது

தேவ பிள்ளைகள் உலகில் சிறந்தவர்களாக பண்புள்ளவர்களாக பரிசுத்தவான்களாக தேவனுக்கு பிரியமானவர்களாக வாழ்ந்து பெற்ற தாயாகும் (திருச்சபைக்கும்) புகழைத் தேடித்தருவது பிள்ளைகளின் (திருச்சபை பரிசுத்தவான்களின்) கடமை இவ்வுலகப்பட்ட பிள்ளைகளை (சபையாரை) வளர்த்துவிடுவது பெற்றோர் கனிவ (திருச்சபையின்) கடமையாகும் அப்பொழுது அவள் (திருச்சபை) பிள்ளைகள் எழும்பி அவளை பாக்கியவதி என்பார்கள் (நீதி 31:28)

பிள்ளையானாலும் அதின் செய்கை சுத்தமோ செம்மையோ என்பது, அதின் நடக்கையினால் விளங்கும் (நீதி. 20:11).

தேவனுடைய அதிசயங்களும் அற்புதங்களும்

என்னுடைய பெயர் முருகேசன் என்னுடைய மனைவி பெயர் ராதா. எங்களுடைய சொந்த ஊர் பிள்ளையார் விளை கன்னியாகுமரி மாவட்டம். நாங்கள் இந்து மதத்தை சேர்ந்தவர்கள். என்னுடைய மனைவிக்கு இருதய வால்வு ஒன்று பழுதடைந்து விட்டபடியால் சுமார் பத்து வருட காலம் மிகவும் கஷ்டப்பட்டாள். எந்த வேலையும் செய்ய இயலாது மூச்சி விடுவதற்கும் மிகவும் கஷ்டப்பட்டாள். இறுதியில் கை, கால்களும் செயல்படாமல் ஆகிவிட்டது. நாகர்கோவிலில் உள்ள பெரிய மருத்துவமனைக்கு எல்லாம் அழைத்து சென்றோம். சுகம் கிடைக்கவில்லை. என் மனைவி உயிர் வாழ்வதே மிகுந்த சிரமமாக ஆகிவிட்டது.

எங்கள் நிலை அறிந்த என் நண்பர் ஒருவர் நாகர்கோவில் புதிய எருசலேம் சபை போதகரிடம் அழைத்து சென்று சென்றார். அவர்கள் எங்களுக்கு இயேசு கிறிஸ்து தான் மெய்யான கடவுள் அவரிடம் உங்கள் பாவங்களை அறிக்கையிட வேண்டும். அவர் உங்களை சுகப்படுத்துவார் என்று கூறினார்கள். நானும் என்னுடைய மனைவியும் நாகர்கோவில் புதிய எருசலேம் சபையின் பாஸ்டர் முன்பாக எங்களுடைய பாவங்களை அறிக்கை செய்தோம். நான் பெரிய குடிகாரனாக இருந்தேன். இன்னும் பல கெட்ட பழக்கவழக்கங்கள் என்னிடம் உண்டு. என் பாவங்களை அறிக்கையிட்ட பொழுது என்னை இயேசு பாவத்திலிருந்து விடுதலையாக்கினார். என் மனைவிக்கு இருந்த பயங்கர வியாதியை மாற்றி இயேசு அற்புதமாக விடுதலை கொடுத்தார். என்னையும் என் மனைவியையும் இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்தார். நாங்கள் இரட்சிப்பைப் பெற்று கர்த்தருக்குள் சந்தோஷமாக இருக்கிறோம். கர்த்தர் எங்கள் வாழ்க்கையில் நடப்பித்த அற்புத அடையாளங்களுக்கு கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். குடும்பமாக சாட்சியாக வாழ்ந்து வருகிறோம்.

சகோ. முருகேசன்
நாகர்கோவில்

பில்லி சூனியத்திலிருந்து விடுதலை

[illegible]

இப்படிக்கு

P. டேனியல் ராஜ்

[illegible]

இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தில் ஜீவித்தபோது பன்னிருவரும் சீஷர்களை தெரிந்து கொண்டு அசுத்த ஆவிகளை துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார் (மத் 10:1). அவர்களை ஊழியத்திற்கு அனுப்பும்போது வியாதியுள்ளவர்களை சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளை சுத்தம் பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள். இலவசமாய்ப் பெற்றீர்கள் இலவசமாய்க் கொடுங்கள் என்று கட்டளையிட்டார் (மத் 10:8).

இந்நாட்களில் ஊழியம் செய்கிறோம் என்று சொல்லுகிற அநேகர் தேவனுடைய கிருபையை வியாபாரமாக்கி சம்பாதிக்கும் ஆதாயத்தொழிலாக வைத்திருக்கிறார்கள் (1 தீமோ 6:5). இது தவறான காரியமாகும். அற்புதங்கள், அதிசயங்களானாலும், தேவனுடைய நாமம் மகிமைப்படவும் மனுஷர்கள் இயேசுவை தேவன் என்று ஏற்றுக்கொண்டு ஆத்தும இரட்சிப்படைவதற்கு ஏதுவாகவும் இருக்க வேண்டும். நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து செய்த அற்புத அதிசயங்கள் யாவும் தன்னை தேவன் என்று காண்பிக்கும்படியாகவும், அவர் மேல் விசுவாசம் வைக்கும்படியாகவும், செத்து அடக்கம் பண்ணப்பட்டு நாலு நாளாயிருந்த லாசருவை உயிரோடே எழுப்பினபோது அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள் (யோவா 11:45-47). ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேரை போஷித்தபடியினால் அவர் தீர்க்கதரிசி என்றார்கள் (யோவா 6:14). கானாவூர் கலியாண வீட்டிலே முதலாம் அற்புதத்தை நடத்தினபடியால் அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள் (யோவா 2:11). சமாரியஸ்திரீயின் வாழ்க்கையை வெளிப்படுத்தினபடியால் அவள் ஆண்டவரே! நீர் தீர்க்கதரிசி என்று சாட்சியிட்டாள். அந்த ஊரில் அநேகர் விசுவாசிகளானார்கள் (யோவா 4:25-29, 4:39-42).

இயேசுகிறிஸ்து குஷ்டரோகியை குணமாக்கின போது அவனை நோக்கி நீ உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து, நீ சுத்தமானதினிமித்தம் மோசே கட்டளையிட்டபடியே, அவர்களுக்கு சாட்சியாக பலி (காணிக்கை) செலுத்து என்று கட்டளையிட்டார் (லூக் 5:14). காணிக்கை என்பது மனமுவந்து கர்த்தருக்காக கொடுப்பதாகும், காணிக்கையை கேட்டு வாங்குவது பிச்சை எடுப்பது போன்றதாகும்.

அற்புத அதிசயங்களை நடத்துபவர்கள் தம் தேவனால் ஏற்கெனவே பயன்படுத்தப்படும் ஒரு கருவிதான் என்ற எண்ணம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். இன்று அநேகர் இன்னார் ஜெபம் பண்ண கர்த்தர் செய்தார் என்று தேவனை காட்டிலும் மனிதனுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் ஒருவர் அழுகின பழத்தை கொண்டு வந்து கொடுக்கும் தாயானவர் அதை தான் கொடுப்பதாக சொல்வது போன்றதாகும். தேவன் யாரையும் எடுத்து உபயோகிக்க முடியும். தேவனுடைய கிருபையை தவறாக பயன்படுத்தினால் அந்த கிருபை வரங்கள் எடுபட்டுப்போகும்.

இந்நாட்களில் அநேக ஊழியர்கள் பணம் [illegible] பணம் சம்பாதிப்பதற்கு பல்வேறு திட்டம் என்று காணிக்கைகளை தவணை முறையில் வசூலிப்பது போலவும், நன்கொடை என்றும் வாங்குகிறார்கள். பல பேர்களுக்கு, பணம் கொடுப்பவர்களுக்கு தான் ஜெபிப்பார்களா? ஏழைகளுக்கு ஜெபிக்கமாட்டார்களா? இதற்கு வேதாகமத்தில் என்ன ஆதாரம் இருக்கிறது? "அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள் அவர்கள்

கிறிஸ்துவின் சிலுவைக்கு பகைஞரென்று அநேகந்தரம் சொன்னேன். இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன் அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளை சிந்திக்கிறார்கள் (பிலி 3 18-19) என்று அப் பவுல் எழுதுகிறார்

இந்நாட்களில் அநேக மேடைப பிரசங்கிகள் பெயர் சொல்லி கர்த்தர் குணமாக்குகிறார் என்று குறி சொல்லுகிறார்களே அசுத்த ஆவிகளையுடைய மனிதர்களும் சரியாக குறி சொல்லுகிறார்களே (அப 16 16) அதனால் ஒரு மேன்மையுமில்லை இப்படி வழியாய் செய்ததாக வேதத்தில் மதிப்பில்லையே?

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தரே கர்த்தரே [illegible] நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே [illegible] அற்புதங்களை செய்தோம் அல்லவா? என்பார்கள் அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை அக்கிரமச் செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்று போங்கள் என்று இயேசு (மத் 7 21-23) கூறுகிறார்

எந்தவித அற்புதமும் அதிசயங்களும் தேவனுடைய நாமத்தின் மகிமைக்காகவும், ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு திருச்சபையாய் கூடி சேர்க்கப்படும்படியாகவும் செய்யப்பட வேண்டும் வரங்கள தேவனுடைய ஆவியினாலே கொடுக்கப்படுகிறது (I கொரி 12 8-11) அவைகள் அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, போதகர்களின் ஆளுகையில் செயல்பட வேண்டும் (I கொரி 12 28) அவைகள் பலன் கொடுக்கும் மாறான செயல்களினால் பலன் ஒன்றுமில்லை

குறி சொல்லுகிற ஆவியைக் கொண்டிருந்த ஒரு ஸ்திரீ... இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர் இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள் (அப். 16:16-17)

மனச்சாட்சி (CONSCIENCE)

உணர்வு, நன்மையை, தீமையைப பகுத்தறியும்குணம் (ரோம. 2 15,16) மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது அது உள்ளத்திலுள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும் (நீதி 20·27)

இதை அகப்பிரமாணமென்றாவது, அகத்துரைப்போனென்றாவது சொல்லலாம் நியாயத்தை உரைப்பதுதான் மனச்சாட்சியெனப்படும் (I தீமோ 1·5, அப் 24 16, ரோம. 9·2) கிறிஸ்துவின் புண்ணியங்களை ஏற்றுக்கொண்டது சுத்தமனச்சாட்சி எனப்படும் (எபி 10·2 9·14, I தீமோ. 3 9) பாவத்தினால் கெட்டுச் சத்தியத்தை மறந்து பாவத்தைச் சார்வது துர்மனச்சாட்சியென்றும் (எபி 10 22) சீர்கெட்ட மனச்சாட்சியென்றும் (I தீமோ 4 1) அசுத்தமனச்சாட்சியென்றும் (தீத்து 1 15) சொல்லப்படுகிறது

மனச்சாட்சி வேதத்திற்கிணங்கி நடக்க வேண்டும் அப்படி நடக்கும் போது நாம் மனச்சாட்சியைப் பின்பற்ற வேண்டும் (I கொரி 10 27, ரோ 13 5) என்பதே

"தேவனைத்தேடு"
"Seek God"

Regd. No. 040068/84
Postal Regd. No. MH BY NE-94/95
Tamil Monthly Magazine

தேவனுக்கே மகிமை

புதிய எருசலேம் சபையின் 31-ம் ஆண்டு நிறைவு விழா (8.8.1968 - 8.8.1999)

நீ மறுபடியும் பிரசங்கம் பண்ணு என்றார் (வெளி 10.11) மறுபடியும் திருச்சபையைக் கட்ட, தீர்க்கதரிசனமாய் பூரண சுவிசேஷத்தை மறுபடியும் பிரசங்கிக்க கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கட்டளையிட்டபடி பூமியிலே புதிய எருசலேம் எழும்பி 31 ஆண்டுகளாய் உலகமெங்கும் பரவி வருகிறது தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் ஒரே சரீரமாய (ஒரே சபையாய்) கூட்டி சேர்க்கப்பட்டு வருகிறார்கள் நீங்களும் வந்து சேர்ந்து கொள்ளுங்கள். தேவன் உங்களை அழைக்கிறார்

"நீ இங்கே வா! ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிப்பேன்" (வெளி. 21:9).

அறிவிப்புகள்

முழு இரவு விழிப்பு ஜெபம்

27 (ஆகஸ்ட்) வெள்ளி 1999
27 (செப்டம்பர்) திங்கள் 1999

புதிய எருசலேம் செய்தி பத்திரிகை

ஆண்டு சந்தா Rs.30.00
வெளிநாடு Rs.400.00

அனுப்ப வேண்டிய முகவரி :

CHIEF APOSTLE N. LAZAR
"NEW JERUSALEM CHURCH"
CHURCH LANE, TILAK NAGAR,
DARGA CROSS ROAD, SONAPUR,
BHANDUP, MUMBAI - 400 078.

மணி ஆர்டர் கூப்பனில் உங்கள் சந்தா (எண்) நம்பரை குறிப்பிடவும். பழைய சந்தாதாரரா அல்லது புதிய சந்தாதாரரா என்பதையும் குறிப்பிடவும்.

பணம் அனுப்புகிறவர்கள் சந்தாவா அல்லது நன்கொடையா என்பதை தெளிவாகக் குறிப்பிடவும்.


'புதிய எருசலேம் செய்தி' பத்திரிகை வேண்டுவோர் ரூ. 30 (முப்பது) சந்தா தொகையுடன் தங்கள் விலாசத்தை தெளிவாகக் கொட்டை எழுத்துக்களில் (CAPITAL LETTER) எழுதி பத்திரிகையை பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

Edited and Published by : Chief Apostle N. LAZAR, New Jerusalem Church, Church Lane, Tilak Nagar, Darga Cross Road, Sonapur, Bhandup, Mumbai - 400 078.
Printed at : NEW JERUSALEM PRESS, Tilak Nagar, Bhandup, Mumbai - 400 078.

புதிய எருசலேம் செய்தி

PUDHIYA YERUSALEM CHEIDHI

எக்காளம் 17 ; சத்தம் : செப்டம்பர் '00



" .வீட்டெஜமான் (இயேசுகிறிஸ்து) சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவா(ர்)ன் என்று நீங்கள் அறியீர்கள்......விழித்திருங்கள்...உங்களுக்கு சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள்..." மாற்கு 13 : 35-37

EDITOR : CHIEF APOSTLE N. LAZAR

MUMBAI, INDIA.

[illegible]

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டு கிறிஸ்துவுக்கேற்ற பூரண வளர்ச்சியடைந்தவர்களாகும் தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு ஒரே சரீரமாக கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும், சபையானது [illegible] போதனைகளுக்குத் தப்பி ஒரே சீராய் பூரண வளர்ச்சியடையும்படியாகவும் இப்பத்திரிகை வெளியிடப்படுகிறது (எபே 4 11-16)

[illegible] அடிப்படை உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்கு [illegible] இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் ? (அப் 1 1-3) எனக்கு காண்பித்து வைத்த சபையின் அஸ்திபார உபதேசங்கள்

1 உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் மத் 28 18. மாற்கு 16 15

2 விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிறவர்களை பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தில் ஞானஸ்நானப்படுத்துங்கள் - மத் 28 9 [illegible] (Through Action) செய்து காண்பித்தார்

3 திருச்சபையை கட்டி (மத் 16 18) நான் [illegible] கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு [illegible] - மத் 28 20

4 சபைகளுடைய பாவங்களை [illegible] 20.23

5 அவர்களை மேய்த்து ஆளுகை [illegible] 21 15 17

6 இவைகளை நடப்பிக்க பரிசுத்த [illegible] பெற்றுக்கொண்டு (அப் 1 5-8)

7 நான் வருகிற வரையிலும் என்னை நினைவுகூரும்படி திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார் - 1கொரி 11 23 26

நான் ஆண்டவரே [illegible] அஸ்திபார உபதேசங்கள் [illegible] (2) என்கிறார்கள் வேறு சிலர் ஏழு (7) என்கிறார்களே அது எப்படி? என்றேன்

[illegible] ஏழு தூணும் (நீதி 9 1-6) இது ஆதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளும் அதிகாரங்களுமாகும் இவைகளைத்தான் உனக்கு கொடுக்கிறேன் என்றார் (அப் 1 1, 10 40-43)

இதழின் உள்ளே

ஆசிரியர் உரை



ஜாதிகள் கொந்தளித்து ஜனங்கள் விருதா காரியங்களை சிந்திப்பானேன் கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும் பூமியின் இராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனை பண்ணி அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்து போடுவோம் என்கிறார்கள் பரலோகத்தில் வீற்றிருப்பவர் நகைப்பார் ஆண்டவர் அவர்களை இகழுவார் அப்பொழுது அவர் தமது கோபத்திலே அவர்களோடே பேசி, தமது உக்கிரத்திலே அவர்களைக் கலங்கப் பண்ணுவார்" சங் 2 1-5 என்று சத்திய வேதத்தில் எழுதியிருக்கிறபடி தேவ ஜனங்களின் எதிரிகளுக்கு நேரிடும் ஒரிஸாவில் ஒரு கிறிஸ்தவ மிஷனரியை எரித்ததினால, ஒரிஸாவின் ஒரு ஓட்டினால் மத்திய அரசாங்கம் கலைந்தது என்பதை இந்திய மக்கள் உணர வேண்டும், ஆம் ஒரிஸாவின் முக்கிய மந்திரியின் ஒரு ஓட்டே தீர்மானித்தது அதனால கர்த்தருக்கும் அவர் ஜனத்துக்கும் விரோத மானவைகளை உன் ஒரு ஓட்டு வீழ்த்திடுமே தேசத்தின் தேர்தலுக்காய் ஜெபிப்போம். செயல்படுவோம் பரலோகத்திலிருக்கிற தேவன் கிரியை செய்வார்

கிறிஸ்துவுக்குள்

Chief Apostle N. LAZAR

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன்

திரித்துவ சித்தாந்தத்தில் பரிசுத்த ஆவியைப் பற்றிய ஆழ்ந்த அறிவு அவசியம் என்பதை ஏற்கனவே முற்பகுதியிலும் வேத ஆதாரத்திலும் சித்தாந்த முறையிலும் திரித்துவத்தின் பிதாவோடும் திரித்துவத்தின் குமாரனோடும் சமமாக்கப்படுத்துவதிலும் ஆராய்ந்துள்ளோம். எனினும் திரித்துவ சித்தாந்தம் நன்கு விளங்க வேண்டுமானால் பரிசுத்த ஆவியைப் பற்றி இன்னும் சில குறிப்புகளை சித்தாந்த முறையில் படிக்க வேண்டியது அவசியம். திரித்துவ சித்தாந்தம் அனுபவத்தில் உண்டாகியது என்பது நாம் அறிய வேண்டிய முக்கிய சத்தியம். கடவுளை அவருடைய குமாரனில் ஏற்பட்ட வெளிப்பாட்டின் மூலமும் கடவுளையும் ஒரே பேரான குமாரனையும், பரிசுத்த ஆவியின் மூலம் ஏற்பட்ட வெளிப்பாட்டை அனுபவித்து அந்த அனுபவத்தில் (Experience) ஒரே கடவுளும் அவர் வெளிப்படுத்திய ஒரே பேரான குமாரனும். அவர்களின்று புறப்பட்டவருமாகிய பரிசுத்த ஆவியும் மூவராக ஒரே கடவுள் ஒரே தன்மையுடையவர், ஒரே காலத்திலிருப்பவர் என்பதே திரித்துவசித்தாந்தத்தின் தனிச்சிறப்பு. இச்சித்தாந்த அனுபவமே மக்கள் ஒருவரோடொருவர் ஐக்கியப்படுவதற்கும் மக்கள் கடவுளோடு ஐக்கியப்படுவதற்கும், அப்பா பிதாவே என்று கூப்பிடும் புத்திர சுவிகார நிலைக்கும் அடிப்படை. அத்தகைய புத்திர சுவிகாரமும், அந்நியோன்யமும் பரிசுத்த ஆவியின் மூலமே ஏற்படுவதாகும். பரிசுத்த ஆவியைப் பற்றிய சித்தாந்தம் திரித்துவ சித்தாந்தத்தின் முக்கியமான பகுதியாகும். குமாரனாகிய கிறிஸ்து இயேசுவின் சீஷர்கள் பெந்தெகொஸ்தே நாளில் புதுப்பிறப்பு பெற்றனர் புதுப்பிறப்பு பெற்று தங்களை உலகுக்கு அறிவிப்பதற்கு அதிகாரத்தையும் பெருமையையும் வல்லமையையும் பெற்று தங்கள் ஆண்டவராகிய இயேசு சுவாமியோடு கூட ஒரே நோக்குடைய வர்களாய, ஒரே நோக்குடைய மக்களாய வாழும் பாக்கியத்தையும் பெற்ற புத்திரசுவிகாரமுடையவர்களானார்கள். பிந்திய காலத்தில் இனி நானல்ல கிறிஸ்து என்ற பவுலின் அனுபவம் அதுவே. பெந்தெகொஸ்தே நாளுக்கு பின்னரே பேதுருவும் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்று கூறினார். பரிசுத்தஆவியின் அனுபவத்தின் மூலமாகவே கடவுளின் கிரியை குமாரனில் உண்டாகிறதோடு ஏற்பட்ட சம்பந்தத்திலும் காணக்கூடியதாய் ஆயிற்று (அப 2 38, 3 6, ரோ 12 15, கலா 4 4-6, 2 20, 6 15, எபி 15 27, ரோ 12 45) இவற்றை ஆராயும் போது ஒருவன் கிறிஸ்துவின் வாழ்க்கையை தன் வாழ்க்கையில் பரிசுத்தஆவியின் மூலம் தொடர்ந்து விரிவாக்க வேண்டும் என்ற பெரிய உண்மையை அறிந்து கொள்வான். இந்த உண்மையை அறிந்து கொள்ளும் போது திரித்துவம் ஒரு பொருளற்ற இரகசியமாக காணப்படாமல் கடவுளின் தன்மையை வெளிப்படுத்துகிற ஒரு அனுபவ வாழ்க்கையை நாம் விளக்கத்தக்க அளவில் எடுத்துக்காட்டும் ஓர் முப்பொருளாக காணப்படும். மனிதனை தன்னகத்தேயுள்ள தெய்வத்தன்மையை அறிய அவனை விழிக்கச் செய்வதும் தெய்வீகத் தன்மையில் ஒளிபெறச் செய்வதும் பரிசுத்தஆவியின் அனுபவ வாழ்க்கையே கிறிஸ்துவைப் பற்றியும், கிறிஸ்துவுக்கும் அவர் வெளிப்பாட்டின் மூலம் உண்டிருக்குமுறை சம்பந்தத்தை கடவுள் சாதுயமாக அனுபவித்து அறிய துணைசெய்வதும் பரிசுத்தஆவியே. கிறிஸ்துவின் மனுஷ அவதாரத்தின் மூலம் நாம் புது வாழ்வு அடையக் கூடியவர்களுடையவர்களாயிருந்த தோடு சம்பந்தப்படுகிறார் அச்சம்பந்தத்தில் மனித சரித்திரம் அல்லது மனுஷீக சரித்திரம்

முற்றுப்பெற்ற ஒரு புதிய யுகம் அல்லது நவயுகம் ஆரம்பமாகிறது. உயிர்த்தெழுந்து பிரவேசித்ததின் அவரது மகிமைப்படுத்தப்பட்டதின் அவர் வெளியே இருந்து வந்த ஆவியானவர் விசுவாசிக்கிறவர்களுக்கு கொடுக்கப்பட்ட அவரே சிறப்பிக்கும் புது யுகமாக மாறி வேறு எவரும் புதுப்பிறப்பும் அவரில் முதலாவது அவரே சிறப்பித்தின் பூரணமாய் விளங்குகிறார், முதலாய் இருக்கிறார்." இந்த அறிவு பரிசுத்தாவியினால் மாத்திரமே உண்டாகும் இயேசு கிறிஸ்துவின் மனுஷீக வாழ்க்கை பரிசுத்தாவியின் வல்லமையாலும், உதவியாலும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும் வாழ்க்கையே ஆகிறது. உன்னத பழக்கத்தில் வல்லமையாய் பலப்படுவது என்ற அப் பவுலின் போதனையும் அதுவே எபே 3 14-19 வரை மெய்ப்பட கூறுகிறது கொள்ளும். நித்திய ஆவியினாலே தம்மை தாமே பழுதற்றவராக தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவின் இரத்தம் (எபி 9 14, யோவா 4 34) பரிசுத்தாவியின் மூலம் பிதாவும் குமாரனும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் சுய கொடுத்தலே (Mutual Self Giving) தெய்வீக வாழ்க்கை எனப்படும் குமாரனையும் பிதாவையும் இணைப்பது ஆவியின் மூலமாய் உண்டாகும் பரத்துவமே அது நித்தியத்திற்கு உரியது இந்நிலையில் கேட்கப்பட வேண்டிய மற்றொரு முக்கிய கேள்வியுண்டு. பரிசுத்தாவி அவர் எனப்படுமா? (Personal) அது எனப்படுமா? (Impersonal) இதுபற்றி முறையுடனே சிறிது சொல்லப்பட்டது. ஆள் என்ற சொல்லுக்குரியதும் அது என்ற சொல்லுக்குரியதும் வேதாகமத்தில் ஆதாரங்கள் உள்ளன பரிசுத்தாவி 'பரிசுத்தாவியானவர் என்றும் காணப்படும் 'ஆவியை அனுப்புவேன்' 'தேற்றரவாளன்' 'ஆவியின் கனி 'ஆவியானவர்' 'ஆவியின் சிந்தை' 'ஆவியின் ஐக்கியம்' 'பரிசுத்தாவி' உங்களிடத்தில் வரும்போதே ஆவிக்கேற்ப நடந்து கொள்ளுங்கள். ஏற்றதுடைய ஆவி என்ற பல தொடர்களை வேதாகமத்தில் காண்கிறோம் (இவை பரிசுத்தாவியைப் பற்றி குறிப்பிட அத்தியாயத்தில் சொல்லப்பட்டவை பல புதிய பரிசுத்த வேதாகமத்தில் 'அவர்' என்பதற்கும் 'அது' என்பதற்கும் உரிய பகுதிகளை கண்டுபிடித்து ஆராய்வதும் அவசியம்) கவனிக்க வேண்டிய முக்கிய குறிப்பு கிரேக்க உபயோகத்தில் எந்த ஆவி அது (It) என்ற சொல்லைக் குறிக்கப்பட்ட அவர் (He) என்றே சொல்லப்பட வேண்டும் பரிசுத்தாவி பிதாவின் தன்மையும் குமாரனின் தன்மையும் உடையவர் புதிய ஏற்பாடு கொண்டாட்டு எத்தியத்தில் ஆராய்ந்துகொண்டு ஆராய்ச்சி போது திரித்துவத்தின் ஒருவராக அவர் ஆள் என்றே சொல்லப்பட வேண்டும் திரு. புதிய ஏற்பாடு கிறிஸ்தவ அனுபவத்திற்கு மறுவடிவு ஆவிக்கு. அதற்கு இவ்வகை ஆள் என்றே சொல்லப் படக்கூடியதாக நாம் பார்க்கிறோம் இந்த அறிவுடைய புதிய ஏற்பாடு மக்களுக்கு பரிசுத்தாவி அவர் என்பது புதிய பாடமாக தோன்றாது குறிப்பாக பெந்தெகொஸ்தே நாளுக்குப்பின் சீஷர்கள் தங்கள் வாழ்க்கையில் அனுபவித்து அது என்பதல்ல அவர் எனப்படும் பிதாவின் ஒரே கடவுள் குமாரனில் கண்டு கொண்டனர் குமாரனை அனுபவத்த பரிசுத்தாவியின் மூலம் பூரணமாய் கண்டு கொண்டனர் பரிசுத்தாவியை பெற்றவர் இயேசு சுவாமி தங்களை விட்டு மறைந்த பிரகாரம் எடுபட்டதும். பெந்தெகொஸ்தே நாளனிலும் இடம்பெற உள்ள நாளைய நிறைவு அதன்படி பரிசுத்தாவியை பெற்றவர் குமாரன் தங்களோடு நடந்திருப்பதை அறிந்து கொண்டனர். பரிசுத்தாவி இயேசுவின் ஆவி. இயேசுவினுடைய குமாரன். ஆகையால் பரிசுத்தாவி, அன்னைவருக்கு 'அவர்' என்றே அறியப் பட்டனர் இத்தகைய அனுபவத்தின் மூலம் புதிய ஏற்பாடும் அது என்ற சொல்லைக் குறிக்கும் வேதாகமத்திலும் அவர் என்ற சொல்லப்படுகிற வேத வசனங்களும், பரிசுத்தாவி 'அவர்' திரித்துவத்தில் ஒருவர்'.

பிதாவிலிருந்தும் குமாரனிலிருந்தும் புறப்படுகிறவர் என்ற முக்கிய சத்தியத்தையே குறிப்பிடுகிறது. பரிசுத்தாவியின் தெய்வீகத்தை பற்றி (God head of the the Holy Sprit) மக்கதோனியஸ் என்ற வேத புரட்டன் மறுத்து உண்டு கி.பி 381 ஆண்டில் கான்ஸ்டாண்டிநோபிளில் கூடிய சபை சங்கம் அக்கொடிய புரட்டுபோதகத்தை நிராகரித்தது என்ற முக்கிய குறிப்புகளையும் இங்கே நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்

(தொடரும்)

இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார், நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். (யோவா. 14:23).

மார்த்தின் லூத்தர் சாஸ்திரியாரின் ஜீவிய சரித்திரம்

(தொடர்ச்சி)

அதி. 44. லூத்தருடைய கடைசி நாட்களும் மரணமும்.

லூத்தர் தமதுடைய பிறந்தநாளில் 62-ம் வருஷத்தை 1545-ம் நவம்பர் மாதம் 10-ம் தேதி கொண்டாடினார். ஒரு வாரத்திற்குப் பிறகு ஆதியாகம வியாக்கியானத்தை முடித்து அதில் அவர் எழுதும் கடைசி வார்த்தைகளாவன "இது அருமையான ஆதியாகமம். எனக்குப்பிறகு மற்றவர்கள் இதை அதிக நன்றாய் எழுத ஆண்டவர் அருள் புரிவாராக. இனி நான் ஒன்றும் செய்யமுடியாத சக்தியற்றிருக்கிறேன். ஆண்டவர் எனக்குப் பாக்கியமும் ஆசீர்வாதமுமான மரணத்தை அருளும்படி எனக்காக ஜெபியுங்கள்" என்பதே.

லூத்தர் தம் ஆயுளின் முடிவுபரியந்தம் புண்ணிய பணிவிடை செய்யும் பாக்கியம் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. மான்ஸ்பெல்ட் பிரபுக்களிடை ஏற்பட்ட அதிருப்தி லூத்தர ஐஸ்லேபன் பட்டணம் வந்து அங்குள்ள பிரபுக்களுக்குள்ளிருந்த மனஸ்தாபங்களை நீக்கி, அவர்களுக்குள் சமாதானம் உண்டு பண்ணவேண்டுமென்று லூத்தரை வரும்படியாய் வருந்தியழைத்தனர். லூத்தர் அவருக்கு எழுதிய பதிலாவது 'எனக்கு மிகுதியான வேலை இருக்கிறது என்றாலும் நீங்கள் கேட்டுக்கொள்ளும் விஷயமாக ஒரு வாரம் செலவிட மனதாயிருக்கிறேன். ஏனென்றால் சகல பொருந்திய பிரபுக்களுக்குள்ளே ஐக்கியமுண்டுபண்ணின பிறகு நான் சமாதானமாய் மரிக்கலாம்" என்பதே.

லூத்தர், அவருடைய மூன்று குமாரர், அவர்களுடைய உபாத்தியாயர் உல்பு என்ற சகோதரனாய் அழைக்கப்படும் ஐயப்பெஸ்கர் என்னும் லூத்தருடைய வேலையாள் ஆகிய இவர்கள் எல்லாரும் பிரயாணத்திற்கு ஆயத்தமாயிருந்தார்கள். அவருடைய தேசமெல்லாம் மெய்த்த வேதனையோடும் கண்ணீரோடும் வழியிட்டனுப்பினார்கள். தம்மை இனித் தம்மை இவ்வுலகில் பார்க்கமாட்டார்கள் என்ற முடிவு அவர்களுக்கு வெளிப்படையாய்த் தோன்றிற்று. லூத்தர் 1546-ம் வருஷம் ஜனவரி மாதம் 23-ம் தேதி ஐஸ்லேபன் பட்டணத்திற்குப் புறப்படுமுன் தம்பிரிய மனைவி காத்தேயை ஆசீர்வதித்த போது அப்பெண் விம்மி அழுதாள். சாலே ஆற்றுப்பெருக்கால் அதைக் கடக்க முடியாமல் ஆலே பட்டணத்தில் மூன்று நாள் தங்கும்படி நேரிட்டது. இங்கே தம் சிநேகிதர் ஒருவருக்கு லூத்தர், "நான் மான்ஸ்பெல்ட் பிரபுக்களை சமாதானப்படுத்த ஐஸ்லேபன் பட்டணம் போகிறேன். கிறிஸ்து, மனித ஜாதியைப் பிதாவாகிய தேவனோடு சமாதானப்படுத்த விரும்பினபோது அவர் அவர்களுக்காக மரிக்க

[illegible]

[illegible]

[illegible] பிப்ரவரி மாதம் 14-ம் தேதி [illegible]

[illegible]

பிப்ரவரி மாதம் 16-ம், 17-ம் தேதிகளில் [illegible] 17ம் தேதி [illegible]

[illegible]

[illegible]

[illegible]

ஆண்டவரும் நம்முடைய [illegible] ஆசாரியரும் மத்தியஸ்தருமாகிய இயேசு கிறிஸ்துவை நோக்கிய படியே [illegible] ஆண்டவர் [illegible] என்று [illegible]

[illegible]

[illegible] தேவனும் மரணத்திலிருந்து நம்மை விடுவிக்கும் ஆண்டவரும் கர்த்தருமாய் இருக்கிறார்" என்று ஜெபித்தார்.

கொஞ்ச மருந்து சாப்பிட்டு அப்படியும் அவர், நான் போகிறேன். என் ஆவியை விட்டுவிடுவோம்" என்று மறுபடியும் சொல்லி,

ட்டனே. 'நல்லவே உன்னுடைய கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன். சத்திய பரனே கர்த்தரே நீர் என்னை மீட்டுக் கொண்டீர்' என்று மூன்றுதரம் அறிக்கை செய்தார். அதன்பின் அவர் அமைதியாயிருந்தார். அவரை நன்றாய்ச் சோதித்து இரத்த நாடி [illegible] துடிக்கச் செய்தும் [illegible] அசைவில்லை. [illegible] ஜோனஸ் சாஸ்திரியாரும், கேலியஸ் என்பவரும் லூத்தருடைய காதில் உரத்த சத்தமாய் "வணக்கமுள்ள பிதாவே, கிறிஸ்துவையும், நீர் பிரசங்கித்த போதனைகளை நம்பும் நம்பிக்கையிலும் மரிக்கிறீரா?" என்று கேட்டார்கள். லூத்தர் மறுபடியும் தம் கண்களைத் திறந்து "ஆம்" என்று திட்டமாய் தெளிவாய்ச் சொன்னார். அப்பால் அவர் வலதுபுறம் திரும்பி நித்திரை போன்ற கால்மணி நேரத்திற்குள் முகம் வெளுத்துக் கால்கள் குளிர்ந்துபோய் அவர் இளைப்பாறும் [illegible] சேர்ந்து [illegible] அவர் மரணம், 1546-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 18-ம் தேதி அதிகாலை 2 மணிக்கும் 3 மணிக்கும் இடையில் சம்பவித்தது.

அதி. 45. லூத்தரின் அடக்கமும், அவர் இளைப்பாறும் கடைசி இடமும்.

கிறிஸ்து இயேசுவில் நித்திரையடைந்த லூத்தருடைய "பிரேதம்" எல்லாரும் பார்க்கும்படி கிடத்தி வைக்கப்பட்டிருந்தது. அப்போது ஆயிரக்கணக்கான ஜனங்கள் திரள் திரளாக வந்து அவர் முகத்தைப் பார்த்துப் பிரலாபித்தார்கள். அவருடைய பிரேதம் மறுநாள் ஐஸ்லேபன் பட்டணத்திலுள்ள பரிசுத்த அந்திரேயா ஆலயத்திற்குக் கொண்டுபோகப்பட்டு அன்று பிற்பகல் இரண்டு மணிக்குப் பிரசங்கம் [illegible] ஜோனஸ் சாஸ்திரியார் 1தெச. 4:13-ம் வசனத்தின் பேரிலும், கேலியஸ் என்பவர் ஏசாயா 57:1-2ம் வசனத்தின் பேரிலும் [illegible] பிரசங்கம் செய்தார்கள்.

[illegible] பிரபு [illegible] பிரேதத்தை [illegible] விட்டன்பேர்க்குக்கு [illegible] லூத்தருடைய பிரேதம் [illegible] விட்டன்பர்க் பட்டணம் கொண்டு போகப்பட்டு [illegible] பிரபுக்கள் [illegible] பிரேதம் [illegible] பட்டணத்து [illegible]

பிப்ரவரி மாதம் 22-ம் தேதி பிரேதம் விட்டன்பர்க் வந்து சேர்ந்தது. [illegible] கோட்டை ஆலயத்திற்குப் பிரேதம் [illegible] கொண்டுபோகப்பட்டது. பிரேதத்திற்கு முன் [illegible] பிரபுக்களும் [illegible] பரிவாரங்களும், பிரேதத்திற்குப் பின் [illegible] அம்மாளும் அவர்களுடைய பிள்ளைகளும், [illegible] பிரபுக்களின் [illegible] நகர [illegible] விட்டன்பர்க் நகரவாசிகளும் [illegible]

1 தெச. 4:13-ம் வசனத்தின் பேரில் புகன்ஹேகன் சாஸ்திரியார் [illegible] பிரசங்கம் செய்தார் [illegible] மெலங்க்தன் [illegible] "என் தகப்பனே, என் தகப்பனே இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரைவீரருமாய் இருந்தவரே" என்று கதறி அழுதார்.

லூத்தர் 35 [illegible] ஆலயத்தில் [illegible] பிரசங்கித்த பிரசங்க மேடையின் அருகில் அவருடைய பிரேதம் [illegible] இளைப்பாறும்படி அடக்கம் பண்ணப்பட்டது. (முற்றும்)

கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவருடைய பார்வைக்கு அருமையாயிருக்கிறது (சங். 116:15)

மறுரூபம்

இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். (I கொரி 15:51) என்று பரிசுத்த பவுல் கூறுகிறார்

வேத புத்தகத்தில் அநேக இரகசியங்கள் எழுதப்பட்டுள்ளன. அவைகளில் இந்த இரகசியம் மகா மேன்மையுள்ளதாகும். ஆதியிலே தேவன் மனிதனை சிருஷ்டிக்கும்போது, நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் உண்டாக்கினார் (ஆதி 1:26) என்று வேதம் கூறுகிறது. இவ்விதமாய், தேவசாயலாய் தேவனுடைய ரூபமாய் உண்டாக்கப்பட்ட மனிதன் பாவம் செய்தபடியால், பாவ மனித சாயலாய் மாறிவிட்டான். இவ்விதமாய் பாவமாமிச சாயலாய் மாறிவிட்ட மனிதனை மீண்டும் தமது சாயல், தமது ரூபத்தின்படி மறுரூபமடையச் செய்வதற்கு சித்தமாகிய தேவன், தமது குமாரனைப் பாவமாமிச சாயலில் அனுப்பி பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார் என்று வாசிக்கிறோம் (ரோம 8:3)

கடைசி எக்காளம் தொனிக்கும்போது தேவனுடைய மக்களுக்குக் கிடைக்கக்கூடிய மறுரூபமானது ஒரே நாளில் ஒரு நிமிஷத்தில் கிடைப்பதில்லை, அது நீண்ட நாட்களாக மனிதனுடைய வாழ்க்கையில் உள்ளான மனுஷனில் நடைபெறும். தெய்வீக வாழ்க்கையின் உள்ளான மனுஷனின் தொடக்கமின்றி முடிவாகக் காணப்படுகிறது. இயேசு கிறிஸ்துவுக்கு ஆராதனை செய்கிற எல்லாருக்கும் இந்த மறுரூபம் அல்லது தெய்வீக சாயல் கிடைப்பதில்லை "தேவன் எவர்களை முன்குறித்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கொப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" (ரோம 8:29) என்று பரிசுத்த பவுல் கூறுகிறார்

மனிதன் பாவம் செய்தபடியால், தேவசாயலையும், தேவனுடைய ரூபத்தையும் இழந்து விட்டான். அதோடு மனிதன் தேவனுக்கு சத்துருவாகவும் மாறிவிட்டான் (ரோம 5:10) என்று வேதம் கூறுகிறது. பாவமாகிய பகையானது மனிதனைத் தேவனை விட்டும், தேவ சாயலை விட்டும் பிரித்து விட்டது. இந்த பகையை சிலுவையில் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் (யூதரையும்-புறஜாதிகளையும்) தமக்குள் ஒரே புதிய மனுஷனாக (தம்மைப்போல) சிருஷ்டித்தார் (எபே 2:15,16) என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். ஆகையால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பாவமாமிச சாயலாக வந்து, மனிதனுக்குள் பாவம் என்ற தம்முடைய மாமிசத்தில் [illegible] ஏற்றுக் கொண்டு கல்வாரிசிலுவையில் பரிசுத்தர் மனிதனுடைய பாவங்களும் அவரோடுகூட சிலுவையில் அறையப்பட்டு மனிதன் பாவசாயலை விட்டுத் தேவ சாயலை அடைந்து கொள்கிறான், என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது

மேலும் முதலில் மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன். இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர். மண்ணானவன் எப்படிப்பட்டவனோ, மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே. வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே. மேலும் மண்ணானவனுடைய சாயலை (பாவமாமிசசாயலை) அணிந்திருக்கிறது போல வானவருடைய சாயலையும் அணிந்து கொள்வோம் (I கொரி. 15:47-49) என்று பவுல் கூறுகிறார்

ஆதியிலே தேவ சாயலாய் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் பாவம் செய்து பாவமாமிச சாயலாகி விட்டான் என்றும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் பாவத்தைக் கொன்று மீண்டும் மனித குலத்தை புதிய மனிதனாகத் தேவ சாயலாக சிருஷ்டித்தார

என்றும் வாசிக்கிறோம். இவ்விதமாய சிலுவையில் சிருஷ்டிக்கப் பட்ட புதிய மனிதனை (வானவருடைய சாயலை) நாம் தரித்துக்கொள்வோம் என்றும் அப்-பவுல் கூறுகிறார்

இவ்விதமாய் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் சிருஷ்டித்த புதிய மனிதனை அதாவது வானவருடைய சாயலை நாம் எப்படி தரித்துக் கொள்வதென்று வேதம் கூறுவதை கவனிப்பது நல்லது

1) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சுவிசேஷத்தைக் கேட்பதினாலே, மனிதன் பாவ சாயலை விட்டுத் தேவ சாயலுக்குள் வருகிறான்

''தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி (II கொரி 4 4) என்று பவுல் கூறுகிறார். சுவிசேஷம் என்றால் நற்செய்தி என்று அர்த்தமாம். (பாவமாகிய சாயலாகிவிட்ட மனிதனை) பாவமாகிய சாயலை விட்டு மாற்றி மீண்டும் தேவ சாயலுக்குள் கொண்டு வருவதே அந்த நற்செய்தியாகும்'' இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் (லூக் 2 10) என்று தேவதூதன் கூறுகிறான் தேவனுடைய சாயலாய் இருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளியானது அந்த சுவிசேஷத்தைக் கேட்கிறவர்களுடைய மனதை மறுரூபப்படுத்துகிறது. ''உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்'' (ரோம 12 2) என்று பரிசுத்த பவுலும் கூறுகிறார்

2) ஞானஸ்நானத்தின் மூலம் பழைய மனுஷன் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மீண்டும் ஒரு புதிய மனுஷன் தோன்றுகிறான்

'கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே அடக்கம் பண்ணப்பட்டோம்'' (ரோம 6 3,4) என்று பரிசுத்த பவுல் கூறுகிறார் ''நாம் இனி பாவத்துக்கு ஊழியம் செய்யாதபடிக்கு பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூட சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்'' (ரோம 6 6) என்றும் பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே? (கொலொ 3 9-10) என்றும் பரிசுத்த பவுல் கூறுகிறார் எனவே ஞானஸ்நானத்தில் பழைய மாம்சசாயல் களைந்து போடப்பட்டு, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் சிருஷ்டித்த தேவனுடைய சாயலாகிய புதிய மனுஷனைத் தரித்துக் கொள்கிறார்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கூறும்பொழுது மனுஷன் மறுபடியும் பிறக்கிறான் (யோவா 3 3-5) என்றும் பரிசுத்த பவுல் கூறும் பொழுது ஞானஸ்நானத்தை ''மறுஜென்ம முழுக்கு'' (தீத் 3 5) என்றும் கூறுகிறார் ''உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும், பரிசுத்த அலங்காரமுமாய் இருப்பார்கள். விடியற்காலத்தின் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்குச் சமானமாய் உம்முடைய வாலிபர் ஜனம் உமக்குப் பிறக்கும்' (சங் 110-3) என்று பரிசுத்த ஆவியானவரும் கூறுகிறார்

3. பாவத்தினால் மரித்துப் போன பழைய மனுஷன் பரிசுத்த ஆவியினால் உயிர்ப்பிக்கப் படுகிறான்.

'அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில்

...வாசமாயிருந்தால் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர்..." (ரோ 8:11) என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். "அந்தப்படி முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்தில் புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்" (எபே. 4:22-24) என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். இது பரிசுத்த ஆவியினால் உண்டாகும் ஒரு புது வாழ்வை அல்லது மறுபிறப்பைக் குறிப்பிடுகிறது. கெட்டுப்போன பழைய வாழ்வை பரிசுத்த ஆவியானவரே புதிதாக்குகிறார். "கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுண்டு" (II கொரி. 3:17) என்றும் பரிசுத்த பவுல் கூறுகிறார்.

4) தேவதரிசனம் அல்லது தேவனுடைய மகிமையைக் காணும் பொழுது மறுபிறப்பு உண்டாகிறது

"நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (II கொரி 3:18) என்று பவுல் கூறுகிறார். இங்கே நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் காண்கிறோம், என்று பவுல் எழுதுகிறார். மனிதன் பாவம் செய்யும்பொழுது அவன் தேவனுடைய சாயலைக் காணமுடியாத நிலை (ஏசா 59:2). அவன் ஞானஸ்நானம் பெற்று பாவம் போக்கப்படும் பொழுது (அப 22:16) தேவசாயலைத் தேவனுடைய மகிமையைக் காணுகிறான்.

"இப்படி பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப் பார்க்க ஆசையாய் இருந்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் காணவேண்டும்" (சங் 63:2) என்று சங்கீதக்காரன் கூறுகிறார். மோசேயும் சீனாய் மலையில் இருக்கும் பொழுது தான், தேவன் மோசேயோடு பேசியதனால் மோசேயின் [illegible] முகம் பிரகாசித்திருந்தது (யாத் 34:29-30) என்று பரிசுத்த ஆகமங்களும் கூறுகின்றன.

5) மனிதன் பழைய மாமிச சுபாவத்தை விட்டுத் தேவசாயலை அடைந்து அவன் எப்பொழுதும் கிறிஸ்துவுக்குள் வாழ வேண்டும்

"ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்து போயின; எல்லாம் புதிதாயின" (II கொரி 5:17) என்று பவுல் கூறுகிறார். உலகத்துக்குள் வாழ்வதும் கிறிஸ்துவுக்குள் வாழ்வதும் என்று இரண்டு வாழ்க்கை இருக்கிறது. "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினால் உண்டானவைகள் அல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள்" (1யோ 2:16) என்று வேதம் கூறுகிறது. கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை" (ரோ 8:1) என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். ஒருவன் தேவ ஆவியைப் பெற்றிருந்தாலும், ஆவியினால் கிறிஸ்துவுக்குள் வாழாவிட்டால், அவனுக்கும் ஆக்கினைத் தீர்ப்பு உண்டு என்று வேதம் கூறுகிறது. இரட்சிக்கப்பட்ட தேவ ஜனங்கள் மீண்டும் உலகத்துக்குரிய (மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை) வைகளை விட்டு கிறிஸ்துவுக்குள் வாழும்போது, புதிதாக்கப்பட்ட மனுஷனாக வாழமுடியும் என்று வேதம் கூறுகிறது.

6 மனிதன் மறுபடியும் பிறக்கும் பொழுது, விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பு (ஆத்தும மீட்பை) அடைகிறான் (1 பேது 1:9)

மனிதன் இரட்சிக்கப்பட்டு புதிய சிருஷ்டியாகும் [illegible] அவன் கர்த்தருக்குள் [illegible] "அதுமுதல் ஆவியின் முதற்பலன்

களைப் பெற்ற நாமும் கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருவதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம் (ரோ 8:23) என்று பரிசுத்த பவுல் கூறினார். காத்திருப்பதென்றால் காத்திருப்பு கூட்டம் நடத்துவதல்ல. நம்முடைய சரீரத்தில் பாவம் ஆளுகை செய்யாதபடி காத்துக் கொள்வதாகும். நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்துக்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" (ரோ 6:11,12) என்று பரிசுத்த பவுல் கூறினார்.

7) அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோ 12:1-3) என்று வேதம் கூறுகிறது. ஆகையால் தேவனுடைய ஜனங்கள் தங்கள் சரீரங்களை அழகுபடுத்துவதிலும் அலங்காரம் செய்வதிலும், கவனமாக இருக்க வேண்டும். உலக மக்களைப் போல நாம் வேஷம் தரிக்கக் கூடாது. உடலை சுத்தமாக, அழகாக வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் "துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள்" (ரோ 13:14) என்று பரிசுத்த ஆவியானவர் கூறுகிறார்.

நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார்; "தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது நீங்களே அந்த ஆலயம்" (1 கொ. 3:16,17) என்று பரிசுத்த பவுல் கூறினார். "உங்கள் ஆவி, ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்பொழுது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" (1 தெச 5:23) என்றும் பவுல் கூறினார். சிலர் நினைப்பது போல் ஆத்துமா மட்டும் பரிசுத்தமாயிருந்தால் போதாது. ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் பரிசுத்தமாய் காக்கப்பட வேண்டும். இவ்விதமாய் காக்கப்பட்டிருக்கும் சரீரங்களைத் தேவன் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபமாக்குவார். "அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்கத் தம்முடைய வல்லமையான செயலின்படியே நம்முடைய அற்பமான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபமாக்குவார்" (பிலி 3:21) என்று வேதம் கூறுகிறது.

இவ்விதமாய் குற்றமற்றதாய் காக்கப்படும் சரீரங்கள் கடைசி எக்காளம் தொனிக்கும் பொழுது ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாகும் (1 கொ 15:51) என்று வாசிக்கிறோம்.

"நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்" (1 கொரி 15:51)

கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்

28-7-99 அன்று கோட்டை வாசல்தெரு (செல்வம் கிளை) விசுவாசி சகோதரி [illegible] (வயது 60) அம்மாள் அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது மறைவினால் வருந்தும் அவரது குடும்பத்தாருக்கு கர்த்தர் ஆறுதல் செய்ய ஜெபிக்க வேண்டுகிறோம்.

வேதபாடம்

ரூத்தின் சரித்திரம்

[illegible]

[illegible]

ரூத் 1. 1-5 [illegible]

[illegible]

[illegible] (உபா 7:3, 16-22) 10 [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

(தொடரும்)

ரூத்தோ அவளை விடாமல் பற்றிக் கொண்டாள் (ரூத். 1:14)

சீயோன் சங்கம்

இஸ்ரவேல் தேசத்தை திரும்ப யூதர்கள் கைப்பற்ற வேண்டுமெனில், சிதறியுள்ள யூதர்கள் யாவரையும் ஒருங்கிணைக்க வேண்டும். அப்படி சிதறியுள்ள யூதர்கள் ஒருங்கிணைக்கவும் இஸ்ரவேலை போராடி திரும்ப பெறவும் யூதர்களால் அமைக்கப்பட்ட சங்கம் சீயோன் சங்கம் எனப்பெயரிடப்பட்டது. இது 1897ம் ஆண்டு சுவிட்சர்லாந்தில் உள்ள [illegible] (Vassalve) என்ற நகரத்தில் துவக்கப்பட்டது. இதை துவக்கியவர் தியோடர் ஹெர்ஸல் என்ற யூதர் ஆவார். இவருடைய இடைவிடா முயற்சியினாலும் [illegible] பல்வேறு நாடுகளில் சிதறியிருந்த யூதர்களாலும், 1947 [illegible] யூதர்களுடைய இஸ்ரவேல் என்னும் தேசம் தோன்றியது. அத்திமரத்தில் இளங்கிளைத் தோன்றி துளிர் விடும் போது [illegible] (மத். 13,28 29). என்றவேத வசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. அது முதற்கொண்டு சிதறியிருந்த யூதர்கள் இஸ்ரவேலுக்கு [illegible] கொண்டிருக்கிறார்கள்.

மாதர் பகுதி

சாராளை நோக்கிப் பாருங்கள்

நம்மை பெற்ற சாராளை நோக்கிப் பார்க்கும்படி வேதம் அழைப்புவிடுகிறது. ஆபிரகாமின் மனைவியாகிய 'சாராய்' வாக்குத்தத்தை பெற்ற போது 'சாராள்' என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டாள். வயதுசென்றவளென்றும் தாயாக வில்லையே என்றாலும் தேவன் ஒதுக்கி தள்ளிவிடாமல் சந்ததியின் தாயாக சாராளை தெரிந்து கொள்கிறார். ஆபிரகாமுக்கு தேவன் வாக்குரைத்த போது (உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்) சாராளும் வாக்குத்தத்த சந்ததிக்கு பிரசவிக்கிறதை பெறுவாளென்றே கூற வேண்டும். ஆபிரகாம்-சாராள் தம்பதியர் மூலம் ஒரு புதிய சந்ததி உருவாக வேண்டும் என்று தேவன் விரும்பினார். தேவன் ஒருவரை அழைத்து கட்டளையிடும்போது தமது சித்தத்தை நிறைவேற்ற அவருக்கு தேவையான எல்லாவற்றையும் அருளும் வரங்களையும் கொடுக்கிறார் என்பதை ஆபிரகாம்-சாராளின் சரித்திரத்தின் மூலம் காணலாம்.

சாராளுடைய ஜீவிய சரித்திரத்தை வரும் பார்ப்போமாகில் இவர்கள் ஆபிரகாமின் மனைவி (ஆதி 12:5) மிகவும் அழகாக இருந்தார்கள் (ஆதி 15:2, 16:1, 18:10) எகிப்து தேசத்தாளாகிய ஆகார் என்னும் பெயர்கொண்ட ஓர் அடிமைப்பெண் இவளுக்கு இருந்தாள் (ஆதி 16:1). இவள் இந்த பூமியில் வாழ்ந்த நாட்கள் 127 வருஷமாமே (ஆதி 23:1)

வாழ்வின் எல்லா கட்டங்களிலும் கணவருடன் இணைந்து சென்ற இந்த பெண்மணியைப்போல் எவரையும் நாம் வேதத்தில் காண முடியாது. இப்பெண்மணியை பெண்களாகிய நாம் நோக்கிப்பார்க்க வேண்டும் என்று தேவன் கட்டளையிடுகிறார் (ஏசா 51:1,2). நமது அடிச்சுவடுகளை பின்பற்றும்படி விதிவது நமக்கு மாதிரியை (தமது வாழ்வை) பின் வைத்துப் போனார் எனவே பின்பற்றுங்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். அதேப்போல சாராளிடம் தேவன் கண்ட நற்குணங்களை பெண்கள் பின்பற்ற வேண்டுமென தேவன் அவைகளை வேதத்தில் பொறித்திருக்கிறார். எந்த எந்த காரியங்களில் சாராளை நோக்கிப் பார்க்கும்படி நாம் அழைப்பு பெற்றுள்ளோம் என்பதை நாம் தியானிப்போமா?

1 தேவ அழைப்புக்கு இணைவு (ஆதி 12:5)

ஒரு கணவனை தேவன் அழைக்கும் போது மனைவி அவனை பின்பற்ற தடையாக இருக்க கூடாது. கணவன் மனைவிக்கு தலைவனாயிருக்கிறான். தன் இனத்தையும், தேசத்தையும் தகப்பன் வீட்டையும் விட்டு புறப்பட்டு வரும்படி தேவன் ஆபிரகாமை அழைத்த போது சாராள் தடையாயிருக்கவில்லை. இன்று அநேக கணவன்மார் முன்செல்வதற்கு மனைவி தடையாயிருக்கிறாள் என்று வெளிப்படையாக கூறுவது மனைவியின் தடைகளை காணப்படுகிறது. நீ போகும் இடத்திற்கு நானும் வருவேன், நீ தங்கும் இடத்தில் நானும் தங்குவேன், உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம் உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று சாராள் ஆபிரகாமிடம் கூறியிருந்திருக்கலாம். ஆண்டவர் என்னை வேறொரு இடத்திற்கு போக சொல்லுகிறார் என்று கணவர் கூறும்போது "ஐயையோ பிள்ளைகளுடைய படிப்பு என்னாவது?" என்று கூறாதீர், மாறாக தேவன் என்னை நடத்திக்கொண்டே போகிறார் அதற்கு நான் தலைவணங்குகிறேன் என்று சொல்லுங்கள். கணவன் மனைவி இருவரும் இணைந்து ஆத்துமாக்களாய் ஒன்றுபோய் சிந்தித்து தேவ சித்தத்தை நிறைவேற்றுவோம். சாராள் ஆபிரகாமோடே சென்றதினால் வாக்குத்தத்தத்தை பெறலானாயிற்று. தேவன் எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாயும் இருக்கிறார். இருவர் ஒருமனப்பட்டாலொழிய ஒரு வழியே நடந்து போக இயலுமோ?

2) அவசர குணம்

பெண்களுக்கேயுரிய அவசர குணத்தை நாம் களைந்து விட வேண்டும். வாக்குத்தத்தத்தை பெற்ற சாராள் அது வர தாமதித்த போது பொறுமை இழந்து தன் அடிமைப்பெண்ணுக்கு அல்லது அடிமை பெண்ணை கணவனுக்கு கொடுத்தாள். விளைவு இஸ்மவேல் பிறந்தான். அதனால் பிரிவினை உண்டாயிற்று. இன்றும் இஸ்ரவேல் [illegible] இஸ்மவேல் சந்ததிக்கும் போர் நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கிறது. காரணம் என்ன சாராளே. ஆகையால் அவசரப்பட்டு [illegible] செய்வதையும், கிரியை நடப்பிப்பதையும் விட்டு மனந்திரும்புவோமாக. பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது (எபி. 10:36)

3) சுறுசுறுப்பு :

சோம்பல் ஒரு கொடிய பாவம் என்று ஒரு பழமொழியுண்டு. மதிய வேளையில் வழியே சென்ற 3 புருஷர்களை ஆபிரகாம் அழைத்து அவர்களுக்கு சமைக்கும்படி சாராளிடம் கூறியபோது அவள் உடனே சமைத்தாள் (அப்பம் சுட்டாள் - ஆதி. 18:6-7) வேலைக்காரர் இன்றி சமைக்கும் முறை அப்பா தெரிந்து! பெண்கள் சமையல் கலையில் திறமையுடையவர்களாயிருப்பதே விருந்தினரை உபசரிக்க முடியுமே! எப்பொழுதும் சுறுசுறுப்புடன் இருக்க தேவன் நமக்கு அனுக்கிரகம் செய்வாராக! ஏன் என்றால் மிகுந்த சோம்பலினால் மேல் மச்சு பழுதாகும் நமது கைகளின் [illegible] வீடு ஒழுகக்கூடும். வேலைகளை இழுத்துப்போட்டு [illegible] விடாதீர்! இதன் அர்த்தம் கணவர் சொல்லும் பணியை எப்பொழுதும் செய்ய ஆயத்தம் என்னும் மனநிலையே!

சந்தேகம் (ஆதி. 18:12-15)

கர்த்தர் எப்படி நமக்கு இதை செய்யப்போகிறார்? இது நடக்குமா? என்னும் சந்தேகம் சாராளை [illegible] உள்ளாக்க காரணமிருப்பினும். விசுவாசத் தந்தை அனைவரையும் நடத்த தேவன் விரும்பினார். சந்தேகம் ஒரு புற்றுநோயைப் போன்றது. அதை உடனடியாக அகற்ற விட்டால் அது நம்மை அரித்து அழித்து ஒரு நாள் விசுவாசத்தை விட்டு வழிவிலக செய்யும். தேவன் கேட்கும் கேள்வி - அற்பவிசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய்? என்பதே. சாராளுடைய சந்தேகத்தை தேவன் உடனடியாக கடிந்துகொண்டிருந்தார் நம்முடைய தேவன் இப்பொழுதும் நடத்த [illegible]

5) சுயாதீனம் (ஆதி. 21:9-12)

பெண்கள் அருமையான சுயாதீனமுள்ளவர்கள் என்று வேதம் கூறுகிறது. சாராளுக்கு ஆபிரகாம் சுயாதீனமளித்திருந்தார். ஆகையால் தன் அடிமைப்பெண்ணை வீட்டைவிட்டே அனுப்பி விட்டாள் என்றும் வேதம் கூறுகிறது. சில காரியங்களில் பெண்களுக்கு சுயாதீனத்தை வேதம் அனுமதிக்கிறது. ஆகிலும் நமது சுயாதீனத்தை துர்குணத்திற்கு மூடலாக கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருப்போமாக (1 பேது. 2:16). கணவனின் தலைமைக்கு கீழ்ப்படிந்திருக்கும் உண்மை சுயாதீனம் கொண்ட தேவபக்தியுள்ள [illegible] நமது நன்மைய (கணவனை) அடைவதற்கு நமக்கு முழு உரிமை இருக்கிறதே!

6) விசுவாசம் (எபி. 11:11)

எபிரேயருக்கு எழுதின நிருபம் பதினோராம் அதிகாரத்தில் வரும் விசுவாச நாயகர்களின் இரண்டு பெண்களின் பெயர் இடம் பெற்றுள்ளன. அவைகளில் ஒன்று சாராள். வாக்குத்தத்தம் பண்ணினவர் அதை நிறைவேற்ற வல்லவர் என்று ஆபிரகாம் நம்பினபோது, வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்று சாராள் அம்மா நம்பினார்கள். பருவம் கடந்த கணவன் மனைவி இருவருக்கும் ஒரே நம்பிக்கை இருந்தது. கருத்துவேற்றுமை ஏதுமில்லை. ஆகையால் வாக்குத்தத்தம் நிறைவேறியது. எப்படி? கடைசி வரையும் மனநிலையின் போது காப்பாற்றிக்க

பெலனடைந்தார்கள். உங்கள் விசுவாசம் எப்படி? தேவனை எல்லாவற்றிலும் எல்லாவற்றிலும் திருப்தி, விசுவாசிப்போம். விசுவாச கண்களை இறைவனிடம் பெறுவோமாக! நம்முடைய கண் பார்வையினால் அல்ல விசுவாசத்தினால் நோக்குவோம்!

7) கீழ்படிதல் (1 பேது. 3.6)

பெண்கள் தமது கணவருக்கு எல்லா வற்றிலும் கீழ்ப்படிந்திருக்க வேதம் கட்டளையிடுகிறது. அதற்கு சிறந்த எடுத்து காட்டாக சாராளையே குறிப்பிடுகிறது. முதல் பாகமே கீழ்படிதலாவதாக அதை செய்தும் ஒரு பெண்ணே! (ஏவாள்) (ரோமர் 13 1.22) ஒவ்வொரு பெண்ணும் கணவருக்கு நியாயமான கீழ்படிதலின் மேன்மையை நிச்சயம் உணருவாள். விசேஷமாக அதிர் கீழ்படிதலோடு இருக்க வேண்டுமென்றும் புருஷன் மேல் அதிகாரஞ் செலுத்த கூடாது என்றும் வேதம் போதிக்கிறது (1 தீமோ 2 12). சாராளைப் போல் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாமல் இருப்பீர்களானால் அவளுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்பட இடமுண்டு! (1 பேது 3 6)

8) தைரியம் (1பேது. 3 6)

நமக்கு தீமை இழைக்கப்படும் போது தைரியம் கொண்ட பெண்கள் உறுதியுடன் வேண்டும். சாராளுடைய ஜீவியத்தில் அப்படி ஒரு சம்பவம் நடைபெற்றது. ஆகாருக்கு நன்மை செய்ய போய் தீமையை அனுபவித்தாளல்லவா? எதற்கும் ஒரு (Limit) அளவு உண்டல்லவா? ஆகையால் தைரியமாய் கணவனிடம் பேசினாள். கணவன் கேட்க தேவ உத்தரவு பிறந்தது. ஆகையால் கணவனிடம் நியாயத்தை குறித்து பேச தகுந்த காலத்தை எதிர் நோக்குவதே முடிவு சமாதானம்.

விசுவாசிகளாகிய தேவனுடைய பிள்ளைகள், பிள்ளைகளின் மேன்மை அவர்களுடைய பிதாக்களே என்ற பிரகாரம் நம்மை பெற்ற சாராளை நோக்கிப் பார்த்து அவர்களுடைய விசுவாசத்தை, குணங்களை அறிந்து அதன்படி வாழ்ந்து குடும்பமாய் தேவனை மகிமைப்படுத்துவோமாக!

அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி அவனுக்கு கீழ்படிந்திருந்தாள் (1 பேது 3:6).

சாட்சி

என்னுடைய பெயர் எலிசபெத். நான் ஒரு பக்தியுள்ள C S I. குடும்பத்தில் பிறந்தேன். என்னுடைய தாய் சிறுவயதிலிருந்தே வேதம் வாசிக்க, குடும்ப ஜெபம் செய்ய கற்றுக் கொடுத்தார்கள். நான் 11ம் வகுப்பு படிக்கும் போது எனது தகப்பனார் மிகவும் சுகவீனம் அடைந்துவிட்டார்கள். அப்போது தேவன் அற்புதமாக சுகமளித்தார். தொடர்ந்து எங்கள் குடும்பத்தை தேவன் ஆசீர்வதித்து உயர்த்தினார். நான் நர்ஸ் வேலைக்கு படிக்கும் போது ஒரு நோயாளிக்கு மாத்திரை மாற்றிக் கொடுத்து விட்டேன். அதனால் அந்த நோயாளி மிகவும் சுகவீனமாகி விட்டார். நான் பயந்து போய் தேவனை நோக்கி ஜெபித்தேன். தேவன் என் ஜெபத்தை கேட்டு கிருபையாய் அவரைக் காப்பாற்றினார்.

1986-ஆம் வருடம் எனக்கு திருமணம் ஆனது. என் கணவர் பாண்டிச்சேரி அரசாங்க பேருந்தில் நடத்துனராக பணியாற்றினார். அவர் கெட்ட பழக்க வழக்கத்தில் இருந்தார். இடைவிடா ஜெபத்தினாலும் தேவ கிருபையினாலும்

புதிய எருசலேம் செய்தி

PUDHIYA YERUSALEM CHEIDHI

எக்காளம் 17 : சத்தம் : அக்டோபர் '00



" வீட்டெஜமான் (இயேசு கிறிஸ்து) சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவார்(ர்) என்று நீங்கள் அறியீர்கள் விழித்திருங்கள் உங்களுக்கு சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள் மாற்கு 13 35-37

EDITOR : CHIEF APOSTLE N. LAZAR

MUMBAI, INDIA

பத்திரிகையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒரு மனப்பட்டு கிறிஸ்துவுக்கேற்ற பூரண வளர்ச்சியடையும்படியாகவும் தலையாகிய கிறிஸ்துவைப்பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும், எல்லாவித உபதேச போதனைகளுக்குத் தப்பி ஒரே சீராய் பூரண வளர்ச்சியடையும்படியாகவும் இப்பத்திரிகை வெளியிடப்படுகிறது (எபே 4 11-16)

[illegible] எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தந்தவைகளில் ' தெயோப்பிலுவே, இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்தபின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்குக் கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் ? (அப் 1 1 3) ' எனக்கு காண்பித்து, ஸ்தாபித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள்

1 உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் மத் 28 18; மாற்கு 16 15

2 விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்களை பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தில் ஞானஸ்நானப்படுத்துங்கள் - மத் 2? 19 (இயேசு [illegible] (Through Action) செய்து காண்பித்தார்

3 திருச்சபையைக் கட்டி (மத் 16 18, [illegible]) நான் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி [illegible] - மத் 28 20

4 அவர்களுடைய பாவங்களை [illegible] 20 23

5 அவர்களை மேய்த்து ஆளுகை [illegible] 21 15-17

6 இவைகளை நடப்பிக்க பரிசுத்த [illegible] பெற்றுக்கொள்ளுங்கள் (அப்-1 5-8)


7 நான் வருகிற வரையில் [illegible] திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார் - 1கொரி 11 23-26

நான் ஆண்டவரே சில அஸ்திபார உபதேசங்கள் [illegible] (2) என்கிறார்கள் வேறு சிலர் ஏழு (7) என்கிறார்களே அதெப்படி? என்றேன்

இயேசுவானவர் பிரதியுத்தரமாக இவை அஸ்திபார உபதேசங்கள் ஏழு ஆகும் (நீதி 9 1-6) இது ஆதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளும் அதிகாரங்களுமாகும் இவைகளை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப் 1 1, 10.40-43)

இதழின் உள்ளே

ஆசிரியர் உரை



"எல்லாம் உங்களுடையதே. பவுலாகிலும் அப்பொல்லோவாகிலும், கேபாவாகிலும், உலகமாகிலும், ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ்காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும், எல்லாம் உங்களுடையது. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள், கிறிஸ்து தேவனுடையவர் (1 கொரி. 3 22,23)". என்று வேதம் சொல்லுகிறது. தேவனுடைய நினைவுகளே உலகமே நமக்காக, தேவனுடைய பிள்ளைகளுக்காக, நிகழ்காரியங்களோ, வருங்காரியங்களோ எல்லாம் நமக்காக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களுக்காகவே நடைபெறுகின்றன. "அன்றியும் அவருடைய (தேவனுடைய) தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8 28) என்று நாம் அறிந்திருக்கிறபடியால் தேவ ஜனங்கள் பயப்படாமல், கலங்காமல், துன்மார்க்க சக்தியெல்லாம் ஒன்று சேர்ந்தாலும், அவைகளைத் தடுத்தாட்கொள்ளுகிற இறைவன் அவைகளின் மூலமாக தம்முடைய சித்தத்தை நிறைவேற்ற அவைகளை (அவர்களை) கருவிகளாகப் பயன்படுத்துவார். எனவே தேவனுடைய வல்லமை, அவருடைய ஆளுகை. "பூமியின் குடிகளெல்லாம் ஒன்றுமில்லை என்று எண்ணப்படுகிறார்கள்; அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும், பூமியின் குடிகளையும் நடத்துகிறார். அவருடைய கையைத் தடுத்து; அவரை நோக்கி, என்ன செய்கிறீர் என்று சொல்லத்தக்கவன் ஒருவனுமில்லை" (தானி 4:35). "இதோ அவர் உயர்ந்தவனைத் தாழ்த்தி தாழ்ந்தவனை உயர்த்துகிறார்." தேவன் எல்லாவற்றையும் நமக்கு நன்மையாக முடித்தார். இப்படியே இனிமேலும் நடக்கும். தேவனுடைய ஜனங்கள் நம்பிக்கையோடு இருந்து ஜெயம் பண்ணவும் எல்லாம் உங்களுக்காக. எல்லாம் உங்களுடையதே.

கிறிஸ்துவுக்குள்

Chief Apostle N. LAZAR

[illegible]

[illegible] (Toledo Inspain 589 AD) [illegible] (Faith & Experience) [illegible]

[illegible]

[illegible]

கடவுள் தெரிந்து கொண்டார் (God Chose), கடவுள் அனுப்பினார் (God Sent), கடவுள் கொடுத்தார் (God gave) [illegible] (2 2, [illegible] 3 17, [illegible] 4 4,5, [illegible] 5:18-19, [illegible] 3 4-7)

[illegible] 2 1-4, [illegible] 5 5, I [illegible] 3 24, 4 13, [illegible] 7:39, I [illegible] 4 8, I [illegible] 3 16, [illegible] 14 16,26, [illegible] 15 26, 16 13, [illegible] 4 6, [illegible] 8 14 [illegible]

[illegible] கடவுள் (God above us) [illegible] கடவுள் (God with us) [illegible] கடவுள் (God in us) [illegible]

[illegible]

காலக்கூடும் தேவனுடையவரான அவர் கடவுளை பிதா என்றும் தம்முடைய புத்திர குமாரத்துவத்தின் மூலம் பிதா என்று பட்டயம் என்றும் வெளிப்படுத்தினார் பரிசுத்த ஆவியைப் பற்றியும் பேசியுள்ளார் இப்படித்தான் உருவான திரித்துவ சித்தாந்தத்துக்கு செயல்முறை திரித்துவம் (Economic Trinity) என்று பெயர் கடவுள் சிருஷ்டிகராகவும், மீட்பராகவும், பரிசுத்தம் செய்பவராகவும் தம்மை வெளிப் படுத்தியுள்ளார்

மற்றொரு முக்கியமான குறிப்பு திரித்துவத்தின் வரலாற்றிலிருந்து ஆராயப்பட வேண்டிய அம்சமாக இருக்கிறது நாம் கேட்கும் இயேசு கிறிஸ்து என்பவர் கடவுளின் அனாதி மோட்சத்துக்கும் அவருடைய இடமென்ன? 'நல்ல மேய்ப்பர் அவரை வார்த்தையோடு சம்பந்தப் படுத்தியதை நாம் அறிகிறோம் (யோவா 1:1-14) அப்படியே கொலோசெயர் நிருபத்தில் இவ்விதமாய் கூறியுள்ளார் குமாரன் அதிசயமான தேவனுடைய தன்மையும் சாயலும் முதலில் தோன்றியவருமானவர் அவர் என்றும் மாறாத முதன்மை என்னும் அதிகாரம் நிற்கிறது (கொலோசெ 1 14-20) பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்ற கடவுள் வெளிப்பாடும் மூவரும் அன்று மூவரும் கடவுளின் தன்மையில் காணப்படும் மூன்று தனித் தன்மையே காட்டுகிறது Tripol destination within the very being of God. இச்சித்தாந்தத்தில் இது அடிப்படை திரித்துவம் Essential Trinity என்று அழைக்கப்படுகிறது

ஆதியிலே வார்த்தை (யோவா 1 1)' பிதாவே உலகம் உண்டாவதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமை (யோவா 15 7) எல்லாம் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப் பட்டிருக்கிறது (மத் 11 27, லூக் 10 22) இக்குறிப்புகளில் குமாரனின் அநாதி குமாரத்துவத்தையும், அதனால் குமாரன் பிதாவைப்பற்றி அவருடைய மகிமையைக் குறித்துப் பேசியிருப்பதை இருக்கிறதை வெளிப் படுத்தப்பட்ட குமாரன் பிதாவிலும் குமாரனி லிருந்து புறப்படும் பரிசுத்தஆவி இவைகளைப் பற்றி ஏற்பட்டுள்ள பற்பல அனுபவங்களையும், கேள்விகளையும் தப்பு அபிப்பிராயங்களையும் முற்பகுதியில் ஓர் அளவில் விளக்கப்படுத்தி வருகிறோம் அவைகள் எல்லா வேதபாட ஆய்வும் அடிப்படை ஏக கடவுளின் ஏக ஆள்தத்துவம் என்பதையும் நாம் ஆராயத் தேவை. திரித்துவ சித்தாந்தத்தின் அத்தனை கேள்விகளும் உண்டாயின கடவுளின் ஒரே ஆள்தத்துவம் என்னவாய் இருக்கக்கூடும்?

ஒருவரைக் கடவுளின் ஒருமைப்பாடு அவரது ஏகத்துவம் பிரிக்கப்பட்டதே கிடையாது. அவரின் இராஜரீகம் எல்லாத்துக்கும் மேல் பட்டது. ஒன்றும் அதற்கு நிகரல்ல. ஒன்றை மற்றொன்று சம்பந்தப்படுத்தவோ அதற்கும் பதிலாக கூறவோ கிடையாது நாமெல்லாரும் இயேசுவை ஒரே கடவுளின் ஆளாக எண்ணும் போது அது ஒரு தோற்றமேயன்றி அல்லவா Docetism என்று நாம் முன்பு சொன்ன ஒரு சிறப்பு வழிமுறைக் கணிக்கப்பட்ட ஒரு தெய்வீக வரிசையிலே அவ்வளவு வேறுபாடு என்ற கருத்துமுறை ஒரே கடவுளின் ஆள்தத்துவ ராஜரீகம் வெளியிடுகிறது திரித்துவத்தின் தொடக்கத்திற்கு முற்பகுதியாக கொள்கை பட்டது கிடையாது அக்கொள்கை ஆரம்பத்தில் Dynamic Ebion ta Monarchianism என்று அழைக்கப்பட்டது இக்கொள்கை திரித்துவத்தின் மறுக்கத் திறதும், வார்த்தை மாம்சமானார் என்ற உண்மையும், வார்த்தையின் மூலம் பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்படும் முறையும் மாறாத இருந்த திரித்துவத்தின் தெய்வீகம் இக்கோட்பாட்டினால் முற்றும் சிதைக்கப் பட்டது

இத்தருணத்தில் பிராக்சியஸ் என்பவர் (Praxeas) திரித்துவத்தின் ஆள்தத்துவம் கடவுளின் ஆள் தத்துவத்தோடு இரண்டறக் கலந்துள்ளது என்றும், சிலுவையில் அறையப்பட்டது கிறிஸ்து அல்ல; கடவுளே என்றும் போதிக்கத் துணிந்தார் இது ஒரு நிலையை நிலைநிறுத்தியவை கொண்டு வரப்பட்ட மற்றொரு கொள்கை நிலையாய் ஆகிறது இத்தப்பு உபதேசத்தைத் தொடர்ந்து (sabellian)

சபெலியஸ் என்பவன் குமாரனிலும், பரிசுத்தாவியிலும் வெளிப்பட்ட கடவுளின் தன்மையை நாடக மேடையில் ஒரே மனுஷன் மூன்று வேஷத்தில் வெளிப்படும் தோற்றத்திற்கு ஒப்பிட்டு ஒரு காலத்தில் பிதா, ஒரு காலத்தில் குமாரன், ஒரு காலத்தில் பரிசுத்த ஆவி என்று திரித்துவ உபதேசத்திற்கு மாறான உபதேசத்தைப்போதிக்க ஆரம்பித்தான். அது சபெலியன் கொள்கை அல்லது மாடலிஸ மொனார்க்கிஸம் எனப்பெயர் பெற்றது. இக்கோட்பாடு கடவுள் தன்னில் இருக்க வேண்டிய வெளிப்பாட்டின் தனித்துவத்தை நிராகரிக்கிறதாய் இருக்கிறது.

குமாரன், குமாரனாக பிதாவை வெளிப்படுத்தியும், பரிசுத்தாவி, பரிசுத்தாவியாக பிதாவிலும் குமாரனிலுமிருந்து புறப்பட்டு குமாரனையும் பிதாவையும் மக்களின் அறிவுக்கு வருமாறு விளக்கிக் காட்டுவதையும் சபெலியஸின் கோட்பாட்டுக்கு நிராகரிக்கப் பட்டிருக்கிறது என்பதை நாம் கண்டு கொள்ளலாம். "அவர் என்னுடையதிலிருந்து எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" (யோவா. 16:14) மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியினால் அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது" (ரோம 5:5) "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். அந்தபடி திரும்பவும் பயப்படுகிறதற்கு அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல் அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூட சாட்சி கொடுக்கிறார்" என்று ரோமர் 8:14-16-ல் எழுதியுள்ளதை கவனமாக வாசிக்கவும்.

தெர்துல்லியனோ (Tertullian), ஹிப்போலிட்டஸ் (Hippolytus), ஒரிஜன் (Origen) போன்ற திருச்சபை பிதாக்கள் இக்கொள்கையை நிராகரித்து குமாரனின் தெய்வீக நித்தியத்தை வற்புறுத்திக்காட்ட முயன்றனர். கடவுளின் ஏகத்துவ, தெய்வீகத்துவத்தை வற்புறுத்த எண்ணி, கடவுளின் சுயவெளிப்பாட்டை திரித்துவமும் [illegible] நிறை புறப்பட்டவரும், புறப்படுகிறவருமாகிய பரிசுத்த ஆவியும் தன்மையிலும், காலத்திலும் பொருளிலும் வேறுபடச்செய்து விட்டனர். பல்வேறு தவறு உபதேச கொள்கைகளையுடைய போர் ஒருவேளை நல்நோக்கத்தோடேயே அவ்வாறு செய்திருக்கலாம். இக்குறையை அறிந்து திரித்துவ சித்தாந்தத்தை மகா மறை எளிதில் வெளிப்படுத்த, அதே சமயத்தில் கடவுளின் ஏகத்துவத்தைக் காத்துக்கொள்ள மற்றொரு புதுக்கோட்பாடு புறப்பட்டது. அச்சித்தாந்தத்திற்கு 'கீழ்ப்படுத்தப்படுதல்' (Subordinationism) எனப்பெயர் கொடுக்கப் பட்டது.

மூவரில் ஒருவர் ஏக கடவுள், மற்ற இருவரும் அவருக்குக் கீழானவர்கள். ஏக கடவுளோடு கூட சம்பந்தப்படுவதினால் மாத்திரம் தெய்வீகத்தன்மையைப் பெற்றுக் கொள்வார் என்று தெர்துல்லியனும் ஹிப்போலிட்டஸ் (Hippolytus) என்பவர் செபெலியஸின் கோட்பாட்டை நிராகரிக்க முயன்றதில் கீழ்ப்படுதல் என்ற சித்தாந்தத்தை அறியாமல் பரப்பி விட்டனர். திரித்துவத்தின் நித்தியத்தையும் அதே சமயத்தில் பிதாவுக்கு அடுத்தவர் என்ற நிலை கோட்பாட்டையும் சமரசப்படுத்த முயன்ற [illegible] குமாரன் கடவுளின் நித்திய புறப்பாடு (Doctrine of Eternal Generation) என்ற மற்றொரு புதுக் கோட்பாட்டை உருவாக்கி கீழ்ப்பட்டவர் என்ற கொள்கையில் குமாரன் தகப்பனாகிய பிதாவுக்கு அடுத்தவர் (Temporal Secondariness) என்ற ஒரு சிறு குறிப்பு மாத்திரம் நிராகரிக்கப்பட்டது என கூறலாம். இத்தகைய திரித்துவ கோட்பாட்டை கி.பி 325ல் நிசேயாவில் கூடிய சபை சங்கமும் கி.பி 381ல் கான்ஸ்டாண்டிநோபிள் ஆலோசனைச் சங்கமும் கி.பி 589 டோலிடோவில் கூடிய சபை சங்கமும் நிராகரித்தது.

நமது பிதாவினாலே தெரிந்தெடுக்கப் பட்டவர், தெய்வத்துள் தெய்வமானவர் ஜோதியில் ஜோதியானவர், மெய்தேவனில் மெய்தேவனானவர், உண்டாக்கப்படாமல் ஜெனிப்பிக்கப்பட்டவர், பிதாவோடு ஒரே தன்மையுடையவர் சர்வருமான ஜீவனைக் கொடுக்கிறவருமாய் பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருடனே, பிதாவோடும் குமாரனோடும் கூட தொழுது மகிமைப்படுத்தப்படுகிறவருமாய், தீர்க்கதரிசிகள் மூலமாய் உரைத்தவருமாய், இருக்கிற பரிசுத்த ஆவி என்ற பெரிதும், ஆழ்ந்ததும் அனுபவித்ததும் அனுபவிப்பதுமான விசுவாச அறிக்கையை வெளிப்படுத்திய அறிக்கையாக கடவுளின் நன்மையைப் பற்றிய அறிக்கையை இக்கால சபைகளுக்குத் தருகிறது

(தொடரும்)

ஜெபம்; ஜெபத்தின் தத்துவம்

1. **ஜெபத்தின் தத்துவம் :** தேவனை நோக்கி நமக்காகவும், மற்றவர்களுக்காகவும், அகத்தியமாயும் நியாயமாயும் வேண்டுதல்களை இருதயந் திறந்து, இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் பரிசுத்த ஆவியின் உதவியோடும் நம்பிக்கையோடும், உண்மையோடும் இரக்கத்திற்காகவும், சபையிலாவது, ஏகாந்தமாயாவது நிஸாரத்திலாவது கேட்பதும், பாவங்களை அறிக்கையிட்டு பெற்றுக் கொள்ளுகிற நன்மைகளுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துவதுமே ஜெபம்

2) நாம் ஜெபம் பண்ணும்படிக்கு தேவன் கட்டளையிட்டிருக்கிறார் (சங் 50.15, மத் 7·8 26 41, பிலி 4 6, யாக். 1 5).

3) ஜெபம் நமக்காக மாத்திரமல்ல, மற்றவர்களுக்காகவும் பண்ண வேண்டும் (1 தீமோ 2 12 யாக் 5 16)

4) நமக்கு வேண்டியவைகளை இருதயந்திறந்து பிதாவாகிய தேவனை நோக்கி இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நம்பிக்கையோடும் உண்மையோடும் ஜெபம் பண்ண வேண்டும். (யோவா 14.13, 16 26, எபி 4 14,16; யாக் 1 யோவா 1.6,8, 1 யோவா 3 21,22, மத் 6 5.7,8 லூக் 18·10, 14 20,47, 1 தீமோ 2 5 எபி 8 6, 9 15)

5) ஜெபம் காலையிலும் மத்தியானத்திலும் மாலையிலும் ஒத்துக் கொள்ளுகிற சகல வேளைகளிலும் செய்ய வேண்டும் (சங் 55:17, தானி. 6.10). அடிக்கடி ஜெபம் பண்ணுவது நலமே (லூக். 18.1, 21 36). நம்முடைய ஜெபம் உண்மையுள்ள ஜெபமாயிருப்பதற்கு அது ஆவியிலும் உண்மையிலும் (யோவா. 4 24) சுயமும் கருத்தும் (மத் 6.7) மனத் தாழ்மையும் (லூக் 18 24) விசுவாசமுள்ளதுமாய் (மாற் 11 25) கிறிஸ்து இயேசுவின் நாமத்திலே (யோவா 14 14) செய்யப்படுகிறதாயிருக்க வேண்டும்

6) சபை கூடிவந்திருக்கையில் விண்ணப்பமும் ஸ்தோத்திரமும் பண்ணுகிற தெய்வசேவையின் போதா மற்றெல்லாருடைய நிலைமைகளையும் பொதுவாகவும், விசேஷமாகவும் அப்படிச் செய்ய வேண்டும் (அப். 20 36). விசேஷமான காரியங்களுக்காக, மற்றவர்களும் ஒருமித்து வரக அப்படிச் செய்வதாம் இப்படியே புதிய ஏற்பாட்டில் நடந்து வந்தது (அப். 21 5, 4 24-30) விண்ணப்பத்தின் முடிவிலே மற்றவர்கள் அப்படியாகக்கடவது என்னும் பொருளுள்ள "ஆமென்" என்னும் எபிரெயச் சொல்லை சொல்லுகிறார்கள் (1 கொ 14 16). எல்லாம் யோக்கியமாயும் ஒழுங்காயும் செய்ய வேண்டும் (1 கொ 14 40)

7) ஜெபத்தை ஜனங்களுக்குத் தெரிந்த பாஷையிலே எழுதி ஒழுங்காக சபையிலே (சில சபைகளில்) வாசிக்கிறதுண்டு. அதுவும் நல்லதே. [illegible]

நாதரும் தமது சீஷர்களுக்கு ஜெபிக்கப் போதித்தார் (லூக் 11:1, மத் 6:9). ஆனால் ரோமன் சபையார் செய்கிறது போல கர்த்தருடைய ஜெபத்தை ஒரே மூச்சில், அநேகந்தரம் சொல்லுகிறது. ஆவியை அவித்துப்போடுகிறதும் அசட்டையீனமுமாயிருக்கிறது (I தெச 5:19) ஆகையினாலே மனதினாலும் ஆவியினாலே சிந்தித்துச் சொல்லு ஜெபம் பண்ணுகிறது மிகவும் நல்லது ஆகிலும் (யூதா 20, ரோமர் 8:26, எசே 12:19, எபேசி 5:18) "இருதயத்தின் நிறைவினாலே வாய் பேசும்"

8) எல்லாவற்றையும் குறித்துத் திருவுளம் உண்டுபண்ணுகிற தேவனை மாத்திரம் நோக்கி ஜெபம் பண்ண வேண்டும் (I கொரி 12:8,9, எபேசி 3:19) தேவதூதர்களையும் பரிசுத்தவான்களையும் நோக்கி ஜெபம் பண்ணலாகாது (கொலோ 2:19 வெளி 19:9 12)

9) நற்கிரியைகளுக்காக மாத்திரம் ஜெபம் பண்ண வேண்டும் (I தெச 5:14, 3:22 மத் 6:9-13)

10) தேவன் எல்லாவற்றையும் அறிகிறபடியால் நாம் விண்ணப்பம் பண்ண வேண்டியதேன்? என்று கேட்டால், ஒன்றையும் அவருக்கு அறிவிக்கும்படிக்கு நாம் விண்ணப்பம் பண்ண வேண்டுவதில்லை. அவர் மேலுள்ள நம்பிக்கையைக் காட்டும்படிக்கும் நமக்கும் அவருக்கும் இருக்க வேண்டிய சம்பந்தத்தை நம்முடைய இருதயம் உணரும்படிக்கும் நாம் அனுபவிக்கிற நன்மைகளுக்கு அவரே காரணராயிருக்கிறதை நாம் அறிக்கையிடும்படிக்கும் அவைகளுக்காக அவருக்குச் செலுத்த வேண்டிய ஸ்தோத்திரத்தை எழுப்பும்படிக்கும், அதில் சேரும்படிக்கும் விண்ணப்பம் பண்ண வேண்டியது. விண்ணப்பம் பண்ணாவிட்டால் அந்த நல்ல உணர்வுகளெல்லாம் இருக்கமாட்டாது. தேவ பக்தியும் நிர்ப்பந்தமுமில்லாது நாம் இருக்கவேண்டியதுபோல இருப்போம். அந்த நல்ல உணர்வுகளை நமக்குள்ளே எழுப்பும் பொருட்டாக அவர் நம்மை குறைவுகளுக்கும் உபத்திரவங்களுக்கும் உட்படப்பண்ணுகிறார். ஆகையால் நீ ஆபத்துக்காலத்திலே என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உன்னை விடுவிப்பேன் நீ என்னை மகிமைப்படுத்துவாய் என்று சொல்லியிருக்கிறார் (சங் 50:15,23)

மேலும் நடக்க வேண்டியவைகளையெல்லாம் ஆதியிலே அவரே தீர்மானித்திருக்கிறபடியால் அவருடைய தீர்மானத்தை நம்முடைய விண்ணப்பத்தினாலே மாற்றலாமா? என்று கேட்டால், மாற்றமாட்டோம். ஆகிலும் விண்ணப்பம் பண்ணுதல் கிரியையினாலே இன்னது நடக்க வேண்டுமென்று தீர்மானித்ததன்றி விண்ணப்பம் பண்ண வேண்டுமென்றும் தீர்மானித்திருக்கிறபடியால் ஆதலால் அப்படியே செய்வோம்

இல்லாவிட்டால் நிலத்தைக் கொத்தும்படி அன்றியும் சாப்பிடவும் விதை விதைக்கவும் மருந்து சாப்பிடவும் சுகவீனம் அடைகிறதும் படிக்கவும் மற்றுமுள்ள பிரயாசங்களும் வேண்டியதில்லை என்று சொல்ல வேண்டும். மேலும் அவருடைய தீர்மானத்தின்படி ஜெபிக்கிற ஜனங்களை அவருடைய கட்டளையின்படி விண்ணப்பம் பண்ணுவதற்கு நடத்துகிறார். மேலும் விண்ணப்பம் பண்ணுவதற்கு அவர் கட்டளையிட்டு எல்லாரும் விண்ணப்பம் பண்ணினால் அவருடைய விருப்பத்தின்படி செய்து வருகிறார். அதற்கு அநேக திருஷ்டாந்தங்கள் உண்டு நமக்கும் அனுபவம் உண்டே. அதினாலே தேவபக்தியும் அன்பும், மிகுந்த ஊக்கமும் பெருகி வருகின்றன. அவருடைய தீர்மானங்களுக்கு அதினாலே குறைவுண்டாகிறதில்லை அவரே அதை விளங்கப்பண்ணார். மேலும் விண்ணப்பம் பண்ணுகிறது அவருக்கேற்ற அன்பு நம்மிலே இருக்கிறது நாம் விண்ணப்பம் பண்ணாவிட்டால் தேவபக்தியும் தேவ அன்பும் சந்தோஷமும் புத்திரசுவிகாரமும் மேன்மையும் மகிமையும் கிடைக்காதே. ஜெபம் பண்ணுவதன் எல்லைக்கதை ஜெபம் பண்ணுங்கள்.

கேடயம்

ரூத்தின் சரித்திரம் :

ரூத் 1:18 [illegible] (யோவா 21:23). [illegible] ரூத் 1:19 [illegible] (ரூத் 1:21)

[illegible]

ரூத் 2:1-23 : ரூத்தின் [illegible]

[illegible]

[illegible] (லேவி 19:9,10)

[illegible] ரூத் 2:5 [illegible] ரூத் 2:8 [illegible]

(ரூத். 2 1).

(2 8-9)

(தொடரும்)

''ஆபிரகாமின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினுடைய வம்சவரலாறு.... போவாஸ் ஓபேதை ரூத்தினிடத்தில் பெற்றான்''. (மத். 1:1,5).

விழுந்தவர்கள் எழுந்திருக்கிறதில்லையோ ?

[illegible] (நீதி 16:18) [illegible] "என்னை விட்டு தூரப்போய் [illegible] உங்கள் பிதாக்கள் என்னிடத்தில் என்ன அநியாயத்தைக் கண்டார்கள்?" (எரே 2:5,6) [illegible] ?" கலா 5:4

1. விழுதல், பின்மாற்றம் என்றால் என்ன?

[illegible] (1 இரா 11:9,10)

2. ஆதி அன்பை விட்டு விடுவது (வெளி. 2:4)

[illegible] (மத் 24:9-10) [illegible] (லூக் 8:13) [illegible] (2 தீமோ 4:10)

3) கிருபையினின்று விழுதல் (கலா 5:4)

[illegible] (நீதி 28:14)

4 அது மதிகெட்டதற்கு திரும்ப வராதும் (சங். 85.8)

[illegible] (சங் 78 56 57) [illegible] (எரே 17 5) [illegible] (எரே 2 13). [illegible] (உபா. 31 20, 32 15) [illegible] (எரே. 5.7) [illegible] (எரே . 2:5 6) [illegible] (எரே 17 13) [illegible] (ஏசா 8 22) [illegible] (நியா 10 12,13, 1 நா. 15 2, 24 20 24) [illegible] (எரே 5 6)

[illegible] (1 கொரி. 3 15) [illegible]

விழுவதற்கு காரணங்கள்:

1. உபத்திரவங்கள் மத். 24.9,10.

[illegible] (லூக் 8 13) [illegible]

[illegible]

2 உலகிற்குரிய உலகப்பிரகாரமான கர்த்தரை விட்டு பிரியச் செய்கிறது

[illegible] (1 தீமோ 6 6) [illegible]

3 மோசக்காரராகவும் வரும்:

[illegible]

ஊழியக்காரன் தான் ஒரு ஊழியக்காரனை விமர்சனம் செய்வான். ஒரு தீர்க்கதரிசியை ஒரு தீர்க்கதரிசியே தட்டிவிடுவான் இடறி விழ வைத்தான் ஒருவன் சொன்னால் நம்பமாட்டார்களே. ஊழியக்காரன் சொன்னால் நம்புவார்கள். ஏன் அவர் ஊழியக்காரரல்லவோ அவர் பொய் சொல்லுவாரா? விசுவாசி பொய் சொல்லுவாரா? என்று நம்பி விசுவாசிகளும் ஏமாந்து போகும்படி சாத்தான் போதகர்களை உபயோகப்படுத்துகிறான். இப்படி இடறல் உண்டாக்குகிறவர்களுக்கு ஐயோ! என்று கூறப்பட்டுள்ளது (மத் 18:6,7) இந்த போதகர்கள் சபைகளுக்குள் புகுந்து நல்ல போதகர்களை விழுத்தள்ளிப் போடுகிறார்கள். சில பொல்லாத வழிகள் பெண்களை ஆண்களை விழுத்திவிடுகிறார்கள்

சாத்தான் தான் நடத்துகிற போலிபோதனைகளை சம்மதிக்கக் கூடாது. தேவன் தெரிந்தெடுத்த இந்த மனிதர்களில் கொஞ்சம்பேராவது தன்னோடு கூட்டிப்போக வேண்டுமென்று பிரயாசப்படுவது போல இதுவும் ஆண்டவரை விசுவாசிகள் சத்தியத்தினுடைய தேவனை விசாரித்தறிய வேண்டும் ஊழியக்காரர் சொல்லுகிறதை என்று நம்பக் கூடாது கடைசி காலத்தில் இப்படிப்பட்ட துரோகிகளும், வேஷதாரிகளும் அநேகர் எழும்புவார்கள் என்று எழுதப்பட்டுள்ளது (II தீமோ 3:4-9)

5) அது மனச்சோர்வினாலும் வரும்

இது சாத்தானுடைய தாக்குதலாகும் மனச்சோர்வு நீதி 24:10, ஏசா 11:7 ஆகவே காலத்தில் மிகுந்த மனதைரியமாய் இருக்க வேண்டும் பொறுமை தேவை. பிறருடைய குற்றம் குறைகளை எடுத்துச் சொல்லி நம்மை மனச்சோர்வடைய சாத்தான் தன்னுடைய கையாட்களை பிரயோகிப்பான். அநேக வேளைகளில் அவைகள் பொய்யானவையும், மிகைப்படுத்தப்பட்டதாயும் இருக்கும். அவையாவும் நம்மைக் குறித்து தேவனுக்கு ஒப்புவிக்க வேண்டும் (ரோம 14:12) மற்றவர்களைக் குறித்தல்ல இப்படியிருக்க தன்னை நிற்கிறேன் என்று எண்ணுகிறவன் விழாதபடி எச்சரிக்கையாயிருக்கக்கடவன் (1 கொரி 10:12)

அவர்கள் ஒரு போதும் நிலைத்திருப்பதில்லை ஆனவர்கள் அல்ல (1 யோவா 2:19) பரிசுத்தவான்கள் ஒருபோதும் விழுந்துபோவதில்லை (சங் 44:18,19 எபி 6:9, 10:39) அது எப்படி உண்டாகுமென்றால்

1. ஜெபம்பண்ண தவறுதல்.

ஜெபம் பலவீனத்தை நீக்கும்பலமும் ஜெபத்தை நீக்கும். ஜெபம்பண்ணுகிறவரும் இருக்க தேவை (சகரியா 12:10) தேவபக்தியுள்ளவர்களே ஜெபம் செய்ய நிர்ப்பந்தமாயிருப்பார்கள் (யோபு 22:21-27 சங் 147:11. யோபு 8:5) ஜெபமில்லாதவர்கள் அனைத்தையும் ஜெப பெலத்தை இழந்துவிடுவார்கள்

2) வேத வாசிப்பை விட்டு விடுதல்

இயேசுவானவர் நம்மை விட்டு விட்டுப் போனபோது தம்முடைய வசனத்தை நீரைப் போல ஆவலாயிருந்து போல (எரே 15:16) விசுவாசிகள் ஆவிக்குரிய காரியங்கள், தியானம், ஜெபம், வசன ஊழியங்கள், உபவாசங்களை அறிந்து கொள்ள வேண்டுமென்று ஆத்தும தாகத்தைத் தீர்க்க பரத்திலிருந்து ஆகாரத்தினால் திருப்தியாக முடிந்தவர்கள் வாழ ஆகாரமான ஜீவ அப்பத்தை வேதத்தை வாசித்து தியானிப்பதை விட்டுவிடுவார்கள்.

3 சபை கூடிவருதலை விட்டுவிடுவார்கள் (எபி10:24,25)

"இனம் இனத்தோடே, வெள்ளாடு தன்னோடே" என்ற ஒரு பழமொழியுண்டு. சபையாருடன் கூடிவருதலை விட்டு விட்டு வெளி வீட்டில் கூடி வருவார்கள் (எரேமி 5:7) பிரசங்கி தேவ சமுகத்திலிருந்து பிரசங்கிக்கும் போதே மனிதனுக்குத் தேவனுடைய இருதயம் வருகிறது தனக்கு ஆகாரமாகிய தேவ வசனத்தை. தேவ சபை கூடிவருதலை விட்டு விடுதல், சபையை விட்டு விலகுவதாகும்

இடபோது இவர் களுக்கு புத்தி சொல்லி எச்சரிக்கை செய்யவுமில்லை (எபி. 10 24-25) ஒருபோதும் விசுவாசிகள் என் ஆத்துமாவை காக்கும் பாதுகாக்கத் தேவை. நீ, நீ அந்தரங்கமாய் பேச வேண்டாம் என்று சொல்லக்கூடாது. அப்படி சொல்ல விசுவாசி வழிவிலகியவர்கள் என்னால் தங்கள் ஆத்துமாவை அழித்துப் போட்டார்கள் (II நாளா 25 16). அவர்களுக்கு ஆசீர்வாதமில்லை விழுந்துபோனார்கள்.

4. பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலுக்கு கீழ்ப்படியாமை :

நம் இருக்கிற (விசுவாசிகளிலிருக்கிற) பரிசுத்த ஆவியானவர் அவர்களை பரிசுத்தப்படுத்துவதாகவும் வழிநடத்துகிறவராகவும் இருக்கிறாரே. எவர்கள் தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய பிள்ளைகள். பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய பிள்ளைகள். பரிசுத்த ஆவியானவர் எதைப்பேசுவார் எதைப் பேசமாட்டார் என்று தெரியாமல் நடப்பது தெளிவுள்ள உண்மை போதகர்கள், ஊழியர், திருட்டு, விபச்சாரம் செய்ய வேண்டாம் சொல்ல, பெருமையாய் நடக்க ஞானம் பேச வேண்டாம்.

தேவ பயத்தையும், கீழ்ப்படிதலையும் கட்டளையிடுவார். தேவ நுக்கியத்தையும், ஜெப, பரிசுத்தவான்கள் துக்கிப்பதையும் கற்றுக் கொள்ள சொல்லுவார். பிரித்து சொல்லுவர் பரிசுத்த ஆவியினுடைய என்று பரி போவான் தன்னுடைய திருப்தியில் சொல்லுகிறார் (1 கொ 2 19) வெளிச்சத்தில் நடக்கச் சொல்லுவார் கர்த்தருக்கு சொல்லுவார்.

5) பொறுமை

அநேகர் விழுந்துபோவது பொறுமையினால் தான், பண ஆசை என்பது தீமைக்கும் வேராயிருக்கிறது முதலாவது இவர்கள் தேவனை திருட ஆரம்பிப்பார்கள் (மல்கி. 3:8) தசம பாகம் கொடுக்காதவர்கள் மேல் சாபம் வருமென்கிறது (மல்கி 3 8,9). இவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில், நிருபமை துக்கித்தில் நிலை நிற்க மாட்டார்கள். அந்த சாபத்தை நீக்கி செய்யாமல் போவார்கள். பொறுமையாய் ஜீவியும் ஆவிக்குரிய வாழ்க்கை விருத்தி ஆசீர்வதிக்கப்படுவார்கள் தசம பாகம் ஒழுங்காக கொடுத்து தேவனுக்குப் பயப்படும் பயம் அவர்கள் உள்ளத்தில் பெருகும் (உபா 14.22). தேவனுடையதை தேவனுக்கு கொடுக்க வேண்டும்.

ஆவையினால் தேவனுடைய அழைப்பு கேட்ட விசுவாசிகள் நிருபிக்கிறார்கள் (எரேமி 3 22, ஓசி. 14 4) நீதிமான்கள் விழுந்தாலும் எழுந்திருப்பார்கள் (சங் 37 24, மீகா 7 8, நீதி 24 16, II கொரி 4 9) கர்த்தர் அவர்களைத் தாங்குகிறார், துன்மார்க்கரோ தீமையில் இடறுண்டு விழுவார்கள்.

சகோதரனே, சகோதரியே நீ எழுந்திரு உன் இருதயத்தைக் கடினப்படுத்தாதே (நீதி 28 15) மனந்திரும்புதலை எழுந்திரு (வெளி 1 6). நீங்கள் எழும்புதலை விழுந்தாலும் எழுந்திருப்பான். உன் வாழ்வுக்கு எதை இடைஞ்சலாயிருக்கிறதோ (எபி. 12 1 2) அதை விட்டுத்தள்ளி ஒருவரும் பரிசுத்த கொள்கை விடாதே இலக்கை நோக்கி தொடரவும் (பிலி 3 14) பின்வாங்கிப் போனதினால் விசேஷமாய் தீமையை செய் (கொலோ 24 16-18) ஜெபமும் போல் சபையைப் பற்றி கொள் (ரூத் 1 16-17) தேவ ஆசீர்வாதம் உங்களுக்கு உண்டாகும் துக்கமே உதறிவிட்டு எழுந்திரு. விழுகைக்கு இருக்க திருச்சபை துக்கிக்கும் தேவை (பிர 4 10) நீதிமானை கர்த்தர் வைக்கிறார் கர்த்தர் தாங்குவார் நீ, எழுந்திரு (சங். 37.23,24) அல்லேலூயா!

என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே; நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்; கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார். (மீகா : 7:8).

சாட்சி

தேவன் குழந்தை பாக்கியம் தந்தார்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். எனது பெயர் மல்லிகா. நான் இந்து குடும்பத்தில் பிறந்தவள். எனக்கு எனது பெற்றோர் ஒரு கிறிஸ்தவ மாப்பிள்ளையை விவாகம் செய்து வைத்தனர். ஊழியங்களை கேட்டு நான் இரட்சிக்கப்பட்டேன். ஆவிக்குரிய சபை ஒன்றிற்கு சென்று கொண்டிருந்தேன். எனக்கு விவாகம் ஆகி அநேக வருடங்களாக குழந்தை பாக்கியம் இல்லாதிருந்தது. குழந்தைக்காக தேவனிடம் ஜெபித்து வந்தேன். எனது சகோதரி புதிய எருசலேம் சபையின் விசுவாசியாக இருந்து வருகிறாள். அவள் என்னிடம் புதிய எருசலேம் சபைக்கு வரும்படி அடிக்கடி அழைத்தாள். நானோ வேலையில் அதனை கேட்காமல் நான் போய் வந்த சபைக்கே சென்று வந்தேன். மீண்டும் மனம் கேட்காமல் சகோதரியின் வார்த்தையின்படியே புதிய எருசலேம் சபைக்கு சென்றேன். தொடர்ந்து சென்றேன். அநேக வருடங்களாக குழந்தை இல்லாதிருந்த என் ஜெப விண்ணப்பத்தை தேவன் கேட்டருளி கர்ப்பம் தரிக்க தேவன் உதவி செய்தார். பிரசவத்திற்கான நாட்கள் நெருங்கியது. மருத்துவமனைக்கு சென்றோம். டாக்டர்கள் என்னை பரிசோதித்து விட்டு சிசேரியன் ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என்று சொல்லி விட்டனர்.

ஆப்ரேஷன் செய்வதற்கு போதிய பணவசதி இல்லாமல் நாங்கள் கஷ்டப்பட்டோம். என்னுடைய சுகப்பிரசவத்திற்காக தலைமை அப்போஸ்தலர் மற்றும் ஊழியக்காரர்கள் ஜெபம் செய்தார்கள். விசேஷமாக தலைமை அப்போஸ்தலர் எனக்காக ஜெபித்தார்கள். எல்லாருடைய ஜெபத்தையும் தேவன் கேட்டருளி, தேவன் எனக்கு சுக பிரசவத்தை கட்டளையிட்டார். அவருக்கே மகிமை.

எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராய் என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும், பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்தில் இருந்து எனக்கு ஒத்தாசை வரும் என்ற (சங். 121 1) வேதவசனத்தின்படி எனக்கு இறைவன் என் நிந்தையெல்லாம் நீக்கி, ஓர் ஆண் குழந்தையை தந்து என்னை மகிழ்ச்சியினாலும், சமாதானத்தினாலும் நிரப்பினார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம், நன்றி.

சகோ. மல்லிகா டேவிட்

புதிய எருசலேம் சபை

தாராவி-கிளை, மும்பை.

தாலி ஒரு வேலியல்ல

திருமணம் என்பது ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையில் நடைபெறும் முக்கியமான சம்பவமாக இருக்கிறது. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சகலத்தையும் கடைசியாக மனிதனையும் சிருஷ்டித்தார். பின்பு தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார் (ஆதி 2:18). அப்படியே ஏவாளையும் ஆதாமுடைய விலா எலும்பில் உருவாக்கி அவளை அவனிடத்தில் கொண்டு வந்தார் (ஆதி. 2:22). இதுவே ஆதியில் நடந்த முதல் திருமணமாக இருக்கிறது. இதை நடத்தி வைத்தவர் தேவன். சாட்சியாக இருந்தவர் தேவன். ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ உடன்படிக்கை செய்து கொள்வதே திருமணம் ஆகும். இருமனங்கள் ஒருமனமாகிறதே திருமணம். புருஷன் தன் மனைவியோடே இசைந்திருப்பான், அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் (ஆதி 2 24). இருவராயிருந்தும் ஒரே சரீரமாக கருதப்படுகிறார்கள். அதாவது ஒரே எண்ணமுடையவர்

னை இருக்கும்போது தனித்தனியே நான் வேறு, நீ வேறு என்கிற பிரிவினைக்கே இடமில்லை.

உலகத்தில் எத்தனையோ விதங்களில் திருமணங்கள் நடக்கிறது. எல்லாம் சிவில் திருமணம் என்று சொல்ல முடியாது. தவறான முறையில் இணைக்கப்பட்டவர்கள் குடும்ப வாழ்க்கையில் வெற்றியடைந்திருப்பது அரிது. சில இளைஞர்கள் தவறிப்போய் குடும்ப வாழ்க்கையை தொடங்கினவர்கள் பிறகு மோசம் போனதாய் சொல்லி வருத்தத்துடன் அநேகர் அவர்களுடைய வாழ்க்கையில் பிரிவினை உண்டாகி விடுகிறது. உலகத்தாருடைய அநேக தம்பதிகள் அநேகர் குடும்ப வாழ்க்கையில் தோல்வியடைந்தவர்களாய் இருக்கிறார்கள்.

தேவ சித்தத்தின்படி பெற்றோர்கள் பார்த்து வாக்களித்து ஏற்பாடு செய்யப்படுகிற திருமணமே (Arranged Marriage) பரிசுத்த விவாகங்களாகும் (ஆதி. 24 50,51). தேவ சந்நிதானத்தில் குருவானவர் பரிசுத்தமான பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் முன்னிலையில் விவாக தம்பதிகள் ஒருவருக்கொருவர் சேர்ந்து வாக்கு பிரமாணம் செய்தவர்கள் குடும்பமாக கட்டப்படுகிறார்கள். வாழ்விலும், தாழ்விலும், சுகத்திலும், துக்கத்திலும், மரணம் நம்மை பிரிக்கும் வரை பிரியாமல் வாழ்வோமென்று ஒருவருக்கொருவர் சேர்ந்து வாக்குப் பிரமாணமே திருமணம் ஆகும். இத் திருமண உடன்படிக்கை கட்டப்பட்டிருக்க வேண்டிய ஸ்திரீயானவளும் மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்கும் காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள் (1 கொரி. 7 39, ரோமர் 7 2-3).

திருமணத்திற்கு அடையாளமாக திருமண நாளிலே மோதிரம் போடுதல், தாலி கட்டுதல், மாலை போடுதல், வளையல் போடுதல் என்று உலகத்தில் ஒவ்வொரு தேசிய கலாச்சாரத்திலேயும் இது போல பழக்கங்கள் இருக்கிறது. தாலி கட்டுதல் இந்திய கலாச்சாரமாக இருக்கிறது. மாட்டுக்கு மூக்கணாங்கயிறு போட்டு அடக்குவது போல திருமணத்துக்கு அடையாளமாய் போட்டு அடக்குவது போல ஒரு புருஷனையோ, மனைவியையோ கட்ட முடியாது. மஞ்சள் கயிறோ, தங்க உடனோ, எவ்வித பொருளோ கணவன் மனைவியைக் கட்டுப்படுத்தாது. அவைகள் அடையாளங்களே. அடையாளமாகும். கர்த்தர் தான் போல நமக்கு கிடைத்திருக்கிறவைகள் பாவமும். திருமணமானவர்கள் என்று சொல்லப்படுகிறவர்களே.

தேவ சந்நிதானத்தில் செய்த வாக்கை மீறினால் தேவனுக்கும், வாக்கு செய்தவருக்கும் துரோகம் செய்கிறார்கள். கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார்; ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம்பண்ணாதபடிக்கு உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் (மல். 2:14-16)

விவாகம் பண்ணிக்கொண்டவர்களுக்கு கர்த்தர் கட்டளையிடுகிறதாவது: மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்து போகக் கூடாது. பிரிந்து போனால் அவள் விவாகமில்லாதிருக்கக் கடவள் அல்லது புருஷனோடே ஒப்புரவாகக் கடவள்; புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக் கூடாது (1 கொரி. 7 10-14).

விபசாரம், வேசித்தனம் சீர்குலைந்து விலகியிருக்கும்படி விவாகம் பண்ணினவர்களும் வேசித்தனம் இராதபடிக்கு தன் திருமணம் ஏற்படுத்தப்பட்டது (1 கொரி. 7 2). வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள் (1 கொரி. 6 18). சரீரம் வேசித்தனத்திற்கு அல்ல, கர்த்தருக்கே உரியது (1 கொரி. 6 13). விபசாரம் செய்யாதிருப்பாயாக என்பது பிரமாண பத்துக் கற்பனைகளில் ஒன்றாகும் (யாத். 20 14). விபசாரமும் வேசித்தனம்

செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தை (பரலோகத்தை) சுதந்தரிப்பதில்லை (I கொரி. 6 9-10). அக்கினி கடலில் தள்ளப்படுவார்கள் (வெளி. 21 8)

விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும் விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக, வேசிக்கள்ளரையும், விபச்சாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார் (எபி. 13 4). தேவன் தண்டிப்பார். வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன் அவளை விபச்சாரம் செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படி தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் (மத். 5.32).

குடும்பவாழ்க்கை ஆசீர்வாதமாயிருக்க, வெற்றி சிறக்க வேதாகமத்தில் கொடுக்கப்பட்ட சில நல்லயோசனைகளை ஆராய்வோம்

1 புருஷன் மனைவிக்கு, குடும்பத்திற்கு தலையாயிருக்க வேண்டும் (எபேசி. 5 23) ஆதாமுக்கு ஏவாளை ஏற்ற துணையாகத்தான் கர்த்தர் சிருஷ்டித்தாரே யொழிய தலையாக இருக்கவும் ஆளுகை செய்யவும் கீழ்ப்படுத்தவும் நியமிக்கவில்லை. இருவர் தலைவர்களாக ஒரே குடும்பத்தில் இருக்க முடியாது. புருஷன் மேல் மனைவி அதிகாரம் செலுத்தக்கூடாது (1 தீமோ. 2·11-14) அநேக வீடுகளில் ஸ்திரீகளின் ஆளுகை நடைபெறுகிறது ஆதலால் பல சீர்கேடுகள் ஏற்பட்டு குடும்பம் சீரழிந்து போகிறது. (ஏசா 3 12) ராஜ ஸ்திரீயாகிய வஸ்தி ஆகாஸ்வேரு ராஜாவின் வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் அந்த ஸ்தானத்தை இழந்து போன சம்பவம் வேதாகமத்தில் குறிக்கப்பட்டு எல்லா தேசத்திலும் உள்ள ஸ்திரீகள் தங்கள் புருஷரைக் கனம் பண்ண வேண்டும் என்று எல்லா பாஷையிலும் கட்டளையாக எழுதி அனுப்பினார்கள் (எஸ்த. 1 17-22)

2) மனைவிகள் தங்கள் சொந்த புருஷருக்கு எந்தக்காரியத்திலும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (எபேசி. 5 24). அதுவே பயபக்தியுள்ள ஸ்திரீகளின் கற்புள்ள நடக்கையாக இருக்கிறது (I பேதுரு. 3:1-2) இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்கு கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி அவருக்கு கீழ்ப்படிந்திருந்தாள் (I பேதுரு. 3.5-6).

3) புருஷர்கள் தங்கள் மனைவியினிடத்தில் அன்பு கூற வேண்டும். கசந்து கொள்ளக் கூடாது (கொலோ. 3.19, எபே 5.25) புருஷர்கள் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களைப் பாவித்து அவர்களில் அன்பு கூற வேண்டும். தன் மனைவியில் அன்பு கூருகிறவன் தன்னில் தான் அன்பு கூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லை (எபேசி. 5 28-29). மனைவிகளை அடிமைகளாக எண்ணக் கூடாது மனைவியை அடிக்கிறவன் பாவம் செய்கிறான். ஆடோ, மாடோ எந்த மிருகங்களோ தன் துணையை துன்புறுத்துவதில்லையே.

4) குடும்ப வாழ்க்கையில் மற்றவர்களின் குறுக்கீடும் இடைஞ்சலும் இருக்கக்கூடாது அநேக குடும்பங்கள் சிதறுவதற்கு பெற்றோர்கள், மாமியார், மாமனார், உறவினர்கள் நண்பர்கள் காரணமாயிருக்கிறார்கள் கணவனும் மனைவியும், தகப்பனையும், தாயையும் விட்டு பிரிந்து வாழலாம்; ஆனால் அவர்கள் நிமித்தம் தாங்கள் பிரிந்து போகக் கூடாது (எபேசி 5:31, ஆதி. 2·24)

5) கணவனும் மனைவியும் கற்புள்ளவர்களாயிருக்க வேண்டும். ஸ்திரீகள் கற்புள்ளவர்களும் வீட்டில் தரித்திருக்கிறவர்களுமாயிருக்க வேண்டும் (தீத். 2·4,5, 1 பேதுரு 3.1) கற்பு என்பது ஸ்திரீகளுக்கு மட்டுமல்ல, புருஷர்களும் கற்புள்ள நடக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும் (II கொரி. 6.6, 1 தீமோ. 4 12, வெளி 14 4). பிறர் மனைவியை இச்சியாதே (யாத் 20 17)

6) ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் சந்தேகப்பட கூடாது. சந்தேகம் இருக்கிற இடத்தில் சந்தோஷமும் இல்லை (1 தீமோ 3:11)

7) ஒருவர் குறைகளை ஒருவர் தாங்கி பொறுத்து விட்டுக்கொடுத்து வாழ வேண்டும். எல்லோரும் பூரண பரிசுத்தரல்ல. ஜென்ம சுபாவங்கள் பழக்கங்களை பெரிதாக எண்ணாதபடிக்கு பொறுத்துக் கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும் (கொலோ 3:13).

அவிசுவாசிகளை திருமணம் செய்ய நேர்ந்தவர்கள் தங்கள் வாழ்க்கை துணைவர் இரட்சிக்கப்பட பிரயாசப்பட வேண்டும் எப்படியாவது குடும்ப வாழ்க்கையில் வெற்றி பெற முயற்சி செய்ய வேண்டும். இரட்சிப்பை விரும்பாத அவிசுவாசிகள் பிரிந்து போனால் போகட்டும். இப்படிப்பட்ட விஷயத்தில் சகோதரனாவது சகோதரியாவது அடிமைப்பட்டவர்களல்ல. சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார் (1 கொரி. 7:12-15). புருஷர்களே! மனைவியானவள் பெலவீனபாண்டமாயிருக்கிறபடியால் நீங்கள் விவேகத்தோடே அவர்களுடன் வாழுங்கள் (1 பேதுரு 3:7)

"புருஷன் தன் மனைவியை தள்ளிவிடக்கூடாது" (1 கொரி. 7:11).

தேவனுடைய அதிசயமான விடுதலை

தேவனுடைய பெரிதான கிருபையால் அடியேனுக்கு கர்த்தர் செய்த அற்புத சுகத்தை சாட்சியாய் எழுத உதவிய கர்த்தரை துதிக்கிறேன். என்னுடைய சரீரத்தில் 6 மாதமாக ஒரு கட்டி மூலத்தில் இருந்து மிகுந்த வேதனையும் மலஜலாதி போகும் போது அதிக ரத்தமும் கழிந்தது. அருமை ஆண்டவரிடம் ஜெபித்தேன் மூன்று காரியத்துக்காக (1) என்னுடைய பாவத்தினால் இந்த வியாதி வந்தால் ஆண்டவரே என்பாவத்தை உணர்த்தி இதிலிருந்து விடுதலை பெற வேண்டும். (2) ஆஸ்பத்திரியில் போய் படுத்தால் என்னைச் சார்ந்தவர்கள் வேதனைப்படுவார்கள். சிலர் ஊழியக் காரருக்கு வியாதி என்றால் இடறிப்போவார்கள் (3) மரணத்துக்கு ஏதுவான வியாதியாய் இருந்தால் என்னை எத்தனையோ மரணத்திலிருந்து விடுதலையாக்கினவரே இந்த வியாதி தீரவும் முடிவுவரை உம்மை பின் பற்றவும், எனக்கு பெலன்தாரும் என்று இறைவனிடம் வேண்டினேன்

தேவனுடைய கிருபையால் 1-7-99 அன்று கொடைக்கானல் S.L செட்டில் ஒரு நாள் கன்வென்ஷன் தலைமை அப்போஸ்தலர் ஜெப நடத்தினார்கள். அன்று அடியேன் ஜெபவிடம் என் வியாதியை கூறினேன். ஜெப ஜெபித்தார்கள். அன்று இரவு வலியும் வீக்கமும் மாறிவிட்டது மறுநாள் நான் பார்க்கும் போது இரண்டு முளைகள் ஒரே இடத்தில் ½ இஞ்சி நீளம் இருந்தது இதை ஆப்ரேஷன் பண்ணி மாற்றி விடலாம் என்று நினைத்தேன். மேலும் இத்தனை சுகம் தந்த கர்த்தர் இனி மேலும் மாற்றுவார், தருவார். என்று முடிவை எதிர்பார்த்தேன். ஒரு வாரத்துக்குள்ளாக எந்த மருந்தும் ஆப்ரேஷனும் இல்லாமல் இருந்த இடமும் தெரியாமல் மறைந்து விட்டது

தலைமை அப்போஸ்தலரின் ஜெபத்தினால் இந்த ஒரு பெரிய அதிசயமான சுகத்தை அடியேன் பெற்றுக் கொண்டேன்

இந்த அற்புத சுகம் தந்த கர்த்தரை முழு மனதோடு மகிமைப்படுத்துகிறேன்

இப்படிக்கு
பாஸ்டர் Y. ஜோசப்பிள்ளை
புதிய எருசலேம் சபை
திருப்பூர் கிளை

வேதம் கூறும் நாவுகள்

1 நீதிமானுடைய நாவு சுத்த வெள்ளி (நீதி 10:20)
2 மாறுபாடுள்ள நாவு அறுப்புண்டுபோம் (நீதி 10:31)
3 சர்ப்பத்தைப் போல் கூர்மையாக்கும் நாவின் கீழ் விரியன் பாம்பின் விஷம் இருக்கும் (சங் 140:3)
4 ஞானவான்களின் நாவு ஒளஷதம் (நீதி 12:18)
5 மரணமும், ஜீவனும் நாவின் அதிகாரத்தில் இருக்கும் (நீதி 18:21)
6 துன்மார்க்கனின் நாவின் கீழ் தீவினையும் அக்கிரமும் உண்டு (சங் 10:7)
7 நீதிமானுடைய நாவு நியாயத்தைப் பேசும் (சங் 37:30)

நாவு (யாக்கோபு நிருபத்தில் 3:1-14)

1 நாவு ஒரு சிறிய அவயவம் 3:5
2 நாவு ஒரு நெருப்பு 3:6
3 நாவு அடங்காதது 3:8
4 நாவு பொல்லாங்குள்ளது 3:8
5 நாவு அநீதி நிறைந்த உலகம் 3:6
6 நாவு பொய் சொல்லுகிறது 3:14
7 நாவு மனுஷனை சபிக்கிறது [illegible]
8 நாவு விஷம் நிறைந்தது 3:8
9 நாவு பெருமை [illegible] 3:5
10 நாவு கறைப்படுத்துகிறது 3:6
11 நாவு ஆயுள் சக்கரத்தை கொளுத்தி[illegible]
12 நாவு தேவனைத் துதிக்கிறது 3:9

நாவைப் பற்றிய பல நாட்டு பொன் மொழிகள் :

அல்பேனியா : நாவில் எலும்பு கிடையாது, ஆனால் எலும்புகளை நொறுக்குகிறது

இந்தியா : எலும்பு இல்லா நாக்கு எப்படியும் பேசும்

இத்தாலி : யார் இதயம் குறுகியதோ அவர்களுடைய நாவு பெரியது

இந்தியா : நாவை அடக்கியவன் பெரிய ஞானியாவான்

ஜப்பான் : 3 அங்குல நீளமுள்ள நாவு 6 அடி மனிதனைக் கொல்லக்கூடியது

சீனா : பெண்களின் நாவு அவளுடைய வாள், அதைத் துருப்பிடிக்க அவள் விடுவதில்லை

ருஷியா : எருது தன் கொம்புகளினால் பிடிபடுகிறது மனிதன் தன் நாவினால் பிடிபடுகிறான்

ஸ்பெயின் : உன் சிரசைக் காக்க நீளமாய் பேச நாக்கை பயன்படுத்தாதே

ஞானஸ்நானம்

18.8.99 அன்று பம்பாய் தலைமை சபையில் ஐந்து பேர் ஞானஸ்நானம் பெற்று திருச்சபையின் அங்கமானார்கள் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

"தேவனைத்தேடு"
"Seek God"

Regd. No. 04008/84
Postal Regd. No. MH BY NE-94/95
Tamil Monthly Magazine

பவுல் (சின்னவர்)

இவருடைய எபிரேய பெயர் சவுல் என்று இருந்தது இவர் நியாய பிரமாணத்தை அறிந்த பரிசேயனாயிருந்தார் கிறிஸ்தவர்களை வெகுவாய் துன்பப்படுத்திக்கொண்டிருக்கும் போது கி.பி. 35-ம் வருஷத்திலே, இயேசு இரட்சகர் கிருபையாய் இவருக்கு தரிசனமானார் அதனால் அவர் குணப்பட்டு புறஜாதிகளுக்கு சிரேஷ்ட அப்போஸ்தலரானார்

கி.பி. 50வது வருஷத்திலே இவர் எருசலேமிலிருந்து அந்தியோகியாவுக்கு திரும்பின பின்பு பேதுருவோடு தர்க்கம் பண்ணினார் (அப. 15 25. கலா 2 14) இவர் பல இடங்களிலுள்ள சபைகளுக்கு புதிய ஏற்பாட்டிலுள்ள பதினாலு நிருபங்களை எழுதினார் பவுல் என்பவர் தீர்க்கதரிசனத்தில் கண்டிருக்கிற சின்ன பென்யமீன் என்பவரோ (சங் 68 27, பிலி 3:5) அவர் பிந்தினவராயிருந்தும் முந்தினவரானார் (மத். 20.1.16; 1 கொரி 15.8-10) எருசலேம் பட்டணம் தொடங்கி இல்லிரிக்கம் முதல் ஸ்பானியா வரை சென்று ஐரோப்பா கண்டத்தை கடந்து வெகுவைராக்கியமாய் தம்முடைய பணிவிடையை நடத்தி முடித்தார் (ரோம 15 19.24, 2தீமோ 4 7) இவர் கி.பி. 66-ம் வருஷத்திலே சிரச்சேதம் செய்யப்பட்டார் இவருடைய பிரயாசம் வெகுவாய் இருக்கிறது

அறிவிப்புகள்

மூன்று இதழ் வெளியீட்டு தேதிகள்

25 (அக்டோபர்) திங்கள் 1999
23 (நவம்பர்) செவ்வாய் 1999

புதிய எருசலேம் செய்தி பத்திரிகை.

ஆண்டு சந்தா Rs. 30.00
வெளிநாடு Rs. 400.00

அனுப்ப வேண்டிய முகவரி :

CHIEF APOSTLE N. LAZAR
"NEW JERUSALEM CHURCH"
CHURCH LANE, TILAK NAGAR,
DARGA CROSS ROAD, SONAPUR,
BHANDUP, MUMBAI - 400 078.

மணி ஆர்டர் கூப்பனில் உங்கள் சந்தா (எண்) நம்பரை குறிப்பிடவும். பழைய சந்தாதாரரா அல்லது புதிய சந்தாதாரரா என்பதையும் குறிப்பிடவும்.


பணம் அனுப்புகிறவர்கள் சந்தாவா அல்லது நன்கொடையா என்பதை தெளிவாகக் குறிப்பிடவும்.

"புதிய எருசலேம் செய்தி" பத்திரிகை வேண்டுவோர் ரூ 30 (முப்பது) சந்தா தொகையுடன் தங்கள் விலாசத்தை தெளிவாக கொட்டை எழுத்துக்களில் (CAPITAL LETTER) எழுதி பத்திரிகையை பெற்றுக் கொள்ளும்படி கேட்டு கொள்ளப்படுகிறீர்கள்.

Edited and Published by : Chief Apostle N. LAZAR, New Jerusalem Church, Church Lane, Tilak Nagar, Darga Cross Road, Sonapur, Bhandup, Mumbai - 400 078.
Printed at : NEW JERUSALEM PRESS, Tilak Nagar, Bhandup, Mumbai - 400 078.



எக்காளம் 17; சத்தம் : நவ / டிசம்பர் '99



" வீட்டெஜமான் (இயேசுகிறிஸ்து) சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல் கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவா(ர்)ன் என்று நீங்கள் அறியீர்கள்......விழித்திருங்கள். உங்களுக்கு சொல்லுகிறதை எல்லாருக்கும் சொல்லுகிறேன், விழித்திருங்கள்..." மாற்கு 13 : 35–37

EDITOR . CHIEF APOSTLE N. LAZAR

MUMBAI, INDIA

பத்திரிகையின் நோக்கம்

தேவனுடைய பிள்ளைகள் எல்லாரும் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டு கிறிஸ்துவுக்கேற்ற பூரண வளர்ச்சியடையும்படியாகவும் தலையாகிய கிறிஸ்துவைப்பற்றிக் கொண்டு ஒரே சரீரமாய் கிறிஸ்துவுக்குள் கட்டப்படவும், சபையானது [illegible] ஒரே சபை பூரண வளர்ச்சியடையும்படியாகவும் இப்பத்திரிகை வெளியிடப்படுகிறது (எபே 4 11 16)

புதிய எருசலேம் சபையின் அஸ்திபார உபதேசங்கள்

இயேசு கிறிஸ்து எனக்குத் தரிசனமாகி [illegible] இயேசுவானவர் (தேவன்) தாம் உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியினால் அப்போஸ்தலருக்கு கட்டளையிட்ட அதிகாரங்களும், கட்டளைகளும் 7 (அப் 1 1-3) எனக்கு காண்பித்து, ஸ்தாபித்த சபையின் அஸ்திபார உபதேசங்கள்

1. உலகமெங்கும் போய் மனந்திரும்புங்கள் என்று சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் மத் 28 18 மாற்கு 16 15
2. விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்களை பிதா [illegible] பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானப்படுத்துங்கள் - மத் 28 19 (இயேசு [illegible] (Th[illegible]gh Action) செய்து காண்பித்தார்
3. திருச்சபையைக் கட்டு - மத் 16 18 [illegible] கட்டளையிட்டவைகளையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்க[illegible] போதியுங்கள் - மத் 28 20
4. அவர்களுடைய பாவங்களை [illegible] 20 23
5. அவர்களை மேய்த்து ஆளு[illegible] 21 15-17
6. இவைகளை நடப்பிக்க [illegible] பெற்றுக்கொண்டு (அப்-1 5-8)
7. நான் வருகிற வரையில் [illegible] திருவிருந்தை (நற்கருணை) நடப்பியுங்கள் என்றார் - 1கொ[illegible]

நான் ஆண்டவரே சிலர் அஸ்திபார [illegible] இரண்டு (2) என்கிறார்கள் வேறுசிலர் ஏழு (7) என்கின்றனரே அதெப்படி? என்றேன்

இயேசுவானவர் பிரதியுத்தரமாக [illegible] அஸ்திபார உபதேசங்கள் ஏழு ஆகும் ([illegible] 9 1-6) இது ஆதி அப்போஸ்தலர்களுக்கு நான் கொடுத்த கட்டளைகளும் அதிகாரங்களுமாகும் இவைகளை நான் உனக்குக் கொடுக்கிறேன் என்றார் (அப். 1 1. 10 40-43)

இதழின் உள்ளே



ஆசிரியர் உரை

தேவகுமாரன் மானிடனாய் அவதாரமெடுத்ததைக் கொண்டாடுவோமாக. நமக்கு ஒரு கிறிஸ்து என்னும் இரட்சகர் இருக்கிறார் "மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்பட வேண்டும் (யோவா 3:14,15)" வெளியே மற்ற மதங்களில் அவர்களுக்கு ஒரு நம்பிக்கையில்லை ஒரு ஆள் இல்லை அவர்கள் கெட்டு நரகத்துக்குப் போகாமல் அவர்களுக்காக தியாகம் செய்த ஒருவரும் இல்லை அவர்களுடைய தெய்வங்கள், வழிகாட்டிகளெல்லாம் கைகாட்டிகளே அவர்களும் போய்ச் சேரவில்லை. அந்தக் கைகாட்டிகளை நம்பிப் போனவர்களும் போய்ச் சேரவில்லை அவர்களுக்கு திடமான நம்பிக்கையில்லை. நமக்கோ ஒரு இரட்சகர் நாம் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி தான் உயர்த்தப்பட வேண்டும் என்று கூறியவர் நமக்காக பிறந்து, வாழ்ந்து நாம் சொன்னபடி சிலுவையில் உயர்த்தப்பட்டார் பிற தெய்வங்களெல்லாம் பாவிகளை அழிக்க பூவுலகில் வந்ததாக அவர்கள் சரித்திரமே சொல்லுகிறது பாவிகளை இரட்சிக்க விடுதலையாக்க பரலோகம் சேர்க்க, தம்மைப் பலியாக ஒப்புக் கொடுத்து நம்மைப் பிழைக்க வைத்த கிறிஸ்து இயேசுவின் பூவுலக பிரவேசத்தைப் போற்றுவோம், வாழ்த்துவோம், வணங்குவோமாக மகிழ் கொண்டாடுவோமாக.

கிறிஸ்துவுக்குள

Chief Apostle N. LAZAR

கிறிஸ்துமஸ் செய்தி

தேவன் பிறந்துவிட்டார்

இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள் அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" (ஏசா 7:14) இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம் என்ற தீர்க்கதரிசன வாக்கின்படி தேவன் இவ்வுலகத்தில் மனிதனாய் அவதாரமெடுக்க ஒரு பெண்ணிடம் பிறப்பது அவசியமாயிற்று அதற்கு மரியாளைத் தெரிந்து கொண்டார் காபிரியேல் தேவதூதன் மூலம் மரியாளுக்கு இச்செய்தி அறிவிக்கப்பட்டது (லூக்1 26–34) அவள் தன்னை தேவனுக்கு அர்ப்பணித்தாள் (லூக்1 38) தேவன் மனிதனாய் பெண்ணிடம் அவதரிக்க சித்தம் கொண்டதால் பெண்ணினத்தை தேவன் கனப்படுத்திவிட்டார் மனிதனாய், ஒரு குழந்தையாய், உதவி தேவைப்படும் குழந்தையாய் அவர் தவழ்ந்தது எனவே தேவனுக்கு நிகரான அவர் மனிதனாய் பிறவாவிட்டால் மனிதனை மீட்க முடியாது மனிதனாய் பிறவாவிட்டால் மனிதனுக்காக பலியாக முடியாது ஆம் நமக்கு பாலகன் (மனுஷகுமாரன்) பிறந்துவிட்டார் ஒரு குமாரன் (தேவன்) கொடுக்கப்பட்டார் (ஏசா 9 6-7) பிதாவினால் குமாரன் கொடுக்கப்பட்டார் ஆம் இவர் தேவகுமாரன் தேவனில் தேவனானவர் இவரைக் கொண்டு, இவருக்காக சர்வ உலகமும் சிருஷ்டிக்கப்பட்டது (கொலோ 1 16) இவர் எல்லாவற்றையும் தம்முடைய வல்லமையுள்ள வார்த்தையினால் தாங்குகிறவராய் (எபி 1 3) உலகத்தோற்றத்துக்கு முன்னே அநாதியாய் அபிஷேகம் பண்ணப்பட்டவராயிருக்கிறார் (நீதி 8 23) இவர் மூலமாய் சகலமும் உருவாக்கப்பட்டது (யோ 1 3,10)

தேவன் இவரை உலகத்துக்காக (நமக்காக) கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தார் எனவே தேவனின் அன்பு (யோ. 3 16) இவரை விசுவாசிக்கிறவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி இவரைத் தந்தருளினார் இவரை விசுவாசிக்கிறவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவார்கள் இவர் (இயேசு) தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி இரட்சிப்பார் (மத். 1 21) இந்த இரட்சிப்பை பாவ மன்னிப்பை பாவத்திலிருந்து விடுதலையை, குற்ற மனச்சாட்சியிலிருந்து விடுதலையை பெற்றுக் கொள்வதே கிறிஸ்மஸ் பண்டிகையின் நோக்கமாகும் நீர் இயேசுவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டு விட்டீரா? இல்லை என்றால் இன்றே இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளும் பக்கத்திலிருக்கும் புதிய எருசலேம் சபை தேவ ஊழியர்களிடம் சென்று ஆலோசனை கேட்டு ஜெபித்துக் கொள்ளவும் புதிய எருசலேம் சபை சமீபத்தில் இல்லை என்றால் வேறு ஏதாவது நல்ல தேவ ஊழியரிடம் சென்று ஆலோசனை பெற்று தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்

புதிய எருசலேம் செய்தி வாசகர்களுக்கு 1999 கிறிஸ்துமஸ் வாழ்த்து!

"உங்கள் சந்தோஷம் நிறைவாயிருப்பதாக"

வாழ்த்துகிறோம். வாழ்க !

திரித்துவம் திரியேகத்துவம்

[illegible]

... (One substance and Three persons) ...

... (Substance) ...

... (Nature) ...

... (OUSIA) ...

[illegible]

தன்மையிலும் இருந்து நித்திய புறப்பாடு உடையவராயும் (Eternal Begetting and eternal generation) விளங்குகிறார் பிதா குமாரன், பரிசுத்தாவி என்ற திரித்துவத்தின் தன்மை ஒரே தன்மையுடையதோ அதிகமானதோ மூலப்பொருள் என்ற கருத்து ஒன்று அல்லது ஓர் இறைதின அடிப்படை பொருளோடொன்றாமல் மற்றொன்றைக் குறிக்காமல் தனித்து இயங்கும் அசைவுமூலப்பொருளையா நிற்போகுகிறது

ஓர் ஆரம்ப பருவத்திலும், முன் குறிப்பிடப்பட்ட திருத்தன்மைக்குள எடுத்துக் கொண்டால் இரண்டிலும் விக்கிரகம் மூலப்பொருள்போலாது பருத்தின் மூலப் பொருள் வேறு பரமனின் மூலப்பொருள் வேறு பருவும் பரமனும் ஒரே தன்மை யுடையதெனக் கருதமுடியாது திரித்துவத்தின் தன்மை அமைவுகளை, மூன்று ஆட்கள் தன்மை வேறு எனவும் அல்ல பிதா கடவுள், குமாரன் கடவுள், பரிசுத்தாவி கடவுள் மூவரும் ஒரே தன்மையுள்ளவரே ஆனால் மூன்று கடவுளர் இல்லை. ஒரே கடவுள் மற்றொரு முக்கியமும் "ஆள்" (person) இப்பதமும் ஆழ்ந்த கருத்தை விளக்குவதற்கு விளக்கப்படுத்தப்பட்ட மிகக் குறிய, மிக ஈரமாகப் பயன்படுத்தும் கடவுளின் ஒருத்துவத்தை பாதிக்காமல் குமாரனிலும் பரிசுத்தாவியிலும் வெளிப்படுத்தப்பட்ட அவரின் தன்மையை விளக்க "ஆள்" என்ற ஆள்பதம் உபயோகப்படுத்தப்பட்டது. ஒரு பொருளை பொருளாக ஆக்குவது அதன் தன்மையே ஆகும்" (That which makes or constitutes a thing or a person is the substance) "ஆள்" என்பது இந்த ஒரே தன்மைக்குரிய ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர் தனித்து இயங்கும் தன்மையையும் வேறாற்றும் தன்மையை எடுத்துக் காட்ட உபயோகப் படுத்தப்பட்ட ஓர்பதம் இப்பதத்தை தெர்துல்லியனே முதன் முதலில் உபயோகித்தவர். இப்பதத்தை உபயோகிப்பதில் தமிழ்மொழியில் ஒரு சிறு பதத்தைப்பற்றி சற்று எச்சரிப்பாய் இருக்க வேண்டும் அது ஆளத்துவம் எனப்படும் தமிழில் சிறியதை சிந்தரத்த பதக்குறை விதித்திருக்கும் சில வேளைகளில் ஆளத்துவம். "ஆள்" என்ற இரு பதங்களும் தகுந்த தெளிவில்லாமல் உபயோகிக்கப்படுவது உண்டு திரித்துவ பொருளில் ஒருவர் என்று சொல்லும் போது ஆள் என்ற பதமே ஆளத்துவம் என்ற பதத்தைவிட மிகவும் பொருத்தம் தெர்துல்லியனோ இப்பதத்தை உபயோகிக்கும் போது நான் நீ, அவன் என்ற தன்னிலை, முன்னிலை, படர்க்கை என்ற முறையைப் நாம் உபயோகிக்கும் கருத்துக்கு இணையாகவே உபயோகித்தார் என்று சொல்ல முடியாது திரித்துவத்தின் திரித்துவ அமைவின்மூலம் திரித்துவத்தின் உட்கோட்பா ஒருவருக்கொருவர் உறவுகொண்டிருப்பதை விளக்குவதற்கு இப்பதத்தை உபயோகித்தார் பிதா, குமாரன், பரிசுத்தாவி மூவரும் கிரியை ஆற்றும் போதும் உறவாடும் போதும் ஒரே கூட்டு முறையாயும் (Team) அதே சமயத்தில் தனித்து கிரியை ஆற்றுபவரும், உறவாடுபவரும் (Distinction) என்ற முறையில் "ஆள்" என்றே அழைக்கப்பட வேண்டும் பிதா, குமாரனையும் பரிசுத்தாவியையும் அனுப்புகிறார் (யோவா 4 4-6) பிதா இயேசுவை உயிரோடெ எழுப்புகிறார் (அப 2 32) குமாரன் பிதாவை நோக்கி ஜெபிக்கிறார் (மாற் 14 36) என் தேவனே என் தேவனே என அழைக்கிறார் குமாரன், பரிசுத்தாவியை கிரியைப்படுத்துகிறார் (லூக் 4 1) சீஷர்களின் மேல் ஊதி பரிசுத்தாவியை பெற்றுக் கொள்ளுங்கள் என்கிறார் (யோவா 20 22) இத்தகைய தனிப்பட்ட குறிப்புக்களை எடுத்துக்காட்ட "ஆள்" என்ற பதம் உபயோகிக்கப்படுத்தப்பட்டது மனுஷனுக்கு அப்பால் புரிந்து கொள்ளமுடியாத ஏதுவாயும் கடவுள் தன்மையில் விசேஷித்த குறிப்புகளை அவை எளிதில் விளக்கமுடியாததாகும் ஆள் என்ற பதம் உபயோகிக்கப்படுத்தப்பட்டது ஆள் என்ற பதத்தின் மூலமாக திரித்துவத்தின் பொருள் (Adding reality or substance) எனவாம் சிதைக்கப்படாமல் மூவரின் கிரியைகளிலும் உறவாடுதலிலும்

தனித்துவத்தை விளக்கி காட்டும் என கூறும்போது சித்தாந்த ஆரம்பமிருந்தருந்த ஓர் பதம் என கூறுவதும் கூடாது. திரித்துவ சித்தாந்தத்தின் உண்மையை விளக்க மற்றொன்றை உபயோகிக்கும் போதும் ஒன்றைவிட மற்றொன்றை வற்புறுத்தும் போதும் எவ்விதத்திலும் தப்பு உபதேசம் ஏற்பட்டு விடும் என்பதை மறந்துவிடக்கூடாது. பரிசுத்த அகஸ்டின் கூறிய நினைவு, அறிவு, எண்ணம் (memory, reason and will) அல்லது காதலன், காதலி, காதல் (The lover, beloved and the love) போன்ற திருஷ்டாந்தங்கள் திரித்துவத்தில் மாறாத ஒரே தன்மை ஒரே தன்மையிலுள்ளரும் மூன்று செயலாற்றும் தன்மையும் (one substance, Three persons) என்ற சத்தியத்தை எடுத்துக்காட்டிய போதிலும் ஆள் என்ற பதத்தின் முறையான விளக்கப்படும் பிரத்தியேகத்தை குறித்து (Separation) எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். அது பற்றிய ஒருவரிலொருவர் (Co-inherence) என்ற சித்தாந்தம் சிறிது அனுபவத்தில் வற்புறுத்தப்பட்டது. தன்மையிலும், செயலாற்றுவதிலும், சிந்திப்பதிலும் ஒருவரிலொருவர் ஒருக்கமாம். ஓர் இடம் எனக் கூறப்பட்டாலும் ஒருவரில் மூவர் மூவரில் ஒருவர் ஒரே காலம், ஒரே இடம் என்றே திருத்துவ அனுபவ சித்தாந்தம் சொல்லப்பட வேண்டும் (யோவா. 14 10,11, 17 21; 1 கொரி 2 11). (It is the internal co-existence of one person in the other without confusion of one person or of personality). தேவனுடைய ஆவியேயன்றி ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறிய மாட்டான் (1 கொரி. 2 11) இந்த அறிவும், விசுவாசமும் வெளிப்பாடும் இல்லாவிட்டால் இந்து மக்களைப்போல திரித்துவம் மும்மூர்த்தி வணக்கமாக (சிவன், பிரம்மன், விஷ்ணு) மாற்றி கூறப்பட்டுவிடும். இக்குறிப்பில் இந்து சமயத்திலுள்ள இறைபக்கமாக மிக எச்சரிப்பாய் இருக்க வேண்டும். நாம் அநேகரு இப்பகுதியில் வற்புறுத்துவதில் திரித்துவ சித்தாந்தம் நாசரேத் ஊர் இயேசுவின் வாழ்க்கையும் அவருக்குள் நாம் பெற்ற அனுபவித்த அனுபவத்தையும் அவரில் நமக்கு கிடைத்துள்ள கடவுளின் வெளிப்பாட்டை அடிப்படையாக கொண்டதேயல்லாமல் மனுஷனின் அறிவு, மனோபாவனை இவற்றை உடையது அல்ல. வெளிப்பாடும் விசுவாசமும், அனுபவமே திரித்துவ சித்தாந்தத்தின் அடிப்படை. கடவுள் தன்மையில் "ஆள்" எனப்படுவது மனுஷத்தன்மையில் ஆள் என்ற பொருளின் விளக்கத்தை புரிந்து கொள்ளாமல் அவருடைய தன்மையிலே (Subsistence) "ஆள்" என்ற உயரிய வெளிப்பாட்டை உடையவராக என்றே ஒப்புக்கொள்ள வேண்டும். முன் ஆதியாகமத்தில் விவிலிய நூலிலும் கடவுள் வெளிப்பாட்டில் உபயோகிக்கப்பட்டுள்ள பற்பல பதங்களையும் உதாரணம் பிரசன்னம், முகம், உரையாடல் தூதன், விரல், செக்கைனா, மகிமை, மேகஸ்தம்பம், நன்மை, தலைமையோன், மற்றும் திரித்துவ சித்தாந்த பதங்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒப்பிட்டுப்பார்ப்பது மிகப் பயன் விளைவிக்கும்

(தொடரும்)

பரிசுத்த விவாகம்

மணமகன்	மணமகள்	நாள்	இடம்
சகோ. செல்வத்துரை	S. விஜயா	30-8 99	வள்ளியூர்
பாஸ்டர் • லாசரஸ் இம்மானுவேல்	ஞானவிரதவி	8-9-99	நாகர்கோவில்

"போ அல்லது அனுப்பு"

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உலகத்தை இரட்சிப்பதற்காக வந்தார். இதை விளக்கமாக, தெளிவாக அந்தந்த பாஷைகளில் அந்தந்த மக்களுக்கு வெளிப்படுத்தி அறிவிப்பதற்கு சுவிசேஷகர்கள் (Evangelists) அவசியமாயிருக்கிறது. இவர்களுக்கு ஆங்கிலத்தில் (Evangelists) என்று பெயர். அதன் அர்த்தம் A bringer of good tidings (ஏசாயா 61 1) வேதத்திலும் அநேக சுவிசேஷகர்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது (அப 21 8, II தீமோத் 4 5). சுவிசேஷ ஊழியமானது ஐந்து விதமான திருச்சபை ஊழியங்களில் ஒன்றாக இருக்கிறது (எபேசி 4 11). அவர்கள் நல்ல & சந்தோஷமான (Good & Glad) அவைகளை மக்கள் மேல் வருவிக்கிறவர்களாக இருக்கிறார்கள். யூதர்களும் புறப்பட்டு சென்று உலகமெங்கும் இந்த நற்சுவிசேஷத்தை அறிவிக்க புறப்படும் காலம் வருகிறதாயிருக்கிறது (ஏசாயா 52 7)

சுவிசேஷகர் என்பவர்கள் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாக இருக்க வேண்டும் (ஏசாயா 61 1) மலை, மூலை முடுக்குகளிலும், கர்த்தருடைய வசனம் செல்லாத இடங்களிலும் சுவிசேஷகர்கள் அனுப்பப்பட வேண்டும். பற்பல வேலைகளிலும், தொழில்களிலும் இருப்பவர்கள் கிடைக்கும் சந்தர்ப்பத்திற்கு தக்கதாக ஏற்ற வார்த்தைகளை கொண்டு மக்களிடம் பேச வேண்டும். சுவிசேஷம் செல்லாத இடங்களில் நீயே சென்று சுவிசேஷம் அறிவிக்க முடியும். முடியாவிட்டால் தகுதியானவர்களை திருச்சபை தெரிந்தெடுத்து அனுப்ப உதவிசெய். கீழ்ப்படியாமல், காவலில் அடைபட்ட ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க இயேசுகிறிஸ்து தாமே சென்றார். ஆகையால் சில இடங்களுக்கு மற்றவர்களை எதிர் பார்க்காமல் நாமே சென்று சுவிசேஷம் அறிவிப்போமாக. இயேசுகிறிஸ்து தம் ஊழிய காலத்தில் ஒரு நாளாவது, ஒரு வினாடியாவது சும்மாயிருக்க வில்லை. இரவு முழுவதும் ஜெபம் செய்தார். பகல் முழுவதும் கால்நடையாக கிராமம், கிராமமாக நடந்து சென்று சுவிசேஷம் அறிவித்தார். அப்படியே போக்குவரவு சாதனம் இல்லாத இடங்களுக்கு நாமே நடந்து சென்று சுவிசேஷம் அறிவிப்போமாக. இரவு நேரத்தில் மக்கள் இயேசுவை சும்மாயிருக்க விடவில்லை. இராக்காலத்திலும் அவரை தொந்தரவு படுத்தினார்கள். அந்தரங்க சீஷர்கள் அவரிடம் வந்து சம்பாஷித்து சென்றனர் (யோவான் 3 1,2)

சுவிசேஷம் அது நல்ல விசேஷமாகும். அது மக்களை களிப்பாக்கும். ஆனந்தமாக்கும் அமிர்தமாக இருக்கிறது. அதை மக்களுக்கு அருளி அருந்தச் செய்து ஆத்மீக தாகத்தை தீர்ப்பது நல்ல சுவிசேஷகனுடைய கடமையாகும். மத்தியான வேளையிலும் இயேசு சும்மாயிருக்கவில்லை. தண்ணீர் குடிக்க கிணற்றின் அருகே சென்றபோது சமாரிய ஸ்திரீக்கு சுவிசேஷம் அளித்து அவளுடைய ஆத்மீக தாகத்தை தீர்த்தார். கிராமம் முழுமையாக அவருடைய விசேஷத்தைகேட்க விரைந்தது. சில நேரங்களில் நாமும் சரீர கஷ்ட, நஷ்டத்தை பாராது சுவிசேஷத்தை அறிவிக்க பிரயாசப்பட்டால் கர்த்தர் நல் அற்புதங்களை நடப்பித்து ஆயிரமாயிரமான ஆத்துமாக்களை கூட்டிச் சேர்ப்பார். இயேசுகிறிஸ்துவின் வாயிலிருந்து வெளிப்பட்ட விசேஷங்களை கேட்க ஆயிரமாயிரமாக மக்கள் திரண்டனர். இரண்டு மூன்று நாட்களாக உணவையும் மறந்து ஆத்மீக தாகத்தால் அவருக்கு பின் சென்றனர். ஏதோ ஒன்று அவர்களையே அறியாமல் அவர்களுடைய உள்ளங்களை திருப்பித்து கால்நடையாக பசியையும் பாராதபடி அவருக்கு பின் சென்று வந்த மக்களுக்காக இயேசு மனதுருகிறவராக இருந்தார். 5 அப்பம் இரண்டு மீன்களை கொண்டு அற்புதத்தை நடப்பித்து ஐயாயிரம் பேருக்கு பங்கிட்டார். அவர்களுடைய சரீர களைப்பை போக்கினார். உண்மை மனதோடு சுவிசேஷத்தைக் கேட்டு

மனந்திரும்புகிற ஏழைகளுடைய சரீரப்பிரகாரமான தேவைகளையும் நாம் சந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். உணவில்லாதவர்களுக்கு உணவளித்து, ஆடையில்லாதவர்களுக்கு ஆடையளித்து அவர்களை நற்செய்தியின் வெளிச்சத்திற்குள் வழிநடத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நாம் செல்லும் இடங்களில் சுவிசேஷத்தை மக்கள் விளங்கிக் கொள்ளும்படி அவரவர் பாஷையில் உரையாடி மக்களுக்கு புரிய வைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இயேசுவும் உவமைகளை கூறி மக்களோடு பேசினதை [illegible] சுவிசேஷத்தை விளக்க [illegible] சேர்த்துக் கொள்வோமாக. ஆதிவாசி மக்களிடமே, அந்த மக்களின் பாஷையை கற்று, [illegible] நாம் [illegible] வேண்டியவர்களாக இருக்கிறோம். காடுகளிலும் மலைகளிலும், [illegible] இடங்களிலும் சுவிசேஷ ஊழியம் செய்ய செல்லும்போது நமக்கு உதவி செய்ய தேவன் தம்முடைய தூதர்களை அனுப்புவார் (ஆதி 24:7). தேவனுடைய அறிவை [illegible] சுவிசேஷம் கேட்காதவர்களை சந்திக்க ஞானிகளையும் வேதபாரகரையும் கர்த்தர் அனுப்புவார் (மத் 23:28, [illegible]) எதிரிகள் [illegible] தேவன் பரலோகத்திலிருந்து உனக்கு உதவி அனுப்புவார் (சங் 57:3) சுவிசேஷம் கேட்காத [illegible] பட்டயம் அனுப்பப்படும் (எரேமி 9:16, 24:10). அக்கினி அம்புகளை [illegible] (எசேக் 39:6)

கேட்டு விசுவாசிக்கிற மக்களுக்கு தேவன் தம் வாக்குத்தத்தம் பண்ணின பரிசுத்தாவியை அனுப்புவார் (லூக் 24:49, யோவான் 14:26, 15:26, 16:7) அவர்கள் [illegible] நம்மை ஒப்புக் கொடுப்போர்கள். அப்போஸ்தலர்களின் உபதேசம் கேட்டு ஒரே நாளில் 3000பேர் மீட்கப்பட்டது போல கர்த்தருடைய சுவிசேஷம் கேட்டு ஆயிரமாயிரமான பேர்கள் இரட்சிக்கப்படுவார்கள். ஆகையால் நாம் [illegible] எதிர்ப்புகளின் மத்தியிலும் சுவிசேஷத்தை பிரசங்கிப்போமாக. சுவிசேஷகர்களை அனுப்புவோமாக. அனுப்ப உதவி செய்வோமாக. [illegible] குறைவாயிருக்கிறது. செய்ய வேண்டிய வேலையோ அதிகமாயிருக்கிறது. [illegible] நாம் தெரிந்து கொண்ட [illegible] (மாற் 4:5) [illegible] திருச்சித்தம் நிறைவேறுவதாக. நீ இதை செய்யவிட்டால் தேவன் [illegible] எழுப்பி சுவிசேஷத்தை உலகமெங்கும் பிரசங்கிப்பார். [illegible]

“அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தை கூறி நற்செய்திகளை சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவை” (ரோமர் : 10:15).

கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்

12-9-99 அன்று புதிய எருசலேம் சபை நாங்குநேரி கிளையைச் சேர்ந்த [illegible] அவர்களின் [illegible] அம்மாள் (வயது 90) கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அம்மாளுடைய பிரிவால் வருந்தும் குடும்பத்தாருக்கும் உறவினருக்கும் கர்த்தராகிய இயேசுவின் [illegible] ஆறுதல் கூறிக்கொள்கிறோம்.

வேதபாடம்

ரூத்தின் புஸ்தகம் 3:1–18 பிரமாணம் கைக்கொள்ளப்படுதல் :

முடிவான விஷயத்தை மூன்றாம் அதிகாரம் அறிவிக்கிறது. விவரங்களை தற்காலத்திற்கு பொருத்தமாய் தோன்றினாலும் இதில் காணப்படுகிற நடபடிகளெல்லாம் பூர்வீக எபிரேய விளக்கத்திற்கு முற்றும் ஒத்ததாய் இருக்கின்றன. இதில் கொஞ்சமும் அசுத்தமான தீவினைத்திற்கான குறிப்புகள் இல்லை. இவ்வதிகாரத்தில் நடந்ததற்கு ஆதாரமாயிருந்த நியாயப் பிரமாணத்தின் விதிகளை லேவி 25ம் அதி. எண் 35, உபா 19 25 ஆகிய அதிகாரங்கள் தெளிவாக விவரிக்கின்றன. இந்த நான்கு அதிகாரங்கள் வாயிலாய் நாம் அறியும் நெருங்கிய இனத்தானின் மூன்று [redacted].

1) தரித்திரத்தினால் தன் சகோதரன் அடிமைப்பட்டோ அல்லது தன் சுதந்திரத்தை விற்றோ இருப்பானானால் அவனையும் அவன் காணியாட்சியையும் மீட்பது அவன் கடமையாகும்

2) தன் சகோதரன் உயிருக்கு ஆபத்து விளைவித்தவனை எதிரிடம் பழிவாங்குகிறவனாய் இருந்தான்

3) அவன் சகோதரன் புத்திரசந்தானமில்லாமல் மரித்திருந்தால் அவனுக்காக ஒரு சந்ததியை உண்டாக்க வேண்டியவனாய் இருந்தான்.

நகோமிக்கு போவாஸ் நெருங்கிய இனத்தானென்று அறிவோம். நகோமி ரூத்தினிடம் நீ குளித்து எண்ணெய் பூசி உன் நல்ல வஸ்திரங்களை உடுத்து (வசனம் 3) என்பது அவளுடைய துக்க நாட்கள் முடிவடைகிறதற்கு அடையாளமாகும். மாமியின் உத்தரவின்படியே ரூத் சென்று போவாஸிடம் நீர் உமது அடியாள் மீது உமது போர்வையை விரியும் என்று கேட்டாள் (வசனம் 9) விவாகத்திற்கு அடையாளமாய் மணவாளன் ஒரு போர்வையை போர்த்தி இவள் என் ஆதரவுக்குட்பட்டவள் என்று அடையாளம் காட்டுவது பூர்வ வழக்கம். இங்கே நாம் காணுகிற சம்பவங்கள் நாமிருக்கிற காலத்திற்கு முன் மூவாயிரம் (3,000) ஆண்டுகளுக்கு முன்பாக நடந்ததென்பதை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தூற்றப்பட்டிருந்த வாற்கோதுமை குவியலண்டையிருந்த காத்திலே வெளியிலே தனிமையாய் நித்திரைசெய்த போவாஸ் படுத்திருந்ததை ரூத் கண்டாளென்பது போவாஸுடைய நற்குணத்திற்கு ஒரு சான்றாய் இருக்கிறது. என்றாலும் நெருங்கிய இனத்தான் ஒருவனிருக்கிறான் (வசனம் 12) அவனை விசாரித்து மட்டும் இவ்விஷயம் ஒருவருக்கும் தெரியலாகாது (வசனம் 14) என்று சொல்லுகிறான். அவளுக்கு ஆறுபடி வாற்கோதுமை கொடுத்ததானது (வசனம் 15) ஒரு நல்ல குறிப்பாக இருந்திருக்கும். விடியற்காலத்திற்கு முன் அவளை அனுப்பி விட்டான்

ரூத் 4:1–16

இஸ்ரவேல் சரித்திரத்தின் உச்சநிலையே இவ்வதிகாரத்தின் அடக்கமாகும். புராதன கால வழக்கப்படி நெருங்கிய இனத்தானை வாசலிலே எதேச்சையாய் போவாஸ் சந்திக்கிறான். இந்த நெருங்கிய இனத்தானுடைய பேர் இன்னதென்று நாம் அறியோம். முதலில் தன் உத்தரவாதத்தை அந்த நெருங்கிய இனத்தான் ஏற்க சம்மதித்தான். ஆனால் ரூத்தையும் தன் மனைவியாக்கிக் கொள்ள வேண்டும் என்று அறிந்த மாத்திரத்தில் அதை அவன் மறுத்து விட்டான். அவனுடைய ஆட்சேபணையானது என் சுதந்திரம் கெட்டுப்போகுமே (வசனம் 6) என்பதே. அந்நிய ஜாதிகளை விவாகம் செய்ததால் மக்லோன், கிலியோன் அகாலமரணத்தை அடைந்தார்கள். எனவே அவனுக்கு அந்த பேராபத்து தனக்கும் நேரிடுமென்று ஒருவேளை பயந்திருக்கலாம். அல்லது வேறு ஏதாவது

காரணமிருக்கலாம் [illegible] அந்த நெருங்கிய இனத்தானை [illegible] போவாஸுக்கு [illegible] (வசனம் 11) [illegible] இவ்வாறு பிரமாணம் நிறைவேறிற்று

போவாஸ் ரூத்திற்கு ஒரு குமாரன் பிறந்தபடியினால் ரூத்திற்கு [illegible] ஏழு குமாரரைப் பார்க்கிலும் உனக்கு அருமையாயிருக்கிற மருமகள் பெற்றாள் (வசனம் 15) என்று [illegible] நகோமியிடம் ரூத் [illegible] இந்த சம்பவம் முடிவடைகிறது

ரூத் : 4.17-22

பெத்லெகேமுக்குச் சென்ற [illegible] ஒரு அந்நிய ஸ்திரீயாகிய ரூத் இனி [illegible] நகோமியின் மீது அன்பு [illegible] ஒரு பிரமாணத்தை நிறைவேற்றிய (உபா 25 5-10) [illegible] அந்நிய நாட்டு ஸ்திரீயாக ரூத் இருந்தாள் [illegible] (ரூத் 4 7) [illegible] பிரமாணம் [illegible] (மத் 1 3-6) [illegible] வெற்றி சிறந்தது. வெற்றி சிறக்கவில்லை என்று [illegible] அந்நிய ஸ்திரீயும் [illegible] ரூத்தின் விசுவாசம் [illegible] விசுவாசிக்கிற நமக்கும் [illegible]

(தொடரும்)

அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவனுக்கு நீதியாய் எண்ணினார். ஆதி. 15:6

மரணம்

மரணம் என்றாலே எல்லாருக்கும் பயம் [illegible] மரண [illegible] சரீரத்தை பார்க்கும் போதே [illegible] மரணபயத்தினாலே மனித [illegible] அடிமைத்தனத்திற்குள்ளாக இருக்கிறது (எபி 2:15)

நம்முடைய சரீரம் அழியும் தன்மை உள்ளதாயிருக்கிறது [illegible] சரீரம் மண்ணுக்கே திரும்ப [illegible] (ஆதி 3 19 , பிர 3 19-21, எபி 9 27, யாக 2 26) [illegible] மரணம் [illegible] (I கொரி 15 24-28 வெளி 21 3-7 22 3)

மரணத்திற்கு இயல்பாகவும் ஒரு விளக்கம் [illegible] அது ஒரு [illegible] இருக்கிறது [illegible]

நிறைவேறாமல் இடையில் ஏற்படும் ஒரு பிரிவாக இருக்கிறது. சினிமா தியேட்டரில் படம் ஓடிக் கொண்டிருக்கும் போது மின் அறுந்து விட்டால் ஏற்படும் இருட்டடைப்பு போல் இருக்கிறது. முழுவதையும் முடியாமல் இடையில் வைக்கும் முற்றுப் புள்ளியைப்போல் இருக்கிறது. மனிதன் அழியாமல் என்றென்றைக்கும் பரமனோடு உலாவி மகிழ ஏற்படுத்தப் பட்டான் (ஆதி 3 8) ஆனால் ஆதாமின் பாவத்தால், மீறுதலால் தேவ சித்தம் மனிதனில் நிறைவேறாமல் மரணமாகிய அறுப்பு மனுக்குலத்திற்கு உண்டாகிறது.

பாவத்தினால் முதலில் ஆத்தும மரணம் உண்டாகிறது. பாவம் தொடர, தொடர பாவம் முற்றுப் பெற்று சரீர மரணமாகிய முதலாம் பிரிவு உண்டாகிறது. நியாயத்தீர்ப்பிற்கு பின்பு நித்திய பிரிவாகிய (External Seperation) இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலில் மனிதன் தள்ளப்படுகிறான் (வெளி 2 11, 20 6, 14 21 8) மரணமானது ஒரு இராட்சதனைப் போல மனித ஜாதியை பின் தொடருகிறதாயிருக்கிறது. பாவம் செய்த மனிதன் வானத்திற்கு ஏறினாலும் பாதாளத்தில் படுக்கை போட்டாலும் மரணமானது அவனை விடாமல் பற்றிப் பிடிக்கிறது (சங் 139 8-10) பலி பீடத்தின் கொம்பை பிடித்துக் கொண்டாலும் அது விடாது தொடருகிறதாக இருக்கிறது (1 இராஜா 2 28) அது சிங்கத்துக்கு தப்பினவனுக்கு கரடி எதிர்ப்பட்டது போலவும் அல்லது வீட்டுக்குள்ளே வந்து சுவரின் மேல் தன் கையை வைத்த போது பாம்பு அவனைக் கடித்தது போலவும் எதிர்ப்படுகிறதாக இருக்கிறது (ஆமோஸ் 5 19) அது வயது பாராமல் இரக்கமற்றதாய் கொல்வதற்கு பின் தொடரும் மிருகத்தைப் போல் இருக்கிறது.

இந்த பயங்கரமான மரணத்தில் இருந்து யார் நம்மை விடுதலையாக்குவார்? மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (1 கொரி. 15 55-57) இயேசுவே மரணத்தை ஜெயித்தார். அவரே உன்னை விடுவிக்கவும் வல்லவராக இருக்கிறார். வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை (அப் 4 12) முதலாம் வருகையின் போது பரிசுத்தவான்கள் மறுரூபம் ஆக்கப்பட்டு அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும் போது மரணம் ஜெயமாக விழுங்கப்படும் (1 கொரி 15.54)

மரணத்துக்கு ஏதுவான பாவத்தைச் செய்யாதே. அநீதியெல்லாம் பாவந்தான் என்றாலும் மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு (1 யோவான் 5 16 17) நமது ஆண்டவராகிய கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு (சங் 68 20) கீழ்க்கண்ட மூன்று விதமான காரியங்கள் உனக்கு மரணத்திலிருந்து வெற்றியைத்தரும்

1) நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு கிடைக்கும் ஜெயத்தின் மேலும், அவருடைய உயிர்த்தெழுதலின் மேலும் அசையாத, உறுதியான நம்பிக்கை வைப்பதின் மூலமும் (1 கொரி 15 58 ; 7 37)

2) நம்மை இரட்சிக்கிற சுவிசேஷத்தின் மேல் அசையாத உறுதியான நம்பிக்கை வைப்பதன் மூலமும்

3) நாம் செய்கிற நற்கிரியைகளுக்கு பலனுண்டு என்ற தவறாத நம்பிக்கையோடு நற்கிரியைகளை பெருக்குவதின் மூலமும் (1 கொரி 15 58 , மத் 10 42 1 கொரி 3 11) நமக்கு வெற்றி உண்டாகும்

நாம் இந்த மரண சரீரத்தில் இருக்கும் வரைக்கும், மரணமானது ஒரு நிழலைப் போன்று நம்மை பின் தொடர்கிறதாக இருக்கிறது. நீ இரட்சிக்கப்பட்டு மரணத்தை ஜெயிப்பதற்கான காரியத்தை நீ நடத்துமுன

உன்னைக் கொன்று நரகத்திற்கு அனுப்ப சாத்தான் முயற்சி செய்வான். அதற்கு ஒரு போதும் இடங்கொடாதே. ஆகையால் இன்றே இரட்சண்ய நாள், இதுவே அநுக்கிரக காலம். உடனே இரட்சிக்கப்படு. இல்லையென்றால் அக்கினியும், கந்தகமும் எரிகிற இரண்டாம் மரணமாகிய நரகத்தில் நீ பங்கு பெறுவாய். உனக்கு கிடைக்கிற பொன்னான சந்தர்ப்பத்தை அதை நழுவவிடாதே. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். இரட்சிக்கப்பட்ட மக்கள் மரணத்தின் மேல் ஜெயங்கொண்டவர்கள் இப்பொழுது மரணப் பயத்திலிருந்தும், நம்பிக்கையற்ற நிலையிலிருந்தும் விடுதலை பெற்றுள்ளார்கள். இறந்தபின் சரீரத்திலிருந்து விடுதலை ஆகி, ஆவியின் சரீரம் பெறுக் கொள்வார்கள்.

இயேசு அவளை நோக்கி நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் (யோவான் 11.25)

மனச்சாட்சி

உணர்வு நன்மையை, தீமையை பகுத்தறியும் குணம் மனச்சாட்சி எனப்படும் (ரோம2 15.16) மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும் (நீதி 20 27)

மனச்சாட்சி என்று சொல்லப்படுவது என்ன? மனிதன் ஒவ்வொருவருக்குள்ளும் மனச்சாட்சி என்ற ஒன்று உண்டு. தேவனை, அவருடைய சட்டதிட்டங்களை, அறியாத தேவனால் உண்டாக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் தேவன் நன்மனசாட்சியை எழுதிவைத்திருக்கிறார் இந்த மனசாட்சி ஒவ்வொரு மனிதனும் தான் அறிந்த அறிவின்படியும், எந்த அளவிற்கு தேவனை அவருடைய சட்டதிட்டங்களை அறிந்து கொள்கிறானோ அந்த அளவிற்கு அவனுடைய மனச்சாட்சி கிரியை செய்கிறது. எடுத்துக்காட்டாக காட்டுமிராண்டிகள் தங்களுடைய சொந்த மனைவியை தடியால அடித்து கொல்வதை தவறு என்று ஒத்துக்கொள்வதில்லை ஏனென்றால் அவர்கள் அந்த அளவிற்கு அறியவில்லை. மனச்சாட்சி வளரவில்லை ஆனால் இந்திய தேசத்தில் அச்செயலை ஒப்புக்கொள்ளமாட்டார்கள் அது தவறு என்று சொல்லி அப்படிப்பட்ட கொலை செய்தவனை சம்மதப்பட்டவர்கள் வழக்கு தொடர்ந்து தண்டனைக்கு ஒப்புக் கொடுத்துவிடுவார்கள். இந்தியாவில் முந்திய காலத்தில் கணவன் மரித்து விட்டால் மனைவி உடன்கட்டை ஏறும் பழக்கம் இருந்து வந்தது ஆனால் இப்பொழுது மாறுபட்டு அவர்கள் அந்த செயலை விட்டு, அது தவறு என்று அறிந்து சிறிது வளர்ந்துள்ளார்கள். ஆகவே அந்த பழக்கம் நின்றுவிட்டது. இவர்கள் கொஞ்சம் வெளிச்சம் பெற்றிருக்கிறார்கள் அதற்கு தக்கபடி இப்பொழுது நடக்கிறார்கள்

நியாயப்பிரமாணத்தை அறிந்தவர்களுடனே பேசுகிறேன். நியாய பிரமாணம் ஒன்றையும் பூரணப்படுத்த மாட்டாது என்ற பிரகாரம் தேவனை, அவருடைய கட்டளையை பெற்றவர்கள் அதன்படி மனச்சாட்சி குற்றப்படுத்தாமல் நடந்தால் நியாயப்பிரமாணம் நல்லது தான். ஆனால் எந்த மனிதனும் தேவனுக்கு முன்பாக நீதிமானல்ல. அப் பவுல் பரிசேயனாக (சவுலாக) இருந்த காலத்தில் அவன் அறிந்த நியாயப் பிரமாணத்திற்கு தக்கவாறு (மனச்சாட்சியின்) படி நடந்தான் (பிலி 3 5) தேவன் அவனை சந்தித்த போது அவன் அறிந்து நடந்ததை விட மேலாக வெளிச்சம் பெற்றான் அவருடைய மனச்சாட்சியின் இருப்பிடமாகிய

ஆத்துமா வளர்ந்து, நாம் வேதத்தைவிட்டு மேலான ஒன்றை வெளிப்படுத்த மனச்சாட்சியானது தேவனால் வெளிச்சம் பெற்று வளர்ந்து அதன்படி பிரகாசத்தில் நடந்தார் (II கொரி 4 2) ஆகவே மனச்சாட்சி தேவனால் வெளிச்சம் பெற்று வளரவேண்டும். வளர்க்கப்படவேண்டும்

மனச்சாட்சியை அசுத்தமானவைகளை விட்டு அகற்றுவதுபோல [illegible] தீமையற்ற உணர்வுள்ள மனச்சாட்சி கொண்டிருக்க (1 தீமோ 1:5, அப 24 16, ரோ 9 2) கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சுத்தம் செய்யப்பட்ட சுத்தமனச்சாட்சி வைப்போம் (எபி 10 2, 9 14; 1 தீமோ 3 9). மனதிலே கெட்ட சத்தியத்தை மறுத்து பாவத்தை செய்து துர் மனச்சாட்சியுள்ளோம் (எபி 10:22) கெட்ட மனச்சாட்சியுள்ளோம் (1 தீமோ 4 1) அசுத்த மனச்சாட்சி என்றும் (தீத்து 1 15) சொல்லப்படுகிறது மனச்சாட்சி வேதத்தின் வெளிச்சத்தில் நடக்க வேண்டும் அவ்வாறு நடக்கும் போது நாம் மனச்சாட்சியை பின்பற்ற வேண்டும் (1 கொரி. 10 27, ரோ 13 5) என்பதே

இருளாகும். [illegible] நடைபெறுகிற குற்றம் என்று அறிந்திருக்கிற நாம் தேவனால் வெளிச்சம் பெற்றவர்கள் ஆகையால் நாம் பாவம்செய்யக்கூடாது நாம் [illegible] ஆராயப்படவேண்டியவர்கள் [illegible] வெளிச்சம் [illegible] பிரகாசிக்க [illegible] போதாது இன்னும் (வெளிச்சம்) [illegible] வேண்டும் நாம் காணும் [illegible] [illegible] (மனம், புத்தி, சித்தம், தேகம் [illegible]) ஆகியவை அடங்கிய மனச்சாட்சியின் இருப்பிடமாகிய ஆத்துமா இருக்கிறது அது அறிவினாலும், [illegible] அறிவைப் பெறுகிறது. [illegible] அந்த [illegible] (1 கொரி 8 10) [illegible] போகலாமோ என்று [illegible] தேவனை [illegible] நம்மைப் போல நன்றி கெட்டவர்கள் வெளிச்சத்தை மக்களின் கீழ் மூடிப் போட்டவர்கள், மனச்சாட்சியை பழுதில்லாமல் [illegible] முடியாது

பிறனிடத்தில் அன்பு கூருதல்

இயேசு கிறிஸ்து நம் [illegible] (லூக் 10 26) [illegible] (லூக் 10 27-37) [illegible] (மத். 5 48)

'பென்ஹர்' திரைப்பட ஆசிரியரை தேவன் சந்தித்த விதம்

ரோம அரசாட்சி உன்னத நிலையிலிருந்த வேளை வாலிப துடிப்பு நிறைந்த வாலிபன் அவன் யூதனாகிய தச்சனா? கடவுள் மைந்தனாகிய இரட்சகரா? இன்று அவன் தேர்ந்தெடுக்க வேண்டுமாம்! அந்த மனிதன் போராட்டங்களை அவன் முடிவை தீர்மானம் ஒரு காவியமாக உருவெடுத்து யூதன் இயேசு கிறிஸ்துவோடு தங்கி நின்று தான் போராடியதை காவியமாய் உருவாக்கினான் அந்த இளைஞன் கதை பிரசித்தி பெற்ற திரைப்படம் 'பென்ஹர்' தான் அந்த காவியம்! அந்த இளைஞன் ஜெனரல் லூவாலஸ்!

அப்புத்தகத்தை அநேகர் வாசித்தார்கள் திரைப்படத்தையும் ஆவலோடு பார்த்தார்கள் ஆனால் அக்கதை உருவான சூழ்நிலையும், அக்கதையின் பின்னணியத்திலுள்ள சுவிசேஷ சம்பவத்தையும் பலர் அறியார். லூவாலஸ் போர்ப்படையிலிருந்த சமயம் அது. அரிசோனா மாநிலத்தில் தனது வேலையை முடித்து இரயிலில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அதே இரயிலில் நாஸ்திகரான கெர்ணல் இங்கர்சாலை சந்தித்தார். சம்பாஷணை தொடர்கிறது. "புத்திசாலிகளான நுணுக்கசாலிகள் பலர் இன்னும் இந்த கிறிஸ்தவ ஆலயங்களில் பிரசங்கிக்கும் வினோதமான கொள்கைகளை நம்புவது அதிக ஆச்சரியம் தான்" என்று இங்கர்சால் கோபத்துடன் ஆரம்பித்தார். "ஆச்சரியமானது" லூவாலஸ் சம்மதித்தார். "மூடத்தனமான மாயக்கதைகளை நிரம்பிய இந்த வேதத்தை தூக்கி தள்ளிய போடும் காலம் எப்பொழுது வருமோ?" "லூவாலஸ் நீங்கள் ஒரு பெரும் சிந்தனையாளர். எனவே கிறிஸ்துவை மையமாக பக்திக்குரிய முட்டாள் தனம் நிரம்பிய கூட்டம் என்று ஏன் நீங்கள் நிரூபிக்க கூடாது? இயேசு கிறிஸ்து என்பவர் உலகத்திலே ஒருபோதும் தோன்றவில்லை என்றும் மதவெறிபிடித்தவரின் மனத்தோற்றம் தான் அவர் என்றும் நிரூபியும்! இந்த கட்டுக்கதையை முழுவதுமாய் அழியும்! அதை நிரூபித்துக்காட்ட ஆதாரங்களை முறையாய் சேகரியும் நிச்சயம் நீங்கள் ஓர் இலக்கியமே புகழ்பெற்ற விடுவீர்கள்"

லூவாலஸ் சிந்தனையாளன் இந்த ஆலோசனை லூவாலஸின் இருதயத்தில் ஆழமாய் பதிந்தது. தன் வீட்டுக்கு சென்று மனைவியிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தார். மனைவியோ கிறிஸ்தவத்தில் ஆழ்ந்த பக்தியுடையவள். எனவே அவள் மிகவும் வருந்தினாள். லூவாலஸ் [illegible] கேட்கவில்லை. தன் எண்ணம் அதற்குரிய சாதனங்களை சேகரிக்கும் போதே தேவன் அவரைச் சந்திக்க வேண்டுமென்று ஜெபத்தையும் ஜெபித்தாள்.

ஆண்டுகள் பல உருண்டோடின. லூவாலஸ் ஆராய்ச்சி வெறிபிடித்தவராய் அலைந்தார். ஆட்களை நியமித்து கொண்டு ஆதாரங்கள் கிடைக்க பல இடங்களுக்கும் [illegible]. கையெழுத்துப் பிரதிகளை சேகரித்தார். கலைஞர்களைச் சந்தித்தார். நல் நிலையங்களிலும் கருத்துக்களை சேகரித்தார். கடைசியில் இயேசு இல்லை என்று நிரூபிக்கும் தனது ஆராய்ச்சியை நூலாக எழுத உட்கார்ந்தார். கிறிஸ்தவம் முழுவதுமாய் அழிக்கப்படும் உலகம் அதிர்ச்சிக்குள்ளாகும் என்ற நம்பிக்கையுடன் ஆராய்ந்து எழுதினார். பேனா ஓடியது வார்த்தைகள் நீரோட்டம் போல ஓடியது. அத்தியாயம் ஒன்றையும் முடித்துக்கொண்டு அடுத்த அத்தியாயம் நிறைந்தது ஆம்! அவர் பேனா எழுத தொடர்ந்து மறுத்துவிட்டது! அவரை மனச்சாட்சி அவரை [illegible] பருத்தியது அவருக்கு முன்னாலிருந்த வேதப்புத்தகமோ அவரை நோக்கி

"இயேசு அவர் ஜீவித்தார், அவர் மரித்தார், அவர் உயிர்த்தார்" என்று கூக்குரலிடுவது போல் உணர்ந்தார். போராட்டம் துவங்கியது இதைச் சேகரித்திருக்கிட்டாரே ஒருவேளை வேதம் தன் நாஸ்திகத்தில் தொடர்ந்திருப்பார். இப்பொழுதோ எண்ணமோ

தன்னையே முறைத்துப் பார்க்கின்றதே! வாழ்க்கையின் மாபெரும் குழப்ப நிலையில் கிறிஸ்துவை மறுதலித்தாரா அல்லது ஏற்றுக் கொண்டாரா? போராட்டத்தின் முடிவு என்ன? அந்த மாபெரும் ஜெனரல் வேல்ஸ் தனது முழங்காலில் நின்றார். கண்களிலிருந்து கண்ணீர் சொரிகிறது. பாவத்தை ஒத்துக் கொண்டு மெய் மனஸ்தாபப்பட்டு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். அன்பும், பக்தியும் உண்டாயிற்று. உலகம் தரக்கூடா சமாதானம், சந்தோஷம் இருதயத்தை நிரப்பிற்று. சந்தேகமும் அவநம்பிக்கையும் ஓடி மறைந்தது. அடுத்த நாள் உலகத்தைப் பொறுத்தவரை முந்தின நாள் போன்றதுதான். ஆனால் வேல்ஸிற்கு புத்துயிர் பிறந்த பசுமையுடன் காட்சியளிக்கிறது. பூக்கள் அழகு மிக்கதாய் மின்னுகிறது. பறவைகளின் பாடல் சத்தம் மிக இனிமையாய் கேட்கிறது... ஏன் இந்த மாறுதல்?

"தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோவா 3:16) என்ற திருவசனங்கள் எல்லாமே தம்மை நோக்கி சொல்வதாக உணர்ந்தார். இருதயத்தின் பிரகாசம் முகத்திலும் ஒளி வீசியது. திருமதி வேல்ஸ் இந்த மாற்றத்தைக் கண்டு ஆனந்தித்தாள். அவள் கண்களில் ஆனந்த கண்ணீர். அந்த மகிழ்ச்சியான காலை வேளையில் இருவருமாக முழங்காற்படியிட்டு தேவனின் கிருபைக்காக அவருக்கு நன்றி செலுத்தினார்கள். அவர்களுக்கிடையே இந்த அன்பு அதிகமாகியது. நேசப் பிணைப்பு இறுகியது. நான் சேகரித்த இந்த சேகரிப்புகளை வைத்து என்ன செய்வது? வேல்ஸ் கேட்டார். "மிக சுலபம்" உலகத்தின் ஒரே இரட்சகர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே என்று எல்லாருக்கும் நிரூபித்துக்காட்ட இதே சேகரிப்புகளை வைத்து பயன்படுத்துங்கள் என்றார் திருமதி வேல்ஸ். அதைத்தான் வேல்ஸ் செய்து முடித்தார். தனது ஒப்பற்ற காவியமாகிய பென்ஹரில் "பென்-ஹர்" வேல்ஸ் நாஸ்திகத்திலிருந்து விடுதலை பெற்றார். அது ஆராய்ச்சியின் முடிவே.

சிறுவர் பகுதி

பரலோகத்தில் யார் பிரவேசிப்பார்கள்?

ஞாயிறு பள்ளி ஆசிரியர் சாம்சன் மாணவர்களுக்கு தேவன் தங்கி வாசம் பண்ணும் பரலோகத்தைப் பற்றி அழகாக வர்ணித்து சொல்லிக் கொண்டிருந்தார். பரலோகத்தில் நம் தேவன் இருப்பார், அவர் நம்மோடு வாசமாயிருப்பார், அவர் நம் கண்ணீர் யாவையும் துடைப்பார்; அங்கு மரணமில்லை, மரணபயமில்லை, நமக்கு துக்கமில்லை, பயமில்லை, வருத்தமில்லை, (வெளி 21:3). பசிதாகமில்லை. எல்லாரும் மகிழ்ச்சியாக தேவனோடு சதாகாலமும் இருப்போம் என்று அவர்களோடு பேசிக்கொண்டிருந்தார்.

கூர்ந்து கவனித்து கொண்டிருந்த சீமோன் ஆசிரியரை பார்த்து சார், இவ்வளவு இன்பமான பரலோகத்திற்கு யார் போக முடியும். அங்கு போவதற்கு ஏதேனும் தகுதிகள் வேண்டுமா? என்று கேட்டான்.

ஆம் சீமோன் நாம் பரலோகம் போவதற்கு இவ்வுலகில் நாம் முதலாவது மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற வேண்டும். நம் தேவனாகிய கர்த்தர் நமக்கு அருளி செய்த பரிசுத்த வேதாகமத்தின்படி, அவரது சித்தம் செய்கிறவர்களாக, நாம் நடக்க வேண்டும். தேவன் வாசம் பண்ணும் பரிசுத்த பரலோகத்திற்கு போவதற்கு நாமும் பரிசுத்த வாழ்வு நடத்த வேண்டும். தாயையும், தகப்பனையும் கனம் பண்ண வேண்டும் (எபே 6:3). பெற்றோருக்கு கீழ்ப்படிய வேண்டும். அது நியாயம்.

பெற்றோர்கள் நம்மை கண்டிக்கும் போது நாம் கோபப்படக்கூடாது. அவர்களை வேதனைப் படுத்தும் காரியங்களை விட்டு விட வேண்டும். எனவும் இயேசு கிறிஸ்துவிற்கு நற்சாட்சியாக விளங்க வேண்டும். நற்கிரியைகள் செய்வதில் சோர்ந்து போகக்கூடாது. தாயாகிய சபையார் நடத்தும் வழிகளில் அவர்களுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். இவ்விதமாக நாம் செய்யும் போதும், தேவனுடைய நாமத்தை தேவனை அறியாத மக்களும் கண்டு கொள்வார்கள். நம் நிமித்தம் தேவனும் மகிமைப்படுவார். தேவன் நமக்கு பரலோக பாக்கியம் அளித்திடுவார். எனவே இளைப்பாறுதலை, பரலோகத்தை அடைய நாம் நூக்கின்ற புனிதர்களாக இருப்போம் என்றார். சிஸ்டர் மற்றும் அனைவரும் தங்களை தேவனுடைய வழியில் நடக்க ஒப்புக் கொடுத்தனர்.

இயேசுவின் பின்னே நானும் செல்வேன்
திரும்பி பார்க்க மாட்டேன், திரும்பி
பார்க்க மாட்டேன் என்ற
பாடலை பாடி அனைவரும்
மகிழ்ச்சியுடன் இல்லம் சென்றனர்.

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்கிறவன் அதில் பிரவேசிப்பதில்லை (மத். 7:21).

சுமைதாங்கி

ஓர் வயதான முதியவர் தலையில் சுமக்க முடியாத பாரத்துடன் சாலை வழியாய் வெகுவாய் கஷ்டப்பட்டு பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அந்த வழியில் ஒரு மோட்டார் கார் வந்தது. அவ் வாகனத்தை பட்டணத்துக்கு ஒருவன் ஓட்டி வந்தான். சற்றுநேரத்துக்கு முன்பாக சாலையில் கஷ்டப்பட்டு தலைசுமக்க முடியாமல் சென்று கொண்டிருக்கும் வயதான முதியவரை பார்த்து மனம் உருகி, வயதானவருக்கு உதவி செய்யும் நோக்கத்தோடு அவர் அருகில் சென்று ஐயா பெரியவரே நீங்கள் கஷ்டப்பட்டு நடந்து செல்லும் நிலைமையை பார்த்து என் மனம் உருகிற்று. தயவு செய்து என்னுடைய வாகனத்தில் ஏறி செல்லும் என்றான். பெரியவர் மகிழ்ச்சியுடனாக வாகனத்தில் ஏறிக்கொண்டார். மீண்டும் வாகனம் புறப்பட்டு சென்றது. சிறிது தூரம் போனது வந்த வாலிபன் பெரியவரே அமைதியாக இருக்கிறீரே என்ன காரியம் என்று இருக்கையில் இருந்து திரும்பி பார்த்தான். அந்தோ பரிதாபம்! அக்கிழவனும் முதியவர் வாகனத்தில் ஏறி உட்கார்ந்து தனது தலைச்சுமையை வாகனத்திலும் வைக்காது தானே தனது சுமையை சுமந்து கொண்டிருந்தார். இதை கண்ணுற்ற வாலிபன் தனது வாகனத்தை நிறுத்தி "ஐயா, பெரியவரே நான் உங்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தோடு உங்களை எனது வாகனத்தில் ஏற்றினேன். நீரோ வெறுமனே என வாகனத்தில் ஏறிய பின்னரும் உமது சுமையான பாரத்தை நீரே சுமக்கின்றீரே" என வருந்தினான். அதற்கு முதியவர் தம்பி, என் தலை பாரம் எனக்கு எவ்வளவோ பாரமாய் இருக்கிறது. அதையும் வாகனத்தில் வைத்து அதற்கு வேதனை கொடுக்க விரும்பவில்லை. எனவே நான் காரில் ஏறிய பின்னரும் என் பாரத்தை என் தலையை விட்டு இறக்கவில்லை என்றார்.

அன்பானவரே! நம் இயேசு கிறிஸ்து பாவபாரத்தினாலும், லௌகீக கவலைகளினாலும் வாழ்க்கையில் நடைகளை வேதனையோடு கடந்துசெல்லும் மக்களை பார்த்து இவ்விதமாக சொல்லுகிறார் "வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்கிறார் (மத். 11:28). சங்கீதக்காரனும் நமக்கு: கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிடு. அவர் உன்னை ஆதரிப்பார். நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார் என்கிறார் (சங். 55:22). நாமும் முதியவர் தன் பாரத்தை வாலிபனுடைய வாகனத்தில் இறக்கிவைக்காதது போல அந்த மதியீன காரியத்தை செய்யாமல், என் கூட பாவியோடு இருக்கிறார் அவர் எனக்காக யாவற்றையும் செய்து முடித்தார் என்றும், கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார் நான் பயப்படேன் மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லி நம் கவலைகளை, பாரத்தை அவர் மேல் இறக்கி வைத்துவிட்டு கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருப்போமாக (1பேதுரு 5:7). அதுவே நமக்கு தேவையானது (நெகே. 8:10).

உன் பாதரட்சையை கழற்றிப்போடு

நம்முடைய அன்றாட ஜீவியத்திலே நாம் அநேக பொருட்களை உபயோகப்படுத்துகிறோம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரியத்திற்காக பயன்படுகிறது. உதாரணமாக மழை, வெயிலில் செல்ல குடை உபயோகிக்கிறோம். வெயிலில் கண்ணின் பாதுகாப்பிற்காக குளிர்கண்ணாடி போட்டுக் கொள்கிறோம். இரவில் செல்லும் போது வெளிச்சம் கொடுக்க மின்விளக்கு உபயோகிக்கிறோம். காலில் முள் குத்தாதபடிக்கு பாதரட்சைகள் அணிந்து கொள்கிறோம். எல்லா பொருட்களும் எல்லா நேரங்களிலும் உபயோகிக்கப்படுவதில்லை. தேவையான நேரங்களில் மட்டும் உபயோகிக்கிறோம். வீடுகளில் இருக்கும் போது சாதாரண உடைகளை அணிந்து கொள்கிறோம். வெளியே வேலைக்கு, விழாக்களுக்கு, ஆராதனைக்கு செல்லும் போது சுத்தமான நேர்த்தியான உடைகளை அணிகிறோம். ஆகவே இடம், சந்தர்ப்பம், சூழ்நிலை, அவசியங்களுக்கு தக்கதாக இப்பொருட்களை நாம் பயன்படுத்துகிறோம், பயன்படுத்தவேண்டும். அதற்கு மாறாக பயன்படுத்தும்போது அது சரியாக இருக்காது.

இந்நாட்களில் நவநாகரீகம் என்று சொல்லிக்கொண்டு கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் ஆலயங்களிலும் ஆராதனை ஏறெடுக்கும் ஸ்தலங்களிலும், கன்வென்ஷன் கூட்டங்களிலும் பாதரட்சைகளை போட்டுக் கொள்கிறார்கள். இது மிகவும் அருவருப்பான காரியமாக இருக்கிறது. நாம் வீடுகளில், படுக்கையறைகளில் காலணிகளை அணிவதில்லை. ஏனென்றால் வெளியில் நாம் நடக்கும் போது காலணியில் ஒட்டிக் கொள்ளும் அசுத்தங்கள் வீட்டுக்குள் வரக்கூடாது என்பதற்காக அணிவதில்லை. அநேக அலுவலகங்களிலும் கம்ப்யூட்டர் அறைகளிலும் சுத்தமாக பாதுகாக்கப்பட காலணிகளை அனுமதிப்பதில்லை. ஆனால் மகா பரிசுத்த ஸ்தலமாக கருதப்படும் ஆலயங்களிலே பாதரட்சைகளை அணிவது அவலட்சணமான கிரியையாக இருக்கிறது.

மோசே ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது ஓரேபிலே முட்செடியிலே கர்த்தர் அவருக்கு தரிசனமான போது அவருக்கு கொடுக்கப்பட்ட கட்டளை என்ன? யோசுவா எரிகோவின் வெளியிலே நிற்கும் போது கர்த்தருடைய சேனையின் அதிபதி தரிசனமான போது உண்டான கட்டளை என்ன? உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார் (யாத் 3 1-5, யோசு 5 13-15). முட்காட்டிலே கர்த்தர் இவ்விதமாக கட்டளையிட்டால் நாம் எவ்வளவுக்கு அதிகமாய்த்தாழ்மை கீழ்ப்படியவேண்டும். தேவன் பிரசன்னமாகும் இடம் பரிசுத்த பூமியாயிருக்கிறது. அதை பாதரட்சையோடு கிட்டிச் சேராயாக என்று கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டார். மோசேயும், யோசுவாவும் உடனே கீழ்ப்படிந்து அப்படியே செய்தார்கள். அப்படி கீழ்ப்படியாத இடங்களில் தேவன் பிரசன்னமாகமாட்டார். தேவ வல்லமை வெளிப்படாது. தேவனுடைய ஆசீர்வாதமும் வழி நடத்துதலும் உண்டாகாது. தேவ தூதர்களின் பிரசன்னம் இருக்காது. என் பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்து பயபக்தியாயிருப்பீர்களாக, நான் கர்த்தர் என்று தேவன் சொல்கிறார் (லேவி 19:30). பரிசுத்தாவியைப் பெற்றிருக்கிறோம் என்று பெந்தெகொஸ்தே பெருவிழா என்று பெரிய கூட்டம் கூட்டி மேடையில் ஊழியர்கள் பாதரட்சையை கழற்றாமல் ஜெபம் பண்ணினால் கர்த்தர் பிரசன்னமாவாரா? இது வேத வாக்கியத்தின்படி சரியா? உணர்வில்லாத இவர்கள் எந்த ஆவியைப்பெற்றவர்கள்? அக்கிரம செய்கைக்காரரே! உங்களை அறியேன் என்று கர்த்தர்சொல்வார் (மத் 7 22,23) அல்லவா?

பிரியமானவர்களே! தேவனுடைய பிள்ளைகளே! நாம் தேவ கட்டளைக்கு கீழ்ப்படிவோமாக! புறமதத்தாருக்குள்ள பயபக்தி கூட நமக்கு இல்லையா? சமாதியில்

கூட பாதுகாப்பு [illegible] இல்லையே! கர்த்தருடைய ஆலயம் என்ன [illegible] போனதே! [illegible] பெருமை [illegible] தேவாலயம் இடிக்கப்பட்டவர்கள் [illegible] காணிக்கைகளை [illegible] வேண்டும் [illegible] பிரகாசிப்பது எவ்வளவு அவமானமாய் இருக்கிறது? நமக்கு நாற்காலி வேண்டும் மனிதன் மண்ணோடு மண்ணாக வேண்டும் [illegible] பூமி எனக்கு [illegible] என்று கர்த்தர் சொல்லுகிறார். அக்காலத்தில் [illegible] கர்த்தர் [illegible] (சங் 96:?) [illegible] (லூக் 14:26,12) [illegible] கர்த்தரை சேவியுங்கள் (சங் 2:11)

நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்கால்படியிடக்கடவோம் வாருங்கள் (சங் 95:6)

இரங்கல் செய்தி

கிறிஸ்தவ பாதிரியார் கொலை

2-9-99 அன்று ஒரிசா மாநிலம் மயூர்பஞ்ச் மாவட்டத்தில் பழங்குடியினர் மத்தியில் பாதிரியாராக இருந்த அருள்தாஸ் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் விபரம்

பாதிரியார் அருள்தாஸின் சொந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி [illegible] K ராசகிரியாவயலை என்ற [illegible]. தந்தையார் பெயர் செல்வராஜ், தாயார் பெயர் ஆரோக்கியமேரி. பாதிரியார் அருள்தாஸ் கடந்த பதினாறு வருடங்களாக ஒரிசா மாநிலத்தில் மயூர்பஞ்ச் மாவட்டத்தில் உள்ள ஜாம்புவனி என்ற கிராமத்தில் பாதிரியாராக இருந்தார். 2-9-99 அன்று ஜாம்புவனி என்ற கிராமத்தில் நடைபெற்ற திருவிழாவிற்கு சென்று இருக்கிறார். திருவிழா முடிந்து அங்குள்ள சிறிய ஆலயத்தில் படுத்து தூங்கிக் கொண்டு இருந்தார். இரவு 1 மணிக்கு மேல் மதவெறிக் கும்பல் கொலையாளிகள் ஈட்டி அம்பு போன்ற ஆயுதங்களோடு அங்கு வந்து தாக்கி இருக்கிறார்கள். பாதிரியார் அருள்தாஸ் வெளியே தப்பி ஓடி இருக்கிறார். வெறியர்கள் பாதிரியாரை தூரத்தில் சென்று சுற்றி வளைத்துக் கொண்டு அம்புகளை எய்து தாக்கி இருக்கிறார்கள். நான்கு இடத்தில் அம்புகள் பாய்ந்த நிலையில் கீழே விழுந்து கதறி இருக்கிறார். அந்த நிலையில் [illegible] தண்ணீர் கேட்டு இருக்கிறார். சிறிது நேரத்தில் அதே இடத்தில் உயிர் போய்விட்டது. அவரது உடல் அதே இடத்தில் இரண்டு நாட்கள் கிடந்து இருக்கிறது. பிறகு தான் போலீசார் வந்து பிரேத பரிசோதனை நடத்தி ஒரிசா பாலாசூர் [illegible] செய்திருக்கிறார்கள். [illegible] உடல் பாலாசூரில் அடக்கம் செய்யப்பட்டு இருக்கிறது. புதுக்கோட்டையில் இருந்து பாதிரியாரின் குடும்பத்தார் பதினைந்து பேர் ஒரிசா சென்று அடக்க ஆராதனையில் கலந்து கொண்டு சம்பவங்களை நேரில் அறிந்து வந்திருக்கிறார்கள். அவர்களை நேரில் சென்று பார்த்து புதிய எருசலேம் சபையின் சார்பில் ஆறுதல் கூறினோம்.

பாதிரியார் அருள்தாஸின் மறைவினால் ஆழ்ந்த துயரத்தில் இருக்கும் அவரது குடும்பத்தாருக்கு புதிய எருசலேம் சபையின் மூலம் ஆழ்ந்த வருத்தத்தையும் ஆறுதலையும் கூறிக்கொள்கிறோம். இந்த கொலைக்கு காரணமாய் இருந்த மதவெறி பிடித்த கொலைகாரர்களுக்கு புதிய எருசலேம் சபையார் கண்டனத்தை தெரிவிக்கிறோம்.